74



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-JAN 1928
MADRAS

# SRILOLAN.

BY

A. R. GANGADHARAN.

Kumaran Press, Conjeeveram.

T. S. Rajam & Son.

CONJEEVERAM.

1927.

O-,3MGD.S
N27
68840

Stric...

Rs. 1-4-0.

உ

முருகன் துணை.

# ஸ்ரீலோலன்.

## இனிய துப்பறியும் தமிழ் நாவல்.

காஞ்சீபுரம்

அ. ரா. கெங்காதரன்,

எழுதியது.

வெளியிட்டவர்,

T. S. ராஜம் அண்டு சன்.

**54** நெல்லுக்காரத்தெரு காஞ்சீபுரம்.

உரிமை பதிவுசெய்யப்பட்டது.

விலை 1—4—0

1927.

REGISTRAR

குமரன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

48, நெல்லுக்காரத்தெரு,

காஞ்சீபுரம்.



A. R. கெங்காதரன்.

# உரிமையுரை.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்.

---

என்னைச் சான்றோனாக்க அல்லும் பகலும் முயன்று, சிறுபிள்ளைத்தனத்தால் நான் செய்யும் துன்பங்களை இன்புடன் எற்று, அதற்கு பதில் அன்பையே காட்டி, நான் உண்டால் உண்டு, உறங்கினால் உறங்கி, என் சந்தோஷமே தன் சந்தோஷமாகக் கொண்டு, என் நன் முயற்சிகளுக்குத் தளராத ஊக்கமளித்து, என் தீய நடக்கைகளுக்கு அன்பும் ஆதரவும் காட்டிக் கண்டித்து, நான் கடுகளவு செய்யும் நற்காரியத்திற்காக உள்ளுர உவந்து, உவந்து, ஆனந்தமடைந்து, நான் செய்யும் தீச் செயல்களுக்கு உள்ளம் வெதும்பி, வெதும்பி, துயரக் கடலிலாழ்ந்து, என் நன்மையையே நாடி, அல்லும் பகலும் கண்ணிமைக்குள் என்னை வைத்துக் காத்து வரும் என் ஆருயிர் அன்னையின் செவ்விய பாதமலர்களில், அத்தாய் அன்பை நினைந்து, உருகி, உருகி, இச்சிறு நூலை காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

ஆக்கியோன்.

# ஆக்கியோன் முன்னுரை.

நாவற் பிரியர்களே!

உலகில் ஒப்புயர்வற்றது அனுபவமே. அத்தகைய அனுபவம் 'யான் சிறிதும் பெற்றிருக்கிறேனே என்று கூறுகிறேன். 'பெரியாரைச் சார்ந்து கெழியிலார் இல்'' என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க யான் முத்தமிழ்வல்ல அறிஞர் பலரிடம் பழகியதே இந்நாவல் எழுத ஆற்றலுண்டாக்கியது என்னலாம். அன்றியும் நான் ஒரு கலியாணத்திற்குச் சென்றிருந்தபோது அக்கலியாணத் திற்கே பிரதானமான மணமகன் திருமங்கல்யதாரணம் செய்தபின் தனக்கு மனைவியாக வாய்ந்த ஆரணங்கு ஜாதியில் தன்னிலும் தாழ்ந்தவளென்று வெளியாக அதுபொருத மணமகன் ஆர்பாட்டம் செய்து தான் உடனே அம்மனைவியை விலக்கிவிட்டு வேறு தன் ஜாதியைச்சேர்ந்த கன்னிகையைக் கடிமணம் புரியப்போவதாகப் புகன்றான். என்னே! உலகம்! தற்காலம் ஜாதிபேதத்தைக் கருவறுத்து வருகின்றார்கள். ஜாதிபேதம் என்னும் விஷப்பாம்பைக் கண்டோர் கல்லாலடிக்கின்றனர். இத்தகையகாலத்தில் தன்னிலும் ஒருபடி தாழ்ந்த ஜாதியைச்சேர்ந்த மனைவி உதவாதாம். அதனால் அவனுடைய குலத்திற்கே நாசம் வந்துவிடுமாம். என்னமதியீனம் பாருங்கள். அந்தமனைவியும் மணாளனும் ஆதியிலேயே மனவேற்றுமை யுடையவர் களாயினர். இனி அவர்களெப்படி ஒருமித்து வாழ்க்கையெனும் ஓடத் தைத் தள்ளிச்செல்வர். இத்தகைய ஆர்பாட்டங்கள் மணவரையில் நடந்துக்கொண் டிருக்கும்போது எனது மனம் அம்மங்கைக்காக இரக்கங்கொண்டது. ஐயோ! பாவம்! அம்மங்கை உத்தம உயர்தர கற்புவாய்ந்த நங்கையாயின் தனது கணவன் தன்னை உதாசனித்து வெறுத்துத்தள்ளியதற்கு எவ்வளவு மனம்வெதும்பி உருகிவாடித் தவித்திருப்பாள். பிறர் மனநோகச்செய்வது மஹாபாபமாகும். அம்மணமகனைக் காணவும் எனதுகண்கள் கூசுகின. B. A. என் னும் உயர்தரப் பரீட்சையில் முதன்மையில் தேர்ந்த அம்மணமகன் சிறிதும் அறிவென்பதில்லாமல் இந்த நீசத்தனமான வார்த்தைகளைப் புகன்று மணமகளுக்கும் அவளைச்சேர்ந்தவர்களுக்கும் துன்பத்தை யும் அழியாப் பழியையும் உண்டாக்கியதைக் கருதி வருந்தினேன் சின்னாட்களுக்குப் பிறகு பலர் அம்மணமகனுக்கு அனுசரணையாகப் பேசிவருவதைக் கவனித்தபின் இச்சாதி பேதத்தை நிராகரித் துள்ள ஒரு நூல் இயற்ற எண்ணினேன். தற்காலம் புராணம்

இதிகாஸம் என்றால் வாங்குவோர் மருந்துக்கும் கிடைக்கார். சாதாரணமாக "ஜாதிபேதம்" என்னும் பெயருள்ள புஸ்தகம் வெளியானால் அதைச் சிலர் கண்ணெடுத்தும் பாரார். ஆகையால் தற்கால நாகரீகத்தில் சிறந்து விளங்குவதும், அதற்கு ஆயிரக்கணக்கான அறிஞர்கள் ஆதரவு அளிப்பதுமான "நாவல்முறை"யைக் கைக்கொள்ளத் தீர்மானித்தேன். அதுபோலவே எனது சிற்றறிவிற்கெட்டியவரை ஸ்ரீலோலன் என்ற இந்நாவலை எழுதி முடித்தேன். இது எழுதி முடித்து ஆண்டிரண்டாகியும், கடவுளின் கருணை இப்போதே கிட்டிற்று. இந்நூலில் அநேக அரிய நீதிகளும், ஜாதிபேதக் கண்டனமும், தீயாரின் தீச்செயல்களும், நல்லாரின் நலம்பெருகும் நடக்கைகளும், பதிவிரதா சிரோன்மணிகளின் சிறப்பும், காதற்றன்மையும், இன்னும் அநேக அபூர்வ உலகானுபவங்களும் ஆங்காங்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சேர்க்கப்பட்டிருக்கிறது.

"குற்றமிலான் கடவுளன்றி தப்பிலாதார் மனிதரிற் பிறருமுண்டோ?" தித்திக்கும் கரும்பிலும் சக்கையுண்டு. இளங்கோதையர் ஆவல்பூண்டு ஆர்வத்துடன் தங்களது கற்றைக்குழையில் தரித்துக் கொள்ளும் ரோஜாவிலும் முட்களுண்டு. இனிக்கும் தேன்ருசிக்கொத்த கனியிலும் கொட்டையுண்டு. காதலர் கருத்துடன் எதிர்ப்பார்த்துத் தவிக்கும் சந்திரனுக்கும் களங்கமுண்டு. எத்தகைய உலக சம்மந்தமான வஸ்துவிலும் மனிதர் வெறுக்கத்தக்க விஷயங்களுண்டு. இருந்தும் அன்னார் அவைகளிலுள்ள குற்றத்தைக் கருதாது குணத்தை நாடித் தேடுதலைப்போல், அறிவிலும், ஆண்டிலும், அனுபவத்திலும் சிறியோனாகிய யான் யாத்த இச்சிறு முதல் நூலை தமிழ் நாட்டு என் உடன்பிறப்பாளர்கள், அன்னம்போற்கொண்டு, ஆதரிப்பார்களென நம்புகிறேன்.

காங்கிரசிலும், ஜனவரித் திருநாளிலும் வெளியிட வேண்டும் என்னும் என் நோக்கத்திற் கிணங்க, தன் பல அவசர வேலைகளையும் நிறுத்தி, என்பால் பேரன்பு பூண்டு, என்னை எதிர்பாராமலே அச்சுப்பிழை முதலியவைகளைத் திருத்தி, சுமார் ஒன்றரை மாதக் காலத்திற்குள் இப்புஸ்தகத்தை முடித்துத் தந்த குமரன் அச்சுக்கூடத்தின் சொந்தக்காரர் திருவாளர். த. குப்புசாமி முதலியார் அவர்களுக்கு, என்னுடைய நன்றியறிதலுள்ள வந்தனம் உரியதாகுக.

காஞ்சிபுரம்.
21—12—27.

இப்படிக்கு தாழ்மையுள்ள,

அ. ரா. கெங்காதரன்.

உ

# ஸ்ரீலோலன்.

## முதல் அத்தியாயம்.

### வருமையிற்செம்மை.

1. ஆவியொடு காயமழிந்தாலும் மேதினியிற்
 பாவியென்று நாமம் படையாதே.

2. நிலைதளர்ந்திட்டபோது நீணிலத்துறவு மில்லை.

3. நல்குரவென்னு மிடும்பையுட் பல்குறைத்
 துன்பங்கள் சென்றுபடும்.

4. ஆயிரம் சொன்னாலும் அறியாத வஞ்சநெஞ்சப்
 பேயரொடு கூடிற் பிழைகாண் பராபரமே.

---

உலகில் "நகரேஷு காஞ்சி" என்று சிறந்துரைக்கும் காஞ்சியம்பதியின் வடக்கில் மூன்றரை மைல் தூரத்திலுள்ளது ஏனாத்தூர் என்னும் கிராமம். இது குடிவளம் மிகுதியும் உடைத்தாயிராவிட்டாலும் நிலவளம், நீர்வளம் மிகுதியும் அடையப் பெற்று செழிப்புற்று விளங்கியது.

இத்தகைய எனுத்தூர் கிராமத்தில் சுமார் எழெட்டு பிராமணர் வீடுகளும், சுமார் முப்பது வன்னியர் வீடுகளும் இருந்தன. அப் பிராமணர் வீடுகளெல்லாம் மிகவும் சிறியனவாயும், ஓட்டு வீடுகளாக வும் காணப்பட்டது. இவ்வீடுகளுக்கெல்லாம் சற்று உயர்ந்ததாக வும், மச்சு வீடாகவும், தெருப்பக்கம் பெருக்கி மெழுகி கோலமிடப் பட்டும் சுத்தமாகக் காணப்பட்ட வீட்டின் கூடத்தில் ஓர் நடுத்தர வயதுள்ள மாது உட்கார்ந்திருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த மாதிரியைக்காண, கல்நெஞ்சனுன எவனும் பரிதபிப்பானென்றால், நம்போன்றார் பரிதபிக்கச் சொல்லவும் வேண்டுமா? ஆயிரம் ஓட்டு களோடு கூடிய ஒரு கொர்நாட்டுப் புடவையை அந்த மாது உடுத்தி யிருந்தாள். தனது தலையை தன் கையின்மேல் வைத்தவண்ணம் கண்ணீரை காலுக ஓடவிட்டுக்கொண்டிருந்ததைப் பற்றி, நான் விவரிப்பதைவிட, வாசகர்கள் காண்பார்களாகில், கட்டாயம் தாங் களும் கண்ணீர் விடுவார்களென்பது முக்காலும் பொருந்தும்.

மிகவும் மெலிந்து தோன்றிய அவளுக்கு தாங்கொணு துயரம் வந்து மூண்டதாலோ, ஆகாரமின்மையாலோ, வயதின் முதிர்ச்சி யாலோ, என்ன காரணத்தாலோ (டாக்டர் பரீக்ஷித்தால் தெரியும்.) எலும்பும் தோலுமாய், கிள்ளி எடுப்பதற்கு சிறிது சதையுமின்றி, எலும்புக் கூட்டின்மேல் தோல் போர்க்கப்பட்டதோ என்னலாம் படி, மிகவும் இளைத்து, இன்றைக்கோ, நாளைக்கோ தன் சாவை எதிர்பார்த்து, வருந்திக்கொண்டிருப்பவள்போல் காணப்பட்டாள்.

அவளுக்கு வயது சற்றேறக்குறைய நாற்பதாகிறது. என்ன தான் இளைத்துத் தேகக் கூறுகளெல்லாம் மாறிப்போயிருந்தாலும், "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதைப்போல், அவள் மிக வும் நற்குணம் வாய்ந்தவள் என்பதை முதல் நோக்கிலேயே கண்டு கொள்ளலாம். ஈகை, தயை, தாட்சண்யம், காருண்யம், பச்சாத் தாபம் முதலிய உலகவியல்பான நற்குணங்களும், பெண்களுக்குறித் தான கற்பு, கணவரைப் பேணுதல், ஒழுக்கம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய இயற்கைக் குணங்களும் வாய்ந்தவள். அவள் தனது இளம் பருவத்தில், மேற்கூறிய குணங்களுடன் ஒழுகி, நற்பெயரெடுத்திருந்ததுமன்றி, அவள் கணவனிறந்தபின்னும், இப் பத்து ஆண்டுகளாய் நற்பெயரையே ஆபரணமாகப் பூண்டிருந்தாள்.

எவ்விதமான தோஷமும் அவள்மேல் யாரும் வாயாலும் சொல்லி யறியார்கள்:---என்? மனதாலும் எண்ணியறியார்கள். அவள் கணவ னிறக்கும்போது, சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்கள் வரை ரொக்க மாகவும், பூஸ்திதியாகவும் வைத்துவிட்டுப் போனர். இவளது ஒரே மகனை இராமசுப்பன் என்பான், அவனுடைய தகப்பனிறக்கும் போது பதினறு வயதுடைய பாலகனுயிருந்தும், பல துஷ்ட சகவா சத்தால் ரொக்க ., வேஜி மொத்தமும், இரண்டாண்டுகளில் "தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை, உரையுமில்லை." என்பதற் கிணங்க, பொருளின் அருமை தெரியானய், கூத்திக்கும், குடிக்கும், இன்னும் பலவித துர்வழிகளில் செலவழித்துவிட்டான்.

இராமசுப்பன் அதிக செலவு செய்வதை அவன் தாய் சுப்பு லட்சுமி என்ன தடுத்தும் கேளானய், தனது பூஸ்திதிகளையும் விற்று, செலவு செய்து வந்தான். முந்தித் தின்றால் குன்றும் மாளு மல்லவா? வருவாய் சிறிதுமின்றி, அபாரமான செலவு செய்யும் அவனுக்கு, இரண்டு லட்சம் ரூபாய்கள் எத்தனை நாள் வரும். கடை சியில் இக்கதை நடப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே, எல் லாம் ஒழிந்தது. வெல்லத்தை மொய்த்திருக்கும் ஈக்களைப்போல், விட்டுப் பிரியாதிருந்த தாசிகளும், வேசிகளும், கூடிப் பிரியா நேசர் களும் இராமசுப்பன் கை வரண்டுபோனதை ஜாடையாகக் கண்டு கொண்டு, ஒருவர்பின் ஒருவராக விலகிக்கொண்டனர். எல்லாம் ஒழிந்தது. இனி கடன் வாங்க வேண்டுவதுதான் பாக்கி. அதற் கும், உலோகோபகாரிகளான, தாகுக்காரர்களும், "டிஸ்கௌண்ட்" காரர்களும் ஒன்று சேர்ந்து, காஞ்சீபுரம் க. அ. து. ரங்கைய செட்டி யிடம், ஒன்றுக்கிரண்டாய் எழுதிக்கொடுத்து, கடன்வாங்கிச் செல விடச் செய்தனர். இப்படி ஒருவருடகாலம் சென்றது. இதற்குள் இராமசுப்பனுக்கு, நாற்பதினயிரம் ரூபாய்கள் கடன் வந்துவிட்டது. இவ்வளவு கடன் ஏற்பட்டும் இராமசுப்பனுக்கு புத்தி வந்தபாடில்லை. எல்லாவற்றையும் தொலைத்துவிட்டான். "கையில் காசுமில்லை முகத் தில் பவிஷுமில்லை" என்றபடி, சாப்பாட்டிற்கு வழியில்லானய், ஏங்கித் தனியனய் நின்றுன். இவன் தகப்பனர் படாத பாடுபட்டு, தேடி வைத்த இரண்டு லக்ஷமும் இராமசுப்பனுக்கு நிற்காமல், தன் இயற்கைப்படி "செல்வோம்" என்று சென்றுவிட்டது. ஆனல்,

அவன் தகப்பனர் மஹா கூர்மையான புத்தி உடையவராகையால், அழியாப் பொருளும் சிறிது சேர்த்து வைத்திருந்தார். அது தான் யாது. கல்வி. "கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை." என்பதற்கிணங்க, செல்வம் அவனை விட்டுச் சென்றக்கால், "அஞ் சேல்! நானுன்னைக் காப்பேன்" என்று அவன் கற்ற கல்வியானது அவன் மனதிற்குத் தைரியத்தை யூட்டி, மனந் தளராமல் செய்தது. இராமசுப்பன் தன் தகப்பனர் காலத்திலேயே "மெட்ரிகுலேஷன்" பரீட்சையில் தேறியிருந்தானகையால், அவன் அதைக்கொண்டு, காஞ்சீபுரம் "கோவாபரேடிவ்" பாங்கியில் சொற்ப சம்பளத்துக்கு வேலையிலமர்ந்தான். இச்சமயம் இராமசுப்பன் மனது என்ன பாடு பட்டிருக்கும். தான் சிறிது காலத்துக்கு முன் இலட்சாதிபதியா யிருந்து, தற்போது பிட்சாதிபதியாயிருப்பதை அவன் மனம் நினைக் குந்தோறும் என்ன பாடு படுமென்பதை நேயர்களே யூகித்தல் எளிது. நிற்க.

வாசகர்களே! நீங்கள் இங்கு கவனிக்கற்பாலதொன்றுண்டு. உலகில் இருவகை செல்வங்களுள் கல்விச்செல்வம் மேம்பட்டதென் பதை யாவரும் அறிவர். கல்வியே எப்பொழுதும் இகபர சுகாதிகளை அளிக்கக்கூடியது. இம்மையில் சுகமும், மறுமையில் வீடும் தரும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வித புருஷார்த்தங்களை மனிதனுக்கு அளிக்கவல்லது. "சுடர் விளக்காயினும் தூண்டுகோ லொன்று வேண்டும்" என்பதையொப்ப, என்னதான் ஒரு மனிதன் தீட்சண்யமான அறிவுடையவனுயினும், தூண்டுகோலாகிய கல்வி யின்றி பயனடையாது. ஆகவே, எனது யௌவன நேசர்களே! "இளமையிற்கல்" என்றதை அமுத வாக்காகக்கொண்டு, உங்கள் இள வயதிலேயே மனமானது காமக் குரோத லோப மோக மத மாச் சர்யம் முதலிய வழிகளில் பிரவேசிக்காமுன்பே, இகபர சுகங்களுக் கும், நற்குண நற்செய்கைக்கும், இன்னும் பல புருஷார்த்தங்களுக் கும், உலகில் இயங்குவதற்கும் ஆதிகாரணமாகவும், திறவுகோலாகவு முள்ள, கல்வியை அரும்பாடு பட்டு அடையுங்கள்.

"சேரிடமறிந்துச்சேர்;" "இணக்கமறிந்திணங்கு" என்ற ஔவையின் அமுதினுமினிய வாக்கியங்களை நமது இராமசுப்பன் கற்றிருந்தும், மூடமதியால் கவனிக்காமலிருந்தது நமது மனதை

பொதுவாக வருந்தும்படி செய்கிறது. தற்காலம் இராமசுப்பன் தன்னந் தனியனாய் தன் வேலை முடிந்த பிறகு, பயித்தியக்காரன் போல் அலைந்துக்கொண்டிருந்தான். இவன் முன்பு பணத்தை ஒட்டாஞ்சல்லியாய் வாரியிறைக்கும்போது, "நீங்கள் வாராவிட்டால் எனக்கு சாதமே எற்றுக்கொள்வதில்லை; உன்மத்தம் பிடித்ததைப் போலிருக்கிறது; நீங்களில்லாத தினம் ஒரு யுகமாகச் செல்லுகிறது." என்றும், இன்னும் பலவாறு நயவஞ்சக வார்த்தைகளைப் புகன்று, பணம் பறித்த விலைமாதர்கள் இப்போது "நீ வருவது எனக்கு வாந்தியை உண்டாக்குகிறது." என்று சொல்லமாட்டாக் குறையாய், முன்பு தாங்களே தங்கள் மாமாக்களைக் கொண்டு, அழைத்தது போக, இராமசுப்பனே "அழையா வீட்டிற்கு நுழையா சம்மந்தி", யாகப் போனாலும், தங்கள் முகங்களை ஒரு பக்கமாக அருவருப்பைக் காட்டுங் குறியோடு திருப்பிக்கொண்டும், "வாருங்கள்" என்று வர வேற்காமலும், ஏதோ வேலையாய்ப் போவதைப் போல், பின் கட்டிற்குப் போய்விடுவதுமாக இருந்ததைக்கண்ட இராமசுப்பன், உலகானுபவ உணர்ச்சி பெற்று, இனி இவர்கள் முகத்திலும் விழிப்பதில்லையென்று, நிர்மானித்துக்கொண்டான். அவனுக்கு இப்போது கோடான கோடி எண்ணங்கள் தோன்றி, மனதை ஆலையிலிடப்பட்ட கரும்பென வாட்டியது.

இப்படி இருக்கும் நாளில், ஒருநாள் இராமசுப்பன் தன்னுடைய உத்தியோக ஆலயத்திலிருந்து தனது ஜாகையை நோக்கி வந்துகொண்டிருந்தான். நடந்து வரும்போதே அவன் பலவித எண்ணங்களினால் உலப்பப்பட்டவனாய், கீழ்வருமாறு வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே மேன்மேலும் நடந்தான்.

"என்னே! நமது புத்தி சென்ற வழி. நாம் உலகில் நண்பர்களெல்லாம் நல்லவர்களென்று எண்ணியதற்கு விரோதமாக, என்னிடம் பணமிருந்தபோதிருந்த நண்பர்களெல்லாம் இப்போதென்னைக் கண்ணெடுத்தும் பாரேனென்கிறார்கள். இது என் காலவசம் போலும். அவர்கள் போனால் போகட்டுமென்றால், இந்த மோகனா செய்த மோசத்தை நினைத்தாலும் என் மனம் மிகவும் சங்கடப்படுகிறது. என்னுடைய ஆஸ்தியில் முக்கால் பாகம் இவளையே சேர்ந்தது. இவ்வளவையும் இப்பத்தாண்டுகளாய் அபகரித்துக்கொண்ட

இவள், நான் இன்று காலை போனால், என்னை எரெடுத்துப்பாராமலும், வரவேற்காமலும், முதலில் கவனிக்காமலும், இரண்டாங்கட்டிற்குப் போய்விட்டனளே! இவள் முன்பு காட்டிய அன்பெல்லாம் போலி அன்பு போலும். ஆஹா! என்னிடம் காட்டிய அன்பும், நானில்லாமல் ஒரு வேளையாகிலும் உண்ணாதவள்போல் நடித்த ஸாகஸமும் என்னவென்று சொல்லுவேன். எல்லாம் விதியின் பயன். இனி நானிவ்வாறு அலைந்துக்கொண்டிருப்பது சற்றும் பொருந்தாது. என்னுடைய மதிப்பும், கௌரவமும் போனபின் என் செய்வது? கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வதுபோலிருக்கிறது.'' என்று நினைத்தவாறு நடந்துக்கொண்டிருந்தான். இவன் தனதில்லத்தை அடைந்ததும், சட்டையைக் கழற்றி விட்டுத் திரும்பி வெளியில் போகப்போனான். அப்போது அவன் கண்ணில் கதவினருகில் ஒரு கடிதம் காணப்பட்டது. அவன் அதைக் கையிலெடுத்துப் பார்த்தபோது, "சிரஞ்சீவி இராமசுப்பனுக்கு," என்று மேல்விலாசமிட்டிருப்பதைக்கண்டு, அக் கடிதத்தைப் பிரித்து வாசித்தான். அது கீழ் வருமாறு காணப்பட்டது.

கண்மணி இராமசுப்பா!

நான் உன்னைப் பார்க்கவேண்டுமென ஆவல்கொண்டு, எத்தனையோ ஆள்விட்டழைத்தாலும் வாராமலிருந்துவிட்டாய். என்ன செய்யலாம். என் வயறு செய்த கொடுமை நீ இவ்வாறு வந்து பிறந்தாய். போனதெல்லாம் போகட்டும். இனியாவது வீடு வந்து உன் முகத்தைக் காட்டென்றால், அதற்கும் யாதொரு பதிலும் தெரிவிக்காமலிருக்கிறாய். நீ விட்டை விட்டுப்போய் வருடம் பத்தாய்விட்டது. இதுகாறும் வீட்டிற்கே வரவில்லை. உனது மனைவி மஹலட்சுமி உன் ஞாபகமாகவேயிருந்து நோய் வாய்ப்பட்டு, மிகுந்த சந்தேகமான நிலைமையிலிருக்கிறாள். வீடு அதிக ஏழ்மை நிலைமையிலிருக்கிறது. அவளுக்கு வைத்தியரைக்கொண்டு பார்க்கவும் கையில் பணமில்லை. ஆகையால், எதற்கும் நீ உடனே புறப்பட்டு இங்கு வந்தால், உன் மனைவியின் முகம் பார்க்கலாம். இல்லையானால், இனி காண்பதரிது. கட்டாயம் வந்து சேரும்படிச் சொல்லுகிறேன். பிறகு உனதிஷ்டம்.

இப்படிக்கு, உன் அன்னை,
சுப்புலட்சுமி.
9—10—19...

என்றெழுதியிருந்ததைக் கண்ட இராமசுப்பன் கண்ணீர் விட்டான்.

நமது இராமசுப்பன் தனது பதினும் வயதில் வீட்டைவிட்டு வந்தவனுகையாலும், இப்பத்தாண்டுகளாய், தன் தாயையாவது தன் மனைவியையாவது கண்ணுலும் காணுதவனுகையாலும் இப்போது தனது தாயைக் கண்டால், அடையாளம் தெரிந்துக்கொள்வானே என்பதே சந்தேகம்.

இதுவரையில் இராமசுப்பனது நடவடிக்கைகளையே சொல்லி வந்தோமாகையால், அவனது குடும்ப வரலாற்றைச் சிறிது சொல்லலாம். இராமசுப்பனது தகப்பனுர் இறந்துபோன விஷயம் நமது வாசகர்களுக்கு ஏற்கனவே தெரியும். அவன் தாய் சுப்புலட்சுமியைப் பற்றியும் தெரியுமாதலால், இனி அவனுடைய மனைவியைப் பற்றிச் சிறிது தெரிந்துக்கொள்ளுவோம். இராமசுப்பன் குடும்பத்தில், இவர்கள் மூவர்களைத் தவிர, தற்போது வேறு யாரும் கிடையாது. அப்படி யாரேனும் இரண்டொருவர் பந்துக்களிருந்தாலும், வெளியிற் சொல்லிக்கொள்வதில்லை. ஏனெனில்;—

கல்லானே யானுலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்.

என்ற நீதி வாக்கியத்திற்கிணங்க, அவன் தன் கைப்பொருளையிழந்துவிட்டானுகையால், அவனை தனது பந்துவென்று சொல்லிக்கொண்டால், தன்னை எங்கு கடன் கேட்டுவிடுகிறுனே என்ற காரணத்தாலோ, மற்ற எதனுலோ அவனை பந்துவென்று சொல்லிக்கொள்ளுவதுமில்லை; அவனைக் கண்டால் பேசுவதுமில்லை.

இராமசுப்பனது மனைவியாகிய மஹாலட்சுமியை மணக்கும்போது, அவன் பதினைந்து பிராயமுடையவன். மஹாலட்சுமிக்கு அப்போது ஏழுவயது முடிகிற சமயமாதலால், உலகமறியாத குழந்தையாயிருந்தாள். ஆனுல் அவளுடைய கல்யாணத்துக்கு முன்பே அவளது பெற்றோர் மாணமடைந்துவிட்டார்களாகையால், அவளது ஒரே தம்பியின் கார்டியனுன கோபால கிருஷ்ண அய்யரே அவளுடைய கல்யாணத்தை முன்னின்று நடத்தி வைத்தார். அவள் கல்

யாணம் முடிந்தவுடன் மாமியார் வீட்டிற்கு வந்தவள், பிறகு திரும்பி தனது தாய்வீடிருக்கும் சென்னைக்குச் சென்றவளே யல்ல. தனது தம்பியைக் கண்டவளுமல்ல. அவனைப்பற்றிக் கேள்விப் பட்டவளு மல்ல ஆகவே, அவள் தனது மாமியார் வீட்டிலேயே பருவமடைந் தாள். அவள் வயதடைந்த பிறகு, நமது கதை ஆரம்ப காலத் திற்கு நான்கு வருடங்களாயின. இதற்குள் அவளுக்கு சாந்திக் கல்யாணம் நடத்த உத்தேசித்த சுப்புலட்சுமி, பலதரம் தனது மகனை ஆள்விட்டழைத்தும், அவன் தனது சகாக்களுடன் இன்புற்றிருந்தா னுகையால், இதைக் கவனித்தானில்லை. மஹலட்சுமிக்கு வயது வந்தவுடன் தனது குடும்ப விவகாரங்களையும், தன் கணவன் துஷ்ட சகவாசமுடையவனுய், வீட்டிற்கே வாமல் திரிந்துக்கொண் டிருப்பதையும் உணர்ந்தவளாய், ஆராத் துயரங்கொண்டு, மனம் வெதும்பி, துயரே நோயாக மாறிப் படுத்தப் படுக்கையானுள். மஹலட்சுமி, தன் பெயருக்கேற்றபடி அழகும் கற்பும் வாய்ந்தவள்.

"கட்கினியாள் காதலன் காதல்வகை புனையாள்
உட்குடையாள் ஊர் நாண் இயல்பினுள்
உட்கி னடனறிந்தூடி இனிதி னுணரும்
மடமொழி மாதரார் பெண்."

என்ற பாடலுக் கொப்ப, மிகுந்த அழகும், கற்பும் புத்தி கூர்மையும், மகா மனே உறுதியுமுடையவள். பெண்களுக்குரிய நால்வகைக் குணங்களும் குறைவற நிறைந்தவள். நமது கதை நிகழும்போது அவளுக்கு பதினேழாவது வயது நடக்கிறது. அவள் துயரத்தா லும், வருத்தத்தாலும் என்னதான் இளைத்துத் தோன்றினுலும், அவளது இயற்கை யழகு சிறிதும் குன்றவில்லை.

* * * * *

இராமசுப்பன், கடிதத்தைக் கண்ட பின் கண்ணீர் விட்டழுத வாறு யோசித்துக்கொண்டே, சிறிது நேரம் நின்றவன், தன் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டவனுய், உடனே புறப் பட்டு எனுக்தூரை நோக்கி நடந்தான். அவன் புறப்படும்போது மாலை 5½-மணி சமயமாதலாலும், இளந்தென்றல் வீசியதாலும், ஒரு வாறு மன உற்சாகத்துடனேயே நடந்தான். அவனுக்கு இதுகாறும்

தோன்றாத அவனது மனைவியின் தோற்றமே மிகவும் மேலாடி நின்றது. தனது மனைவியைப்பற்றி சிந்தித்துக்கொண்டே வழிநடந்து, சுமார் ஒருமணி நேரத்தில் ஏனூத்தூரையடைந்தான். அவனுக்கு முதலில் வீடிருக்கும் இடமே புலனாகவில்லை. பிறகு சிறிது நேரம் யோசித்து, பழைய நினைவுகளையெல்லாம் கொண்டுவந்து, தான் தனது சிறு பிராயத்தில் ஓடியாடிய தெருவை, ஞாபகத்திற்குக் கொண்டுவந்தான்.

உடனே தயங்கித் தயங்கி வீட்டிற்குள் நுழைந்து, நடையைக் கடந்து கூடத்திற்குள் பிரவேசித்தான். அப்போது அங்கு முன் கூறப்பட்டபடி உட்கார்ந்திருந்த சுப்புலட்சுமி அம்மாள், தலைநிமிர்ந்து தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, “யாரையா அது? எங்கு வந்தீர்கள்? என்ன வேண்டும்?” என்று மிகுந்த மெல்லிய குரலில் கேட்டாள். இராமசுப்பனுக்கு துக்கம் நெஞ்சை யடைத்தது. அவ்வாறு கேட்ட தனது தாயை தெரிந்துகொள்ளாதவனாய், “இந்த வீட்டில் சுப்புலட்சுமி யம்மாளிருக்கிறார்களா?” என்று மிக்க வணக்கமாயுரைத்தான். அதைக்கேட்ட, சுப்புலட்சுமி யம்மாள் தன் மகன் தான் ஏதேனும் தனக்கு செய்தி சொல்லி, அனுப்பியிருக்கிறானோவென்று, தனது பேதை மதியால் நினைத்தவளாய், “நான் தான் சுப்புலட்சுமி; என்ன சமாச்சாரம்? என் மகன் ஏதேனும் சமாச்சாரம் சொல்லியனுப்பினானோ? ஏது! இத்தனை காலமாயல்லாது, இப்போதுமட்டும் எங்கள் மீது இவ்வளவு கருணை யுண்டாய்விட்டது. என்ன சொல்லி அனுப்பித்தான். அவன் வரமாட்டானா! என்ன?” என்று வெகு ஆவலுடன் கேட்டுக்கொண்டே, இராமசுப்பனை நெருங்கி வந்து, உற்று நோக்கினாள். தன் தாயைக் கண்டவுடன் இராமசுப்பனுக்கு அடக்க முடியாத துயரம் உண்டானதோடு, தனது தாயின் பரிதபிக்கத் தக்க நிலைமையையும், உடுக்க ஆடையுமின்றி, இளைத்துத் துரும்பாய்ப் போனதுமன்றி, பார்ப்போர் பரிதபிக்கவிருந்த, அவளது தேக நிலைமையையும், எல்லாவற்றையும் விட, தன்பால் இன்னும் அவள்வைத்திருக்கும் அன்பையும் கண்டவுடன், “அம்மா” வென்று அலறி அழுதுவிட்டான். இப்போதுதான் சுப்புலட்சுமிக்கு வந்தவன் தன் மகனெனத் தெரிந்தது. உடனே அவளும் அவனைக் கட்டிக்கொண்டு, “மகனே” எனக் கதறினாள்.

இச் சப்தத்தைக் கேட்ட மஹாலட்சுமி, தான் துர்ப்பலமாக விருப்பதைக்கூடக் கருதாது, தன் படுக்கையை விட்டெழுந்து, தட்டித் தடுமாறி, கூடத் திற்கு வந்தாள். அவள் மிகுந்த துர்ப்பலமான நிலைமையிலிருந்தாளாகையாலும், அவள் அவ்வளவு தூரம் நடந்து வந்ததாலும், அப்படியே மயங்கி, மூர்ச்சையுற்று கீழே விழுந்தாள். உடனே இராமசுப்பனும், சுப்புலட்சுமியும் அவளிடம் ஓடித் தூக்கியெடுத்து, முகத்தில் தண்ணீர் முதலியன தெளித்து, இன்னும் செய்ய வேண்டியசிகிச்சைகளையெல்லாம் செய்து மூர்ச்சையைத் தெளிவித்தனர்.

மஹாலட்சுமி, மூர்ச்சை தெளிந்ததும், தன்னை ஒரு ஆடவன் தாங்கியிருத்தலை யுணர்ந்து, மிகுந்த அச்சமும், வெட்கமு மடைந்து எழுந்திருக்க முயன்றாள். இதைக் குறிப்பாயுணர்ந்த சுப்புலட்சுமி, "மஹாலட்சுமி! வெட்கப்பட்டு, உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே! இவன், வேறு யாருமல்ல. இவன் தான் எனது மகன். உனது கணவன் இவன் தானென்பதைத் தெரிந்துக் கொள்!" என்று, மிகுந்த அன்பு ததும்ப மொழிந்தாள். இதைக் கேட்டதும், மஹாலட்சுமிக் குண்டான ஆனந்தத்திற்களவேயில்லை. அவள் தனக் குண்டான சந்தோஷத்தை, பெண்களுக்கியற்கையாயுள்ள, நாணத்தால் வெளியிடமாட்டாது, பெருமூச்சு விட்டாள். அப்போது, அவளது மார்பானது மலைபோல் உயர்ந்து, தணிந்தது. பத்தரை மாத்துத் தங்கத்தைப் பழித்த திருமேனியையுடைய, அம்மாதின் இயற்கையழகைக் கண்ட, இராமசுப்பனது மனமானது, மிகுந்த களிப்பெய்திய தாலும், இதுகாறும், இப்பேர்ப்பட்ட மாற்றில்லாத் தங்கத்தை விட்டு, வெண்ணையிருக்க நெய்க்கழுபவன்போல், பாத்தையர் லோலனை யலைந்ததை நினைத்து, நினைத்து, கண்ணீரைப் பெருகவிட்டான். பிறகு, ஒருவர்க்கொருவர் வெகுநேரம் யோக க்ஷேமங்களை விசாரித்திருந்தபின், உண்டு உறங்கினர். மறுநாட் காலையில் இராமசுப்பன், தான் வேலைக்குப் போய், சாயங்காலம் வருவதாகச் சொல்லிப் போனான். மஹாலட்சுமியை இதுகாறும் வருத்தி வந்தது மனப்பிணியானதாலும், அம்மனம், பர்த்தாவின் வரவால் களிப்பெய்தியதாலும், தன் பிணி ஒழியப்பெற்று, நாளுக்கு நாள் பலமடைந்து, பழைய நிலைமையை அடையத் தொடங்கினாள்.

இராமசுப்பன், எனுத்தூரிலிருந்து காலை பத்து மணிக்கெல்லாம் உண்டு, தனது கார்யாலயத்திற்கு பதினேரு மணிக்குப் போய்ச் சேருவான். மாலை ஐந்து மணிக்கு வேலை முடிந்ததும் புறப்பட்டு நேராக வீட்டிற்கே வந்துவிடுவான். இப்படியாக, இரண்டு மாதங்கள் கடந்தன. இதற்குள் மஹலட்சுமியும், பூரண சுகம்பெற்று, பழைய நிலைமையை அடைந்துவிட்டாளாதலால், சுப்புலட்சுமியம்மாள், சாந்திக் கலியாணத்தை உடனே செய்துவிட வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால், ஊரிலுள்ளோர் வம்பளக்க நேருமென்றும் சொல்லிக் தன் மகனைச் சாந்தி கலியாணம் செய்துக் கொள்ளத் துரிதப்படுத்தினள். இராமசுப்பனும், தனது தாய்சொல்லுவது நியாயமெனக் கருதி, காஞ்சிபுரத்திலுள்ள, தன் உண்மை நேசன் ஒருவனிடம் ஐம்பது ரூபாய் கடன் வாங்கி, ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில், அதிக ஆடம்பரமின்றி, தனது சாந்திக் கலியாணத்தை நிறைவேற்றிவிட்டான்.

இப்போது இராமசுப்பனும், மஹலட்சுமியும் சதிபதிகளாய் மாரனும், இரதியும்போல இனிதுவந்து இல்லறத்தை நல்லறமாய நடத்தி, "இல்லாளகத்திருக்க யில்லாத தொன்றில்லை." என்பதற்கிணங்க, இராமசுப்பனுடைய வருமானம் குறைவாயிருந்தாலும், தனது மனைவியின் ஆறுதலும், கனிவும் நிறைந்த வார்த்தைகளால் மனந்தேறி, இன்புற்றிருந்தான்.

மஹலட்சுமி அபாரமான கல்வியறிவு பெருதவளாயினும் சாதாரணமாய் குடும்ப மாதர்கள் அவசியம் உணர்ந்திருக்கவேண்டிய,

> வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
> வெருவாமை வீழ்விருந் தோம்பி—திருவாக்கும்
> வெய்வதை மெஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
> செய்வதே பெண்டீர் சிறப்பு.

என்னும் விஷயங்களை உணர்ந்து, தன் கணவனுக்குகந்தமனைவியாய், இன்புற்று மஹலட்சுமி மஹலட்சுமி போலவே விளங்கினள்.

உலகில் இன்பம் மாறினல் துன்பமும், துன்பம் மாறினல் இன்பமும் சகடக்கால்போல் வருவதாலும், "வரும்விதி இராத்தங்காது" என்பதைப்போலும்,

கழுமலத்தில் யாத்தகளிறும் கருவூர்
விழுமியோன்மேற்சென்றதனால்—விழுமிய
வேண்டினும் வேண்டாவிடினும் உறற்பால
தீண்டா விடுதலரிது.

என்ற தெய்வ வாக்கிற் கிணங்க, இராமசுப்பனுக்கு மறுபடியும் துன்பம் வந்து சேர்ந்தது.

ஒருநாள் இராமசுப்பன் உண்டு, உடுத்தி, காரியாலயத்திற்குப் போகத் தயாராயிருந்தபோது, ஒரு தந்திச் சேவகன் வந்து ஒரு தந்தியைக் கொடுத்தான். அதைப் பிரித்து வாசித்த இராமசுப்பன் ஒன்றுந் தோன்றாது, அசைவற்று கற்சிலைபோல் நின்றான்.

தந்தி கொண்டுவந்த சேவகன் சில அடி தூரங்கூட சென்றிருக்கமாட்டான். இதற்குள் ஒரு குதிரை வண்டி வெகு வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து, காஞ்சீபுரம் க. அ. து. ரங்கைய செட்டியும், இன்னொருவரும் இறங்கி, இராமசுப்பனை நோக்கி வந்தனர். அதைக்கண்ட இராமசுப்பனுக்கு, அடிவயிற்றில் நெருப்புப் பிடித்ததுபோல், வேதனையுண்டாயிற்று. செட்டி தன்னை பணம் கேட்கவே வந்துவிட்டானென்பதை யுணர்ந்தவுடன், அவன் மனம் சொல்லொணு துக்கமெய்தியது. அவன் அப்போதடைந்த பயத்திற்கும், துக்கத்திற்கும் ஓர் வரையறையே இல்லை. அவன் பணம் கேட்டால், என்ன பதில் சொல்வதென்னும் நினைவே, அவனுடைய சஞ்சலங்களுக்கெல்லாம் மேலோங்கி நின்று, அவன் மனதைப் புயலிற்பட்ட பஞ்சென வாட்டியது. இவனுடைய, மன உணர்ச்சிகளையும், தேகத் துன்பத்தையும் அவர்கள் இவனை நெருங்குவதைக் கருதி, ஒருவாறு மறைத்துக்கொண்டவனாய், கட்டாயப் புன்னகை வரவழைத்துக்கொண்டு, "வாருங்கள்! செட்டியாரே! என்னமோ! இத்தனை காலமாயல்லாமல் இவ்வேழையைத் தேடி, நமது இல்லத்தை நாடி, வந்தது நான் செய்த பூஜாபலமென்றே நினைக்கிறேன்." என்று முகமன் கூறி வரவேற்றான்.

செட்டியார், அவனுடைய வரவேற்பைக் கருதாமல், முகத்தைச் சுளித்துக்கொண்டு, "என்ன? ஓய் சாஸ்திரிகளே! என்னுடைய பணத்தைக் கொடுத்துவிடும்படி பலதரம் கேட்டும், நீர் பதில் சொல்லாமலிருந்ததால், நான் தாவா செய்துவிட்டேன்!" என்றார்.

இராமசுப்பன்:— என்ன! என்ன!! தாவா செய்துவிட்டீர்களா? உண்மை தானே? இப்போது நீங்கள் சொல்வதைப் பார்த்தால், "சம்மன்" கொடுக்க வந்தீர்கள் போலிருக்கிறது.

செட்டியார்:— சம்மனே? நல்ல சம்மன். உமக்கு சம்மன் அனுப்பி, எத்தனை காலமாயிற்று. நீர் திரிலோக சஞ்சாரியாகையால், உம்மை நேரில் கண்டு சம்மன் கொடுக்க முடியவில்லை. ஆனபடியால், உம்முடைய வீட்டின் கதவிலேயே, சம்மனை ஒட்டிவிடச் செய்தேன்.

இராமசுப்பன்:— (அப்போது கதவைப் பார்த்து சம்மன் ஒட்டியிருப்பதைக் கண்டு, அதிக திகில் கொண்டவனாய்,) செட்டியாரே! சம்மனில் கண்டிருக்கும் தேதியை நோக்கினால், இந்நேரம் என் மேல் "டிக்கிரி" ஆய்விட்டிருக்குமென்றே நம்புகிறேன். தொகை எவ்வளவாயிற்று?

செட்டியார்:— நீர் நம்மிடம் முதல் வாங்கிய பணம் நாற்பதினாயிரம். இவ்விரண்டு வருடங்களாய், இரண்டு வட்டி வீதம் வட்டிக்காக சேரவேண்டியது பத்தொன்பதாயிரத்து இருநூறு. இதற்கு "கோர்ட்" செலவு இரண்டாயிரம். ஆக, உம்மேல் "டிக்கிரி" ஆகியிருக்கும் தொகை, அறுபத்து ஓராயிரத்து இருநூறு மாத்திரம்.

இராமசுப்பன்:— ஐயோ! நானெங்கிருந்து கொடுக்கப் போகிறேன். தாங்கள் கொஞ்சமாவது கருணை காட்டக்கூடாதா?

செட்டியார்:— நான் உம் விஷயத்தில் கருணையற்றவனென்று நினைத்துக்கொண்டீர். நீர் ஏழையாய்ப் போய்விட்டீரே என்று உம்மேல் இரக்கங்கொண்டு, அறுபதினாயிரத்து சொச்சம் சேரவேண்டியதில் சொச்சத்தைத் தள்ளிவிட்டு, அறுபதினாயிரம் கொடுத்தால் போதுமென்று "கோர்ட்" டாரையே கேட்டுக்கொண்டேன். அதை மட்டும் நீர் கொடுத்துவிட்டால் போதும்.

இராமசுப்பன்:— "செட்டியாரே! உமக்கு அறுபதினாயிரம் ரூபாய்களா வேண்டும்? இப்போது என்னை வெட்டிப் போட்டாலும், என்னிடம் ஓர் செல்லாக்காசும் கிடையாது." என்று மேலும் ஏதோ பேசப்போக, செட்டியாருடன் வந்தவர், "எனக்கு நேரமா

கிறது. நம் வேலையை முடித்துக்கொண்டு, போகவேண்டும்.'' என்று துரிதப்படுத்தினர்.

உடனே செட்டியார், ஓய்! சாஸ்திரிகளே! இதோ வந்திருப்பவர் "கோர்ட் அமீனு.'' இவர் உமக்கு "வாரன்ட்'' கொண்டு வந்திருக்கிறார். அந்த "வாரன்ட்'' டில் கையெழுத்துச் செய்யும்; நாங்கள் போகிறோம். நீர் சொல்ல வேண்டியதை "கோர்ட்டில்'' சொல்லிக்கொள்ளும்'' என்றார்.

உடனே இராமசுப்பன், மறுவார்த்தைப் பேசாமல் கையொப்பம் செய்துவிட்டான். பிறகு செட்டியும், அமீனுவும் வண்டியில் சென்றனர்.

அமீனு செல்வதற்கு முன் இராமசுப்பனைத் தனியாயழைத்து, "நான் சட்டப்படி தங்களை என்னுடன் அழைத்துப்போக வேண்டியவன். ஆயினும், நான் தங்களுடைய முன்பிருந்த யோக்கியதையைக் கருதி, விட்டுவிட்டுப் போகிறேன். நாளைக்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது. நாளைய மத்தியானம் பதினொரு மணிக்கெல்லாம் "கோர்ட்'' டில் ஆஜராயிருக்க வேண்டும். சாஸ்திரிகளே! இவ்வளவு தூரம நான் தங்களுக்கு உதவி செய்கிறேனே; எனக்கொன்றும் செலவிற்கு இல்லையா?'' என்றான்.

இராமசுப்பன், சுற்றுமுற்றும் பார்த்து விழித்தான். தன் கையில் செல்லாக் காசுமில்லை யென்பதைச் சொன்னல், அமீனு இப்போதே, கூட கச்சேரிக்கு வந்து காவலிலிருவென்றால், என்ன செய்வது என்று யோசித்து, பின்பு தன் கையிலிருந்த அரை சவரன் தாளக் கூடிய மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து, "ஐயா! என்னிடம் இப்போது ரொக்கமாய் ஒரு தம்பிடியுமில்லை. இதை எடுத்துக் கொண்டுபோய் விற்று அப்பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றான்.

அமீனுவுக்கு அதிக சந்தோஷமுண்டாய்விட்டது. அவன் மிஞ்சிக்கொடுத்தால், ஒரு ரூபாய் கொடுப்பானென்று எதிர் பார்த்திருந்தான். அப்படியிருக்க, தனக்கு சுமார் ஏழுரூபாய் மதிப்புள்ள மோதிரங் கிடைக்கவே, அதிக சந்தோஷத்துடன், மறுநாள் வரும்படி கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டுச் சென்றான்.

அவர்கள் சென்றவுடன் இராமசுப்பன் ஒன்றும் தோன்றாதவனாய், காஞ்சீபுரம் சென்றான். வழக்கப்படி சாயங்காலம் வீட்டிற்கு வந்தவன், யாருடனும் பேசாமல் படுக்கையில் படுத்துவிட்டான். தாயும், மனைவியும் எவ்வளவு வேண்டியும், அவன் அன்றைய இராப்போஜனம் கொள்ளவுமில்லை. என்ன காரணமென்று சொல்லவுமில்லை. ஆகையால் மற்றவர்களும் உண்ணாமலிருந்துவிட்டனர்.

மறுநாளுதயமாகி, காலை 8-மணியாகியும் இராமசுப்பன் படுக்கையறையை விட்டு எழுந்து வாராததைக்கண்ட அவன் அன்னை, பலவாறு ஐயங்கொண்டவளாய், அங்கு வீட்டு வேலைகளைச் செய்துக்கொண்டிருந்த மஹாலட்சுமியைக் கேட்க, அவள், இராமசுப்பன் அதிகாலையில் எழுந்து காஞ்சீபுரம் சென்றதாகவும், அப்படியே சென்னைக்குச் செல்வதாக சொல்லிச் சென்றானென்றும், வருவதற்கு இரண்டு தினங்களாகுமென்றும் சொன்னாள்.

# இரண்டாம் அத்தியாயம்.

## கற்றவர் காய்வது காமனையே!

1. வண்டுமலர்ச் சேர்க்கை விரும்புஞ் செம்பொழில்வாய்
வேம்பன்றோ காக்கை விரும்புங் கனி.

2. காய்முற்றில் தின்தீங்கனியாம் இளந்தளிர் நாள்
போய் முற்றின் என்னுகிப்போம்.

3. போதந்தனங் கல்வி போந்தவருங் காலத்தில்
மாதர்மேல் வைக்கு மனம்.

---

மாதர்! மாதர்!! ஈசனின் அருட் படைப்பு யாவற்றினும் சிறந்து விளங்கும் மாதர்! ஆடவரின் உளம் வருந்தும் சமயத்து, அவையாற்றும் அருமருந்தாய், வான் துணையாய், அன்பும் ஆதரவும் நலம்பெற ஒளிவீசும் மாதர்! கடவுள் எனும் தீச் சுடரின் கதிரென புலவர் பலரால் புகழப்படும் மகளிராம் மாதர்! குற்றமிலா விருப்பெனும் தூய்மையான தீயை வளர்க்கும் காதலானது, இன்னும் பூர்க்காமல் (பக்குவமடையாமல், பதனடையாமல், அதற்குரிய காலத்தை நெருங்காமல்) அரும்பாயிருப்பதைக் காட்டுங் குறியொப்ப, நகை புரியும் வெண்மையான முத்தன்ன பல்வரிசையுடைய மாதர்!

தூமகேதுவே புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமமில்லையெனில் கடுங்கே டெனும்
நாமமுமில்லை நாகமு மில்லையே.

என்று கவிச் சக்ரவர்த்தியாம் கம்பரைப் பகருமாறு தூண்டிய மாதர்!

மாதரின் மாயை என்னே! மாதரின்றேல் பிள்ளைப்பேறில்லை. பிள்ளைப்பேறில்லையேல் உலகமில்லை. ஆகையால், மாதரே மாயையின் வித்து. மாதரே பிரபஞ்சத்தின் லீலைகளை நடத்தும் சூத்திரதாரர்கள். ஆகையால் தான் பெரியோர்களும் "சத்தியாய் சிவமாய்" எனப் பெண்களுக்கு முதன்மைஸ்தானம் கொடுத்தார்கள். முழுமுதற் கடவுளாகிய ஈசனும், தனது இடபாக மளித்து ஆண்களில் அரை பாகம் பெண்கள் என்று காட்டினர்போலும்.

இத்தகைய மாதர் தம் வலையினுள் வீழ்ந்துள ஓர் யௌவன வாலிபன் சென்னையின் கடற்கரை யோரத்தில் ஓர் நாள் மாலை உலாவியவண்ணம் யோசனைக்கிரந்தனு யிருந்தான். வாலிபனுக்கு வயது பதினறு அல்லது பதினேழிருக்கலாம். வாலிபனது முகத்தில் கல்வியறிவு சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது நன்கு விளங்கியது. அவன் மிகுந்த அழகு வாய்ந்தவன். நல்ல கட்டுமஸ்தான தேகத்தோடு கூடியவன். குணமும் நற்குணமுள்ளதாகவே அவன் அழகு வழிந்த முகம் தோற்றுவித்தாலும், கதையை நாம் மேன்மேலும் நடத்திக்கொண்டு போம்பொழுது வாசகர்களுக்கு விளங்குமாகையால், அனுவசியமாக வளர்த்தி, வாசகர்களின் அரிய பொழுதை வீணுக்க, நமது மனம் இடந்தரவில்லை.

முற்கூறியவிதம் உலவிக்கொண்டிருந்த வாலிபன் கீழ்வருமாறு யோசனை செய்துக்கொண்டிருந்தான்.

"என்னே! நமது மதி சென்றவாறு! நாம் யார்? நமது மனம் விரும்பும் வஸ்து யாது! 'எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவ மென்பதிழுக்கு' என்ற அருள் வாக்கிற்கிணங்க, நாம் விரும்பும் வஸ்து கிடைக்கக் கூடியதா என்பதை யோசியாது விரும்புதல் நம் போன்ற கற்றறிந்தவர் செய்கையா? எட்டா வஸ்துவைக் கண்டு கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தால், அதனுலுண்டாகும் பலன் யாது? 'கிட்டாதாயின் வெட்டனமற.' என்ற வாசகத்தை உணர்ந்துமென்ன? எட்டுச் சுரக்காயாயல்லவா போயிற்று?......... ஆஹா! அவள் அழகுதானென்னே' அவளது சந்திரனைப் போன்ற முகத்தைக் காணுந்தோறும் என் மனம் பூரித்துப் புளகாங்கிதமடைகிறது. அவள் யாரென்பதே இன்னும் எனக்குத் தெரியாது.

அதிக அழகுடைய அவளை யான் எந்த வார்த்தைகளைக்கொண்டு புகழ்வேன்.

அன்ன நடையுடையாள் அன்பின் உருவுடையாள்
கன்னல் மொழியுடையாள் காரிகை—தன்னழகால்
இந்திரையோ! வாணியோ! ஏர்திருவோ! பார்வதியோ!
எந்த நிலப்பெண்ணோ இவள்.

என்று சிதம்பரன் என்னும் புலவோர் இரத்னம் நளாயினியைக் கூறியது முற்றும் இவள் மாட்டும், பொருந்து மெனவே யான் துணிந்துரைப்பேன். இவளை யடையாது போனால் என் மனமும் உயிரும் ஒரு வழி நில்லாது.'' என யோசித்தவனும் துக்காக்கிரந்தனும் இருள் சூழ்வதையும் நோக்காது முன்னும் பின்னுமாக உலவிக் கொண்டிருந்தான்.

அப்போது திடீரென ஒரு வாலிபன், உலவிக்கொண்டிருந்த வாலிபனை நோக்கி, "ஸ்ரீலோலா ஏது! ஆழ்ந்த யோசனையிலிருக்கிறாப் போலிருக்கிறது. இடையில் தடுத்ததற்காக மன்னிக்கக் கோருகிறேன்'' என்று கூறியவாறு ஸ்ரீலோல னருகில் வந்தான்.

**ஸ்ரீலோலன்:—** கோவிந்தா! எங்கே? இவ்வளவு தூரம் வந்துவிட்டாய்! எப்போதும் புஸ்தகமும் கையுமாக பொழுது போக்கும் நீ அப்பொழுதை இப்படி செலவழிக்கத் துணிந்ததென்னமோ எனக்கு ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

**கோவிந்தன்: —** நண்பா! ஏது மிகுந்த யோக்கியனைப்போல் பேசுகிறாய். நீ மாத்திரம் புஸ்தகமும் கையுமா யிருப்பதில்லையோ! இப்பொழுது சிறிது நாட்களாக உனது குணம் அபூர்வமாக மாறி யிருக்கிறது. அதன் காரணத்தை யறியவே இப்போது நானிங்கு வந்தேன்.

**ஸ்ரீலோலன்:—** ஓகோ! அப்படியா சங்கதி. அதிருக்கட்டும் உனக்கு எவ்விதம் நானிங்கிருப்பது தெரியும்.

**கோவிந்தன்:—** நான் உன்னை ஒரு விஷயம் கேட்பதற்காக உன் வீட்டைத் தேடிப் போனேன். அங்கு நீ காணப்படவில்லை. உன்னைப்பற்றி விசாரித்ததில் அசம்பாவிதமான விஷயங்கள் வெளியானதோடு, நீ இங்கிருப்பாயெனவும் கேள்விப்பட்டு வந்த நான்

அரைமணி நேரமாக உன்னையே நோக்கிக்கொண்டிருக்கிறேன். நீயோ நான் கேள்விப்பட்டதற்கு அநுசரணையாக, மிகுந்த ஆலோசனையுடன் உலகத்தையே மறந்தவன் போலிருக்கிறாய்.

ஸ்ரீலோலன்:— என்னப்பா! நீ அப்படி கேள்விப்பட்டு விட்டது. நானென்ன அதற்கனுசரணையாக நடந்துக்கொண்டது. சற்று சொல்லேன் கேட்போம்

கோவிந்தன்:— நானென்ன கேள்விப்பட்டே னென்றால், நீ சில தினங்களாய் சரியாக உண்ணாமலும், உறங்காமலும் ஏதோ பித்துப் பிடித்தவன்போ லிருக்கிறாயாம். அப்படி நீ யிருப்பதற்கான அவ்வளவு பெரிய இடர் உனக்கு யாதுற்றது. அதை நீ இப்போதே கூறினால், ஒரு விநாடியில் போக்குகிறேன்.

ஸ்ரீலோலன்:— அவ்வளவு சூரனா நீ, ஏனப்பா! வீண்பெருமை பாராட்டிக்கொள்ளுகிறாய். எள் என்பதற்குள் எண்ணெ என்கிறாயே. நான் என் குறையைச் சொன்னால் உடனே தவிர்ப்பாயோ? உன்னால் முடியுமோ? ஏதோ உன் முத்தான வாயைத்திறந்து உறுதியாக வாக்களி பார்க்கலாம்.

கோவிந்தன்:— அட! பைத்தியமே! இவ்வளவு தானா உன் மதி. நீயும் நானும் நமது குழந்தைப் பருவ முதல் ஒன்றாயுண்டு வளர்ந்த உண்மை நேயர்களல்லரா? உனக்குற்ற இடர் எனக்குற்றதல்லவா? தலை போவதாயிருந்தாலும் செய்தே தீருவேன்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு.

என்ற நீதி வாக்கிற்கிணங்க, நட்புரிமை கொள்ளும் நண்பர்களுள் ஒருவனாயென்னை நீ இதுகாறும் நினையாதிருந்தாயானால், என்னைப் போல் துர்ப்பாக்கியன் உலகிலிரான்.

ஸ்ரீலோலன்:— ஏதப்பா! உனக்கு இன்றைக் கென்றுமில்லா ஆத்திரம் உண்டாகிவிட்டது. நானென்ன உன்னை மற்ற சிநேகிதர்களைப் போலவா பாவித்தேன். உடலிரண்டும் உயிரொன்றுமாக வல்லவோ இதுகாறும் பழகி வந்தோம். அதை மறந்து மொழிகின்றனையே.

**கோவிந்தன்:**— அப்படியிருக்க, என்னால் உபகாரம் செய்ய முடியுமா வென்று கேட்பானேன். நான் எல்லாவற்றிற்கும் உன் பொருட்டு ஆவியையும் திரணமாய் மதிக்கத் தயாராயிருக்கிறேனே. அன்றியும்,

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

என்றபடி, நானுனக்கு எத்தகைய உதவியையும் செய்யக் கடமைப் பட்டவனல்லா?

**ஸ்ரீலோலன்:**— நண்ப! இப்போதே உனதுண்மையான நட்பின் பெறுமையைக் கண்டேன். இனி, எனக்குற்ற துயர் ஒரு பெரிதல்ல. அதை சாதிப்பது மிகுந்த கஷ்டமாயினும், இனி நான் அதை அவ்வளவு பெரிதாகக் கருதேன். ஏனெனில், எனக்குற்ற தோழன் உண்மையாயுதவ விருக்கும்பொழுது, நான் அதை அவ்வளவாக பொருட்படுத்துவ தழகாகுமா?

**கோவிந்தன்:**—என்ன ஸ்ரீலோலா! முயற்சித்தால் கைகூடாத காரியமும் உலகில் உண்டா? உழைப்பின் வாரா உறுதிகளுளவோ? அன்றியும் "முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்." "முயற்சி திருவினையாக்கும்," "முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்," என்னும் இவை போன்ற வாக்கியங்களை நீயறியாதவனா? எப்பேர்ப்பட்ட அபாரமான காரியங்களானாலும் முயற்சித்தால் கைகூடும். ஆகையால் நீ சந்தேகிக்காமல் சொல்லலாம்.

**ஸ்ரீலோலன்:**— கோவிந்தா! நீ சொல்வதை நான் ஆமோதிக்கிறேன். முயன்றால் முடியாத காரியமில்லை யென்பதையும் நான் நம்புகிறேன். ஆனால்,

"வெள்ளத் தனையமலர் நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"

என்றபடி, எக்கார்யத்தையும் செய்தே தீரவேண்டும்; என்று முழுமனங் கொண்டாலல்லவா முடியும். அப்படிக்கின்றி வெறும் முயற்சியினால் யாது பயன்.

**கோவிந்தன்:**— பலே! கெட்டிக்கார பேர்வழியப்பா! ஒரே நிமிஷத்தில் என்னைக் கட்டப் பார்க்கிறாயே. எனக்கு உன்பால்

உதவி செய்ய முழுமனதிருந்தால் மாத்திரம் உதவலாம்; இல்லையானல் முடியாதென்பதை ஒருவாறு தெரிவித்து விட்டாய். நானுனது நண்பனுகையால், எனது கடமையைச் செய்யப் பின் வாங்கேன். இதனுல் எந்தவித அவமானம் உண்டானுலும் சகித்துக்கொள்வேன். நீ யோசியாமல் சொல்லலாம்.

**ஸ்ரீலோலன்:—** கோவிந்தா! கடமை, கடமை யென்கிருயே; அக்கடமையைக் காத்தல்பொருட்டு எவ்வித ஆபத்திற்கும் உட்படத் தயாராயிருப்பதாகச் சொல்லுகிருயே. எதோ, கடமையின் பெருமையைப் பற்றிச் சிறிது கூறு கேட்போம்.

**கோவிந்தன்:—** நண்ப! எனக்குத் தெரிந்த வரை கடமையின் பெருமையைப் பற்றிச் சொல்லுகிறேன். கடமையின் பெருமையைக் கூறவாரம்பித்தால் நமக்கு இச்சமயத்தில் நேரமில்லை; ஆகையால், கூடிய வரையில் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

கடமை என்பது ஒரு மனிதன் யாதொரு பிரதி பலனும் கருதாமல் பெரியோர்களால் வரையறுக்கப்பட்டிருக்கும் நெறிமுறைகளைப் பின்பற்றி நடப்பதாம்.

இக் காலத்துச் சில கோழை மனிதர்கள் பயந்தோ, அல்லது சுய காரியப் புலிகளாகவோ தங்கள் கடமையைச் செய்வதில்லை. ஆகையால்தான் யானும் இதை உனக்குக் கூறலாயிற்று.

அவரவர்கள் கடமையைச் சரிவர ஒவ்வொருவனும் செய்துக் கொண்டே போனல், தற்காலம் உலகில் நடக்கும் பல அட்டூழியங்கள் நடைபெருமற் போகும். உலகில் தீச் செயல்கள் பல புரிய உண்டாகும் சௌகர்யங்கள், நற்செயல்களுக் குண்டாகிறதில்லை. இது கலிகால இயற்கைபோலும். ஆரியக்கூத்தாடினுலும், காரியத்தில் கண்ணுயிருத்தல் அவசியமல்லவா? அஃதேபோல்:—

—வித்தகமாய்

காதி விளையாடி யிருகைவீசி வந்தாலும்
தாதி மனநீர்க் குடத்தே தான்.

என்றபடி, எத்தகை இடர் வந்துற்றுலும் பொறுமையுடன் உற்று நோக்கி அத்தகைய இடுக்கண்களில், தான் செய்ய வேண்டிய கடமையை, ஆராய்ந்துணர்ந்து, அதை நிறைவேற்றலே விவேகி

களுக் கழகு. கடமை என்பது யாது? அதற்குண்டாகும் இடர் யாது? அது எப்படிப்பட்டது? என்பதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன்.

ஓர் பள்ளிக்கூட மாணவனை யெடுத்துக்கொள்வோம். பையன் மிகவும் புத்திசாலியாகவும், நற்குண நற்செயல்களுக்குப் பெயர் பெற்றவனாகவும் வைத்துக்கொள்ளுவோம். இவன் பிரவேச பரீட்சையில் (Metric) தேறின பிறகு மேல் வகுப்புகளாகிய F. A; B. A; படிக்க சென்னைக்கு அனுப்பப் படுகிறான். அங்கு சிலநாள் முன் போலவே யிருந்தபின், பையாஸ்கோப் (Cinima) முதலிய படக் காட்சிகளுக்கு போக விருப்பம் கொண்டு ஒரு தரம், இரண்டு தரம் தானே போகப் போகிறோம்; இதனால் நமக்கொன்றும் கெடுதல் வராதென்று தனக்கு புத்தி புகட்டும் மனச்சாட்சியை உறங்கவிட்டுச் செல்லுகிறான். பிறகு ஓயாமல் போகிறான். இதனாலிவனுக்குண்டாகும் பலனென்ன? பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகிய **காமம்** என்னும் படுகுழியில் அழ்த்தப்படுகிறான். எப்படி யெனில்; பையாஸ்கோப்புகளில் காண்பிக்கப்படும் படங்களில், 100-க்கு 99, காமாந்தகாரமான படங்களே காண்பிக்கப்படுகிறது. இதைக் கண்டவுடன் பையனுக்கு மாதர்களாசை சிறிது சிறிதாக தலையெடுக்க ஆரம்பித்து வேரூன்றி விடுகிறது. பையன் முதலில் தடை செய்யும் தனது மனச்சாட்சிக்கு பலவித சமாதானம் செய்துக்கொண்டு, மனதைத் தேற்றியவனாய், முதன்முதலாக ஒரு தாசி வீட்டிற்குச் செல்லுகிறான். தாசி வீட்டிற்கு ஒரு தரம் சென்றவர்கள் மீண்டும் மீள்வரோ? ஆகவே, இவன் படிப்பெல்லாம் தாசி வீட்டுக் கதவின் இடிப்பாக மாறிப் போகிறது. நண்பனே! இந்தப் பையனுடைய கடமை யாது? கல்வி யல்லவா! அதற்குற்ற இடர் யாது? வேசையர்களாசை. இவ்விதமே ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளைக் கருதாது விலக்கி, அதனாலுண்டாகும் துன்பங்களை நிலைபெற அனுபவிக்கிறார்கள். எனவே, இனி உனது கடமையைச் சரிவர நடத்தக் கோருகிறேன். இதனாலுண்டாகும் இடர் எத்தகைய பெரிய தானாலும் பொருட்படுத்தக் கூடாது.

மேலும், ஔவை மூதாட்டி உரைத்தபடி,

> மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
> யருமையும் பாரார் அவமதிப்புங் கோள்ளார்
> கருமமே (கடமையே) கண்ணாயினர்.

என்ற வாசகத்தின் உட்கருத்தைக் கவனிப்போமாயின், ஒரு ஆட்சேபம் தோன்றுவ தியல்பு. இந்த வாசகத்தைக் கூறிய அந்த மூதாட்டியே, "மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்றதற்கு முற்றும் முரண்பட, "அவமதிப்புங் கொள்ளார்" என்றுரைத்திருப்பதின் பொருள் யாது? இதை ஆழ்ந்து நோக்கில், உண்மை விளங்கும். உலகில் பிரதானமான பொருளபிமானம், உடலபிமானம், உயிரபிமானம் முதலிய முத்திரைகளைவிட மானபிமானம் மிகச் சிறந்ததென்று,

> " மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
> உயிர்நீப்பர் மானம் வரின். "

என்ற திருவள்ளுவர் வாக்கினின்று அறியக் கிடக்கின்றது. அப்படியெல்லோரும் புகழ்ந்துரைத்துள்ள மானம் அல்லது அவமதிப்பு என்பதையும் கருமம் அல்லது கடமையை நிறைவேற்றுங்கால், கருமத்தைத் தடைசெய்ய உண்டாகுமாயின், அப்பேர்ப்பட்ட அவமதிப்பைப் பாராட்டக் கூடாதென்றே ஔவையார் சொல்லியதாக பொருள் கொள்ள இடமிருக்கிறது.

இதனால், கடமையின் பெருமை நன்கு விளங்குகிறதல்லவா? ஆகையால், நமது கருமத்தை (Duty) செய்வதற்கு நாம் எந்த இடையூறுகளையும் புறக்கணித்து, நமது கடமைகளைச் செய்துக் கொண்டே போகவேண்டும். வயதில் சிறியவனும் அறிவிலியுமான யான் எல்லாம் கற்று வல்ல உனக்குச் சொல்லித்தா என்ன யோக்கியதை யிருக்கிறது. ஆயினும் ஒரு விஷயம் கவனித்தற்பாலது.

ஒருவனுக்கு என்ன கூர்மையான புத்தி இருந்தாலும், உலகிலுள்ள எல்லா நன்மை தீமைகளை யறிந்திருந்தாலும் அதை அவ்வப்போது ஒருவர் நினைப்பூட்டிக்கொண்டே யிருந்தால், எந்த விஷயமும் அநுஷ்டானத்திற்கு வரும். நானிப்போது கூறியது "இவன் என்ன! நமக்குத் தெரியாததைக் கூறிவிட்டானே" என்ற கேள்

விக்கு பதிலாயிற்று. ஆனால் "இவன் கடமையைப் பற்றிச்சொல்ல வந்தானே, இவனிடம் அத்தகைய குற்ற மிருக்காதோ!' என்ற கேள்விக்கும் சமாதானம் சொல்ல வழியிருக்கிறது.

—திங்கள்

கறையிருளை நீக்கக் கருதாது வியனுலகின்
குறையிருளை நீக்குமே நின்று.

என்றபடி, சந்திரனனவன் தனதுடலிலுள்ள மாசை விலக்க முடியா விடினும், உலகைப் பற்றிய இருளை, தான் சூரியனிடத்திலிருந்து பெற்ற ஒளியைக் கொண்டு போக்குகிறான். அஃதேபோல், ஏதோ பெரியோர்களிடம் "கற்றலின் கேட்டலே நன்று." என்றபடி, நான் கேட்டுத் தெரிந்துகொண்ட இந்த விஷயத்தை யுனக்குரைத்தேன். என்னிடம் எனக்குத் தெரியாமல் பிறருக்குப் புலனாகும் குற்றங்கள் பலயிருக்கலாம் ஆனால், அவைகளையெல்லாம் கல்விக் கழகமான நீ மேற்கூறிய சமாதானங்களைக்கொண்டு என்னை மன்னிக்கும்படி கோருகிறேன்." என்ற, நீண்டப் பிரசங்கத்தைச் செய்தான்.

இப்பிரசங்கத்தைக் கேட்ட ஸ்ரீலோலன், ஆனந்தப் பரவசனாய் "அன்பனே! உன்னுடைய சாமர்த்தியத்தால், கடமையைப்பற்றித் தெரிவித்தது மன்றி, எனக்கும் ஒருவாறு புத்தி கற்பித்து விட்டாய். போகட்டும், என் மனம் நாடிய வஸ்துவை மட்டும் நீ எனக்களித்தால் போதும்."

**கோவிந்தன்:—** அது இன்னதென்று சொல்லாமலே கேட்டால் என்ன செய்வது!

**ஸ்ரீலோலன்:—** நானென்னவென்று சொல்லுவேன். சிலதினங்களுக்கு முன், அகஸ்மாத்தாய் கடற்கரைக்கு வந்தேன். அப்போது ஒரு மோடார்கார் வெகு வேகமாக வந்து எனக்கு சமீபத்தில் நின்றது. அதில் ஒரு யௌவன மங்கை இறங்கி, சற்று நேரம் உலாவியிருந்துவிட்டுப் போனாள். அன்று முதல் என் மனது அவளையே நாடுகிறது ஆஹா! அவளழகை என்னென்றெடுத்துரைப்பேன். மலையிடைப் பிறவா மணியே என்கோ! அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ! யாழிடைப்பிறவா இசையே என்கோ! தாழிருங்கூந்தற்றையல்!...அவளை யானெவ்விதம் புகழ்வேன்; அவளை

அடையாவிடில் நான் ஒருபோதும் உயிர்வாழ்தலரிது. நீ எப்படியும் என்னையும், அவளையும் சேர்த்துவைக்காவிட்டால், என் மனம் செத்தாலும் வேகாது.

**கோவிந்தன்:—** ஸ்ரீலோலா! என்ன? உனது பேருக்குற்றபடி நடவடிக்கையிலும் ஆரம்பித்துவிட்டாய்போலும்; அவள் ஒருநாள் மோட்டாரில் வந்து போய்விட்டாளே; அவள் விலாசம் எப்படித்தெரிவது. தெரிந்தாலும் ஒருவேளை முயற்சிக்கலாம்.

**ஸ்ரீலோலன்:—** நண்ப! நான் முற்றிலும் சொல்லுவதைக் கேட்கக் கோருகிறேன். அவள் தினமும் இந்த வேளையில் இங்கு வந்து உலவிவிட்டுப் போகிறாள். இன்றைக்கும் வந்துவிட்டுப் போனாள்.

**கோவிந்தன்:—** அதிருக்கட்டும்; அவள் வயதென்ன? அவள் ஜாதியென்ன? இன்னும் இவைபோன்றவைகளை எல்லாம் தெரிந்துக்கொள்ளாமல் காதல்கொண்டுவிட்டாயே, அவள் ஒருக்கால் உன்னிலும் வயதில் பெரியவளாயிருந்தால், அல்லது தாழ்ந்த ஜாதியோ, உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவளாகவோ யிருந்தால், இந்த ஆட்சேபனைகளெல்லாவற்றிற்கும் என்ன சமாதானம் சொல்லுகிறாய்.

**ஸ்ரீலோலன்:—** நண்ப! என்னிடம் நீ எவ்வித ஆட்சேபனையும் சொல்லக் கூடாது. எந்தவித ஆட்சேபனைகள் அவள்பாலிருந்தாலும் எனக்கக்கரையில்லை. நான் அடைந்தால் அவளையே அடைய வேண்டும்; இல்லையேல் உயிர் வாழேன். இது நிச்சயம்! இது சத்தியம்!

**கோவிந்தன்:—** என்ன! என்ன!! இதற்குள் சத்தியம் செய்துவிட்டனையே! இதுதான் காமத்திற்கு கண்ணில்லை என்பதுபோலும்; இன்னும் அவளைப்பற்றிய விவரம் ஒன்றும் தெரியவில்லை; நான் எவ்வளவுதான் துணிந்திருந்தாலும், எத்தகைய காரியங்களைச் செய்தாலும் அந்தப் பெண்ணுக்கு உன் மீது காதலுண்டாயிருக்க வேண்டாமா? அப்படி அவள் விரும்பவில்லை யென்று வைத்துக்கொள்ளுவோம்; அதற்கென்ன செய்வாய்?

**ஸ்ரீலோலன்:—** இதுகளெல்லாம் வீண் ஆட்சேபனைகள். இச்சில நாட்களாக அவளும் தவறாமல் குறித்த நேரத்தில் இங்கு வரு

வதையும், என்னை ஒரு மாதிரியான பார்வையாய் நோக்குவதையும் கவனித்தால், அவளுக்கும் என்மேல் காதலிருக்க வேண்டுமென்றே யூகிக்கிறேன். எப்படியானாலும் சரி; நயத்திலோ, பயத்திலோ சகஜமானாலும் சரி; பலவந்தத்திலானாலும் சரி; அவளை நான் அணைந்து சுகம் பெற வேண்டும். இல்லையாகில், நானிவ்வுயிரைச் சுமந்துத் திரியேன். இது நிச்சயம். என் மனம் என்னவோ, என்னையும் மீறி அவள்பால் சென்று லயித்துவிட்டது. இனி ஒருக்காலும் அவ்வுறுதி மாறாது'' என்று ஒரே பிடிவாதமாக பதில் சொன்னான். கோவிந்தன் எவ்வளவு தூரம் புத்தி சொல்லியும் கேட்கவில்லை. எப்படி கேட்க முடியும். முத்திரைகளில் முதன்மை பெற்று விளங்கும் பெண்ணாசை யென்னும் பேயினால் பீடிக்கப்பட்டவன், மறுபடியும் அதனின்று மீள்வதுமுண்டோ? ஒருக்காலும் முடியாது. ஆகையால், ஸ்ரீலோலனும் கோவிந்தன் மொழியை உதாசினம் செய்தது ஆச்சர்மல்ல. கோவிந்தன் எவ்வளவு சொல்லியும், ஸ்ரீலோலன் கேளாமற்போகவே, மிகவும் மனம் வருந்தினானாயினும், சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, பிறகு ஸ்ரீலோலனைப் பார்த்து, "உனக்கு நான் என்ன சொன்னாலும் நீயென்னமோ கேட்கப்போகிறதில்லை. வீணில் உனக்கு புத்தி சொல்லி நேரத்தை வீணாக்குவதில் என்ன பயன். ஆகையால், நான் ஓர் யுக்தி சொல்லுகிறேன். அதன்படி நடந்துக்கொண்டால், அவளிருப்பிடத்தையறிந்துக் கொள்ளலாம். முதலில் நாளைக்கு உனது சைகிள் மோட்டாரில் இந்நேரத்திற்கு இங்கு காத்திருப்போம். அவள் மோட்டாரில் வந்தால், அது போகும்போது அதைப் பின்பற்றிச் சென்று, இடத்தை யறிந்துக் கொண்டு, பின்னால் நடக்க வேண்டியதை யோசித்துக்கொள்ளுவோம்'' என்றான். பிறகு இருவரும் அதற்குச் சம்மதித்தவர்களாய்ச் சென்றனர்.

மறுநாட் சாயங்காலம் கோவிந்தனும், ஸ்ரீலோலனும் தங்கள் சைகிள் மோட்டாருடன் கடற்கரையில் காத்திருந்தனர். வெகுநேரம் கழித்து எதிர்பார்த்திருந்த ரமணீமணியின் மோடார்காரும் வந்தது. சிறிது நேரம் அம்மங்கை உலவியிருந்தபின் மறுபடியும் மோட்டாரேறிப் போய்விட்டாள். உடனே, இந்நண்பர்களிருவரும் மோட்டார் சைகிளிலேறி, பின்பற்றிச் சென்றனர். முன்னும் பின்னுமாக

இரண்டு மோடாரும் மைலாப்பூரை நோக்கிச் சென்று, சேந்தோமைக் கடந்து, அடையார் வாராவதி வழியாக திருவாமூரையடைந்து, அவ்வூரின் தென்பாலுள்ள தனித்த பங்களாவிற்குள் மங்கை யிருந்த மோட்டார் சென்றுவிட்டது. இந்நண்பர்களிருவரும் அந்தப் பங்களாவை நன்று யடையாளம் தெரிந்துக்கொண்டபின், மற்ற விஷயங்களை மறுநாள் விசாரிக்கலாமென உறுதி செய்துக்கொண்டவர்களாய்த் திரும்பிவிட்டனர்.

# மூன்றும் அத்தியாயம்.

## குடிப்பிறந்தாள் தன்னோடு கூடுதல் கோடி பெறும்.

1 முத்திற்கல்ல, பவளத்திற்கல்ல, உன்முகத்திற்கல்ல,
2. சொத்திற்கல்ல, நீ கற்ற வித்தைக்கல்ல உன் சுகத்திற்கல்ல
3. தித்திக்கும் தேன் ருசிக்கொத்த உந்தன் வாய்சொல்லுக்கல்ல,
4. அன்றுமுத லின்றுவரை யறிந்துனது நிகறற்ற தூய்மை நிறை குணத்திற்கல்லவோ யானுனது அடிமையாய்ப் பேயினும் பெரியனாய் பிதற்றத் துணிந்தேன் ஆரணங்கே!

இக்கதையின் முதலத்தியாயத்தினுறுதியில்கூறப்பட்டபடி இராமசுப்பன் எப்படி எங்குபோய் விட்டானென்பதைக் கூறி கதையைத் தொடர்வதவசியமாதலால் அதை இவ்வத்தியாயத்தில் கூறுவோம். முற்கூறப்பட்டபடி இராமசுப்பன் விசனமேலிட்டவனாய் படுக்கையில் உண்ணாமல் படுத்துக்கொண்டான். வெகுநேரம் சுப்புலட்சுமி வேண்டியும் பயனடையாததால் தானும் உண்ணாமல் படுத்துக்கொண்டாள். மஹாலட்சுமியும் தனது கணவனுக்குற்ற துயரத்தை தானும் கொண்டவளாய் படுக்கை யறையில் போய் தனது கணவனருகில் மிகுந்த பய பக்தி விநயத்துடன் உட்கார்ந்து போஜனம் கொள்ளுமாறு எவ்வளவோ வேண்டிக் கொண்டாள். அவன் ஒரே பிடிவாதமாய் வேண்டாமென்று மறுக்க அப்படிப்பட்ட துன்பம் யாதுற்றதோ என மனம் நொந்தவளாய் "நாதா! தங்களுக்குற்ற துயர் யாதாயினும் எனக்கும் உற்றதல்லவா? எல்லா சுகபோகங்களையும் பங்கு செய்து

கொள்ளும் மனைவி துக்கத்தையும் பங்கிட்டுக்கொள்ள கடமைப் பட்டவளல்லவா? நீரிலுள்ள தாமரைபோல் கணவன் சந்தோஷ மெய்தினால் தானும் அதையனுபவித்து, அவன் துக்கத்தை யடைந்தால், அதைத் தானு மடைந்து இல்லற வாழ்க்கையை நடத்துவதல்லவா உத்தம மனைவிகளுக் கழகு. ஆகவே என் பிராண நாதா! தங்களுக்குற்ற இடர் யாதாயினும், என்னிடம் உரைத்தால், என்னு லியன்ற வரை ஆதுதல் சொல்லக் கூடுமல்லவா?'' என்று மிகுந்த வணக்கமாகவும், துயரத்தோடும் கூறினள்.

இராமசுப்பன்:— கண்மணி! நீ கேட்பது மிகுந்த நியாயமான விஷயம். நானே உனக்கு சில விஷயம் சொல்வதற்கிருந்தேன். இதற்குள் நீயே கேட்டுவிட்டாய். போகட்டும். இன்று காலை ஒரு தந்தி வந்தது. அது இதோ யிருக்கிறது. அதைப் படிக்கிறேன் கேள். என்று சொல்லிக்கொண்டே, அங்கிருந்த விளக்கு வெளிச் சத்தினுதவியால் கீழ்வருமாறு படித்தான்.

To,

இராமசுப்பய்யர்,

ஏனாத்தூர்.

உடனே புறப்பட்டு வரவும். உம்மேல் சில தாவாக்க ளிருக்கிறது. வரத்தவறினால், வாரண்ட் பிறப்பிக்கப்படும்.

T. கல்யாணராமன்,

சீப் கமிஷனர்,

சென்னை.

15—12—19...

இந்த தந்தி வந்ததும் பிரித்துப் படித்தேன். எனக்குண்டான மனக் குழப்பத்திற்களவே யில்லை. நானிது வரையில் எந்தவிதமான குற்றமும் செய்தறியேன். பணத்தை வீணாக இறைத்ததைத் தவிர, எவ்விதமான குற்றமும் செய்தறியாதவன். "மடியில் கனமிருந்தா லல்லவா வழியில் பயம்.'' என்றபடி, என்மேல் யாதொரு குற்றமு மில்லை யாகையால், நான் சென்னைக்குப் போவதில் யாதொரு பயமு மில்லை யென்று தீர்மானித்துக்கொண்டேன்.

மஹலட்சுமி:— நாதா! தாங்கள் யாதொரு குற்றமும் செய்யாத சுசீலர் என்பதை அடியாள் அறியாதவளா? அப்படியிருக்க, தாங்கள் பயப்படுவானேன்! தாராளமாய் சென்னைக்குச் சென்று வரலாம்.

இராமசுப்பன்:— அதைப்பற்றி நான் முதலில் கவலைகொண்டேன். பிறகு ஒருவாறு மனதை தேற்றிக்கொண்டு, சென்னைக்குச் செல்லலாமென்றிருந்தேன். இதற்குள் கோர்ட் அமீனு வந்து ஒரு சிவில் வாரன்ட் கொடுத்தான்.

மஹலட்சுமி:— உங்களுக்கு சிவில் வாரன்ட் வருவானேன்?

இராமசுப்பன்:—ஏனு? நான் க. அ. து. இரங்கைய செட்டியாரிடம் நாற்பதினுயிரம் ரூபாய்கள் கடன் வாங்கியிருந்தேன் அதை வாங்கி இப்போதைக்கு வருடம் இரண்டாயிற்று. அதை அவர் பல தடவை என்னிடம் கேட்டார். நான் "ஆகட்டும்" என்று சொல்லிக்கொண்டே வந்தேன். எனக்குக் கொடுக்க வழியில்லை என்பதை அவர் இன்னும் அறியார் போலும். உடனே கோர்ட்டில் போட்டு என்மேல் வாரன்ட் பிறப்பித்துவிட்டார். நாளைக்குத்தானது வாயிதா. ஒன்று நான் அதற்குள் பணத்தை செலுத்திவிட வேண்டும். இல்லையேல், ஜெயிலுக்குப் போகவேண்டும்.

மஹலட்சுமி:— நாதா! தங்களுக்குற்ற எல்லா இடர்களும் விலகிவிட்டன. இனி நாம் சுகமாயிருக்கலாமென வெண்ணி, மனப்பால் குடித்துக்கொண் டிருந்தேனே; இப்போது அதற்கும் ஹானி வந்து விட்டதே; தங்களைப் பிரிந்து இனி அரைக்ஷணமும் உயிருடனிரேன். என்று அழத் தொடங்கினுள்.

இராமசுப்பன்:— கண்மணி! கவலைப்படாதே. வருவதெல்லாம் வந்தே தீரும்.

> வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
> பொருந்துவன போமினென்ருற் போகா.

என்பதற்கிணங்க, நாம் செய்த நல்வினை, தீவினையின் பயனை நாம் அனுபவித்துத் தான் தீரவேண்டும்.

வென்றி ஆக்கலும், மேதக வாக்கலும்,
அன்றியும் கல்வி யோடழ காக்கலும்,
குன்றினர் தமைக் குன்றென ஆக்கலும்,
பொன்றும் சாகத்தினும்! பொருள் செய்யுமே.

—சீவக சிந்தாமணி.

என்றபடி, பொருளுடையவன் நற்குணமுடையவனுயின் உயர்த்தியும் மற்றபடி, என்போல்வானை இந்த நிலைமைக்கும் கொண்டுவந்து சேர்க்கும். அன்றியும், பொருளானது கேவலம் என்று சிலரால் இகழப் படுகின்றது என்போன்ற கயவர் கையினில் கிடைப்பதனுலேதான்.

“அறனின்பங் கல்வி யழகுகுலனுண்மை
யுறவுண்டாஞ் செல்வ முளதேல்—முறையாகச்
சேரின் வளமின்றேற் றேயு மிருமைக்கநுவி
யாரும் பொருணெறி யிஃதாம்.”

என்பதைப்போல், முறைமையாகச் சான்றோர் கையினில் இச்செல்வம் கிடைப்பின், இகபர சாதகங்களை அச்சான்றோர்க் களிக்கும்.

புண்ணிய வசத்தினுல் பொருளது சேரவேண்டும்!
பொருளை இரட்சிக்க வேண்டும்!!
புத்தியுடனது ஒன்று நூருகவே செய்து
போதவும் வளர்க்க வேண்டும்!!!

என்பதைப்போற்று து, “தன்னுயுதமும், தன்கைப் பொருளும் பிறன் கையிற் கொடுக்கும் பேதையும் பதரே,” என்றபடி, எல்லா மிழந்த பின் புத்தி வந்து என்ன பயன். குதிக்கு முன் பார்த்துக் குதிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், குதித்துவிட்டபின், எப்படியாவது முயன்று கரைசேர வழி தேடவேண்டும்.

இனி, நடக்க வேண்டியதை யோசியாது, வருந்திக்கொண்டிருப்பதில் யாது பயன். நாளைக்கு என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. நாளைக்கு நான் சென்னைக்குச் செல்வதா? அல்லது கச்சேரிக்குப் போவதா? நான் கச்சேரிக்குச் சென்று என்ன பயன்? என்னிடம் பணமோ கிடையாது. இந்தக் கடனைத் தீர்க்க என்னுலியலாது. நானே வாரன்டில் கையெழுத்து செய்து விட்டேன். நான் நாளைக்கு கச்சேரிக்கும் போகவேண்டும். சென்னைக்கும் போகவேண்டும். என்னுடைய கஷ்டங்களுக்கெல்லாம்

நான் முடிவு தேடிவிட்டேன். அதற்குனது உத்திரவை நாடி நிற்கிறேன்.

மஹலட்சுமி:— "நாதா! தங்கள் சித்தம் என் பாக்கியம். என்னால் தங்களுக்கேதேனும் உபகாரமிருப்பின் நான் உடனே செய்ய சர்வாயத்தமாய்க் காத்திருக்கிறேன்."

இராமசுப்பன்:— என்னை நீ மணந்து கண்ட சுகம் போதாதா? இனியும் நீ அடையப்போகும் துயரம் என் மனதை வாள்கொண்டறுப்பது போல வாட்டுகிறது. கண்மணி! எவ்விதம் நான் என் வாயினால் என் தீர்மானத்தைச் சொல்லப்போகிறேன். அதைக் கேட்டபின் உன் மனம் என்னபாடு படுமோ! ஆ!"...... என்றதும் துக்கந்தாளாதவனாய் நெஞ்சடைக்க முகத்தைக் கைகளினால் மறைத்தபடிக் கதறியழுதுவிட்டான்.

இளகிய மனதையுடைய மஹலட்சுமியின் நிலைமையை எப்படி விவரிப்பது? மிகக்கஷ்டம்! பரிதாபம்! அந்தோ! உலகில் இப்படிப் பட்ட துர்பாக்கியத்தையடைந்த பெண்ணொருத்தி மஹலட்சுமியைத் தவிர்த்து இருப்பளோ? என்பது சந்தேகம்.

"கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்" என்ற கொள்கையைக் கொண்டவளாய், தன் கணவன் எவ்வளவு துஷ்டனாயினும், கணவன் என்ற பாந்தவ்யத்தைக் கொண்டு தனக்குலகிலுள்ள எல்லா சுற்றமும், தெய்வமும் அவனேயென மதித்து, உண்மையன்பு பூண்டு, சதா அவனையே மனனம் செய்துகொண்டு வரும் உத்தமோத்தமியும், பத்தினிப் பெண்களுள் பண்புடைய மாதாம் மஹலட்சுமிக்கு தனது மனப்பிணி யகற்ற வந்த மாண்புடைய மன்னனும், மணவாளன் மனம் வருந்தும் சமயத்து எப்படி பதறித்தவித்து உருகி வாடி யிருப்பாளென்பது அத்தகைய சம்பவத்தைக் கண்டோரும் அனுபவித்தோருமே யறிவர். மற்றபடி தெரிந்துகொள்வது சுலப சாத்தியமில்லை. இவ்வாறு சிறிது நேரம் ஒருவரை யொருவர் தேற்றமுடியாதவர்களாய் கதறிப் புலம்பியபின் சிறிது மனம் தேறினவர்களாய்ப் பேசத் தொடங்கினர்.

மஹலட்சுமி:— நாதா! தாங்கள் தீர்மானித்துக்கொண்ட அப்பேர்ப்பட்ட விஷயம் யாது. அடியாளிடம் உறைக்கப்படாதா? என்று அழுதவாறு இறைஞ்சி வேண்டிக்கொண்டாள்.

இராமசுப்பனுக்கு அபாரமான விசனத்திற்கிடையில் பெருத்த யோசனையும் உண்டாய்விட்டது. தனக்கு நேர்ந்த இரண்டு கஷ்டங்களுக்குள் மலைபோல் தோன்றும் கடன் விஷயமே அவனைப் பெரிதும் வாட்டியது. தானெவ்விதம் முயன்றாலும் அவ்வளவு பெருந்தொகையை திருப்பிக் கொடுக்க வியலாது. ஆகையால், தான் ஜெயிலுக்குப் போக வேண்டு மென்பதை நினைக்குந்தோறும் அவன் மனமும் தேகமும் நடுங்கியது.

நண்பர்களே! இங்கு கவனியுங்கள். "கடன்பட்டு வாழாமைக் காண்டலினிதே'' என்பதையொட்டி நடவுங்கள். கடனென்னும் பேயினல் பிணிக்கப்படாமல் தப்பித்துக்கொள்ளுங்கள்.

'அளகேசனாயினும் அளவறிந்து செலவிடவேண்டும்.' அல்லவா?

பெரும் உத்தியோகம் வகிக்கும் கற்றுவல்ல மேதாவியருங் கூட வட்டிக் கணக்கை எழுதிக் கணித்துப் பார்க்கச் சோம்பி அற்பமென அலட்சியம் செய்து அகப்பட்டுக்கொண்டு கடன் வாங்கி கடும் விழி விழிக்கிறதைக் கண்டிருக்கிறோம். இவர்களுக்கு ரூபாய் 1-க்கு ஒரு அணு வட்டி 100-க்கு வட்டி ஆறேகால் என்பதின் அந்தரங்கார்த்தம் புலப்படாததால் 1-அணு ஒரு நாளைக்கு வெற்றிலை பாக்குச் செலவு. ஆறேகால் ரூபாய் ஒரு நாளையச் செலவு. இந்த அற்பத் தொகையைக் கொடுப்பதற்கு பெருத்த வரும்படியுள்ள எனக்குக் கஷ்டமோ? இந்த வட்டியையும் முதலையும் சில மாதங்களில் கொடுத்து சரிப்பண்ணி விடலாமென மகிழ்ச்சியுடன் வாங்கிவிட்டு பிறகு கொடுக்குங் காலம் வரும்பொழுது திகைக்கின்றனர்.

> ஆனமுதலில் அதிகம் செலவானல்
> மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
> எல்லார்க்கும் தீயனாய் யேழ்பிறப்பும் கள்ளனாய்
> நல்லார்க்கும் பொல்லனாய் நாடு.

என்றது நமது இராமசுப்பன் விஷயத்தில் முற்றும் பொருந்துகிறதல்லவா?

அன்றியும்,

> திடங்கொண்ட ராமபாணம் செருக்களத்துற்றபோது
> கடன்கொண்டார் நெஞ்சம்போல் கலங்கினனிலங்கை வேந்தன்

என்றதை நோக்கினல் கடன்பட்டார்கள் வருந்தும் விவரம் தெரியும்.

"ஊக்குருவிமேல் இராமபாணமா!" என்று வசனம் சொல்லு வார்கள். ஆகவே, இராமபாணம் மிகுந்த வேகமுடைத்து என்பது எல்லோரு மறிந்த விஷயம். இராம பாணங்கள் இராவணனது மார் பில் ஊடுருவிப் பாயும்போது என்ன பாடு பட்டானே, அப்போர்ப் பட்ட மன வேதனையும், தேக வேதனையும் கடன் கொண்டார், அக் கடனல் படும் துன்பத்திற்கு ஒக்கும். அன்பர்களே! வட்டிக்குக் கடன் வாங்காதீர்கள். "வீசம் கொடுத்த வீடு நாசம்" என்று சாதா ரணமாக வழங்கக் கேட்டிருப்பீர்கள். ஆகையால், கடன்பட்டுக் கடைசியில் இராமசுப்பனைப்போல் தவிக்காதீர்கள்.

இராமசுப்பன் அன்றுகாலை வாரன்டில் கையெழுத்துச் செய்யும் பொழுதே ஒரு உறுதியான தீர்மானம் செய்துக்கொண்டான். அவ னது நண்பர்களுள் சிலர் அவனை இன்சால்வென்ட் கொடுத்து விடும் படிக் கூறினர். அவனுக்கவ்வித மோசம் செய்ய இஷ்டமில்லை. அவன் அப்படி செய்தாலும், தன் வேலை போய்விடுவதோடு, தன்னை வேறெங்கும் வேலைக் கெடுத்துக்கொள்ள அஞ்சுவார்களாகையால், தானவ்வித இழிவைத் தாங்கி, இந்நிலவுலகிலிருப்பதோடு, தற்கொலை செய்துக்கொள்ளத் துணிந்துவிட்டான்.

இவ்வித தீர்மானத்தை தனது மனைவியிடம் எவ்விதம் தெரி விப்பதென்று யோசித்தவனய் அங்கிருந்த குத்துவிளக்கை நோக் கியவண்ண மிருந்தான். அப்போது தற்செயலாக விளக்கி னருகி லுள்ள ஒரு வஸ்து அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதை அவன் உடனே எடுத்து உற்று நோக்கினன். அது ஒரு அடி நீளமுள்ள காகித உறையாயிருந்ததோடு, தபால் முத்திரைகளும் காணப்பட் டது. அது யாருக்கு வந்ததென்று தெரிந்துக்கொள்வதற்காக வெகு ஆவலுடன் அதன் மேல் விலாசத்தை நோக்கினன். அது தனது மனைவிக்கே வந்திருப்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டவனய், அது ஏதென்று கேட்டான். அதைக் கண்டவுடன் இதுகாறும் எதையோ மறந்திருந்தவள், ஞாபகமடைந்ததைப் போல, "இதை இன்று தபால்காரன் கொண்டுவந்து என்னிடம் கொடுத்துக்

கையெழுத்து வாங்கிக்கொண்டு போனான், நான் நீங்கள் வந்தபின் சொல்லலாமென்று இங்கு வைத்தேன். பிறகு மறந்து விட்டேன்.'' என்றாள்.

இதைக்கேட்ட, இராமசுப்பன் மௌனமாய் அக்கடிதவுறை யைப் பிரித்தான். அதனுள் ஒரு கடிதமும், துணியினால் சில் செய்த ஒரு வஸ்துவும் காணப்பட்டது. அந்தத் துணிச் சிப்பம் என்னவா யிருக்குமோ வென்று ஆச்சர்யப்பட்டவனாய், அது யாரால் அனுப் பப்பட்ட தென்பதை அறிய ஆவல் கொண்டு, மேல்விலாசமிட்டிரு க்கும் பக்கத்தை மறுபடியும் நோக்கினான். அதில்,

அனுப்புதல்:—

கோபாலகிருஷ்ணய்யர்,

கும்பகோணம், மதங்கீஸ்வரர் கோயில் மடாதிபதி,

சென்னை.

என்றிருந்தது. அது யாரென்று மஹாலட்சுமியைக் கேட்க அவர் தனது தந்தையின் சிநேகிதரென்றும், தனக்கும் தனது தம்பிக்கும் கார்டியன் என்றும் சொன்னாள். பிறகு அக் கடிதத்தை தனது மனவி அறியுமாறு வாய்விட்டுக் கீழ் வருமாறு படித்தான்

சௌபாக்கியவதி மஹாலட்சுமிக்கு,

சர்வ மங்களமும் உண்டாகவேணுமாய் ஆசீர்வதித்துவரைவது:—

இதனுடன் அனுப்பியிருக்கும் வஸ்து இப்போது அது இருப் பதைப்போலவே என்னிடம் வைக்கப்பட்டிருந்தது. இதை உனக்கு புத்தி வந்தவுடன் உன்னிடம் சேர்ப்பிக்கும்படியாக உனது தந்தை உத்திரவு இட்டிருந்தார். நானும் உனக்கு அதை அனுப்பப் பல தடவை நினைத்தேன். ஆனால் உனது கணவனைப்பற்றி நீ வருந்திக் கொண்டிருக்கிறாயென கேள்விப்பட்டேனாகையால் நிறுத்திவைத் தேன். உனது கணவன் இப்போது நன்னடக்கையிலிருப்பதாகவும் நீயும் சந்தோஷமாயிருப்பதாகக் கேள்விப்படுவதோடு எனக்கும் மிகுந்த அசௌகர்யமாயிருப்பதால் என் நிலமையை சந்தேகித்து இதை உடனே உனக்கனுப்பியுள்ளேன். இதைப்போன்ற இன் னொரு சிப்பத்தை உனது தம்பிக்கு அளிக்கும்படி என்னிடம்

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நான் இன்னும் ஒரு வருடம் கழித்தே சேர்ப்பிக்கவேண்டும் இதற்குள் நான் இறந்து விடுவேனென எனது மனதிற்குத் தோன்றுகிறபடியால் நீயாவது வரமுடியாவிட்டால், உனது கணவனையாவது அனுப்பினால் எனக்கு மிகவும் நன்மையாயிருக்கும் உனது கணவனைக்கண்டு நெடுநாட்களாகிவிட்டமையால் உனது கணவனை நான் தெரிந்துக்கொள்ளும் பொருட்டு உன் கைப்பட ஒரு கடிதம் கொடுத்தனுப்பவேண்டியது. உடனே அனுப்பவும். தாமதம்வேண்டாம்.

இப்படிக்கு, உன் நன்மையைக்கோரும்,

கோபாலகிருஷ்ணய்யர்.

கும்பகோணம் மதங்கீஸ்வரர் கோயில் மடாதிபதி

சென்னை.

என்று வரைந்திருந்தது.

இதைக்கண்ட மஹாலட்சுமிக்கும் இராமசுப்பனுக்குமுண்டான ஆச்சர்யத்திற் களவே யில்லை. மஹாலட்சுமிக்கு தனது தகப்பனார் தனக்கு எப்பேர்ப்பட்ட வஸ்துவை அதனுள் வைத்திருக்கிறார் என்பதையுடனே அறியவேண்டும், என்னும் பேறவா அவளை அதிகமும்முறமாக வருத்தியதாகையால் அதையுடனே சோதித்துப் பார்க்கும்படித் தூண்டினாள். இராமசுப்பனும் அத்தகைய பேறுவல் கொண்டிருந்தானாகையால் அதன்மேலிட்டிருந்த சீலை யெல்லாம் ஒரு நிமிஷத்தில் விலக்கி உள்ளிருந்த வஸ்துவை வெகு ஆவலுடன் நோக்கினான். அதற்குள்ளே ஒரு வைரமோதிரமும் ஒரு புகைப் படமும் (Photo) இருந்தது. அவ் வைரமோதிரம் பெருவிரலில் அணியத்தக்க விதமாய் மிகவும் பெரியதாகத்தோன்றியது. அதன் உட்புறத்தில் (விரலில் உள்பக்கம் படும் பாகத்தில்) திரவுகோல் என்ற வார்த்தை செதுக்கப்பட்டிருந்தது. அவை யன்றி அம்மோதிரத்தில் வேறொரு அதிசயமுமில்லை. பிறகு அவர்களிருவரும் அதைப் பார்ப்பதை விட்டு புகைப்படத்தை நோக்கினர். அது ஒரு பங்களாவின் புகைப்படம் சுமார் அரைமயில் விஸ்தீரணமுள்ள ஒரு சதுரமான தோட்டத்தின் நடுவே அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பங்களாவை அப் படம் காண்பிக்கிறது. மேற்கண்ட விவரங்களையெல்லாம்

இரண்டொரு நிமிஷங்களில் இருவரும் தெரிந்துக்கொண்டனர். அந்தப் புகைப் படத்தையும், வைர மோதிரத்தையும் எதற்காகத் தனது தகப்பனார் தனக் களித்தாரென மஹலட்சுமி யோசித்ததெல் லாம் பயனற்றுப் போயிற்று. இவ்வளவு ஆச்சர்யத்தினூடே புகைப் படத்தின் பின்புறத்தை நோக்கிய இராமசுப்பன் மஹலட்சுமிக்குக் காட்டினான். அங்கு சில வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தது. அதன் கீழ் தனது தகப்பனாரின் கையெழுத்திருப்பதைக்கண்ட மஹலட்சுமி, மிகுந்த சந்தோஷங் கொண்டவளாய், கீழ்க் குறித்த விதம் அங்கு வரையப்பட்டிருந்ததை வாசித்தாள்.

எனதருமைக் குழந்தை மஹலட்சுமிக்கு,

சகல மங்களமும் என்றும் நீடித்துண்டாகுமாறு எல்லாம் வல்ல கடவுளை வேண்டி வரைவது:— இத்துடன் வைத்திருக்கும் வைர மோதிரம் மிகுந்த மகிமை வாய்ந்தது. இதனுள் அடங்கியிருக்கும் இரகசியம் வெளிவந்தால், இதைக் கவர்ந்துக்கொள்ளப் பலர் முயலு வார்கள். ஆகையால், இம் மோதிரத்தை மிகுந்த ஜாக்கிரதையாகக் காப்பாற்று. இது ஒரு பெரிய போக்கிஷத்தின் திறவுகோல். இதை யுனக் களித்திருக்கிறேன். இதனுள் அடங்கிய இரகசியம் வரையப் பட்டிருக்கும் காகிதம் உனது தம்பிக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆகையால், இருவரும் ஒன்று சேர்ந்து மோதிரத்தையும், அதன் விளக்கத்தையும் ஆராய்ந்தால்தான், அதன் பலனை யடையலாம். ஆகையால் நீயும், உனது தம்பியுமாக ஒற்றுமைப்பட்டு, அப்பொக் கிஷமிருக்கு மிடத்தை நீங்களிருவருங் கண்டுபிடித்து, அதனாலுண் டாகும் பலனை இரண்டு பங்காகப் பங்கிட்டுக் கொண்டு சுகமே வாழக் கோரும்,

உனதருமைத் தந்தை,
சாமிநாத சாஸ்திரி.

எனப் படித்து முடித்தாள். உடனே இராமசுப்பனுக் குண்டான ஆச்சரியத்திற்கும், ஆனந்தத்திற்கு மளவேயில்லை. மஹலட்சுமி மிகுந்த சந்தோஷ முடையவளாய், தனது கணவனை நோக்கி, "தேடப்போன மூலிகை காலில் பட்டுவிட்டதே! இனி நமக்கென்ன குறை. எனது பங்கிற்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய்களாவது வரும்.

அதைக்கொண்டு நமது கடனைக் கொடுத்துவிட்டு, சந்தோஷமாய் நமது வாழ்நாளைக் கடத்தலாமே.'' என்றாள்.

இராமசுப்பன்:— கண்மணி! நீ சொல்லுவதெல்லாம் சரி தான். இன்னும் உனது தம்பிக்கு தக்க வயதுவர ஒரு வருடம் செல்லவேண்டும்; அதன் பிறகல்லவா நாம் இந்த நிதியை யடைய முடியும். அதுவரை எனது கடன்காரன் பொறுக்க வேண்டுமே; "அடுக்கும் அருமை உடைக்கும் நாய்க்குத் தெரியுமா?'' என்றபடி, பணத்தி னருமை தெரியாது, வாரியிறைத்தது மன்றி, "கடனும் வாங்கிக் கடும் விழிவிழிக்கிறேன். (என்று மிகுந்த துக்கத்துடன் மொழிந்தான்.)

மஹாலட்சுமி:— (சிறிது நேரம் யோசித்துவிட்டு) நீங்கள் என் இதற்கெல்லாம் யோசிக்கிறீர்கள்? எனது தம்பி மிகவும் கற்று வல்ல மேதாவியாம். வியவகார ஞானமுடையவனும். நீங்கள் இம் மோதிரத்தையும், புகைப் படத்தையும் கையோடு எடுத்துக்கொண்டு சென்னைக்குச் சென்று, எனது தம்பியையும் வரவழைத்துக்கொண்டு கோபாலகிருஷ்ணய்யர் முன்னிலையில், எல்லா விஷயங்களையும், நமக்கேற்பட்டிருக்கும் பண அவஸ்தையையும் சொல்லி, உடனே பங்கிடக் கேட்டுக்கொண்டால், கோபால கிருஷ்ணய்யரும் அவருடைய நிலைமையை உத்தேசித்து ஒருப்படுவார். நீங்கள் நாளை காலையிலேயே சென்று, நான் சொன்னவாறு செய்யுங்கள். கட்டாயம் காரியம் பலிதமாகும்.

இராமசுப்பன்:— "மஹாலட்சுமி! உனதன்பு எவ்வளவு தூரம் என்பால் ஆழப்பதிந்திருக்கிறதென்பதை இப்போதே முழுதும் கண்டேன். உடல், பொருள், ஆவியாகிய மூன்று புருஷார்த்தங்களையும் எனக்கே நீ உரிமைப் படுத்தியிருக்கிறு யென்பதை இப்போதே யான் கண்கூடாகக் கண்டேன். உன் போன்ற பத்தினிப் பெண்டிர் உலகில் நூற்றுக் கொருவராவது இல்லாவிட்டால், உலகம் இதுகாறும் சீர் கெட்டிருக்கும்.

> தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யனப் பெய்யு மழை.

என்ற அருள் வாக்கு உன் வகையில் முற்றும் பொருந்தும்.'' என்று

சொல்லியவாறு, தனது மனைவியை ஆசையுடன் இறுகத்தழுவி ஓர் அன்பு முத்தமிட்டான். தன்னைத் தன் கணவன் புகழ்வதைப் பொறாது, பேச்சை வேறுவழியில் மாற்ற உத்தேசித்த மஹாலட்சுமி, "என் நீங்கள் வீண் பேச்சுப் பேசிக் காலத்தை வீண்போக்குகிறீர்கள். தாங்கள் சற்றே துயிலுங்கள். அதிகாலையிலெழுந்து காஞ்சீபுரம் போய், கோர்ட்டில் இரண்டு மாத வாயிதா வாங்கிக்கொண்டு, சென்னைக்கு உடனே செல்லுங்கள். தாங்கள் அங்கு வருவதாக காஞ்சீபுரத்திலிருந்தே ஒரு தந்தி கோபால கிருஷ்ணய்யருக்குக் கொடுத்துவிடுங்கள். நான் இப்போதே தாங்கள் இன்றுமொன்று ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

அதை ஆமோதித்த இராமசுப்பன், படுக்கையில் படுத்துத் துயின்று, அதிகாலையிலெழுந்து தனது மனைவியினிடம் விடைபெற்றுக்கொண்டு, வைரமோதிரம், புகைப் படம், தனது மனைவி கொடுத்தக் கடிதம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு, பிரயாணப்பட்டு, காஞ்சீபுரம் போனான். அங்கு சரியாகப் பதினொரு மணிக்கெல்லாம் கோர்ட்டிற்குப் போய், தனக்கு இரண்டுமாத வாயிதா கொடுத்தால், பணத்தைக் கொடுத்து விடுவதாகச் சொல்லி, வாயிதா வாங்கிக்கொண்டு, அதன் பிறகு சென்னைக்கு மூன்றரை மணிக்குத் தான் புகைவண்டி உண்டென்று தெரியவந்ததால், உடனே கோபாலகிருஷ்ணய்யருக்கு, தான் அன்றிரவு எட்டுமணிக்கு அங்கு வருவதாகத் தந்தி கொடுத்துவிட்டு, அன்று மாலை மூன்றரைமணி வண்டியிலேயே சென்னைக்குப் புறப்பட்டு விட்டான். புகைவண்டியும் அன்றிரவு சரியாக எழரை மணிக்கு எழும்பூர் வந்து சேர்ந்தது. இராமசுப்பன், தான் போகும் காரியம் எப்படி முடியுமோ; என்றெண்ணியவனாய், கோபாலகிருஷ்ணய்யருடைய ஜாகையிருக்கும் நுங்கம்பாக்கத்தை நோக்கி நடந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் சேத்துப்பட்டிலிருந்து நுங்கம்பாக்கத்துக்குச் செல்லும் பாதையில் பிரவேசித்தான். அது முன்னிருட்டுக் காலமாகையாலும், வானத்தை மேகங்கள் மறைத்துக்கொண்டிருந்ததாலும் மிகுந்த இருள் சூழ்ந்திருந்தது. அங்கு மிங்குமாக முனிசிபாலிடியாரால் போடப்பட்டிருக்கும் மின்஭ார விளக்குகள் மட்டும் மினுக்கு மினுக்கென்றெரிந்துக்கொண்டிருந்தது.

இத்தகைய நிர்மானுஷ்யமான பாதையின் வழியாய் இராமசுப்பன் நடந்து போகும்போது, மணி சுமார் எட்டாயிற்று.

இப்போது இராமசுப்பன் போகும் பாதை மிகுந்த அபாயகரமானது. பாதையின் இருமருங்கிலும் ஆகாயத்தையளாவிய மரங்களையுடைய தோப்புகளே நெடுக விருந்தது. காற்றினால் கிளைகள் ஆடும்போதுண்டாகும் சப்தமும், கோட்டான் முதலியவைகளின் சப்தமுமின்றி, மற்றெவ்விதமான ஜனநடமாட்டமும் அந்தப் பாதையில் காணப்படவில்லை. இப்படிப்பட்ட பயங்கரமானப் பாதையில் வெகு வேகமாய் இராமசுப்பன் நடந்துக்கொண்டிருந்தான். அப்போது திடீரென்று பாதையின் ஓரமாயிருந்து ஓர் அரவம் கேட்டது. அதைக் கேட்டு மிரண்ட இராமசுப்பன், அந்தப் பக்கம் நோக்குவதற்குள், சார்ஜன்ட்டைப் போல உடை யணிந்துள்ள ஒரு மனிதன், கையில் பிரம்புடன் குதிரைமேல் தோன்றினன். அவனைக் கண்ட இராமசுப்பன் அவன் யாரோ போலீஸ் உத்தியோகஸ்தனென மனந்தேறியவனாய், மேலும் நடக்கத் தொடங்கினன். அதைக் கண்ட சார்ஜன்ட், "யாரையா! அது! என்ன வேலையாய் இந்நேரத்தில் தனிமையாய்ப் போகிறீர்?" என்றான்.

இராமசுப்பன்:— ஐயா! நானிருப்பது வெளியூர்; இங்கு நுங்கம்பாக்கத்தில் எனது நண்பரொருவர் வீட்டிற்குப் போகிறேன்.

சார்ஜண்ட்:— ஓய்! நீரிருப்பது எந்தவூர்? உமது பெயரென்ன? நீர் என்ன காரியமாக வந்தீர்? இங்கு யார் உனது நண்பர்? (என்று மிகுந்த இறுமாப்பாக விலவியவண்ணம் நெருங்கி வந்து, குதிரையை விட்டுக் கீழே இறங்கினன்.)

இராமசுப்பன்:— சார்! நானிருப்பது காஞ்சீபுரத்திற் கடுத்த எனுத்தூர் என்பது. இங்கு, நுங்கம்பாக்கத்தில், கும்பகோணம் மதங்கீஸ்வரர் கோயில் மடாதிபதி, கோபாலகிருஷ்ணய்யர் என்னை வரும்படிக் கடிதம் வரைந்திருக்கிறார். அதனால்தான், நான் புறப்பட்டு இங்கு வந்தேன். என் பெயர் இராமசுப்பய்யர் என்பார்கள்.

சார்ஜண்ட்:— புளுகினாலும் பொருந்தப் புளுகவேண்டும். இப்படி யாரையா புளுகச் சொன்னது? உம்மைப் பார்த்தால், பஞ்சைப்

பயலாகத் தோன்றுகிறது. நீர் சொல்லும்பேர்வழியோ, பெரிய மடாதிபதி. இதை யெப்படி நம்புவது? அதிருக்கட்டும்; உமக்கு அவர் கடிதம் எழுதினதாகச் சொல்லுகிறீரே, அதை இப்போது காண்பிக்க முடியுமா? உம்மேல் நமக்கு பலமான சந்தேகமுண்டாகிறது. அதைக் காண்பித்தால், இப்போதே உம்மை விட்டு விடுகிறேன். இல்லையேல் நீர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து இன்றிரவு அங்கிருக்க வேண்டியதுதான்.

இராமசுப்பன்:— சார்! வீணாக அதிக வார்த்தை பேசிவிடாதீர்கள். பிறகு என்னுடைய நிலைமை தெரிந்தால், தாங்கள் கஷ்டப்பட நேரிடும். நான் சொல்வதைக் கேளும். நான் உடனே போய் கோபாலகிருஷ்ணய்யரைப் பார்க்க வேண்டும். இந்நேரம் அவர் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார். அவர் எனக் கெழுதிய கடிதத்தை வீட்டிலேயே வைத்து விட்டேனாகையால், இப்போததைக் காண்பிக்க இயலவில்லை. இப்படியே என்னுடன் கூட வாரும். கோபாலகிருஷ்ணய்யரைக் கொண்டே, தங்கள் சந்தேகத்தைப் போக்குகிறேன்.

சார்ஜன்ட்:— "என்ன ஓய்! ரொம்பவும் படித்துவிட்டவர் போல் பேசுகிறீர். நாம் பிறகு கஷ்டப்படுவோமென்று, உம்மை இபபோதே யார் வருத்தப்படச் சொன்னது. உம்மால் இங்கேயே, எப்போது என் சந்தேகத்தைத் தவிர்க்க முடியவில்லையோ; நீர் கட்டாயமாய் ஸ்டேஷனுக்கு வந்தே தீரவேண்டும்." என்று குதிரைமேலேறியவண்ணம் சொன்னான். இராமசுப்பன் எவ்வளவு தூரம் சொல்லியும் சார்ஜன்ட் கேளாமல், பிடிவாதம் பிடித்து, மேல் நோக்கி நடக்கத் தொடங்கினான். இதற்குள் மணியும் ஒன்பதிற்கு மேலாகிவிட்டதை யுணர்ந்த சார்ஜன்ட், இராமசுப்பனைத் துரிதப் படுத்தினான். இராமசுப்பனும் தயங்கித் தயங்கி நடந்தவாறு, தான் எங்குச் சென்றாலும் கஷ்டங்களே மென்மேலும் உண்டாவதைக் கருதி வருத்தப்பட்டவனாய், மீண்டும் சார்ஜன்ட்டைக் கெஞ்சி மன்றாடினான். அதைக் கண்ட சார்ஜன்ட் கோபங்கொண்டு, "என்ன? ஓய் அய்யரே! முரண்டாமல் வருகிறீரா, அல்லது கல்தா அப்ளிகேஷன் சிறிது வேண்டியிருக்குமா?" என்று சொல்லிக்கொண்டே மேலும் குதிரையை நடக்க விட்டான்.

அப்போது வெகுதூரத்திற்கப்பால் மோடார்கார் வரும் சப்தம் கேட்டது. அதைக் கேட்டவுடன் சார்ஜன்டின் முகம் மாறுபட்டது. அதை அங்கிருந்த முனிசிபாலிடியின் விளக்கு வெளிச்சத்தினுல் கண்டுக்கொண்ட இராமசுப்பன், பலவாறு சந்தேகித்தவனுய் நடுப்பாதைக்கு வந்து, பின்புறம் திரும்பி நோக்கியவாறு நின்றுன். அதையறிந்த சார்ஜன்ட், கூட வரும்படி எவ்வளவு தூரம் சொல்லியும், இராமசுப்பன் பிடிவாதமாய் நடு ரோட்டிலேயே நின்றதைக் கண்டதும் அவனுக்குக் கோபம் பிறந்துவிட்டது. உடனே, இராமசுப்பனருகில் தனது குதிரையைச் செலுத்தி குதிரைமீதிருந்தே கையிலிருந்த மணிப்பிரம்பால் ஓங்கி, ஓரடியடித்தான். அந்த அடியைத் தாங்கமாட்டாத இராமசுப்பன், "அம்மாடீ" என்று கூக்குரலிட்டுக் கீழே விழுந்தான். அதே சமயத்தில் மோட்டாரும் அங்கு வந்துவிட்டதால், மோட்டாரிலிருந்தவர் அச் சப்தத்தைக் கேட்டு அவ்விடத்திலேயே மோட்டாரை நிறுத்திக் கீழேயிரங்கினுர். மோட்டாரில் அவரொருவர்மட்டுமே தனித்து வந்திருந்தார். வந்தவர் ஆங்கிலேயரைப்போல உடையணிந்து, தலையில் தொப்பியும் (Hat) அணிந்திருந்தார். அவர் கீழே இரங்கினதும், "இந்த மனிதன் என்ன குற்றம் செய்தான்? இவனையேன் அடிக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே, சார்ஜன்ட்டை நோக்கினுர். அப்போது சார்ஜன்டின் முகம் இருளில் நன்றுய்த் தெரியவில்லை. ஆகையால், மோட்டாரில் வந்த கனவான் தனது சட்டைப் பையிலிருந்த மின்஽ார விளக்கையெடுத்துப் பொருத்தி, சார்ஜன்டின் முகத்திற்கு நேராகக் காட்டினுர்.

மறு விநாடி அந்தக் கனவான், 'ஆ' வென்றறற்றிய வண்ணம் விளக்கை மறு கையில் பற்றியபடி, இன்னொரு கையால் தனது சட்டைப் பைக்குள்ளிருந்த கைத்துப்பாக்கியை யெடுத்து, சார்ஜன்டின் முகத்திற்கு நேராகச் சுட்டார். உடனே சாா்ஜன்ட் குதிரையின் வயற்றில் காலினு லிடித்ததும், குதிரை மண்டியிட்டுக் குனிந்து, நிமிர்ந்தது. இதனுல் கனவான் சுட்ட குண்டு சார்ஜன்ட்டின் தலைக்கு மேல் போய்விட்டது. தான் சுட்டதற்கு எதிர்ப் பார்த்தவன் போல் சாமர்த்தியமாய் தப்பித்துக்கொண்டதைக் கண்ட கனவான், மறுபடியும் சுட யத்தனித்தார். ஆனுல், இம்முறை அவர் சுடுவதற்கு எதிர்ப்பாராமல், சார்ஜன்ட் குதிரையோடு தோப்பிற்குள் கண் மூடித் திறப்பதற்குள் நுழைந்து மறைந்து போனுன்.

மிருந்த ஆச்சரியத்தோடு கனவானையும், சார்ஜன்ட்டையும் மாறி மாறி நோக்கியவண்ண மிருந்த இராமசுப்பன், சார்ஜன்ட் மறைந்ததும் கனவானை நோக்கினான். அப்போதே சார்ஜன்ட் போன திக்கை, கண் இமைக்காமல் பார்த்திருந்த அக் கனவான், இராம சுப்பனை நோக்கி, "ஐயா! உமக் கின்றைக்கு நல்லகாலம். நான் இந்நேரம் இங்கு வாராமற்போயிருந்தால், நீர் உமது பொருளை யிழப்ப தோடு, உமது உயிருக்கும் மோசம் வந்திருக்கும். இப்போது ஓடிப் போனவன் ஒரு பெயர் பெற்ற கள்ளன். இவன் பல மாறுவேடங் களணிந்து, பற்பல கொள்ளைகளையும், கொலைகளையும் நடத்தியிருக் கிறான். இன்றும், ஒரு கொள்ளையோ, கொலையோ செய்வதற்காக சார்ஜன்ட்டைப்போல் வேடமணிந்து, முயன்றிருக்கிறான். இவனைப் பிடிக்கவே, நானும் இன்னும் பலரும் முயன்று வருகிறோம். இவன் பெயர் **குமாரசாமி நாடான்** என்பது. இவன் மிகவும் தைரியமும், சாமர்த்தியமும், தந்திரமும் வாய்ந்தவன். அதிருக்கட்டும்; தங்க ளுடைய வரலாறுகளைச் சொல்லவில்லையே! தாங்கள் எங்கு போக வேண்டும்?" என்று கேட்டார்.

இராமசுப்பன், தான் காஞ்சீபுரமென்றும், சில காரணங்களை முன்னிட்டு, கோபாலகிருஷ்ணய்யரிடம் வந்ததாகவும், நடுவில் இத் தடை நேர்ந்ததென்றும், தனக்கவர் உபகாரம் செய்து, உயிரைக் காப்பாற்றினதற்காக மனமுவந்த வந்தனமளிப்பதாக மிகவும் வணக்கமா யுரைத்தான். அதைக் கேட்ட அக்கனவான், தானும் நுங்கம்பாக்கம் போவதாகவும், கோபாலகிருஷ்ணய்யர் வீட்டில் விட்டுவிட்டுப் போவதாகவும், தன்னுடனேயே மோட்டாரில் அவ னும் வரலாமென்றும் சொன்னார். அதை ஆமோதித்த, இராம சுப்பன், மோட்டாரில் ஏறினான். மோட்டாரும் சிறிது நேரத்தில் கோபாலகிருஷ்ணய்யர் வீட்டண்டை சென்று நின்றது. உடனே இராமசுப்பன் இறங்கிவிட்டான். அக் கனவான், தான் மறுநாட் காலையில் அங்கு வந்து, அவனைக் காண்பதாகச் சொல்லிச் சென்று விட்டார். அப்போது சுமார் மணி பத்தரையாயிற்று. கோபால கிருஷ்ணய்யருடைய பங்களா ஒரு தோட்டத்தின் நடுவேயிருந்தது. இரவு அந்நேரமாகியும், பங்களாவின் வெளிவாசற் கதவு திறந்திருந் ததுமன்றி, விளக்கும் எரிந்துக்கொண்டிருந்தது. வாயல்காப்போன்,

உறங்கி விழுந்துக்கொண்டே பாரா கொடுத்துக்கொண்டிருந்தான். அவனைக்கண்ட இராமசுப்பன் அவனுக்கருகில் நெருங்கி "இதுதான் கோபாலகிருஷ்ணய்யர் இருப்பிடமா" என்று கேட்டான். உடனே வேலைக்காரன் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு "ஆம்! தாங்கள்தான் இராமசுப்பய்யரவர்களோ" என்றான். அதைக் கேட்ட இராமசுப்பன், "ஆம்! நான்தான். எப்படித் தெரிந்துகொண்டாய்" என்றான்.

வாயல் காப்போன்:— "தங்களுடைய வரவுக்காகவே எங்கள் எஜமானர் 8-மணியிலிருந்து காத்துக்கொண்டிருக்கிறார். மாடியில் இப்போதும் ஏதோ கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறார். எந்நேரமானாலும் தாங்கள் வருவீர்களென்றும், கேட் கதவை மூடவேண்டாமென்றும், நீங்கள் வந்தால் மாடிக்கனுப்பும்படியும் என்னிடம் உத்திரவிட்டிருக்கிறார்" என்று சொல்லியபடி இராமசுப்பனை அழைத்துக்கொண்டுபோய் மாடிக்குப் போகும் வழியில் விட்டு "மேலே போங்கள் அங்கு எஜமான் தங்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். மாடியில் விளக்கு வெளிச்சம் மங்கலாகத் தெரிந்தது. அன்றியும் சாமான்களை இங்குமங்குமாகப் புறட்டுவதைப்போன்ற சப்தமுண்டாயிற்று. இதையெல்லாம் கவனித்துக்கொண்டே இராமசுப்பன் மாடிமீதேறி கோபாலகிருஷ்ணய்யரிருக்கும் (விளக்கெரிந்துகொண்டிருந்த அடையாளத்தால் தெரிந்துக்கொண்டான் போலும்) அரையில் நுழைந்தான். என்னே! உலக விந்தை! மறு விநாடி "டமீர்" என்று துப்பாக்கிச் சுட்ட சப்தம் கேட்டது. இச்சப்தம் அடங்கு முன்னரே மறுபடியும் முன்போல் "டமீர்" என்று இன்னொரு தரம் துப்பாக்கிச் சுடும் சப்தம் கேட்டது, கீழிருந்த வேலைக்காரர்கள் எல்லோரும் இச்சப்தத்தைக் கேட்டு சொற்பனாவஸ்தையிலிருந்து விடுபட்டு ஜாக்கிரதாவஸ்தையடைந்து அச்சம் கொண்டு மேல்மாடிக்கு தடியும் விளக்கும் கொண்டோடினர்.



# நான்காம் அத்தியாயம்.

அறிவார் யார் நல்லாள் பிறக்குங் குடி.

1. கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்
2. மான் வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும்
3. உவர்க்கடலுள் பல்விலைய முத்தம் பிறக்கும்
5. அம்பினும் கொடிய கண்ணாள் †ஆயிரஞ் சிந்தையாளை
நம்பினபேர்களெல்லாம் நாயினும் கடையவாரே.

இரண்டாம் அத்தியாயத்தினிறுதியி லுறைத்தவாறு ஸ்ரீலோலனும், கோவிந்தனும் திருவாமூரிலுள்ள பெண்ணரசியின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டபின் நேராக தங்களுடைய ஜாகையுள்ள நுங்கம்பாக்கத்திற்குச் சென்றனர். இதுகாறும் ஸ்ரீலோலனைப்பற்றிய விஷயம் யாதும் சொல்லாததால் இப்போது சொல்வோம்.

இவன் வேறு யாருமல்ல. எனுத்தூர் இராமசுப்பனது மனைவியாகிய மஹாலட்சுமியின் ஒரே தம்பி இவன்தான். இவன் இருப்பது இவனது கார்டியனான கோபாலகிருஷ்ணய்யர் அகத்திலேயே. இவனுக்காக இவன் தகப்பனார் சுமார் ஒருலட்சம் ரூபாய்கள் வரை ரொக்கமாய் பாங்கியில் போட்டிருக்கிறார். அதன் வட்டியையே இவன் தற்போதனுபவித்து வருவது. இவனுக்கு வேறெவ்வித பூஸ்திதியும் கிடையாது. பதினைந்து வயது வருமளவும் இவனுக்கு யாதொரு செலவும் இல்லையாகையால் கோபாலகிருஷ்ணய்யர் அவனுக்கு, அதுவரை சேர்ந்த வட்டிப்பணத்தைக்கொண்டு வைரக்கடுக்கனும், தங்கக் கடியாரமும், இன்னும் சில ஆபரணங்களும், ஒரு சைகில் மோட்டாரும் வாங்கிக் கொடுத்தார்.

† ஆயிரம் சிந்தையாள்—விலைமாது.

அதன் பிறகு ஏதோ ஒரு விஷயத்தில் கோபாலகிருஷ்ணய்ய ருக்கும் ஸ்ரீலோலனுக்கும் சிறிது மனஸ்தாபம் உண்டானதால் அது முதல் தன் காலத்தை ஓட்டலில் சாப்பிடுவதும் படுக்கை படிப்பு முதலியவைகளை கோபாலகிருஷ்ணய்யர் அகத்திலுமாய் செலவிட ஆரம்பித்தான். அதைக்கண்ட கோபாலகிருஷ்ணய்யர் மாதந்தோறும் வட்டிப்பணத்தை அவனிடமே அனுப்பிவிடுவதை வழக்கமாகக் கொண்டார். சிறிதுகாலம் சென்றபின் மறுபடியும் முன்போல கோபாலகிருஷ்ணய்யரகத்திலேயே உண்டி வைத்துக்கொண்டான்.

ஸ்ரீலோலனும் மஹாலட்சுமியும் இரட்டைப் பிறப்பாய்ப் பிறந்தவர்களாகையால் இருவரும் ஒரே வயதையுடையவர்கள். மஹாலட்சுமி முதலிலும் ஸ்ரீலோலன் பிறகும் பிறந்ததால் நாம் ஸ்ரீலோலனை மஹாலட்சுமிக்குத் தம்பி யெனக் கூறினோம்.

இரவு 8-மணி சமயத்திற்கு இருவரும் நுங்கம்பாக்கம் வந்து சேர்ந்தனர். கோவிந்தனுக்கு அடுத்த வீதியில் வீடாகையால் அங்கே அவனை விட்டுவிட்டுத் தன் வீட்டிற்கு வந்தான். அவன் சாப்பாட்டு நேரத்திற்கு சிறிது தள்ளி வந்தானாகையால் பரிசாரகன் அவனுக்காக எதிர்பார்த்திருந்து, அவன் வந்ததும் போஜனத்திற்கழைத்தான். ஸ்ரீலோலன் போஜனத்தை நாடுவனோ. அவன் மனம் அதிற் செல்லவில்லை. எப்படிச்செல்லும்?

அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்.

என்ற ஆன்றோர் வாக்குப் பொய்க்குமோ? அது ஒரு நாளுமில்லை. ஆகையால் ஸ்ரீலோலனும் காமத்தீயினால் தகிக்கப் பட்டு சாதம் முதலிய உண்பொருட்களை வெறுத்துத் தள்ளினான். ஆகவே அவன் வேண்டா மென்று சொல்லி விட்டு நேரே படுக்கைக்குச் சென்றான். கோபாலகிருஷ்ணய்யர் அசௌக்கிய முற்றிருந்ததாலும், எற்கனவே சிறிது மனஸ்தாபம் கொண்டிருப்பதாலும், மற்றவர்களெல்லாம் வேலைக்காரர்களாகையாலும், அவனை வற்புறுத்த ஆளில்லாததால், அவன் பட்டினியாகப் படுத்துக் கொண்டான்.

அவனென்ன செய்வான். அறியாப் பாலன். வயதும்அதிகமாக வில்லே. பதினேழு தானுயிற்று. இவன் சென்னை யிலல்லாது வேறெங்கேனும் இருந்திருப்பின் இவனுக் கித்தகைய காமநோயுண்டாயிருது. எல்லாம் விதியின் செயலன்றே? ஆகையால் காமத்தால் பீடிக்கப்பட்ட கதாநாயகன் படும் பாட்டை என்னென்றெடுத்துரைப்பது. அதை விவரித்தல் நம்மாலாகாதாகையாலும், அப்படி கூறினாலும், உமக்கும், எமக்கும் மனம் வருந்த நேருமாகையாலும், கீழ்க்காணும் செய்யுளையே அவன் படும் கஷ்டத்தின் விளக்கவுரையாகக் கொடுப்பதை யன்றி வேறொன்றும் அதிகப்படி வரையாது விடுகிறோம்.

உருகி யுடல் கருகி உள்ளீரல் பற்றி
எறிவ தவியா தென் செய்வேன்—வரியாவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்ணணங்கேன்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு,

என்றது முற்றும் இவன்பால் பலித்துவிட்டது.

இவ்வாறு கதாநாயகன் சொல்லொணு வருத்தமெய்த, அப்பொல்லா இரவும் போயொழிந்தது. மறுநாள் உதயத்தி லெழுந்த ஸ்ரீலோலன், பல் விளக்கிக்கொண்டு, பிடித்தமட்டும் சிறிது சிற்றுண்டி யருந்தி தனது நண்பனை கோவிந்தனுக்கு ஆளனுப்பி வைத்தான். சுமார் எட்டு மணிக்கு கோவிந்தனும் வந்துசேர்ந்தான். உடனே, இருவரும் ஓர் அறையிலுட்கார்ந்துக் கதவையடைத்து விட்டுப் பேசத்துவக்கினர்.

**கோவிந்தன்:—** ஏன்? என்னை இவ்வளவு காலையில் கூப்பிட்டனுப்பித்தாய்? [என்று ஒன்றும் தெரியாதவனைப் போல் வினவினன்.]

**ஸ்ரீலோலன்:—** என்ன பரிகாசம் செய்கிறயோ? இதுதான் உண்மை நேசர்களுக் கழகோ? நேற்றிரவெல்லாம் நான் பட்டபாடு எனக்குத் தெரியும். நீ நன்றய் உறங்கிவிட்டு வந்தாயாக்கும். அதனல்தான், இவ்வளவு சந்தோஷமாயிருக்கிறய்.

**கோவிந்தன்:—** ஆம்! நான் நன்றய் உறங்கினேன். அதற்கென்ன இப்போது? நீ மட்டும் நேற்று உறங்காமல் இருந்தாயோ?

**ஸ்ரீலோலன்:—** இங்கு என்னைத் தவிர, மற்றெல்லோரிடமும் மூதேவி வாசம் செய்தாள்.

**கோவிந்தன்:—** ஓகோ! இப்போது விஷயம் தெரிந்துக் கொண்டேன்? நான் எப்போதும் விரதம் கொண்டாடுவது வழக்கமில்லை. நீ அப்படியல்லவே! மஹா விரத சிகாமணியாச்சே. நேற்று ஏகாதசியாகையால், தூங்கா விரதம் கொண்டாடியிருப்பாய்.

**ஸ்ரீலோலன்:—** நண்ப! உன் சுபாவப்படி, எப்போதும் விளையாடுவதா? அந்த விளையாட்டெல்லாம் இருக்கட்டும்; இனி, நடக்க வேண்டிய விஷயத்தை யோசிப்போம்.

**கோவிந்தன்:—** இப்போது எதைப்பற்றி யோசிக்கவேண்டும்?

**ஸ்ரீலோலன்:—** எதைப்பற்றியா? நேற்று இடமறிந்து வந்தோமே, அப்பெண்ணரசியை எவ்விதம் அடைவதென்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டுகிறேன்.

**கோவிந்தன்:—** யோசிப்பதென்ன இருக்கிறது? நான் எல்லாம் விசாரித்து வைத்திருக்கிறேன். எனக்கு மாப்பிள்ளையையும், பெண்ணையும் கூட்டி வைக்கும் விஷயத்தில் பழக்கமில்லை. ஆகையால், அதற்குமட்டும் ஒரு மாமாவைத் தேட வேண்டியதுதான் பாக்கி.

**ஸ்ரீலோலன்:—** நண்ப! இன்னும் புரளி செய்து, என் மனதை நோகச் செய்யாதே. என் மனம் மிகவும் வருந்துகிறது. என்ன விஷயம் விசாரித் தறிந்தாய்? அதை முன்பு சொல் கேட்போம்.

**கோவிந்தன்:—** காலையில் நீ ஆள் அனுப்பிய சமயம், எனது கையாள், முனிசாமியின் தமயன் என்னிடம் வந்து, தனது தம்பிக்கு ரஜா கொடுக்க வேண்டுமென்றும், தன் மனைவி காயலாவாயிருப்பதாகவும் சொன்னான். நான் உடனே ரஜா கொடுத்து விட்டேன். முனிசாமி ஏதோ வேலையாயிருந்ததால், உடனே போக முடியவில்லை. ஆதலால், அவன் தமயன் சிறிது நேரம் காத்திருந்தான். அப்போது நான், அவன் எங்கு வேலை பார்க்கிறானென்று வினவினேன். அவன் நாம் நேற்று பார்த்துவந்த வீட்டிலேயே வேலையிலிருக்கிறானும். அவ் வீட்டில் ராஜலட்சுமி என்றொரு தாசி

யிருக்கிருளாம். அவளுடைய மகள் **சாவித்திரிதேவி** என்பவள்தான் ஒவ்வொரு நாளும் கடற்கரைக்கு வந்து போகிற வழக்கமாம். ஆகையால், இனி உனக்கு சுலபமாய் காரியசித்தியாகும். ஆனால், ஒன்று மட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். தாசி வீடுகளுக்குச் சென்று, ஓட்டாண்டிகளாய் விட்டவர்களனந்தம். ஆதலால், இன்றைக்கு அவளுடன் இரமிப்பதை உனதாயுளின் ஒரு கெட்ட கனவின் சம்பவமாயெண்ணி, மறந்துவிட வேண்டுகிறேன்.

**ஸ்ரீலோலன்:—** அன்பனே! உனதன்பின் மிகுதிக்காக மிகவும் களிப்புற்றேன். நினது புத்திமதிப்படி நடந்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். அவளுடைய ஒரு நாளய இரமிப்பே எனக்குப் போதுமானது.

**கோவிந்தன்:—** ஆனல் சரி! வா! போகலாம். அங்கு போனதும் இதற்கேற்ற ஒரு **மாமாவைப்** பிடித்து காரியத்தை முடிப்போம். இதை ஒரு பணவிரய காலமென்றே கருத வேண்டும். எனிப்படிச் சொன்னேன்; என்றால்,

மேகங்கள் யாவும் உயர் விண்ணீங்கி வேசையர்தந்
தேகங்களில் வாசஞ் செய்கையான்—மாகமிசை
யாசைக்கிங் கார் காணு மவ்வேசையார் கொடுப்பர்
காசைக் கொடுப் பார்க்குக் காண்.

என்றதை நோக்கியே உனக்கிப்போது பணவிரய காலமென்றேன். ஆகையால் உனது கையில் சிறிது பணமும் கையிருப்பிற் கெடுத்துக்கொள்.

**ஸ்ரீலோலன்:—** நண்ப! இந்த மாதம் நான் பணம் வாங்கவில்லை. இப்போது நான் போய்க் கோபாலகிருஷ்ணய்யரைப் பணங் கேட்டால் அவர் இந்த மாதச் செலவிற்க்ாகக் கொடுக்க வேண்டிய நூறு ரூபாயைத் தவிர ஒருபைசாவும் கொடுக்க மாட்டார். நமக்கு குரைந்த தொகையாக இரண்டாயிரமாவது வேண்டியிருக்கும். இதற்கென்ன செய்வது?

**கோவிந்தன்: —** நானே மிகுந்த எழ்மை நிலைமையிலுள்ளவன். நீ என்னுடைய குடும்ப விஷயம் மொத்தமும் அறிந்தவனுகையால்,

நானென்ன சொல்ல விருக்கிறது? என்னிடமட்டும் இப்போதிருப்பின் எவ்வளவாயினும் கொடுத்தே தீருவேன்.

**ஸ்ரீலோலன்:—** நண்ப! நீ உன்னிடம் வைத்துக்கொண்டு வஞ்சனை செய்கிறுயென்று நான் நினைக்கவில்லை. அதிருக்கட்டும்; இனிப் பணத்தை எவ்வழியில் சம்பாதிப்பது? [என்று சொல்லிக் கொண்டே ஆழ்ந்த யோசனை செய்யலானுன். சிறிது நேரம் இருவரும் மௌனமாயிருந்தபின் ஸ்ரீலோலன், மறுபடியும் பேசத் துவக்கி,] "என்ன செய்யலாம்? நான் கட்டாயம் அம்மாதை அணைந்தே தீரவேண்டும். பணமோ, என்னிடம் தற்சமயம் இல்லை. நான் ஒரு வழி சொல்லுகிறேன். அம்மாதிரிச் செய்தாலென்ன?"

**கோவிந்தன்:—** தற்சமயம் நீ சொல்வதைப் பார்த்தால், ஒன்றுக் கிரண்டாக எழுதிக் கொடுத்து, கடன் வாங்க யோசிக்கிறு யென்று நினைக்கிறேன். அம்மாதிரி செய்ய என் மனம் இடந்தாராது.

**ஸ்ரீலோலன்:—** "நான் அப்படி செய்யச் சொல்லவுமில்லை, இஷ்டப்படவுமில்லை. அக்கஷ்டத்திற்காளாகி வருந்தவும் வேண்டாம். நான் சொல்லுவதென்னவென்றுல், என் கையிலிருக்கும் இரண்டு வைர மோதிரங்களும், சுமார் நாலாயிரம் ரூபாய்கள் விலைபெறும். அதை அடகு வைத்து, இரண்டாயிரம் ரூபாய்கள் இப்போது கடன் வாங்கிக்கொள்ளுகிறது. பிறகு ஒரு வருடத்தில் மீட்டுக் கொள்ளுகிறது.'' என்றுன். ஸ்ரீலோலன், இவ்விஷயத்தில் ஒரே பிடிவாதமாயிருப்பதைக் கருதியும், வேறு வகையில்லாமையாலும் கோவிந்தன், அதற்குடன்பட்டான். உடனே, இருவரும் சைகிள் மோட்டாரில் புறப்பட்டு, சென்னைக்குச் சென்று ஒரு மார்வாடி கடையில், இரண்டு வட்டிக்கு ஒப்பந்தம் செய்து, இரண்டு வைர மோதிரங்களையும் அடகு வைத்து, இரண்டாயிரம் ரூபாய்கள் பெற்றுக்கொண்டு, நேராகத் திருவாமூரை நாடிச் சென்றுர்கள். இவர்கள் அங்குற்றபோது, சுமார் பகல் பதினெரு மணி சமயமிருக்கலாம். இனிமேல் தாங்கள் எப்படி அந்த இல்லத்திற்குள் நுழைவதென்றும், யாரைக்கொண்டு இக்காரியத்தை முடிக்கலாமென்றும், இன்னும் பலவாறுக யோசனை செய்தவண்ணம், ஓர்

மரத்தின் நிழலில் தங்களது சைகிள் மோட்டாருடன் தங்கினர். இருவரும் அவ் வீட்டின் வாயற்படியையே நோக்கியவர்களாய் யோசனை செய்துக்கொண்டிருந்தனர். சுமார் அரைமணி நேரம் கழித்து, ஒரு மனிதர் அவ்வில்லத்திலிருந்து வெளிப்பட்டார். அவர் மிகுந்த சிவப்பழமாய் தோன்றியதன்றி, தேகமெங்கும் விபூதியை அணிந்துக்கொண்டு, உருட்திராட்ச தாரணத்தோடு அப்போதே சித்தி பெற்ற மஹான்போலத் தோன்றினர். அவர், இவ்விரு வாலிபர்கள் நின்றிருக்கும் இடத்தை நோக்கியே வந்துகொண்டிருந்தார். அவரது தோற்றத்தையும், அவர் மௌனமாக தலையைத் தாழ்த்தி நடப்பதையுங்கண்ட இவ்விருவரும், அவரை அவ் வீட்டைப் பற்றி விசாரிக்க முதலில் எண்ணினர்களானுலும், பிறகு அஞ்சினர்கள். அவரும் இவர்களிருக்கும் இடத்தையடைந்து, மேலும் நடக்கத் தொடங்கினர். அவர், அவர்களை யடைந்து, மேலும் போவதைக் கண்ட ஸ்ரீலோலனுக்கு, அவரை அழைத்து, நயமாக வினவவேண்டும், என்னும் எண்ணம் அதிகரித்து, அவனைத் துடிக்கச் செய்தது. கோவிந்தனே, அவ்வாறு செய்யவொட்டாது வற்புறுத்தித் தடுத்தான். பிறகு, சாமியார், பத்தடி தூரம் போனவர், மறுபடியும் எதோ நினைத்துக்கொண்டவர்போல், இவர்களை நாடித் திரும்பி வந்தார். இவர்களை நோக்கி அவர் வந்ததைக் கண்டதும், இருவரும் சந்தோஷமும், வியப்புமடைந்து, அவரையே நோக்கினர்கள். அவர், இவர்களை நெருங்கி மிகுந்த வணக்கமாய், பேசத் தொடங்கி, "அப்பனே! அடியேன் ஓர் அநாதை. இப்படி இச்சென்னையில் இரந்துண்டு வாழ்வதே வாழ்க்கையாகக்கொண்டு, மிகுந்த நேரத்தை முழுமுதற்கடவுள்பால், மனதைச் செல்லவிட்டு இவ்வாழ்க்கையை நடத்தி வருகிறேன். நான் நேற்றிரவு போஜனம் செய்தது. இதுகாறும், யாதொரு ஆகாரமும் அருந்தவில்லை. பசி காதை யடைக்கிறது. கண் பஞ்சடைகிறது. சிறிது அன்னத்திற்கு இவ்வடிமையை உரிமையாக்கினல் பெரிதும் புண்ணியமுண்டு." என்றிரந்து நின்றார்.

அதைக் கேட்ட, ஸ்ரீலோலன் மனது இரக்கங்கொண்டுவிட்டது. அவன் மிகுந்த ஜீவகாருண்ய சிந்தை யுள்ளவனுகையால், அவன், அவரை உண்மையான சாமியாரென்றே மதித்தவனாய், "சுவாமி! இங்கு அரைமயில் தூரத்தில் ஒரு சாப்பாட்டுக் கடை யிரு

68840

க்கிறது. அங்கு தாங்கள் வருவதற்கிசைந்தால் நான் அவ் விடத்தில் போஜனத்தை விலைக்கு வாங்கிக் கொடுக்க முடியும். அதுவரைக்கும் வருகிறீர்களா?'' என்றான்.

அதற்கு அச்சாமியார் ஒருப்பட ஸ்ரீலோலனும் சுவாமியாரும் போஜனசாலையை நோக்கி முன் நடந்து சென்றனர். பின்னால் கோவிந்தன் சைகிளை தள்ளிக்கொண்டு நடந்து வந்தான். ஸ்ரீலோலன் மிகுந்த மிருதுவான தேகியாகையாலும், வெய்யல் அதி உக்கிரமாக சுட்டெரித்ததாலும், அவன் தங்கத் திருமேனியெங்கும் வியர்வை பொங்கி வழிந்து, அவன் தூய உடைகளை நனைத்தது. அதைக்கண்ட அப்பெரியார் மிகுந்த இரக்கங்கொண்டவர்போல் அவனை நோக்கி "அப்பனே! நீ மிகுந்த செல்வவந்தர் வீட்டுப்பிள்ளை போலிருக்கிறது. நீ இதுவரையிலும் நடந்தறியாதவன் என்றும் தெரிகிறது. உன் உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்துவிட்டது. என்பொருட்டு உனக்கிவ்வளவு கஷ்டம் உண்டாவதை நோக்க என் மனம் மிகவும் வருந்துகிறது. நான் வேறெங்காகிலும் எனதாகாரத்திற்கு வழிதேடிக் கொள்ளுகிறேன். நீ மோட்டாரில் சென்று வாப்பா!'' என்றார்.

ஸ்ரீலோலன்:— சுவாமி! தாங்கள் அவ்வாறு சொல்லப்படாது.

"சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீதலியை யாக்கடை."

என்று பெரியார்கள் மொழிந்துள்ளபடி, சாதலே சித்திப்பதாயினும் பசியென்று வேண்டுவோருக்கு ஈதலே சாலவும் சிறப்புறுமென பல சாஸ்திரங்களின் மூலமாய் கற்றிருக்கிறேன். ஆகையால் நான் பரோபகாரார்த்தமாய் இச்சுவல்ப தூரம் நடப்பதை ஒரு பெரிதாக தாங்கள் கருதக்கூடாது.

சுவாமியார்:— அப்பனே! நீ மிகுந்த நற்குணவானென்றும், கற்றுவல்ல, சிறந்த மேதாவி யென்றும் இப்போதே தெரிந்து கொண்டேன். பணச்செருக்குள்ள எந்த தனிகனும் உன்போல அடக்கமும், பணிவும் தோற்றுவித்து, "கீழோராயினும் தாழவுரை" என்றபடி தாழ்மையான வசனங்களை பிரயோகித்து பேசுபவனைக் கண்டதேயில்லை.

அன்றியும்,

> பணியுமா மென்றும் பெறுமை, சிறுமை
> அணியுமாந்தன்னை வியந்து.

என்றார் ஒரு பெரியார். உன்னுடைய அடக்கமான மறுமொழி களிலிருந்து நீ மிகுந்த மேற்குலத்துதித்த கோமானென்ன நினைக்கி றேன். "இன்பம் நயவாமையன்றோ! நலம்" என்பதற்கிணங்க, என்பொருட்டுயாதொரு பிரதிபலனு மில்லாமல் உபகாரம் செய்வது, உன்னுடைய பிறவிக் குணத்தைச் சுட்டுகிறது."

**ஸ்ரீலோலன்:—** சுவாமி! தாங்கள் என்னை இவ்வளவு தூரம் புகழ்வதற்கு நான் சிறிதேனும் அருகமாவேனோ? என்று சந்தேகப் படுகிறேன். "தன்னைப்போல் பிறரை நினைப்பது உலக சகஜமாத லால், தாங்கள், சகல நற்குணமும், புலமையும் வாய்ந்து, மேற்குலத் திலுதித்தவராகையால், என்னையும் தங்களைப்போல நினைக்கிறீர்கள். ஆனால், நான் ஒரு விஷயத்தில் பெறுத்த பாக்கியம் செய்தவன்.

ஜலத்தை எந்தப் பாத்திரத்தில் கொட்டினாலும், அந்த ஜல மானது, அப் பாத்திரத்தின் உருவை யடைகிறது. அதைப்போல் நான், தங்களைப்போன்ற பெரியோரை அடைந்தபின், தங்களது குணங்கள் எனக்கும் படியுமென்பதில் என்ன ஆட்சேபமிருக்கிறது? ஆகவே நான், தங்களைக் கண்டதுமுதல், என்னையும் மீறித், தங்கள் பால், ஒருவித அன்பு அதிகமாயுண்டாகி, வருத்துகிறது. இனி தாங்கள், என்னுடைய இல்லத்திலேயே, தேவதா பக்தி செலுத்திக் கொண்டும், தங்கள் அரிய காட்சியை தினந்தோறும் எனக்களித்துக் கொண்டும் வாழ்க்கையைக் கடத்துமாறு, மிகவும் மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறேன்."

**சாமியார்:—** அன்பனே! நினதரும் அன்பிற்காக நான், உன்னை பெரிதும் பாராட்டுகிறேன். நினைப்போல் சிரேஷ்ட புருஷன் உலகில் எந்த மூலையிலும் இல்லையென்றே சொல்லுவேன். மெச்சினேன், நினதருங் குணத்திற்கு. ஆயினும், உனது வார்த்தைக்குக் கட்டுப் பட்டு, நானுனது வீட்டில் நீடித்திருக்க வியலாதென்பதை, மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

**ஸ்ரீலோலன்:—** சுவாமி! தாங்கள் எனதகத்திலேயே இருக் கும்படியான பாக்கியத்தை நானெய்தவில்லைபோலும். அவரவர்கள்

செய்த புண்ய பாவத்துக்கேற்ற பலன்தானே கிடைக்கும்.

> செய்தீ வினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால்
> எய்த வருமோ இருநிதியும்.

என்றதற்கிணங்க, யான் செய்த ஊழ்வினையின் பயனே, தங்கள் மனம் நம் வீட்டிலிருக்க இடந்தாராதபடி செய்கின்றது போலும். ஆயினும், நமது அகத்தில் சில தினங்களாகிலும் இருந்து போக இஷ்டப்படாவிடில், என்னைப்போன்ற துர்ப்பாக்கியன், உலகிலிரான் என்று பணிவுடன் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன்." என்றான்.

சாமியார் இதைக் கேட்டு, சிறிதுநேரம் ஏதோ சிந்தித்தபின், ஆகட்டுமென்று சம்மதித்தார். இதற்குள், போஜனசாலையையடைந்து விட்டனர். ஆகையால், அத்துடன் அச்சம்பாஷணை முற்றுப்புள்ளி யடைந்தது. பிறகு சுவாமியார், போஜனசாலையில் திருப்தியாக உண்டெழுந்தபின், மூவரும் வந்தவழியே திரும்பினார்கள். முன்போலவே சாமியாரும் ஸ்ரீலோலனும் முன்பும், கோவிந்தன் பின்புமாக நடக்கலாயினர்.

**சாமியார்:—** அப்பா! இப்போது நானுனக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்? இந்த சமயத்தில் எனக்கு அன்னமளித்து, ஆவியைக் காத்த, அருள் மூர்த்தியாகிய உனக்கு, எளியவனை யான், என்ன கைம்மாறு செய்யக் கிடக்கிறது?

**ஸ்ரீலோலன்:—** சுவாமி! நானென்ன அப்படி புகழ்வதற்குரிய காரியம் நிகழ்த்திவிட்டது? ஒன்றுமில்லையே! பசியென்போருக்குப் பரிந்து அமுதளிப்பது, ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டிய கடமையல்லவா? அவனவன் கடமையை பிரதிபயன் கருதாதியற்றுதலே, உத்தமம். முன்பு ஈந்து, பின்பு வாங்குவது மத்திமம். உடனுக்குடன் வாங்குவது அதமம். என்பதை,

> உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வாரே
> மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலகு
> மாங்கமுகு போல்வா ரதம ரவர்களே
> தேன்கதலியும் போல்வார் தேர்.

என்ற, இச்செய்யுளினின்றும் அறியலாம்.

ஒருவர் தருமம் செய்வதென்பது, பெறுமைக்கும், கௌரவத் திற்கு மன்று. ஒவ்வொருவரும், கோடீஸ்வரன் முதல், பரம ஏழை ஈறாக எல்லோரும், தருமமியற்ற வேண்டுமென்பது வேதசம்மதம். ஈவதிலும், பனையைப்போல் பிரதிபலன் கருதாதீதலே சாலச் சிறப் புடைத்து. தென்னையைப்போல் ஈவது, மத்திமமாகும். கதலி கமுகுபோல் ஈவதே, அதமமாகும். அன்றியும் தாங்கள், என்னை புகழ்வதும் சரியல்ல. ஏனெனில், நான் உத்தமமான காரியத்தை இயற்றத் தவறினேன்.

> தண்டாம லீவது தாளாண்மை தண்டி
> அடுத்தக்கா லீவது வண்மை.

எனவே, தாங்கள் என்னை அடுத்தபின் உபகரித்ததால், மத்திம மதி யுடையவனானேன். ஆகையால், தாங்கள் எனக்கு எவ்வித பிரதி யும் செய்யவேண்டியதில்லை.

**சாமியார்:—** அப்பனே! அபபடிச் சொல்லப்படாது. "நன்றி மறப்பது நன்றன்று" என்பதை, நீ அறியாதவனல்லவே. என்னால் இயன்றவரையில் உனக் கெத்தகைய உதவியும் செய்யத் தயாரா யிருக்கிறேன்.

> எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்நன்றி கொன்றமகற்கு.

என்றபடி, நீ தருணத்தில் உதவியது,

> காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது.

என்பதனால், எவ்வளவு பெரியதென்று விளங்குகிறதல்லவா? இன் னொன்று சொல்லுகிறேன். நாமெல்லோரும் தமிழ் நாட்டில் பிறந்த சகோதரர்களல்லரா? ஆகையால், நாமெல்லோரும் ஒருவர்க்கொரு வர் உபகாரம் செய்துகொள்ள வேண்டுமென்பது, ஆன்றோர் ஆஞ்ஞை. ஆகையால், உனக்கு என்னாலியன்ற உதவியைச் செய்ய நான் முற்படுகிறேன். உனக்கு இப்போது ஏதேனும் காரியமாக வேண்டியிருந்தால், அதை என் மூலமாக இயற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீலோலன்:— சுவாமி! தாங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்தும்போது, நான் அதை மறுத்தால் பெரியோர்களை உதாசினம் செய்த குற்றத்திற்கு ஆளாக நேரும். ஆகவே, எனக் கெப்போதேனும் உதவி வேண்டியிருப்பின், தங்களிஷ்டப்படி, தங்களிடமே பெற்றுக்கொள்ளுகிறேன்.

சாமியார்:— நீ இப்போது சொன்னது உண்மையான விஷயந்தானே? பிறகு வார்த்தை பிசகப்படாது.

ஸ்ரீலோலன்:— அப்படி ஒரு நாளும் நான் வாய்மை தவறினதில்லை.

சாமியார்:— நான் சந்தேகித்துக் கேட்டதற்காக, தயவு செய்து மன்னிக்கவேண்டும். ஏனெனில், இப்போதே உனக்கு நான் ஒருபகாரம் செய்ய வியலும். அதை யெங்கு மறுக்கின்றனையோ; என்றுதான் கேட்டேன்.

ஸ்ரீலோலன்:— ஆனால் தாங்கள், எனக்கு இப்போதேதோ உதவி செய்யப்போகிறீர்கள். இது நோக்கியே.

> பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்து
> இலங்கைக் கிழவற்க் கிளையான்—இலங்கைக்கே
> பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
> சார்ந்து கெழீ இலார் இல்.

என்றதை, முன்றுரையறையனார் என்ற பெரியார் மொழிந்தனர் போலும். தாங்கள் எத்தகைய உதவி, இப்போது செய்யப் போவது?

சாமியார்:— நானுகிப்பது சரியாயின், நீ இந்த சமயம் வேறு யாரிடத்தும் உதவிபெற வியலாது. நான் நீங்களிருவரும் சைகிளில் வந்து, மாத்தடியில் தங்கினபோதுதான், நீங்கள் கவனித்துக் கொண்டிருந்த மாளிகையுள் நுழைந்தேன். ஏதோ அவர்களை நான் அன்னதானம் கேட்டதற்கு, வெகுநேரம் பதில் சொல்லாமலிருந்து, பிறகு போய்வரும்படி சொல்லிவிட்டனர். அதுகாறும் அங்கேயே நின்றிருந்தவன், உங்களையும் கவனித்தேன். முதலில் நீங்கள் எங்கோ போகிறவர்கள், வெய்யலுக்காகத் தங்கினீர்களென யெண்ணிக்

கொண்டேன். பிறகு நீங்கள், அங்கேயே தங்கி, அம் மாளிகையையே நோக்கியிருந்ததைக் கண்டதும், நீங்கள் யாரோ தனம் படைத்த, துன்மார்க்கர்களென்று எண்ணிக்கொண்டேன். ஆகையால்தான், உங்களிடம் பிச்சை கேட்காமல் சிறிது தூரம் சென்றுவிட்டேன். இப்போது, உன்னுடைய நிலைமையும், குணமும், மேம்பாடும் தெரிந்துவிட்டமையால், நானென்ன யூகிக்கிறேன் தெரியுமா? அவ்வீட்டிலுள்ளோர், உங்களுக்குப் பழக்கமில்லாதவர்களென்றும், நீங்கள், அவசியம் அவ்வீட்டிலுள்ளோரிடம், ஏதோ காரியம்பற்றி, பேசவேண்டியிருக்கிறதென்றும் நான், யூகிக்கிறேன். நான் சொல்வது சரிதானே?

ஸ்ரீலோலன்:— தாங்கள் சொல்வது முற்றிலும் சரியே.

சாமியார்:— அன்பனே! ஆயின் யான், அவ்விவகாரத்தை முடிக்கிறேன். நீங்கள், அவர்கள் இன்னார்களென்றும், அவர்களிடத்தில், உங்களுக்காக வேண்டிய காரியத்தைப் பற்றியும் என்னிடம் சொன்னால், யான் ஒரு கணத்தில் முடித்து வருகிறேன்.

ஸ்ரீலோலன்:— சுவாமி! தாங்கள் அவ்விவகாரத்தை ஏற்றுக் கொள்வது, தங்கள் கண்யத்திற் கடுக்காது.

சாமியார்:— ஏனப்பா மறைக்கிறாய்? அப்பங்களாவில், உத்தேசம் பதினறு வயதுள்ள, ஓர் அழகிய மாதிருக்கிறாள். அவளுடன் இரமிக்க, ஆவல் கொண்டுவிட்டாய். அவள் தாசிப் பெண்ணுகையால், ஒரு நாளைக்காக ஏற்பாடு செய்ய, ஒரு ஆளை நாடுகிறீர்கள். அந்த ஆள் நானுகவே யிருக்க, நான் விரும்புகிறேன். அதையேன் நீ தடுக்கிறாய்.

ஸ்ரீலோலன்:— சுவாமி! தங்களுக்கேதேனும் ஞானதிருஷ்டியுண்டோ?

சாமியார்:— நானின்னும் அத்தகைய ஞானதிருஷ்டியாலறியும் பரிபக்குவ நிலைமையை அடைந்துவிடவில்லை. நான் ஏற்கனவே, விசாரித்ததில், அவ்வீடு ஒரு தாசி வீடென்றும், அதிலுள்ள தாசிக்கு ஓர் பெண் உண்டென்றும், கேள்விப்பட்டேன். ஆகையால், முன் கூறியபடி, இருக்கலாமோ என, யூகித்தேன். அது, உனது இப்

போதைய வார்த்தையால் ஊர்ஜிதப்பட்டுவிட்டது. அதிருக்கட்டும்; நீங்கள் இங்கேயே இருங்கள். நான் போய், விஷயத்தை விசாரித்துக்கொண்டு வருகிறேன்.

என்றதும், அந்த வீடு வந்துவிட்டதாகையால், அவர்கள் தடுப்பதற்குள், அவ்வில்லத்தை நாடி முன்பு நடந்தார். சிறிது நேரத்தில் அச்சாமியார், அவ்விட்டின் நடைக்குள் பிரவேசித்து, "அம்மணி! அம்மணி!" என்று, இரண்டு மூன்றுதாம் அழைத்தார். உள்ளேயிருந்து, கோபமான தொனியில் ஒரு பெண்பிள்ளை, "ஆரையா அது? இப்படி அநாகரீகமாகக் கத்துகிறது. முன்னொரு பிச்சைக்காரன் வந்தடித்துக்கொண்டான்; இதற்குள், இன்னொருவன் வந்துவிட்டான். இச் சென்னையில், இந்த நாடோடிப் பயல்களின் தொல்லை அதிகமாய்ப் போய்விட்டது." என்று, மிகுந்த கடினமாக மொழிந்தாள். இதை எதிர்ப்பாராத சாமியார், சிறிது மனத்தாங்கலடைந்தாரேனும், அதை அவ்வளவாகப் பொருட்படுத்தமால், "அம்மணி! தாங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. நான் உண்மையில் பிச்சைக்காரனுயினும், தற்போது பிச்சைக்கு வரவில்லை. அதைப்பற்றி, தாங்கள், ஆயாசப்படாது, இப்படிச் சற்று எழுந்தருளினல், தங்களுக்கு இலாபமுண்டாகக் கூடிய காரியத்தைச் சொல்லலாம்." என்று, நயமாகப் புகன்றார்.

**உள்ளேயிருந்த மாது:—** ஆரையா அது? எனக்கு என்ன சொல்லவேண்டும்? இப்படி உள்ளே வந்து, என்ன சொல்லவேண்டுமோ, அதைச் சொல்லும். (என்று கண்டிப்பாக மொழிந்தாள்.)

உடனே சாமியார், உள்ளே போய்க் கூடத்தில் நின்றார். அவருடைய சாந்தத் தன்மையையும், பெருந்தன்மையோடுங் கூடி காவியங்கியணிந்த, திருவுருவத்தையுங் கண்ட அம்மாது, ஒருவாறு அவரை தக்க பெரிய மனிதரென எண்ணியவளாய், சட்டென எழுந்து, "சுவாமி! இப்படி, இதோ போடப்பட்டிருக்கும் ஊஞ்சலில் உட்காருங்கள். இவ்வூரில், பிச்சைக்காரர்களின் தொந்திரவு அதிகமாதலால், ஏதோ முன் கோபத்தினல் மொழிந்த வார்த்தையை மன்னிக்கக் கோருகிறேன்."

**சாமியார்:—** அம்மணி! அதை ஒருபொருட்டாகக் கொள்ளவேயில்லை. அதைப்பற்றி, இப்போதென்ன? கடந்தது கடந்துவிட்

டது. நானென்று கேட்க விரும்புகிறேன். தாங்கள் கோபித்துக் கொள்ளாமல், பதிலளிக்கக் கோருகிறேன்

**அம்மாது:**— அப்படி யொன்றும் கோபித்துக்கொள்ள மாட்டேன். தங்களுக்கு வேண்டிய விஷயத்தைக் கேளுங்கள்.

**சாமியார்:**— அம்மணி! இவ்வீடு ஒரு தாசியின் கிருகமெனக் கேள்விப்பட்டேன். அது உண்மைதானே?

**அம்மாது:**— வாஸ்தவந்தான்.

**சாமியார்:**— வீட்டின் சொந்தக்காரர் தாங்கள்தானே? தங்கள் நாமதேய மென்னவோ?

**அம்மாது:**— நான்தான் இந்த வீட்டின் சொந்தக்காரி. என்னை **தஞ்சாவூர் ராஜலட்சுமி,** என்று சொல்லுவார்கள்.

**சாமியார்:**— தங்களுக்கு ஓர் மகளிருப்பதாகச் சொன்னார்கள். அதனுடைய நாமதேய மென்னவோ?

**ராஜலட்சுமி:**— சாவித்திரி தேவி.

**சாமியார்:**— வயது?

**ராஜலட்சுமி:**— இப்போதே பதினான்கு முடிந்து, பதினைந்தாவது தொடங்குகிறது. என் இவ்விவரங்களை யெல்லாம் விசாரிக்கிறீர்கள்?

**சாமியார்:**— அம்மணி! அதைத்தான், சொல்லுகிறேன் கேளுங்கள். தங்களுடைய மகள், சாவித்திரிதேவியைக்கண்டு, ஒரு தனவந்தன வாலிபன், மையல்கொண்டிருக்கிறான். அவன், மிகுந்த கண்ணியமான மனிதன். இத்தகைய, தாசியர் லோலனாய், திரிபவனன்று. எதோ, கர்ம வசத்தா லேற்பட்டது, தங்கள் புத்திரியின் பால் மையல்போலும். ஆகையால், தங்கள் புத்திரியிடம், ஒருநாளைய இரமிப்பையே அப் பூமான் விரும்புகிறார். அதற்காக, எவ்வளவு பணம் வேண்டுமாயினும், கொடுக்கத் தடையில்லை.

**ராஜலட்சுமி:**— சுவாமி! தாங்கள் சொல்வது சரியான விஷயமே. காதல் என்பது, எத்தகைய உறுதியானவனையும், கண்ணியம் வாய்ந்தவனையும் இயக்கற்பாலது. அதற்கு பேதாபேதம் கிடை

யாது. என் மகள் இதுகாறும் சாந்தி கழியாதவள். நீங்கள் குறிப்பிடும் பூமானுல், அது நடைபெற வேண்டுமென்ருல், அப்படியே ஆகட்டும். அதற்கொரு ஆட்சேபமுமில்லை.

சாமியார்:— அம்மணி! எனக்கு நேரமாகிறது. நான் போக வேண்டும். உங்களுக்கு, எவ்வளவு தொகை வேண்டும்? எப்போது அப்பூமானை வரச்சொல்லுகிறீர்கள்? என்றவைகளைஉடனே சொல்லுங்கள்.

ராஜலட்சுமி:— சுவாமி! நானும் வார்த்தையை வளர்க்காமல் ஒரு வார்த்தையில் சொல்லிவிடுகிறேன். ஒருநாளைக்கு அதாவது அவர் இன்றைக்கு வர ஒருப்பட்டால் ஐயாயிரம் ரூபாய்கள் கொடுக்கவேண்டும். அதுவும் இன்றிரவு 8-மணிக்கு வந்து பதினெருமணிக்கெல்லாம் போய்விடவேண்டும். பதினெருமணிக்கு மேல் ஒரு நிமிஷமும் அவர் இங்கே இருக்க நான் சம்மதிக்கமாட்டேன். இந்த நிபந்தனைக்கு சம்மதித்தால் ரூபாய்களை இப்போதே தரலாம். இல்லையானுல் சென்றுவரலாம். [என்று மிகுந்த கண்டிப்பாக மொழிந்தாள்.]

சாமியார்:— "அப்படியே ஆகட்டும். இப்போதே சென்று இதோ பணத்தைக் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து ஸ்ரீலோலனிடம் வந்தார். ஸ்ரீலோலன் வெகு ஆவலுடன் என்ன சமாச்சாரமென்று கேட்டான். சாமியார், தான் போய் வந்த விவரத்தையெல்லாம் சொன்னுர். உடனே ஸ்ரீலோலன், தன் கையிலிருந்த இரண்டாயிரமும் கொடுத்து, மீதியை தான் வரும்போது கொண்டுவந்து கொடுப்பதாக, சொல்லச் சொல்லி அனுப்பினுன்.

சிறிது நேரத்தில் சாமியார், பணத்தைக் கொடுத்துவிட்டு வந்து சேர்ந்தார். பிறகு மூவருமாக சைகிள் மோட்டார் ஏறி நுங்கம்பாக்கம் போய்ச் சேர்ந்தனர். அப்போது பிற்பகல் 2-மணி சமயமிருக்கும். உடனே கோவிந்தனும் ஸ்ரீலோலனும் ஸ்நானம் செய்து போஜனத்தை முடித்துக்கொண்டனர். பிறகு சாமியாரை வீட்டிலேயே இருக்கும்படிச் சொல்லிவிட்டு வெளியில்சென்றனர். இரண்டு நண்பரும், மறுபடியும் மார்வாடி கடைக்குச் சென்று, இன்னும்

தன்னிடமுள்ள சில ஆபரணங்களை கழற்றி அடகு வைத்து மூவாயிரம் ரூபாய்கள் பெற்று வந்தனர். பொழுது சிறிது சிறிதாகச் சென்றுகொண்டே யிருந்தது. ஸ்ரீலோலனுக்கு, காமவேதனை பொருக்க முடியவில்லை. 8-மணிக்கெல்லாம் நாம் அந்த மாதரசியை அடைந்துவிடலாமென ஆகாயக் கோட்டை கட்டினவனாய், துடி துடித்துக்கொண்டிருந்தான்.

காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந்நோய்.

என்றதற்கிணங்க, மாலைநெருங்க நெருங்க, ஸ்ரீலோலன் பாடு பெரிய அவஸ்தையாய் முடிந்தது

மணியும் சுமார் ஏழாயிற்று. உடனே, ஸ்ரீலோலன், சாமியாருக்கு போஜனம் செய்து வைத்து, தானும் கோவிந்தனும் உண்டு, உடுத்திக்கொண்டு புறப்பட, ஆயத்தமாயினர். உடனே சாமியார் "அப்பா ஸ்ரீலோலா! உனது நண்பர், இங்கேயே இருக்கட்டும். நாம் மட்டும் சென்று வருவோம்" என்றார்.

**ஸ்ரீலோலன்:**— என் அப்படிச் சொல்லுகிறர்கள்? அவனும் வந்தால், என்னை அங்கு விட்டுவிட்டு, உங்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிடுவான்.

**சாமியார்:**— "அப்படி வந்துவிட்டாலும், இன்னொருதரம் பதினொரு மணிக்கு வந்து, உன்னை அழைத்துவர வேண்டாமா? அவருக்கேன், அந்த கஷ்டத்தைக் கொடுக்க வேண்டும்? நான் மட்டும் வந்தால், சைகிளினருகில் நீ வரும் வரையிலிருந்து, உன்னுடன் திரும்பிவிடுவேன்." என்றார். ஸ்ரீலோலன், மிகுந்த அவசரப்பட்டானாகையால், மேலும் மறுத்தால், வார்த்தை வளர்ந்து, அதனால் காலதாமதமாகுமெனக் கருதியவனாய், உடனே மோட்டாரேறி சாமியாரை பக்கத்தில் அமர்த்திக்கொண்டு, திருவாமூரை நோக்கி விடுத்தான். மணி சரியாக எட்டடிக்கும் சமயத்தில், அவ்வீட்டை யடைந்தனர். உடனே, சாமியார் முன்னும், ஸ்ரீலோலன் பின்னுமாக, அவ்வில்லத்திற்குள் நுழைந்தார்கள்.

கூடத்தில் இவர்களுக்காக காத்திருந்த ராஜலட்சுமி, இவர்களை மரியாதையுடன் வரவேற்றாள். அதிகம் வளர்த்துவானேன்? உடனே

பணம், ராஜலட்சுமியின் மடியில் போய்ச் சேர்ந்தது. சாமியார், ஜாடையாக வெளியில் வந்துவிட்டார். உடனே ராஜலட்சுமி, ஸ்ரீலோலனை நோக்கி, "தாங்கள் வருவீர்களென்று, என் மகள் வெகு நேரமாக மேன்மாடியிலுள்ள, படுக்கை யறையில் அதிக ஆவலுடன், காத்துக்கொண்டிருக்கிறாளாகையால், தாங்கள் அவளைக் காணும்பொருட்டு, உடனே அவ்விடத்திற்குப் போகக் கோருகிறேன்." என்றாள். ஸ்ரீலோலன், அதிக பரபரப்புடன், எழுந்து, மேன்மாடியில், அவள் காண்பித்த அறையினுள் நுழைந்தான்.

உள்ளே சென்ற ஸ்ரீலோலன், தன் மனதைக் கவர்ந்த மனோன்மணி, இருக்குமிடத்தை சுற்றுமுற்றும் பார்த்து ஆராய்ந்தான். அம்மங்கையற்கரசி, அங்கு போடப்பட்டிருந்த வெல்வெட் (Spring) ஸ்பிரிங் கட்டிலின் மறைவில் நின்றுகொண்டிருந்தாள். ஸ்ரீலோலன், வாலிபப் பருவமுடையவனாதலால், அவனுக்கு இயற்கையாயுள்ள, நாணத்தாலும், இதற்குமுன், இதுபோன்றதில் பழக்கமில்லாததாலும், அவளையே நோக்கியபடி நின்றான். அவ்வணங்கு, ஒரு தாசியின் மகளாயிருந்தாலும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலியன தோற்றுவித்தவளாய், தலைகுனிந்து, அசைவற்று நின்றாள். அவன் அவளது பேரழகென்னும், தேவாமிர்தத்தைப் பருகியவனாய், சிறிதுநேரம் அப்படியே நின்றான். அவளுடைய மிருதுவான திருமேனியைக் கண்ட ஸ்ரீலோலன்,

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மை யுண்டாகப் பெறின்.

என்பதை நினைத்து, இவள் கற்புள்ள மங்கையாயும், குலத்துதித்த கோதாயுமிருந்தால், இவள் தனக்குக் கிடைத்ததற்கு, தன்போல் பாக்கியவானும் உளனோ என்று தன் மனதுள் நினைத்துக்கொண்டான். ஸ்ரீலோலன், இவ்வாறு யோசனை செய்தபடியே நின்றிருப்பதைக் கண்ட அம்மட மங்கை, தான் இன்னும் பேசாது மௌனமாயிருத்தல், சரியன்றெனக் கருதியவளாக,

"தாங்கள், என் கால்கடுக்க நிற்கிறீர்கள்? தங்களுக்காக, இன்று புதிதாய் வாங்கிப் போடப்பட்டிருக்கும் கட்டிலின் மீதமர்ந்துக்கொள்ள வேண்டுகிறேன்." என்று தணிவான குரலில், மரியா

தையாய் மொழிந்தாள். அவளது மிருதுவான வார்த்தைகள், ஸ்ரீலோலனை, சந்தோஷ சாகரத்திலாழ்த்தியது.

உடனே, அவன் பேசத்தொடங்கி, "பெண்மணி! நானமர்ந்து கொள்ளுகிறேன். நீ வெகு நேரமாய், உனது, அனிச்சமலரன்ன மென்மையான பாதங்கள் நோக நிற்கிறது, எனது மனதில் வேல் உருவியோடுவதுபோன்றிருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, இப்படி வந்து, கட்டிலில் அமர்ந்துகொள். யானும் அமர்ந்துகொள்கிறேன்.

**அம்மாது:**— தாங்கள், அவ்வாறு மொழிவதடாது. எப்போதும் பெண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகள் அமர்ந்தபின், அமர்வதே அறநூற்றுணிபாகவும், உலக வியல்பாகவு மிருக்கிறது.

**ஸ்ரீலோலன்:**— அப்படியானல் சரி. இதோ அமர்ந்துகொண்டேன். இனியேனும், தடை செய்யாது, நீ வந்து உட்காரலாமல்லவா?

**அம்மாது:**— கிணற்று ஜலத்தை, ஆற்று வெள்ளம் கொண்டு போகுமா? நான், சிறிது நேரம் பொறுத்தமர்வதால், என் கால்கள் ஒடிந்தா போகும்? அப்படி ஒன்றும் நேராது. நாம், ஒருவரையொருவர் ஸ்பரிசிக்கு முன்பு, ஒருவர் மனதை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டுமென, விரும்புகிறேன். தங்களுடைய அபிப்பிரயம் எப்படியோ?

**ஸ்ரீலோலன்:**— ஒகோ! அப்படி நீ விரும்பினல், நானதை ஆட்சேபிக்கமாட்டேன். ஆனல், ஒரு சந்தேகம். என் மனதை வேண்டுமானல், நீ ஒரு நிமிஷத்தில் தெரிந்துகொள்ளலாம்.

" அத்திமலரு மருங்காக்கை வெண்ணிறமும்
தத்துபுனன் மீன்பதமும் கண்டாலும்—பித்தரே
கானர்தெரியற் கடவுளருங் காண்பரோ
மானர் விழியார் மனம். "

என்பதை நோக்க, கடவுளாலும், பெண்களின் மனதையறிய வியலாதென்றல், என்னல் உன் மனதை யறிய முடியுமோ என்பது தான், என்னுடைய சந்தேகம்." (என்று சிறித்துக்கொண்டே சொன்னன்.)

**அம்மாது:—** ("புன்னகை தோற்றுவித்து") நீங்கள் சொல்வது முற்காலத்திய மாதர்கள். இந்தக் காலத்து மனிதர்களோ, பலவித பரீட்சைகளில் தேறி, வாக்கு வன்மைப் பெற்றிருக்கிறார்கள். அதனாலேதான், நான் பேசுமுன் அதற்கணை போடுகிறீர்கள்.

எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும்
பெண்புத்தி பின்புத்தி.

என்பார்கள். அதற்கு நானே சான்றாயினேன். அதிருக்கட்டும்; தங்களை நான் தினந்தோறும் கடற்கரையில் கண்டபோதே, என்னையும் மீறி, தங்கள் மீது காதலுண்டாயிற்று. ஆயினும், தாங்கள், எத்தகைய அந்தஸ்துள்ளவர்களோ என்றும், தங்களை எவ்விதம் சந்திப்பதென்றும், நமது காதலை நாணமின்றி, எப்படி வெளியிடுவதென்றும், இன்னும் இவ்வாறெல்லாம் எண்ணி, மனதை புண்படுத்திக்கொண்டிருந்தேன். இப்படியிருக்க திடீரென, இன்று மாலை, எனது தாயார் என்னிடத்தில், இன்றைக்கெனக்கு, சோபனம் நடக்கப் போகிறதென்றும், அதற்காக ஒரு பூமான், ஐயாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறாரென்றும் சொன்னாள். அப்போதே எனக்கு இடி விழுந்ததுபோலாயிற்று, நான், தாசி வயிற்றிலுதித்திருந்தாலும், கற்பென்னும் ஆபரணத்தை யணிய, ஆதியிலிருந்து விரதம் பூண்டவள். என்று தங்களைக் கண்டு, காதல் கொண்டுவிட்டேனோ, அன்றே, எனக்குத் தாங்கள் கணவனாகிவிட்டீர்கள். பிறகு, என் மனதாலும் பிறரை நினைக்க, என் மனம் இடந்தருமோ? ஆகவே, இன்றிரவு வருபவருக்கு, வேண்டிய புத்திமதிகளைச் சொல்லுவதென்றும், அதை அவர் கேளாமல் பலாத்கரிக்க யத்தனித்தால், தற்கொலை செய்துகொள்வதென்றும் தீர்மானித்திருந்தேன். கடவுள் தயவால் வந்தவர், தாங்களாகவே யிருந்தது பற்றி, என் மனம் அடையும் சந்தோஷத்திற் கெல்லையே யில்லை.

**ஸ்ரீலோலன்:—** அப்படியா சமாச்சாரம்? அப்படியானால், என்போல் புண்ணியவான், இவ்வுலகிலிரான். இன்னமும் என் விலகி நிற்கிறாய்? என் அருகில் வாயேன்.

**அம்மாது:—** அதிருக்கட்டும்! நான் முதலில் கேட்கும் சில விஷயங்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன். நான், முதன்முதல்

தங்களைப் பார்த்தபோது, உயர்குலத்தில் உதித்தவரென்றும், மிகுந்த நற்குணமும் கல்வியும் வாய்ந்தவ ரெனவும், எண்ணினேன். அதற்கு முற்றும் மாருக, தாங்கள் அறிவிலியைப்போல ஆசை மேலிட்டு, காசை வாரி யிரைத்து, இந்த தாசி வீடுகளை நாடலாமோ?

ஸ்ரீலோலன்:— கண்மணி! நீ மேற்கூறிய குணங்களெல்லாம் என்னிடமிருப்பினும், தாசி வீடுகளுக்குச் செல்லும் வழக்கமெனக் கில்லை. இதுகாறும் சென்றதுமில்லை. முதலில் உன்னைக் கண்டவுடன், நீ பிராம்மண குலத்திலுதித்தவளென்றும், எப்படியாவது விசாரித்துன்னை மனைவியாக்கிக் கொள்ளலாமென்று மெண்ணினேன். பிறகு விசாரித்ததில் நீ ஒரு தாசியின் மகளென தெரிந்ததாலும், உன்மேலுள்ள அளவுகடந்த காதலாலும் இப்படி பணத்தைக் கொடுத்து வரும்படி நேரிட்டது. அன்றியும், நாயானது மெலிந்து ஒருகால் முடமாகி ஒரு கண்கெட்டுச் செவி யிழந்து, பொருந்திய முதுகிலே வயிரொட்டி நோய் வருத்தத் துன்பமடைந்து பிளந்த வாயோடு பெண்ணுடன் பின்னே போனல், யாரைத்தான் மன்மதன் துன்பப்படுத்த மாட்டான், இன்னமும் உனக்கு சந்தேகமிருப்பின்,

ஒரு கோட்டுக் கலைமுனியும்,
மொளிதிகழும் புலியாடை உடுத்த கோவும்,
வருமலர் வாழ்திசை முகனும்,
வானவர்கணாயகனும், மகுடன்தானும்,
கரியநிறத் திருமாலும் வாலியும்,
பராசரனும் காமனம்பால்,
பெருமை யிழந்தனரென்றால்.
சிறுமனிதர்க்கெப்படியோ பேசுங்காலே,

ஒற்றைக் கொம்பை தலையில் தாங்கிய கலைக்கோட்டு முனிவரும், புலித்தோலை ஆடையாயணிந்த ஈஸ்வரனும், தாமரை மலரில் சதா வாசம் செய்யும் பிரமனும், இந்திராணியின் கணவனை இந்திரனும் மகிடாசுரனும், வாலியும், பராசரனும் மன்மதன் பஞ்ச பாணத்தால் அடிபட்டு தங்கள் பெருமை யிழந்தனரென்ருல், ஆற்றலற்ற அற்ப மனிதருக்கு மன்மத பாணத்தின் வாதை எதைத்தான் செய்யத் தூண்டாது.

அம்மாது:— இப்போது சொன்ன சமாதானத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். நான் ஒரு குடும்ப ஸ்திரீயா யிருந்தேன். அப்போதென்ன செய்வீர்கள்?

ஸ்ரீலோலன்:— எப்படியேனும் முயன்று, கலியாணம் செய்துகொண்டிருப்பேன்.

அம்மாது:— உங்கள் ஜாதிக்குத் தாழ்ந்தவளாய், அம்மாதிருந்தாலோ?

ஸ்ரீலோலன்:— அம்மாது, குடும்பத்தி லுதித்தவளாயும், கீழ் ஜாதியில் பிறந்தவளாயு மிருந்தால், முதலில் என் மனதைச் சமாதானபடுத்தப் பார்ப்பேன். முடியாவிடில், அக் குடும்பத்தார் இஷ்டப்பட்டால், கலியாணம் செய்துகொள்ள, என் நிலைமையை நோக்கிக் கட்டாயம் சம்மதப்படுவேன். வேறு வகையில்லை யாகையால், கலியாணத்திற்குச் சம்மதிக்க வேண்டியது தானே?

அம்மாது:— மேற்கூறிய அம்சங்க ளெல்லாம் என்பாலிருந்தாலும், நான், தாசி வகுப்பைச் சேர்ந்தவள். நான் தாழ்ந்த குலத்திலுதித்தாலும்,

அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண் டொழுகலான்.

என்பதற்கிணங்க ஒழுகி,

ஒழுக்கம் விழுப்பந் தரலான்
ஒழுக்க முயிரினு மோம்பப்படும்.

என்றபடி ஒழுக்கந் தவராது, புலாலுண்ணுதல் முதலிய, இழி செய்கைகளை விலக்கியிருக்கிறேன். ஆகையால், நானிஷ்டப்படின், என்னை விவாகம் செய்துகொள்ளத் தங்களுக் கேதும் தடையிராதே?

ஸ்ரீலோலன்:— கண்மணி! அப்படியல்ல. ஜாதியை கவனிக்க வேண்டுமல்லவா? நானோ பிராமணன்; நீயோ என்னிலும் தாழ்ந்த குலம்; முதலில் நான் சம்மதித்தாலும், உலகம் ஒவ்வாது. ஆகையால், அதைவிட்டு வேறேதேனும் பேசி, எனக் கின்பத்தை யுண்டாக்கக் கூடாதா?

அம்மாது:— தங்களுக்குமா ஜாதித் துவேஷம் இருக்கிறது? என்ன இருந்தாலும், தாங்களும் ஒரு பிராமணர்தானே! சுயகாரியப்

புலிகளான பிராமணுள் உண்டாக்கிய, இந்த ஜாதித் துவேஷம் நமது இந்திய நாட்டிலல்லாது, வேறெந்த நாட்டி லுமில்லை யென்பது,

ஒட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களர்
இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர்
பற்பலர் நாட்டிலும் பார்ப்பா ரிலையால்
முற்படைப் பதனில் வேறு முறையால்
நால்வகைச் சாதியிந் நாட்டினில் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்.

என்றதனுல், நன்கு விளங்குகிற தல்லவா?

ஸ்ரீலோலன்:— கண்மணி! நீ சொல்வது சரியாயினும், நம் நாட்டு வழக்கத்தைப் பின்பற்றி நடக்க வேண்டாமா? "ஊருடன் பகைக்கின் வேருடன் அறும்; ஊருட னொத்து வாழ்." என்பது உனக்குத் தெரியாதா?

அம்மாது:— **Custom doth ofton reason over-rule*
*And only serves for reason to the fool.*

என்று, (Rochestor) ரவ்செஸ்டர் என்னும் ஆங்கிலேயர் மொழிந் ததை, கவனிக்கக் கோருகிறேன். தாங்கள் கூறிய இரண்டு வாக் கியங்களே, நானும் ஆமோதிக்கிறேன். நாம் ஒருவரை யொருவர் கலியாணம் செய்துகொண்டால், அதனுல் ஊர் பகைக்குமா? ஊரு டன் பகைப்பதென்ப தென்ன? ஊராருடைய நடவடிக்கைகளே நாம் பின்பற்ற வேண்டுமென்பதல்ல. அவர்களுடைய மனப்போக் குக்கு இடையில் தடுக்கப்படாதென்பதாம்.

ஸ்ரீலோலன்:— உலகில், ஜாதிபேதம் இல்லவே யில்லை யென் கிருயோ?

அம்மாது:— ஜாதிபேதம், சுயநலம் கருதி, ஊரைக் கெடுக் கும் உத்தமர்களா லேற்பட்டதேயன்றி, கடவுளாலேற்பட்டதன்று. முதலில், நமது இந்தியாவுக்கு வந்த ஆரியர், இந்தியாவை யடைந்த பின், நான்கு வருணத்தை பிரித்ததாகச் சரித்திரம் சொல்லுகிறது. அன்றியும், "கள்ளன், மறவன், கனத்ததோர் அகம்படியன்,

---

* முழு மூடர்களுக்கே பழக்கமென்னும் பேய் காரணமாக அடிக்கடி உதவும்.

மெள்ள, மெள்ள வந்து வெள்ளாளனானன்." என்றும், "நாலாந் தலைமுறையைப் பார்த்தால், நாவிதனும் பாட்டனாவான்." என்றும், சொல்லி யிருப்பதைக் கவனியுங்கள். மேலும் "பிரம்மக்கியானத்தை யுடையவனே பிராம்மணன்." "சிறப்பும் சீலமுமின்றிப் பிறப்பு நலம் தருமோ பேதையீரே." என்பதை யெல்லாம் நோக்க, ஞானமும், அறிவும் ஒழுக்கமும், சீலமுமுடையவனே பிராம்மணனாவான்.

நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.

ஆகையால், ஜாதி யென்ப தெல்லாம் செயற்கையே யன்றி, இயற்கை யல்ல. அப்படி யிருப்பதாகவே வைத்துக்கொண்டால்,

சேற்றிற் பிறந்த செங்கழு நீர்ப்போல
பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்
வசிட்டற்கு சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்
சத்தியற்கு புலைச்சி தோள் சேர்ந்து பிறந்த பாரசரும்
பாராசருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்
("ஆகிய இந்நால்வரும்")
வேதங்க ளோதி மேன்மைப் பட்டு
மாதவராகி வயங்கின ரன்றே?

ஆகையால், ஜாதி யொன்றில்லை யென்றும், ஒழுக்க முடையோர் உயர் குலத்தோர் என்றும் தெரிகிறதல்லவா? மேலும் நல்வழியில்,

ஜாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா னெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி.

ஆகவே, ஜாதி யென்பது, இட்டார், இடாதார் என இருவகைப் பட்டதே யொழிய, தற்போது, நீங்கள் சொல்லும் ஜாதியை குறிப் பிடவில்லை.

ஜாதிபேதம், நாமம், ரூபம், தேகம் முதலியவைகளால் காண முடியாதது. தற்காலம், அவரவர்கள் வேடத்தை நோக்கியே, ஜாதி யைக் கண்டுபிடிக்கிறோம். தற்காலத்து குலமாதர்களும், வேசையர் களைப்போலவே மெட்டிட்டு, பொட்டிட்டு, மேனி மினுக்கி, சடை பின்னி, ஜவ்வா தணிந்துகொண்டு வருகிறார்க ளாகையால், நாம்

இப்போது வேடத்தைக் கொண்டும், ஜாதியைக் கண்டுபிடிக்க இயலாமல் போகிறது. பிராம்மணர்களிலும், சிலர் முன் குடுமியும், சிகரெட், ஜுப்பா (Shirt) வோடும், தோன்றுவதால், பிராம்மணன் என்று கண்டுபிடிக்க, இயலுவதில்லை.

சத்தியமின்றி தனிஞானம் தானின்றி
ஒத்தவிடயம் விட்டோரும் உணர்வின்றி
பத்தியுமின்றிப் பானுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராம்மணர் தாமன்றே.

ஆகவே, பிராம்மணன், இழிகுலத்தோன் என்ற வேறுபாடில்லை. எல்லா மனிதர்களும் ஒரே விதமான தேகக் கூறுடையவர்கள். எல்லோரும் ஒரே விதமான நடையுடை பாவனை யுடையவர்கள். மேலும்,

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மானிலம் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ.

ஆகையால் இவைகளெல்லாம், மனித சமூகத்திற்கு கடவுளால், பொதுவிலமைக்கப்பட்டது.

வாழ்நான்கு ஜாதிக்குணவு நாட்டிலும்,
கீழ்நான்கு ஜாதிக்குணவு காட்டிலுமோ;
திருவும் வறுமையும், செய்தவப்பேறும்,
சாவதும் வேறிலைத் தாரணியோர்க்கே.

மேற்சொன்ன காற்று, மழை, வெய்யில், பிறப்பு, இறப்பு முதலிய இயற்கை வஸ்துக்கள், ஜாதிபேதம் பாராட்டாமலிருக்கும் போது, சுயநலம் கருதி ஜாதிபேதம் பாராட்டுவது எவ்வளவு பரிதாபகரமான விஷயம்.

ஆகையால் அன்பரே! கடைசியாக ஒருவார்த்தை சொல்கிறேன் கேளுங்கள். வடலூர் இராமலிங்க சுவாமிகள்,

"சாதியிலே, மதங்களிலே, சாத்திரச்
சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே,
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்,
அலைந்தலைந்து வீணே நீரழிதலழகாமோ"

என்று கூறியிருக்கிறார். என் அன்பார்ந்த காதலரே! அடியாள் உரைத்தவைகளை, அதனைப்பிரசங்கித் தனத்தாலுரைத்ததாகக் கருதாது ஏற்று, அடியாளை ஆட்கொள்ளக் கோருகிறேன்'' என்று வணக்கமாயுரைத்தாள்.

அவளது நீண்ட பிரசங்கத்தால் ஸ்ரீலோலனது மனம் உண்மையிலேயே ஜாதி பேதத்தை விலக்கிவிட்டது. உடனே, "பலே! பேஷ்! இவ்வளவு வாக்கு வன்மையுடன் தைரியமாக நீ வேதாந்தங்கள் பேசியதொன்றுக்கே உன்னை கலியாணம் செய்துகொள்ள இசைகிறேன்.''

அம்மாது:— நாதரே! அப்படியானால் சத்தியம் செய்தால் நம்புவேன். ஏனெனில் பெண்களிடம் தற்காலத்து மனிதர்கள் உண்மை பேசுவதில்லை.

ஸ்ரீலோலன்:— அப்படியே செய்கிறேன். அருகினில் வா? என்றதும் நமது மடவன்னம், அன்னமடிவைப்பதைப்போல் மெல்ல நடந்து, ஸ்ரீலோலன் அருகில் வந்து, தனது வலது கையை நீட்டினாள்.

உடனே ஸ்ரீலோலன், அவளையன்றி இனி யாரையும் விவாகம் செய்துகொள்வதில்லை யென்று கையடித்து சத்தியம் செய்தான். உடனே இருவரும் ஒருவரையொருவர் பேராவலுடன் ஆலிங்கனம் செய்துகொண்டனர். ஸ்ரீலோலன் அம்மாதை அப்படியே ஆசையுடன் தூக்கி யெடுத்து பஞ்சணையில் தன் பக்கத்திருத்தினான்.

அந்தோ! பாவம்!! உண்மையானகாதலர்கள் இன்பமனுபவிக்குங் காலம் தடையேற்படுகிறது. உண்மை அன்பிற்கு இடர் அநந்தம் விளைவது உலக சகஜமாயிருப்பது பற்றி நாமதிகமாய் வருந்தாது கதையைத் தொடர்வோம்.

அப்போது திடீரென கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. உடனே நமது கதாநாயகன் தன் கையிலிருந்த கடியாரத்தைப் பார்த்தான். அதில் சரியாக பதினொன்றடித்து பத்து நிமிஷமாயிருந்தது. உடனே அம்மங்கையிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே போவதற்காக கதவைத் திறந்து வெளியே தலையை நீட்டினான். மறுநிமிஷம் அவன் தோளின்மேல் "படேர்'' என்று ஒரு

தடியடி வீழ்ந்தது. ஸ்ரீலோலன் அப்படியே ஸ்மரணை தப்பி கீழே விழுந்தான். சாவித்திரிதேவி "ஐயோ நாதா!" என்று கூக்குரல் செய்தவளாய், ஸ்ரீலோலன்மீது புரண்டழ ஆரம்பித்தாள். அங்கு கதவின் மறைவிலிருந்து ஸ்ரீலோலன் தோளின்மேல் தடியாலடித்த வன்,மறுபடியும் அடிக்க கையைஉயர்த்தினன். உயர்த்திய கை அப்ப டியே நின்றுவிட்டது. உடனே அம்மனிதனை ஒருவர் பின்னுலிருந்து காலினுலெட்டி யுதைத்தார். அம்மனிதன் குப்புற தரையில் தடா லென வீழ்ந்தான். வீழ்ந்தவன் எழுந்து தன்னை யடித்தது யாரென நோக்குமுன், ஒரு சாமியார், அவன் முன்னே ஒரு கைத்துப்பாக்கி யுடன் "அடே! கையை மேலே தூக்கு. இப்படி யப்படி அசைவா யானல் தாட்சண்யமின்றிச் சுட்டுத் தள்ளுவேன்" என்ருர்.

மேற்கூறிய சம்பவங்களை எழுத இவ்வளவு நேரமாயிற்றே யொழிய, எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக ஒரு விநாடியில் நடந்து விட்டது. உடனே அந்தச்சாமியார், தனது இடது கையில் துப் பாக்கியைப் பிடித்துக்கொண்டு, வலது கையில், தனது அங்கியிற் குள்ளிருந்த விலங்கை யெடுத்து,

"அடே, பேசாமல் கையை நீட்டு" என்ருர். மிகுந்த தைரிய வானன அவன், ஒரு நிமிஷத்தில் மனதை தேற்றிக்கொண்டு "ஆரையா! நீ, உமக்கென்ன அதிகாரமிருக்கிறது எனக்கு விலங்கு போட? அப்படி அதிகாரமிருந்தாலும், என்னை விலங்கிட அரஸ்ட் ஆர்டர் உம்மிடமிருக்கிறதா?" என்ருன்.

சாமியார்:— அடே பஞ்சைப்பயலே! உன்னை அரஸ்ட் பண்ண ஆயிரம் ஆர்டர்கள் ஊரெல்லாமிருக்கிறது. நீ யாரென்று எனக்குத் தெரியும். நீ குமாரசாமி நாடானல்லவா. மிகுந்த தைர்யமாய்த் தான் பேசுவாய்" என்ருர். இதற்குள் ஸ்ரீலோலன், சாவித்திரி தேவி செய்த சிகிச்சையால் மூர்ச்சை தெளிந்து ஒரு கையால் தோளைப்பிடித்தவண்ணம் எழுந்து, அங்கு நடக்கும் காட்சியைக் கண்டதும் திடுக்கிட்டவனுய் "சுவாமிகளே இதெல்லாம் என்ன?" என்ருன்.

சாமியார்:— "எல்லாம் வீட்டிற்குப் போனதும் சொல்கி றேன். இதோ, இந்த விலங்கை வாங்கி, இம்மனிதன் கையில்

பூட்டிவிட்டு, நேரே கொஞ்ச தூரத்திலுள்ள, போலீஸ்டேஷனுக்குப் போய், ஞானானந்த சுவாமிகள் இங்கிருப்பதாகவும், நான்கு கான்ஸ்டேபிள்கள் வேண்டுமென்றும் சொல்லி, அழைத்துக்கொண்டுவா? அதுவரை நான், இவனை காவல் காக்கிறேன்." என்றார்.

சாமியார் சொற்படியே ஸ்ரீலோலன், அம்மனிதனுக்கு விலங்கிட்டுவிட்டுப் போய், நான்கு கான்ஸ்டேபிள்களை அழைத்துவந்தான். அவர்களிடம் அம்மனிதனை ஒப்பித்து, ஜெயிலில் அடைக்கும்படிக்கும், மறுநாள் மாஜிஸ்ட்ரேட் கச்சேரிக்கு கொண்டுவரும்படிக்கும் சொல்லிவிட்டு, அங்கு சாவித்திரியோடு பேசிக்கொண்டிருந்த ஸ்ரீலோலனைக் கூப்பிடப் போனவர், அம்மாதைக் கண்டதும், திடுக்கிட்டுவிட்டார். அதை அவர், வெளிக்குக் காட்டாது அடக்கிக்கொண்டு, மறுபடியும் ஒரு கான்ஸ்டேபிளை தனியா யழைத்து, ஏதோ இரகசியமாய் சொல்லியபின், ஸ்ரீலோலனை அழைத்துக்கொண்டு, மோட்டார் சைகிளில் வீட்டை நோக்கிப் போயினர். சிறிது நேரத்தில் நுங்கம்பாக்கம் போய்ச் சேர்ந்தனர். அங்கு கோபாலகிருஷ்ணய்யர் பங்களாவில், ஜனங்கள் கூட்டங்கூடியிருப்பதையும், ஒருவர்க்கொருவர் இரகசியமாய் பேசிக்கொள்வதையும், கண்டவுடன், இருவரும் வியப்பெய்தியவர்களாய், என்ன சமாச்சாரமென்று ஒருவனைக் கேட்டனர். அம்மனிதன், ஸ்ரீலோலனை தெரிந்துகொண்டான். ஆகையால், "கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டார்" என்று, ஒரே வார்த்தையில் பதில் சொன்னான். அதைக் கேட்ட ஸ்ரீலோலன், அசைவற்று, அச்சமுற்று நின்றுவிட்டான். சாமியார், "எங்கே?" என்று கேட்டார். "மேன்மாடியில்" என்று பதில் வந்ததும், அப்பங்களாவின் மேன் மாடியை நோக்கி, தலைதெறிக்க ஓடினர்.

# ஐந்தாம் அத்தியாயம்.

## ஐந்துகோடி ரூபாயும் அரிய பொருளும்.

1. பாடுபட்டுப் பணத்தைத் தேடிப் புதைத்து வைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்.
2. தின்னுமலுண்ணுமல் தேடிமிகச் சேர்த்துப்
புண்ணியமும் செய்யாமல் புதைத்துவைத்துப் போவாரே.
3. உலகத்தாருண்டென்ப தில்லென்பான், வையத்
தலகையா வைக்கப்படும்.
4. வித்தின்றி யாதும் விளைவ துண்டோ?

சுவாமியார், மேன்மாடிக்குப் போகும் படியை விரைவில் அடைந்து, மேலே யேற முயன்ருர். அப்போது அங்கு காவல் காத்திருந்த சேவகன், அவரை உள்ளே விடாது தடுத்தான். உடனே சாமியார், தனது மார்பங்கியை விலக்கி, ஒரு பதக்கத்தைக் காட்டினர். அடுத்த நிமிஷம் அவன் அவருக்கு மரியாதையாக வழிவிட்டு விலகி நின்ருன். நேரே வெகு விரைவாக மேன்மாடிக்குச் சென்று, கோபால கிருஷ்ணய்யர் கொல்லப்பட்டிருக்கும் அரையினுள் நுழைந்தார். அங்கு நுங்கம்பாக்கம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு ஆயத்தமாக இருந்தார். இன்னும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும், பல சேவகர்களும் அங்கிருந்தனர். எல்லோரும் அப்போதே தங்கள் சோதனையை முடித்துக் கொண்டிருந்தனர். இதற்குள் சாமியார் உள்ளே நுழையவே, அதைக்கண்ட இன்ஸ்பெக்டர், ஸ்ரீராமுலு நாயுடு கையெடுத்து கும்பிட்டவண்ணம், "வரவேண்டும்; வரவேண்டும். சாட்சாத் கடவுள் எங்கும் நிறைந்திருப்பதைப்போல், தாங்கள், எவ்வளவு தூரத்தில் எவ்விதமான கேஸ் நடந்தாலும், அங்கு பிராப்தமாகிவிடுகிறீர்கள்" என்று சிரித்துக்கொண்டே சொன்னர். நாம் மேலும் கதை

யைத் தொடருமுன் அவ்வரையின் அமைப்பையும், அதிலுள்ள பொருள்களைப்பற்றியும் விவரிப்போம். அவ்வறை முழுதும் இடைவெளி சிறிதுமின்றி தரையை முழுதும் மறைக்கும்பொருட்டு, உயர்ந்த இரத்தினக்கம்பளத்தால் போர்த்தப்பட்டிருந்தது. அரையின் நடுவில் ஒரு சலவைக்கல் மேஜையும் அதற்கருகில் ஒரே ஒரு நாற்காலியும் போடப்பட்டிருந்தது. அறையைச் சுற்றிலுமுள்ள சுவரை யெல்லாம், சிறிதும் தெரியாவண்ணம் பெரிய பெரிய பீரோக்களை வைத்து மறைத்திருந்தது. அப்பீரோக்கள் நிறைய பலவித புஸ்தகங்களும் இன்னும் உடை முதலியவைகளும் வைக்கப்பட்டிருந்தது. அவைகளில் சில கண்ணாடி பீரோக்கள். மற்றவை சாதாரணமானது. அரை மிகுந்த அகல நிகளமுடையதாயும் ஒரே ஒரு வாசலை யுடையதாயும் இருந்தது. அவ்வரைக்கு எவ்வித பலகணியுமில்லை. உள்ளே போகவேண்டுமானல், அவ்வொரே வாயிற்படி வழியாகத்தான் போகவேண்டும். இதைத் தவிர, வேறு எவ்வித வழியும் காணப்படவில்லை. அந்த அரையில் கோபாலகிருஷ்ணய்யருடைய பிணம், தாறுமாருகக் கிடந்தது. அவரது வலது கையில் ஒரு கைத்துப்பாக்கி இருந்தது. சாவதற்கு முன், அவர் அதை வலிவாகப் பிடித்திருந்தாரென அப்போதும் அது, அவர் கையிலேயே இருந்ததிலிருந்து தெரிகிறது.

நமது இராமசுப்பன் கதவிற்கருகில் ஒரு பீரோவினடியில் மல்லார்ந்தபடி வீழ்ந்து கிடந்தான். அவனது வலது புஜத்திலிருந்து அப்போதும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவன் மூர்ச்சை யற்று இருந்தாலுகையால், அசைவற்று தரையில் கிடந்தான். மேஜைமேல், எழுது கருவிகளும் சில காகிதங்களும் காணப்பட்டது. அன்றியும் கச்சேரிப் பத்திரங்கள் சிலவும் அங்கு சிதறிக் கிடந்தது.

இவைகளை யெல்லாம், ஒரே நோக்கில் பார்த்துக்கொண்ட சாமியார், ஸ்ரீராமுலு நாயுடுவை நோக்கி, "நாயுடுகாரு! இங்கு நடந்திருக்கும் விஷயங்களிலிருந்து என்னென்ன கண்டு பிடித்தீர்கள்." என்ருர்.

நாயுடு:— என்ன கண்டு பிடித்தோம். நீங்கள் பார்க்கிறதைத் தான் நாங்களும் பார்க்கிறோம். ஆனல் நான் வந்தவுடனேயே

சர்ஜன் குணக்குட்டிக்கு ஆளனுப்பினேன். நாழிகை அதிகமாகி யும் இன்னும் அவரைக் காணோம். அதைப் பற்றித்தான் யோசிக் கிறேன்.

சாமியார்:— அதிருக்கட்டும். இவர் எதனால் கொல்லப்பட் டாரென்றாவது அல்லது எவர் கொன்றார்களென்றாவது தங்கள் மனதிற்கு தோன்றிற்றா?

நாயுடு:— அதெல்லாம் நான் உடனே சொல்லிவிட முடியாது. டாக்டர் வந்து பரீட்சித்துப் பார்த்து என்ன அபிப்பிராயம் கொடுக் கிறாரோ அதைத் தெரிந்துகொண்டுதான் என் முடிவான அபிப்பிரா யத்தை தெரிவிக்க முடியும்.

இதற்குள் டாக்டரும் வந்து சேர்ந்தார். அவர், முன்பு இராம சுப்பனை பரிசோதித்து அவனது காயத்துக்குக் கட்டு கட்டி, அவன் மூர்ச்சை தெளிய வேண்டியதற்கெல்லாம் ஏற்பாடு செய்தபின், சவத்தை பரிசோதித்துத் தனதபிப்பிராயத்தைக் கொடுக்கத் தயாரா னார்.

இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு:— டாக்டர் அவர்களே! தங்களுடைய அபிப்பிராய மென்ன வென்று அறிய விரும்புகிறேன்; தயவுசெய்து தெரியுங்கள்.

டாக்டர் குணக்குட்டி:— காயம் பட்டிருக்கும் மனிதனைப் பற்றி கேட்கிறீர்களா? கொலையுண்டவரைப்பற்றி கேட்கிறீர்களா?

நாயுடு:— இருவரைப்பற்றியும் தான் கேட்கிறேன்.

டாக்டர்:— காயமடைந்திருக்கும் மனிதன், காயமடைந்து சுமார், ஒருமணி நேரமாகியிருக்க வேண்டும். அதாவது பத்தரை மணிக்கு உண்டாயிருக்க வேண்டும். அக்காயம் துப்பாக்கி சுட்ட தனு லுண்டாயிற்று.

நாயுடு:— தாங்கள் எப்படி அவ்வளவு திட்டமாகச் சொல்ல முடிந்தது?

டாக்டர்:— குண்டு நுழைந்து, மறுபுறம் சென்றிருக்கிறதனு லுண்டாகிய துவாரமிருக்கிறதினுல், நான் திட்டமாய் சொல்ல முடிந் தது. ஏனெனில், மற்றெவ்விதமான ஆயுதம் உபயோகிக்கப்பட்டிருந் தாலும் இதைப்போன்ற துவாரம் உண்டாக ஏதுவில்லை.

நாயுடு:— சரி! இனி சவத்தைப்பற்றிச் சொல்லுங்கள்.

டாக்டர்:— கொலையுண்டவர் இறந்து, இப்போதைக்கு ஒன்றே கால்மணி நேரமாயிருக்க வேண்டும். அதாவது, பத்தடித்து பத்து நிமிஷத்திற்கெல்லாம் கொல்லப்பட்டார் என்றே நம்புகிறேன். இவருடைய குறள்வளையை ஒருவர் பின்னுவிருந்து வெகு பலமாக இரண்டு கைகளாலும் நசுக்கிக் கொன்றிருக்க வேண்டும். அதனுலுண்டாகக் கூடிய குறிகளெல்லாம் கொலையுண்டவர் கழுத்தில் காணப்படுகிறது. மேலும், சாவதற்கு முன்பே, இரண்டு மாதகாலமாய் க்ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்டு, மிகுந்த துர்ப்பலமான நிலைமையிலிருந்ததால், வெகு சீக்கிரத்தில் இவருடைய உயிர் பிரிந்திருக்க வேண்டும்.

நாயுடு:— நான் கேட்கும் சில கேள்விகளுக்கு மாத்திரம் கோபப்படாமல் பதிலளிக்கக் கோருகிறேன். காயம்பட்டிருக்கும் மனிதனுக்கு காயமுண்டானது, சரியாக பத்தரை மணியாயிருக்குமா? அல்லது பத்து நிமிஷம் ஏறத்தாழ யிருக்குமா?

டாக்டர்:— சற்றேறக்குறையத்தானிருக்கும். அவ்வளவு சரியாகச் சொல்ல முடியாது.

நாயுடு:— கொலையுண்டவரும் பத்தடித்து, பத்து நிமிஷத்திற்கே இறந்திருப்பாரா? அதுவும் சற்றேறக்குறையத்தா னிருக்குமோ?

டாக்டர்:— சற்றேறக் குறையத்தா னிருக்கும்.

நாயுடு:— அதோ, சவத்தின் கையில் கைத்துப்பாக்கி யிருக்கிறதே. அது இறந்தவரோ, தமது கையால் இறக்குமுன் எடுத்துக் கொண்டதா யிருக்குமா? இறந்தபின், அவர் கையில் வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்குமா?

டாக்டர்:— கொலையுண்டவர், இறப்பதற்கு முன், தானேயெடுத்துக்கொண்டதாய்த் தானிருக்க வேண்டும். அப்படியன்றி, இறந்தபின்பு, கொடுக்கப்பட்டதா யிருந்தால், நாம் சுலபமாய், சவத்தின் கையிலிருந்து எடுத்து விடலாம். ஆனால் இப்போது, அப்படி எடுக்க முடியவில்லை யாகையால், நான் முற்கூறியதே சரியென்று நம்புகிறேன்.

நாயுடு:— இன்னும் ஒரே ஒரு கேள்வி. கொலையுண்டவர், தனக் கேதேனும் அபாயமுண்டாகலாமென, எதிர்ப்பார்த்திருந் தாரா? அல்லது எதிர்ப்பாரா விதமாய்க் கொல்லப்பட்டாரா?

டாக்டர்:— அவருடைய பலஹீனமான ஹிருதயத்தைப் பரி சோதித்ததில், அவர் தனக்கேதேனும் அபாயமுண்டாகலாமென எதிர்ப்பார்த்ததாகவே தெரிகிறது.

நாயுடு:— "தாங்கள் இனி போகலாம்" என்றதும் டாக்டர் போய்விட்டார்.

உடனே ஸ்ரீராமுலு நாயுடு, சவத்தை, தனதாட்களைக்கொண்டு பரிசோதித்ததில், ஒன்றும் பிரயோஜனப்படாமற் போகவே, மேஜை யிலிருந்த கடிதங்களை பரிசோதித்தார். அவைகளெல்லாம், கும்ப கோணம், மதங்கீஸ்வரர் மடாலயத்தைப் பற்றியதாயிருந்தது. ஆனால் அதில் ஒன்றுமட்டும் கோபாலகிருஷ்ணய்யர் கைப்பட எழுதி வைத் திருந்த, உயில் சாசனமாயிருந்ததைக் கண்டு, அதை இன்ஸ்பெக்டர், தன் வசப்படுத்திக்கொண்டார். சவத்தின் கையிலிருந்த கைத்துப் பாக்கியையும், எடுத்துக்கொண்டார். ஏதேனும், களவு போயிற்றோ என்பதை அறியும்பொருட்டு, கோபாலகிருஷ்ணய்யருடைய காரியஸ் தரை வரவழைத்து விசாரித்ததில், சுமார் ஐந்துகோடி ரூபாய்வரை, கொலையுண்ட அறையிலுள்ள இரும்புப் பெட்டியிலிருந்த தென்றும், அவையெல்லாம், அன்றுதான் மடத்துக்காக, இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், பெரிய பெரிய கனவான்களால், அனுப்பப்பட்ட தென்றும், மறுநாள் அதை கோபாலகிருஷ்ணய்யர், பாங்கியில் வைக்கப்போவதாக, தன்னிடம் சொன்னாரென்றும் சொன்னான். உடனே, இன்ஸ்பெக்டர் இரும்புப் பெட்டியைத் திறந்துப் பார்த்த தில், அவ்வைந்துகோடி ரூபாயும் காணப்படவில்லை. மறுபடியும் இன்ஸ்பெக்டர், காரியஸ்தனை நோக்கி, அவைகளெல்லாம் எம்மாதிரி நோட்டுகளென்று வினவ, அவைகளெல்லாம், ஆயிரம் ரூபாய் நோட்டுகளென்று சொன்னான். இன்னும் காவல்காரர்கள் முதலிய வர்களை விசாரித்ததில், கோபாலகிருஷ்ணய்யர், இப்போது காய மடைந்தவனை எதிர்ப்பார்த்து, வெகுநேரம் காத்திருந்தாரென்றும், காயம்பட்டவன், சுமார் பத்தரை மணிக்கு வந்தானென்றும், அவன் மேலே போனவுடன், இரண்டு வேடி சப்தங்கள் கேட்டதென்றும்

சொன்னார்கள். இதற்குள், இராமசுப்பனுக்கு முற்றிலும் மூர்ச்சை தெளிந்துவிட்டதாகையால், இன்ஸ்பெக்டர், கீழ்வருமாறு கேள்விகளைக் கேட்கலானார்.

நாயுடு:— நீர் இருப்பது எந்த ஊர்?

இராமசுப்பன்:— எனது ஊர் காஞ்சீபுரத்திற்கடுத்த, வனத்தூர் என்பது.

நாயுடு:— உமது உறவினர்கள் எங்கிருக்கிறார்கள்? நீர், அங்கு என்ன தொழில் செய்துகொண்டிருந்தீர்? இன்னும் இவைபோன்ற விவரங்களைத் தெளிவாய்ச் சொல்லும்.

இராமசுப்பன்:— எனக்கு, எனது தாயையும், மனைவியையும் தவிர, வேறு உறவினர்களில்லை. நான், கோவாபரேடிவ் பாங்கியில் ஒரு கிளார்க்காக யிருந்துவருகிறேன்.

நாயுடு:— எத்தனை வருஷமாய் கிளார்க்கு உத்தியோகத்திலிருக்கிறீர்?

இராமசுப்பன்:— ஒரு வருஷ காலமாயிருக்கிறேன்.

நாயுடு:— அதற்குமுன், என்ன செய்துகொண்டிருந்தீர்?

இராமசுப்பன்:— சும்மா, வேலையில்லாம லிருந்தேன்.

நாயுடு:— சும்மாயிருந்தே னென்கிறீரே, ஜீவனம் எப்படி உமக்கு நடந்தது?

இராமசுப்பன்:— எனது பிதிரார்ஜ்ஜித சொத்துகளைக்கொண்டு ஜீவனம் செய்து வந்தேன்.

நாயுடு:— ஆயின், எவ்வளவு சொத்துண்டு?

இராமசுப்பன்:— இரண்டு லக்ஷம் வரை, ஐவேஜி யிருந்தது.

நாயுடு:— இருந்ததென்றால், இப்போதில்லையோ?

இராமசுப்பன்:— இல்லை.

நாயுடு:— ஆனல், அவ்வளவு சொத்தும் எப்படி செலவழிந்து போயிற்று?

இராமசுப்பன்:— பலவிதமாக செலவழிந்து போயிற்று.

நாயுடு:— பலவிதமா யென்று பொதுப்படையாகச் சொல்லாமல், சற்று விவரமாகச் சொல்லக் கோருகிறேன்.

இராமசுப்பன்:— காஞ்சீபுரத்தில், மோகனு என்ஞெரு தாசி யிருக்கிறுள். அவளுக்கும், இன்னும் இவைபோன்றவைகளிலும் செலவழித்துவிட்டேன்.

நாயுடு:— என்? கூத்திக்கும், குடிக்குமாக அழித்துவிட்டீர் போலும். அதிருக்கட்டும்; உமக்கு கடன் ஏதேனும் உண்டோ?

இராமசுப்பன்:— உண்டு.

நாயுடு:— எவ்வளவு?

இராமசுப்பன்:— நாற்பதினுயிரம்.

நாயுடு:— என்ன! நாற்பதினுயிரமா? சரியிருக்கட்டும்; அவை மொத்தமும், ஒரே மனிதரிடம் வாங்கினவையா? பலபேரிடம் வாங்கினவையா?

இராமசுப்பன்:— ஒரே மனிதரிடம் தான் வாங்கினது.

நாயுடு:— அவருடைய விலாசத்தைச் சொல்லும்.

இராமசுப்பன்:— க. அ. து, ரங்கைய செட்டி, ரொக்க வியாபாரம், காஞ்சீபுரம். என்பதே, அவருடைய விலாசம்.

நாயுடு:— கடன் வாங்கி, எவ்வளவு காலமாகிறது?

இராமசுப்பன்:— இரண்டு வருடங்களாகிறது.

நாயுடு:— இதுகாறும் அவர், கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டதில்லையா?

இராமசுப்பன்:— பலதடவை கேட்டார். நான், சாக்குப் போக்குச் சொல்லிவந்தேன். கடைசியாக, கோர்ட்டில் தாவா செய்து, நேற்றைக்கு முந்தியநாள், வாரன்ட் பிறப்பித்து விட்டார். இன்றைக்கது வாய்தா. கோர்ட்டில் நான், இரண்டுமாத காலத்தில் பணம் செலுத்திவிடுவதாக, வாய்தா வாங்கிக்கொண்டு, இங்கு வந்தேன்.

நாயுடு:— அதிருக்கட்டும்; உமக்கு கோபாலகிருஷ்ணய்யரை எப்படித் தெரியும்?

இராமசுப்பன்:— இதுவரை, இவரை எனக்குத் தெரியாது.

நாயுடு:— இப்போது, என்ன காரியமாக இவரிடம் வந்தீர்?

இராமசுப்பன்:— இவர், எனது மனைவிக்கும், என் மனைவியின் தம்பிக்கும் கார்டியன். இவர் எனது மனைவிக்கு, என்னை அனுப்பும்படிக் கடிதம் எழுதியிருந்தார். ஆகையால்தான், இங்கு வந்தேன்.

நாயுடு:— நீர் வருவதை இவருக்கு அறிவித்தீரா?

இராமசுப்பன்:— இன்றிரவு எட்டு மணிக்கு வருவதாகத் தந்தி கொடுத்திருந்தேன்.

நாயுடு:— ஆனால், இங்கு எத்தனை மணிக்கு வந்தீர்?

இராமசுப்பன்:— சரியாக பத்தரை மணிக்கு வந்தேன்.

நாயுடு:— ஏன் தந்தி கொடுத்தபடி வரவில்லை?

இராமசுப்பன்:— நான், ஏழரை மணிக்கெல்லாம் எழும்பூரை யடைந்துவிட்டேன். ஆனால் வழியில்......(பிறகு 42, 43-ம் பக்கங்களில் குறிக்கப்பட்டிருக்கும் விஷயத்தை யெல்லாம் விவரிக்கிறான்.)

நாயுடு:— அக் கனவானின் விலாசம் தெரியுமா?

இராமசுப்பன்:— தெரியாது. நாளை என்னை வந்து பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால், நாளை அவரைக் கேட்டால் உண்மை விளங்கும்.

இத்துடன் நாயுடுகாரு, தனது கேள்விகளை நிறுத்திக்கொண்டு, இராமசுப்பனை உடனே சோதித்து, வைரமோதிரம், புகைப்படம், அவன் மனைவி கொடுத்த கடிதம் மூன்றையும் கண்டுபிடித்தார். இதுகாறும் எல்லா விஷயங்களையும், வெகு கவனமாய் கவனித்து வந்த சாமியார், நாயுடு, அவ்வஸ்துகளைப் பார்வையிட்டபின், தானும், வாங்கிப் பார்த்துவிட்டுக் கொடுத்தார். இராமசுப்பன், ஸ்ரீலோலனது மைத்துனர் என்று கேள்விப்பட்டவுடன் சாமியார், ஸ்ரீலோலனை அழைத்து, ஏதோ இரண்டொரு விஷயம் சொல்லிய பின், சாமியார், இராமசுப்பனை அழைத்து, தான், துப்பறிபவனென்றும், உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க முயல்வதாகவும் தேறுதல் சொன்னார். இதைக் கேட்ட ஸ்ரீராமுலு நாயுடு, "என்ன? சுவாமிகளே! இவ்வளவு தூரம், எல்லா விஷயங்களையும்

கவனித்திருந்த பின், உண்மைக் குற்றவாளியை கண்டுபிடிக்க முயலுவதாகச் சொல்கிறீர்களே!

சாமியார்:— ஆனல், இந்த இராமசுப்பன்தான், கொலை செய்ததாகச் சொல்கிறீர்களோ? எதைக்கொண்டு, தாங்களவ்வித தீர்மானத்துக்கு வந்துவிட்டீர்கள்?

நாயுடு:— இதோ, ஒரு நிமிஷத்தில் மகஜர் தயாரித்து, தங்களிடம் வாசித்துக் காண்பிக்கிறேன். சற்றுப் பொறுங்கள். (என்றதும், சிறிது நேரத்தில் எழுதிமுடித்து, வாசித்துக் காண்பித்தார்.)

## மகஜர்.

இரவு சரியாக பத்தேமுக்கால் மணிக்கு, கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டார் என்ற செய்தி, கிடைத்தது. உடனே நான்கு கான்ஸ்டேபிள்களுடன், புறப்பட்டுப் போனேன். கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டிருந்தார். அவரது வலது கையில், ஒரு கைத்துப்பாக்கி யிருந்தது. அதிலுள்ள குண்டுகளில், ஒரு குண்டு பிரயோகிக்கப்பட்டிருந்தது. அவ்வரையின் கதவிற்கருகில் ஒருவன், வலது புஜத்தில் காயப்பட்டுக் கிடந்தான். அவன் மூர்ச்சையுற்றிருந்ததால், மூர்ச்சை தெளிந்தபின் விசாரித்ததில், அவன் காஞ்சிபுரமென்றும், கோபாலகிருஷ்ணய்யர், வரச்சொல்லி கடிதமெழுதியதால் வந்ததாகவும், சொல்கிறன். அன்றியும், ஏதோ ஒரு பொக்கிஷத்தின் இரகசியமடங்கிய காகிதம், அவரிடமிருப்பதாகவும் தெரிகிறது. அதன் திறவுகோல், அக்காயம் பட்டவனிட மிருக்கிறது. அத்திறவுகோலும், கோபாலகிருஷ்ணய்யரிடம் இருக்கும் கடிதமும் இல்லாமல், அப் பொக்கிஷத்தை அடைய முடியாதெனவும் தெரிகிறது. ஆகவே அவன், அக்காகிதத்தை அபகரிக்கவே வந்ததாக யூகிக்கிறேன். அன்றியும், மடத்துப் பணமாகிய ஐந்துகோடி ரூபாய்கள், களவு போயிருக்கிறது. காயமடைந்தவன், தான் பத்தரை மணிக்கு வந்ததாகவும், அப்போதே கோபாலகிருஷ்ணய்யர், இப்போதிருக்கும் நிலைமையி லிருந்தாரென்றும், இன்னும் யாரோ இருவர் சாமான்களை புறட்டிக்கொண்டிருந்தார்களென்றும், தான் வந்த

வுடன், தன்னைச் சுட்டுவிட்டார்களென்றும், தான் மூர்ச்சித்து விழுந்துவிட்டதாகவும் சொல்கிறான்.

## அரஸ்ட் செய்ததற்குக் காரணங்கள்.

1. காயமடைந்தவன், எட்டு மணிக்கு வருவதாக, கோபால கிருஷ்ணய்யருக்கு தந்தி கொடுத்துவிட்டு, பத்தரை மணிக்கு வந்திருக்கிறான்.

2. காயமடைந்தவன், கொலையுண்டவரிடம் இருந்த, ஒரு பெரிய பொக்கிஷத்தின் இரகசிய மடங்கிய காகிதத்தைக் கேட்க வந்ததாக அவனே சொல்கிறான்.

3. காயமடைந்தவனுக்கு, நாற்பதினாயிரம் ரூபாய்கள் கடன் இருக்கிறது. அதற்காக கோபாலகிருஷ்ணய்யர் கொலையுண்ட தினமே, வாரன்ட் பெற்றிருக்கிறான்.

4. அவனுக்கிருந்த, இரண்டு லக்ஷம் பெறுமான ஐவேஜியை, சூத்திக்கும் குடிக்குமாக, துர்விநியோகம் செய்து, துர்வழிகளில் பழக்கப்பட்டிருக்கிறான்.

5. டாக்டர் பரிசோதித்ததில், காயமடைந்தவன், காயமடைந்ததும்; கோபாலகிருஷ்ணய்யர் கொலையுண்டதும் ஒரே சமயமாக இருக்கலாமென தெரிகிறது.

6. மேலும், அவ்வரைக்கு ஒரே வாசலைத் தவிர்த்து உள்ளே போகவாவது, வெளியே வரவாவது மார்க்கமில்லை யாகையாலும், துப்பாக்கி சுட்ட சப்தம் கேட்டதும், அதே சமயத்தில் வேலைக்காரர்கள், அவ்வரையை நோக்கி வந்துவிட்டார்களாகையாலும், மூன்றாவதொருவன், அரையிலிருந்து, வெளியே சென்றிருந்தால், அவர்கள் கண்களில் கட்டாயம் அகப்பட்டிருப்பான். அப்படி ஒன்றும் நேரவில்லை யென்று, வேலைக்காரர்கள் சொல்வதால், காயமடைந்தவனை இராமசுப்பனே கொன்றிருக்கவேண்டும்.

மேற்கூறிய காரணங்களைக்கொண்டு, சந்தர்ப்பத்தோடு ஒத்திட்டுப் பார்த்ததில், நான் தெரிந்துக்கொண்ட தென்னவென்றால், இராமசுப்பன், அந்த அபாரமான பொக்கிஷத்தில், தன் மனைவிக்குச் சேரவேண்டிய பாதி பாகத்தைக் கேட்க வந்தானென்றும், கோபாலகிருஷ்ணய்யர், சட்டப்படி இன்னும் ஒருவருடங் கழித்தே அளிக்கப்படுமென்று சொல்லியிருப்பாரென்றும், இவன் உடனே வேண்டுமென்று வற்புறுத்தினதற்கு, அவர் பலமாக மறுக்கவே, இவன், அவர் குரள் வளையை நெறுக்கிக் கொல்ல முயற்சித்தானென்றும், அப்போது அவர் துப்பாக்கியால், அவன் தோளைப் பார்த்துச் சுட்டுவிட்டாரென்றும், அவர் பலஹீனமான நிலைமையிலிருந்ததால், சுட்டவுடனேயே, கழுத்து வலி தாளாமல் இறந்துவிட்டாரென்றும் தெரிந்துகொண்டேன். ஆகவே, இப்போது காயமடைந்திருக்கும் இராமசுப்பனை, அரஸ்ட் செய்திருக்கிறேன். (என்று படித்து முடித்தார்.)

சாமியார்:— இன்ஸ்பெக்டர் அவர்களே! "பதறாத காரியம் சிதறாது" என்பதைத் தாங்க ளறியாதவர்களா? இவ்வளவு அவசரப்பட்டு, மகஜர் தயாரித்துவிட்டீர்களே! அது கடைசியில், வீண் பிரயாசையாய் முடியப்போவதைக் கருதி, வருத்தப்படுகிறேன்.

நாயுடு:— அது ஒருக்காலும் வீண் பிரயாசையாகாது.

சாமியார்:— நான் இப்போதே ருஜுப்படுத்திவிடுகிறேன்.

நாயுடு:— சுவாமிகளே! தாங்களும், நானும் அநேக கேஸ்களில் ஒன்றாய் வேலை செய்து ஜெயமடைந்ததுமன்றி, ஒருவர் அபிப்பிராயத்தை, மற்றவர் அனுசரித்தும் வந்தோம். ஆயினும் தற்சமயம், தங்களபிப்பிராயம் ஆதியிலேயே மாறுபடுவதாலும், கைதி செய்யப்பட்டிருப்பவனுடைய மைத்துனன், உமக்கு வேண்டியவனென்று தோன்றுகிறபடியாலும், தங்களுடைய அபிப்பிராயம், இக்கைதிக்கனுசரணையாகவே யிருக்கும். நான் எல்லா விவகாரங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, ஆராய்ந்ததில், நான் தயாரித்திருக்கும் ரிபோர்ட், மிகவும் சரியானதென்றே தோன்றுகிறது. ஆகையால், இவ்விஷயத்தில் என் மன உறுதியைக் கலைக்க முடியாது. நீர் ஏதேனும், குயுக்தி

கள் செய்து, அதை யெம்மிடம் சொல்லி, நமது புத்தியைக் கலைக்கா திருக்கக் கோருகிறேன்.

சாமியார்:— நாயுடுகாரு! என்ன நீர் இன்றைக்கு உம்மையும் மீறி, வார்த்தையாடுகிறீர்? நாம் எப்போதேனும், குயுக்தி செய்து, பொய்யுரை யாடியதுண்டா?

> புலையனும் விரும்பாத இப் புன்புலால் யாக்கை
> நிலையெனு மருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
> தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம். என,

வாய்மையே விரதமாகக்கொண்டிருக்கும் யான், பொய்யுரை மொழிவேனு?

நாயுடு:— சுவாமிகளே! தாங்கள், நானிப்போது சொல்வதைக் கருதி, கோபப்படக் கூடாது. உலகில், பொய்யுரையாடாத மனிதரே கிடையாதென்று நான் துணிந்துரைக்கிறேன். அப்படி யிருப்பார்களே யானுலும், இப்படிப்பட்ட சமயத்தில், அவசியத்தைக் கருதி, பொய் சொல்லாம லிரார்கள். அதெல்லாம், நமக்கென்னத்திற்கு? எனக்கு, தங்களபிப்பிராயத்தைக் கேட்க இஷ்டமில்லை. ஆகையால் தாங்கள் தயவுசெய்து, நம்மை இவ்வளவோடு விட்டுவிட்டால், மிகுந்த நலமாயிருக்கும்.

சாமியார்:— ஆனுல் நீர், இராமசுப்பனைக் குற்றவாளியென்றே, முழுமனதுடன் தீர்மானித்துவிட்டீர்களா?

நாயுடு:— கையு மெய்புமாகப் பிடித்திருக்கும்போதுகூட, சந்தேகமென்ன விருக்கிறது?

சாமியார்:— காண்பதும் பொய்! கேட்பதும் பொய்!! தீர விசாரிப்பதே மெய் யென்றும், அதிலும், "ஆய்ந்தோய்ந்து பாரா தான் காரியம், தான் சாகக் கடவன்" என்பதையும் நீர் அறியீர் போலும். அதிருக்கட்டும்; சவத்தினிடத்திலிருந்து எடுத்த கைத் துப்பாக்கியை பரிசோதிப்பதற்காக, நாளை பகல் வரையில் கொடுக்கிறீர்களா?

நாயுடு:— நான் சட்டப்படி கொடுக்கப்படா தாகையாலும், தாங்கள், கைதிக்கு வேண்டியவ ராகையாலும், துப்பாக்கி, நாளை

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், சோதிக்கப்படுமாகையாலும், தாங்கள் பிரத்தியேகமாக பரிசோதிப்பது வீணாகையாலும், நான், அதை என்னிடம் வைத்துக்கொண்டிருப்பதே நலமெனக் கருதுகிறேன்.

**சாமியார்:—** அது போனால் போகட்டும்; கைதியுடன் தனிமையில் இரண்டொரு நிமிடம் யான், பேசுவதில் யாதொரு ஆட்சேபமுமில்லையே?

**நாயுடு:—** சட்டத்திற்கு விரோதமான காரியத்தை, தாங்கள் செய்ய யான், ஒருபோதும் ஒருப்படேன்.

**சாமியார்:—** சரி! சட்டத்தைத் தவரி, நீர் எப்போதும் நடந்ததில்லையே?

**நாயுடு:—** நடந்திருக்கிறேன். வேறுவகை யில்லாவிட்டால், அப்படி செய்வதுதான். இப்படி அனுவசியமாக, சட்டத்திற்கு விரோதம் செய்யமாட்டேன்.

**சாமியார்:—** என் விஷயத்தில், நீர் இவ்வளவு பிடிவாதமாக நடப்பதும், நம்மீதே சந்தேகப்படுவதும், அதை மூடி மூடிப் பேசுவதும் நமக்கே, அத்யாச்சரியகரமாக விருக்கிறது. போகட்டும்; நாம், உமது தந்தையை ஒருசமயம் காப்பாற்றியிருக்கிறோமல்லவா? அந் நன்றியைக் கருதியாவது, இப்போது இவ்வுதவியைச் செய்யக் கூடாதா?

**நாயுடு:—** தாங்கள் இப்படி, பன்னிப் பன்னிப் பேசுவது, எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. தாங்கள், எனது தந்தையைக் காப்பாற்றியது உண்மையே. ஆதலால் நான், தங்கள் பொருட்டு, சட்ட விரோதமான காரியத்தைச் செய்வதா? சத்தியம் தங்களுக்குமட்டும் தானா? எனக்கில்லையா? தாங்கள், நமது தந்தையின் உபகாரி, என்ற கருத்தோடுதான் தங்களுடைய, "நீர்" என்ற ஏகவசனப் பிரயோகத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கிறேன்.

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கோ லென வேண்டா.

என்று, மூதுரை மொழிகின்றது. அதைக் கருதாது தாங்கள், என்னை செய்நன்றிக்குப் பயன் வேண்டுவது, தங்களைப் போன்ற,

பொய் சொல்லா புனிதர்களுக்கு நியாயமா? (என்று, குத்தலாக மொழிந்தார்.)

சாமியார்:— பிறகு, உமதிஷ்டம்போல் நடந்துகொள்ளலாம். இப்போதே இக்கைதி நிரபராதி என்றறிவேன். ஏதோ, நமது நண்பரின் மகனயிற்றே நீர் என்று, இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொன்னேன். என்ன செய்யலாம்?

ஆழ வமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர்
நாழி முகவாது நானுழி—தோழீ
நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
விதியின் பயனே பயன்.

என்பதுபோல், உமக்கும் விதியின் படி மதி செல்லுகிறதுபோலும். சரி! இனி நீர் கைதியை அழைத்தேகலாம். என்னலானதை நான், நாளை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளுகிறேன்.

நாயுடு:— தாங்கள், அவ்வாறு சொல்வதின் அர்த்தமென்ன? மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், இக்கைதி குற்றமற்றவனென்று ரூபிக்கிறேனென்கிறீர்களா?

சாமியார்:— ஆம்! அப்படி செய்வதாகத்தான் உத்தேசம்.

நாயுடு:— தங்களால், இக்கைதி குற்றமற்றவனென்று ரூபிக்க முடியுமா?

சாமியார்:— கட்டாயம் முடியுமென்றே நம்புகிறேன்.

நாயுடு:— அப்படிமட்டும் நீங்கள் ரூபித்துவிட்டால், நான் மீசை சிறைத்து, கழுதைமேல் கோலம் வருகிறேன். அப்படி தாங்கள் செய்யத் தவறினல், என்ன செய்துகொள்ளுகிறீர்கள்?

சாமியார்:— நாயுடுகாரு! இவ்வளவு முன்கோபமும், ஆத்திரமும், பதைபதைப்பும் உம்போன்ற, கண்ணியமான இன்ஸ்பெக்டர் பதவி வகிப்போருக்கு உதவாது. நான், "காரியம் பெரிதா, வீரியம் பெரிதா?" என்பதைக் கருதுபவன். ஆகையால் நான், உம்மிடம் யாதொரு பந்தயமாவது, போட்டியாவது வைத்துக்கொள்ள இஷ்டமில்லை.

நாயுடு:— சுவாமிகளே! தாங்கள் பயந்துகொண்டு பின்வாங்கினாலும், நான், சொன்னசொல் தவறாத மரபினில் உதித்த மேலோனானதால், என்னுடைய சூளுரையை, என்றும் மறவேன். தாங்கள், எப்போதேனும் இக்கைதியை குற்றமற்றவனென்று ரூபித்துவிடுவீர்களானால், நான் முற்கூறிய பந்தயப்படி நடந்துகொள்ள, யாதொரு தடையுமில்லை. **இது நிச்சயம்! இது திண்ணம்!! இது சத்தியம்!!!** இனி நான் சென்று வருகிறேன்.

என்றதும் கைதியையும், கான்ஸ்டேபிள்களையும், சப் இன்ஸ்பெக்டரையும் அழைத்துக்கொண்டு, இரண்டு கான்ஸ்டேபிள்களை மட்டும், அப்பிணத்திற்கு காவலாக வைத்து, "யாராயினும் சரி! உள்ளே விடக்கூடாது!" என்று திட்டம் செய்துவிட்டு, அங்குக் கண்டெடுத்த சாமான்களோடு சென்றுவிட்டார்.

அவர் சென்ற ஐந்து நிமிஷத்திற்கெல்லாம், ஸ்ரீலோலனும் சாமியாரும், ஓர் அறையில் உட்கார்ந்து, ஏதோ இரகசியமாய் பேசிக்கொண்டிருந்தபின், சாமியார் எழுந்து, அடிமேலடி வைத்தவராய், கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டிருக்கும் மேன்மாடியை நோக்கி நடந்தார். ஸ்ரீலோலனும், அவரை பின்பற்றிச் சென்றான். அங்கு காவல் காத்திருந்த சேவகர்கள், படிகளின் கைப்பிடி சுவற்றில் சாய்ந்தவண்ணம், நன்றாய் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தனர். சாமியாரும், ஸ்ரீலோலனும் சந்தடி செய்யாமல் நடந்து, கொலை செய்யப்பட்டிருக்கும் அறைக்குள் நுழைந்து, கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டனர்.

சுமார் அரைமணி நேரம், எவ்வித சப்தமு மில்லாமலிருந்தது. மறுபடியும் சிறிது நேரம் கழித்து, சாமியாரும், ஸ்ரீலோலனும் சந்தடி செய்யாமல், வெளியே வந்தனர். முன்பு உள்ளே போகும்போது சாமியார், கையில் ஒன்றுமில்லாமல் வெறுங்கையாயிருந்தார். வரும்போது, ஏதோ ஒரு **வெண்மையான வஸ்துவை** தாங்கியிருந்தார். இருவரும் மாடியை விட்டுக் கீழிரங்கி வந்ததும் சாமியார், ஸ்ரீலோலனை நோக்கி, "நமது கோவிந்தனை சைகிள் மோட்டாரில் அனுப்பி, உமது தமக்கையை வரவழைத்துவிட்டால், நலமெனக் கருதுகிறேன்." என்றார்.

ஸ்ரீலோலன்:— அப்படியே ஆகட்டும்; இப்போதே, கோவிந்தனை சைகிள் மோட்டாரில் அனுப்பி, நாளை உதயத்திற்குள் அழைத்து வரும்படிச் செய்கிறேன்.

சாமியார்:— இப்போது, மணி பனிரண்டாகிறது. உடனே அனுப்பிவைத்தால்தான், உதயத்திற்குள் அநேகமாகத் திரும்பிவிடலாம். எதற்கும் வரும்படி உன் தமக்கைக்கு, உன் கைப்பட, ஒரு கடிதம் கொடுத்தனுப்பு.—என்றார்.

ஸ்ரீலோலனும் அதற்கு சம்மதித்து, நேரே கோவிந்தன் வீட்டிற்குச் சென்று, அவனை எழுப்பி அழைத்துவந்து, அவனுக்கு விஷயங்களை யெல்லாம் சுருக்கமாகச் சொல்லி, கடிதமும் கொடுத்து மோட்டார் சைகிளில் போகச் சொன்னான். அப்போது சாமியார் கோவிந்தனைப் பார்த்து, "துப்பாக்கிச் சுடுவதில் பழக்கமுண்டா?" என்றார். அவன், தான் குறி தவறாமல் சுடுவதில் பழக்கமுண்டென்று சொல்லவே, சாமியார், தன் கையிலிருந்த முருக்குக்குழல் துப்பாக்கி யொன்றைக் கொடுத்து, எதற்கும் ஆபத்திற்கு வைத்துக் கொள்ளச் சொன்னார்.

சரியாக பனிரண்டு மணிக்கு கோவிந்தன், காஞ்சீபுரத்தை நோக்கி, மோட்டார் சைகிளில் போய்விட்டான்.

கோவிந்தன் போவதற்கு முன் சாமியார், அவனிடம் இரகசியமாக, மஹாலட்சுமி யிருக்கும் வீட்டிலுள்ள, எவ்விதமான கடிதத்தையும், அவசியானவசியத்தைக் கருதாது கொண்டுவருவதோடு, சந்தேகாஸ்பதமான வஸ்துக்களையும், கொண்டுவரும்படி சொல்லி அனுப்பினார்.

கோவிந்தன் சென்றபின் சாமியார், ஸ்ரீலோலனிடம், தான் வெளியே போய்வரவேண்டிய வேலை யிருப்பதால் போவதாகவும், தன்னை மறுநாள், எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கண்டுகொள்ளும்படியும் சொல்லிவிட்டு, வெளியில் போய்விட்டார்.

தனியே விடப்பட்ட ஸ்ரீலோலன், தனது விடுதியை யடைந்து, பலவாறு யோசனை செய்தபடி உறங்காமல், அவ்விரவைக் கழித்தான்.

மறுநாளுதயத்தில் எழுந்து, தன் காலைக்கடன்களை அதிசீக்கிரம் முடித்துக்கொண்டு, சாமியாரின் உத்திரவுப்படி, சென்னையில் பிரபலமான, வக்கீல் சாமராஜன் வீட்டிற்கு போய்ச் சேர்ந்தான். சாமராஜனுக்கு, ஸ்ரீலோலனை நன்றாய்த் தெரியுமாதலால், அன்புடன் வரவேற்றார். உடனே இருவரும், சாமராஜனது ஆபீஸறையிலுட்கார்ந்து பேசத் தொடங்கினர்.

**சாமராஜன்:**— ஸ்ரீலோலா! உனது கேஸில், நானே லாயராயிருக்கப் பிரியப்பட்டு, உன்னை வந்து கேட்கவிருந்தேன். இதற்குள் என் அதிர்ஷ்டவசம், நீயே என்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாய்.

**ஸ்ரீலோலன்:**— எனது கேஸைப்பற்றி, இதற்குள் தாங்கள், எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?

**சாமராஜன்:**— "ஸ்ரீலோலா! இதோ, இந்தப் பத்திரிகையைப் பாரேன். எந்த மூலையில் எந்த விஷயம் நடந்தாலும், உடனே பத்திரிகையில் வந்துவிடுகிறது. நான் சொல்வதை விட, நீயே இப்பத்திரிகையைப் படித்துபார்." என்று, அவன் படிக்கவேண்டிய இடத்தைக் காண்பித்தார்.

அப்பத்திரிக்கையில், கீழ்வருமாறு வெளியிட்டிருந்தது.

## கொலை! களவு!! கொலை!!!

கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டார். கும்பகோணம், மதங்கீஸ்வரர் மடத்தின், ஐந்துகோடி ரூபாயும், கோபாலகிருஷ்ணய்யரிடம் நம்பிக்கைக்காக வைக்கப்பட்டிருந்த, ஓர் அரிய பொருளும் களவாடப்பட்டது.

கொலை செய்தவன், எனுக்தூர், இராமசுப்பய்யர் என்று சொல்லுகிறார்கள் நுங்கம்பாக்கம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு, கைதியைக் கையுமெய்யுமாகப் பிடித்துவிட்டார்.

கைதியின் மைத்துனரான ஸ்ரீலோல சாஸ்திரிகளுக்கு, கொல்லப்பட்ட கோபாலகிருஷ்ணய்யர், கார்டியனும்.

கைதி, கொன்றதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகிறது. இன்று இக்கேஸ், எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரிக்கப்

படும். அப்போது அநேகமாக, உண்மை விளங்கலாம். இக் கேஸைப்பற்றி ஏதேனும் தெரிந்தவர்கள், நேரே கோர்ட்டிற்கு வந்து, சாட்சி சொல்லும்படிக் கோர்ட்டாரால் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.—என்று, பெரிய எழுத்துகளில் விளம்பரப்படுத்தியிருந்தது.

**சாமராஜன்:**— பார்த்தீர்களா? இதைக் கண்டவுடன், எனக்குண்டான துக்கத்திற்களவே யில்லை. கோபாலகிருஷ்ணய்யரைப் போல பரம சாது, உலகில் வேறுயாரும் இரார்கள். அப்பேர்ப்பட்ட உத்தமருக்கு, இத்தகைய கெடுதலை வுண்டாக்கிய கடவுளை, எங்ஙனம் காருண்ய கர்த்தா எனக் கூறுவது?

**ஸ்ரீலோலன்:**— தாங்களவ்விதம் சொல்லப்படாது. கடவுள் கருணையங்கடலல்லவா? அதில் யாதொரு பிசகும் கிடையாது. நமது மதக்கொள்கைப் பிரகாரம், நமது ஊழ்வினையின் பயன்படி சுகதுக்கங்களும், பிறப்பு, இறப்புகளும் உண்டாகிறது. நாம் எப்போது, கிருஸ்தவர்கள், மறுபிறப்பு இல்லை யென்பதைப்போல் சொல்லாமல், ஒவ்வொரு மனிதனுக்கும், அவனவன் கர்மானுசார விதிப்படி, பிறப்பு உண்டென்று நம்புகிறோமோ, அப்போதே நாம் உலகில் அனுபவிக்கும், சுகதுக்காதிகளும் ஊழ்வினையின் பயனேயாம். **பிரமோத்தரகாண்டம்** என்னும் நூலில்,

"வாழிய மாந்தரெல்லா மிருவினை வயத்தர்மன்னோ."

என்றும்,

"துன்பமு மின்பந்தானுந் தொல்வினைத் தொடர்ச்சி யென்பார்"

என்றும் கூறியிருப்பதையே, ஈண்டு சான்றாகக் கொள்ளலாம்.

"இறத்தலும் பிறத்தலுமு மென்பன விரண்டும் யாண்டுந்
திறத்துளி நோக்கிற் செய்த வினைதரத் தெரிந்தவன்றே."

என்றார் கம்பரும். ஆதலால, நண்பரே! இவ்வுலகில் ஒவ்வொருவரும் இறப்பது திண்ணம்.

"முடிசார்ந்த மன்னரும், முடிவிலொரு பிடிசாம்பலாவர்." என்று பட்டினத்தடிகள் புகன்றதைக் கவனியுங்கள். எப்போது ஒருவன் மண்மேல் பிறந்தானோ, அவன் கட்டாயம் ஒருநாள் இறந்தே தீரவேண்டும். ஆனல், இதில் ஒரு வித்தியாசம். எல்லா

மனிதர்களும், ஒரே மாதிரி சாவதில்லை. ஒவ்வொருவனும் ஒவ்வொரு மாதிரி ஆவியைத் துறக்கிருன். ஆனுல், எல்லாவிதமான சாவும் "இறப்பு" என்னும் பதத்துள்ளடங்கியதே. ஆகையால், கோபால கிருஷ்ணய்யர் கொலை செய்யப்பட்டு இறத்தல் வேண்டுமென, விதி யிருந்ததுபோலும். அப்படியே அவர் இறந்தார். இனி, நாம் அதைப் பற்றி வருந்துதலொழித்து, மேல் நடக்கவேண்டியதை யோசிப் போம்—என்ருன். சாமராஜனும், அதைப்பற்றி அதிகம் பேசாமல், அக்கேஸைப்பற்றி, ஸ்ரீலோலனிடம் தெரிந்துகொள்ளவேண்டியவை களையெல்லாம் தெரிந்துகொண்டபின், ஸ்ரீலோலனிடம், அக்கேஸை நடத்துவதற்காக, ஒரு வக்காலத்து எழுதி வாங்கிக்கொண்டு, ஸ்ரீலோலனையும் அழைத்துக்கொண்டு, நுங்கம்பாக்கம், போலீஸ் டேஷனை யடைந்தார். அங்கு வெகு தடபுடலாக, நாற்காலிகள் முதலியவைகளைப் போட்டுக்கொண்டு, நான்கைந்து கான்ஸ்டேபிள் கள் கைக்கட்டி நிற்க, கச்சேரி நடத்திக்கொண்டிருந்த ஸ்ரீராமுலு நாயுடு, இவ்வக்கீலைக் கண்டதும், முகமன் கூறி வரவேற்ருர். உடனே இருவரும் ஆசனங்களி லமர்ந்தபின்,

நாயுடு:— ஏது? அபூர்வமாய் இப்படி நம்மைத்தேடி வந்து விட்டது. ஏதேனும் விசேஷமுண்டோ?

சாமராஜன்:— அப்படி ஒன்றும் அதிக விசேஷமில்லை. நேற்று கோபாலகிருஷ்ணய்யர் கொலையில் கைதி செய்யப்பட்டிருக்கும் இராமசுப்பனுக்கு, நான் வக்கீலாக நியமிக்கப்பட்டிருக்கிறேன். ஆகையால், கைதியைப் பார்த்துவிட்டுப்போக வந்தேன். தயவு செய்து நான், கைதியைப் பார்த்துப் பேசிவிட்டுப்போக, அனுமதிக்க வேண்டும்.

நாயுடு:— தாங்கள், தாராளமாய்க் கைதியுடன் பேசலாம். ஆனுல், நம் எதிரிலேயே பேசிக்கொள்ள வேண்டுகிறேன்.

சாமராஜன்:— "ஆகா! அப்படியே செய்யலாம்." என்றதும் இன்ஸ்பெக்டர், இராமசுப்பன் அடைக்கப்பட்டிருந்த அரையினுள் சாமராஜனை விடுத்து, அரைக்கு வெளில் வாயிற்படியைப் பிடித்தபடி நின்ருர். சாமராஜன், இராமசுப்பனை நோக்கி, தான் இன்னுனென் றும், தன்னுடன் எதையும் மறைக்காமல், அவனுடைய வரலாறுகள்

எல்லாவற்றையும் சொன்னால், தான் கூடிய வரையில் முயன்று, அவனை மீட்பதாகவும் சொன்னார். இராமசுப்பனும், தனது அப்போதைய நிர்ப்பாக்கியமான நிலைமையைக் கருதி, ஆறாத் துயரங்கொண்டு கண்ணீர் விட்டவனாய், வக்கீலுக்கு, தன்னுடைய வரலாறுகளை ஆதியோடந்தமாய் எல்லாவற்றையும் சொல்லி,

"எனது அன்பார்ந்த வக்கீலவர்களே! நான், கொடிய பாவம் செய்தவன்.

—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தக்கால் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை.

ஆகவே, யான் செய்த ஊழ்வினையே, என்னை இப்படி ஆட்டி வைக்கிறதுபோலும். எனக்குப் போகுமிடமெல்லாம், பொல்லாத் துன்பங்களும், துயரங்களுமே வுண்டாவதை நோக்க, எனக்கு இனி, இவ்விடர்களி லிருந்தும் விடுதலையுண்டாமோ, என்னும் மலைப்புத் தோன்றுகிறது. "தாந்தாம் செய்தவினை தாமே யனுபவிப்பர்." ஆகையால், என் விதியின்படி மற்றோர்க்கும் மதி செல்லுகிறதால், அதன் வழி விட்டுவிடவே, நான் முழுமனதுடன் சம்மதிக்கிறேன். மேலும்,

ஆதியிலுயர் தந்தையை யிழந்ததற் கழுவனோ
ஓதியுணராமல் புல்லறி வுற்றதற் கழுவனோ
மேதினியில்பல ரிகழவேயொழுகி வறுமையுற்றதற் கழுவனோ
வேதியர்குலத்துதித்து வேசியர்பால் விருப்புற்றதற் கழுவனோ
நாதியெனையின்றி வேறில்லையெனநம்பும் மனைவிக்கா யழுவனோ
கோதிலா கோபாலகிருஷ்ணய்யர் கொலையுண்டதற் கழுவனோ

நண்பரவர்களே! நான் எதற்கென்றழுவேன். என்னுடைய கஷ்டங்களெல்லாம் தீர, என்னை மீட்க முயலாதிருக்கும்படி தங்களையும், என்பாலிரக்கங்கொண்டு பாடுபடும் எனது மைத்துனரவர்களையும், மன்றாடி வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே, எனது கடைசி வேண்டுகோள்." என்று சொல்லிக்கொண்டே அழுதுவிட்டான்.

**சாமராஜன்:—** "அப்பா இராமசுப்பா! அழாதே. "ஆவீன மழைபொழிய இல்லம் வீழ." என்ற கதைப்படி, உனக்குக் கஷ்டங்

கள் ஒன்றன்பின் ஒன்ருய் உண்டாகின்றது. அதெல்லாம் கடவுளின் திருவுள்ளமாயின், அப்படியே நடக்கட்டும்; ஆண் பிள்ளைகள் எத்தகைய கஷ்டங்களுக்கும் பின்வாங்காது, முன்னிற்க வேண்டியதே முறை. அதைவிட்டு, இதற்கெல்லாம் பயந்துவிட்டால், என்ன விருக்கிறது? உலகில் துன்பமும், இன்பமும் கலந்துதானே வருகிறது? எத்தகைய மனிதனும், நீடித்துத் துன்பத்தையாவது, இன்பத்தையாவது அடைந்ததில்லை.

வறியவர் செல்வராவர் செல்வர்பின் வறியராவர்
சிறியவ ருயர்ந்தோராவ ருயர்ந்தோர் சிறியராவர்
முறைமுறை நிகழுமீது முன்னையூழ் வினையேகண்டா
யெறிகதிர் வழங்குஞாலத் தியற்கையு மினையதன்றே.

ஆகையால் யாதொன்றுக்கும் அஞ்சாதிரு. நான் இன்றைக்கே பகீரதப் பிரயத்தனம் செய்து, உன்னை மீட்பிக்க முயல்கிறேன்.'' என்றதும், இராமசுப்பனிடம் விடைபெற்றுக்கொண்டு, ஸ்ரீலோலனோடு, தனது ஜாகைக்குப் புறப்பட்டுப் போனார்.

இவர்கள் போய்ச்சேருவதற்கு முன்பே, ஞானனந்த சாமியார், இவர்களுடைய வரவிற்காக அங்கு காத்திருந்தார்.

ஞானனந்த சாமிகளைக்கண்ட வக்கீல் சாமராஜன், மிகுந்த சந்தோஷமடைந்தவன்போல், "சுவாமிகளே! நீங்கள் இக்கேஸில் தலையிட்டிருக்கிறீர்காளா? ஆயின், எனது கட்சி ஜெயம் பெற்றதென்றே சொல்லவேண்டும். தர்மமும், சத்தியமுமல்லவா, தங்கள் ரூபமாக வந்திருக்கிறது? இனிக் கட்டாயம் உண்மை விளங்கிவிடுமென்பதற்கு, ஓரணுவும் ஐயப்பாடில்லை.'' என்ருர்.

இதற்குள் திண்ணைமீதமர்ந்த சாமியார், வக்கீலை நோக்கி, நம்மா லென்ன விருக்கிறது? எல்லா மவன் செயல். "அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் பெரிய ஆப்தர்மொழி யொன்று கண்டாய்.'' என்றது, தாங்களறியாத விஷயமா? அதிருக்கட்டும்; சென்றுவந்த காரியம் எப்படியாயிற்று?

**வக்கீல்:—** சுவாமிகளே! தாங்களொரு சாதாரணப் பரதேசியைப்போல், திண்ணையில் உட்காந்துவிட்டீர்களே! உள்ளே எழுந்

தருளி, ஏதேனும் தாகசாந்தி செய்துகொண்டு, சோபாவி லமர்ந்து கொள்ளுங்கள். பிறகு நமது விஷயத்தைத் தொடங்கலாம்.

சாமியார்:— சாமாராஜா! நான் உண்மையில் ஒரு பாதேசியல்லவா? எனக்கு சோபாவும் திண்ணையும், ஒன்றே யாகையால், நான் திண்ணையில் உட்கார்ந்தா லென்ன? நான் இன்னும் இக்கேஸ் விஷயமாய் எங்கெங்கலைய நேருமோ? ஆகையால், நடந்ததை சீக்கிரம் தெரிவித்தால் நன்மை பயக்கும்.

வக்கீல்:— "பிறகு தங்களிஷ்டம். பெரியவாள் இஷ்டம்போல் நடந்துகொள்ளுங்கள்." என்று சொல்லிவிட்டு, ஸ்ரீலோலன் தன்னை வந்து பார்த்ததிலிருந்து, தான் போய்த் திரும்பிவந்த விவரங்களை யெல்லாம், ஒன்று விடாமல் சொல்லிமுடித்தார்.

எல்லாவற்றையும் மிகுந்த கவனமாய்க் கேட்ட சாமியார், "ஆனாலவனுக்கு, சென்னையிலிருந்து ஒரு தந்தி வந்ததாகவா சொன்னான்?" என்று கேட்டார்.

வக்கீல்:— ஆமாம். அப்படித்தான் சொன்னான்.

சாமியார்:— யாரிடமிருந்து வந்ததாம்?

வக்கீல்:— கமிஷனர் கலியாணராமனிடமிருந்து வந்ததாம்.

சாமியார்:— தந்தியின் சாராம்சமென்ன?

வக்கீல்:— உடனே வரவேண்டுமென்றும், அவன்மேல் சில தாவாக்கள் இருப்பதாகவும், வரத்தவறினால், வாரன்ட் பிறப்பிக்கப்படுமென்றும் இருந்ததாம்.

சாமியார்:— வக்கீலவர்களே! இது மிகவும் நூதனமாகவே யிருக்கும். உண்மையில், இப்போது கைதி செய்யப்பட்டிருப்பவன், குற்றவாளியாயின், கமிஷனர், அவனை உடனே வாரன்ட்டில் பிடிக்கப் பார்ப்பாரா? அல்லது அவன் ஓடிவிடும்படி, முன்னெச்சரிக்கையாக வரும்படியும், வரத்தவறினால் வாரன்ட் பிறப்பிக்கப்படுமென்றும், தந்தி கொடுப்பாரா?

வக்கீல்:— ஏன்? கைதிக்குத் தெரிந்தால், அவன் உண்மையான குற்றவாளியாயின், ஓடிவிடுவானாகையால், அவனுக்குத் தெரியாமலவனை வாரன்ட்டில் பிடிக்கவே, அனுபவமுள்ள கமிஷனர் நினைப்பாரேயன்றி, முற்கூறியபடி தந்தி கொடுக்கவே மாட்டார்.

சாமியார்:— தங்கள் பங்களாவில் டெலிபோன் இருக்கிறதோ? ஆயின், என்னை சீக்கிரம் அது வமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போங்கள்—என்றார்.

உடனே வக்கீல், சாமியாரை டெலிபோனண்டை அழைத்துப் போய் விடுத்தார். சாமியார் டெலிபோனை யடைந்ததும், டெலி போன் கருவியை இயக்கி மணியடித்தபின், கமிஷனர் ஆபீஸிலுள்ள டெலிபோனோடு பேசினார். அது கீழ் வருமாறு.

சாமியார்:— பேசுகிறது யார்?

எதிரி:— நான், கமிஷனர் ஆபீஸ் கிளார்க். யாருடன் பேச விரும்புகிறீர்கள்?

சாமியார்:— ஞானனந்த சாமியார், கமிஷனருடன் பேசப் பிரியப்படுவதாகவும், அதுவும் அவசரமாக நடைபெறவேண்டுமென் றும் கமிஷனரிடம் உடனே சொல்லும்.—என்றார்.

சிறிது நோத்தில், கமிஷனர் ஆபீஸ் டெலிபோனிலிருந்து,

"யார் அது? ஞானனந்த சாமியாரா? சுவாமிகளே! என்ன விசேஷம்?" என்று கேட்டதை யுணர்ந்த சாமியார், "கமிஷனரவர் களே! தாங்கள், எனுத்தார் இராமசுப்பனென்பவனுக்கு, நேற் றைக்கு முந்தியதினம், ஏதேனும் தந்தி கொடுத்ததுண்டா?

கமிஷனர்:— நான் ஒருவாரமாக எவ்வித தந்தியும், யாருக்கும் கொடுத்ததில்லை.

சாமியார்:— இது நிச்சயமான வார்த்தைதானு? சற்று ஞாப கப்படுத்தி பதில் சொல்லக் கோருகிறேன்.

கமிஷனர்:— ஞாபகப்படுத்தி சொல்லவேண்டியது ஒன்று மில்லை. நான் தந்தியே இந்த வாரத்தில், கொடுக்கவில்லை.

சாமியார்:— ஆயின் தாங்கள், எப்போதேனும் நான் கோரின், சாட்சி சொல்ல முன்வருவீர்களா?

கமிஷனர்:— ஆகா! யாதொரு தடையுமில்லாமல், சாட்சி சொல்கிறேன். என்ன விசேஷம்? ஏதேனும் புதிய கேஸ் கண்டு பிடித்திருக்கிறீர்களா?

சாமியார்:— "எல்லாவற்றையும், தங்களிடம் நேரில் சொல்லிக் கொள்கிறேன்." என்றதும், கமிஷனரிடம் பேசுவதைவிட்டு, தான் பேசும் டெலிபோனை, சென்னையிலுள்ள, பல தந்தி ஆபீஸ்களுடன் இணைக்கச் செய்து, அத்தகைய தந்தி, அந்த ஆபீஸ் மூலமாகக் கொடுக்கப்பட்டதா என்று விசாரித்ததில், நுங்கம்பாக்கம் தந்தி ஆபீஸைத் தவிர்த்து, மற்றவைகளிலெல்லாம், இல்லையென்று சொல்லிவிட்டார்கள்.

நுங்கம்பாக்கம் தந்தி ஆபீஸின், கிளார்க், "ஏன் அத்தகைய தந்தியை நானே, நேற்றைக்கு முந்தியதினம் கொடுத்தேன்." என்ருன்.

சாமியார்:— நீர் நுங்கம்பாக்கம் தந்தி ஆபீஸின் கிளார்க்கா?

தந்தி ஆபீஸ் கிளார்க்:— ஆம்.

சாமியார்:— ஆயின், அந்த தந்தியை யார் வந்து கொடுத்தது?

கிளார்க்:— கமிஷனருடைய வேலைக்காரரில் ஒருவன் தான்.

சாமியார்:— அவ்வளவு திட்டமாய்ச் சொல்கிறீரே. நீர் அவனைக் கண்டால் தெரிந்துகொள்வீரா?

கிளார்க்:— ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? நான் நமது ஸ்ரீராமுலு நாயுடு குடியிருக்கும் வீட்டிற்குப் பக்கத்திலேயே குடியிருப்பவன். இந்தத் தந்தி கொடுத்த வேலைக்காரன், நமது இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு வந்துபோனதை நான், அநேகந்தரம் கண்டிருக்கிறேன். ஆதலால் இப்போதும் அவனை எனக்கு நன்ருய்த் தெரியும்.

சாமியார்:— அவன் பெயர் என்ன?

கிளார்க்:— ஷண்முகம் என்பதுதான்.—என்ருன்.

உடனே சாமியார், அதோடு தனது கேள்விகளை நிறுத்திக் கொண்டு, டெலிபோனை வைத்துவிட்டு வெளியே வந்து, தான் அன்று கோர்ட்டில் சந்திப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்ருர்.

இனி நாம் சாமியாரைவிட்டு, மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம்.

சாமியார் சென்றவுடன், ஸ்ரீலோலனும், வக்கீலவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, வீட்டையடைந்து, எப்போது கோவிந்தன், தன்

தமக்கையை அழைத்து வருவானோ, அவள் இப்போது எப்படி இருப்பாளோ என்றும், இன்னும் பலவாறாக யோசித்துக்கொண்டுமிருந்தான்.

காலம் என்பது, ஓயாதோடும் சகடமல்லவா? ஆகவே மணியும், பதினொன்றாகும் சமயமாயிற்று. இனியும் தான் சும்மாவிருப்பது நல்லதல்லவெனக் கருதிய ஸ்ரீலோலன், அதற்கு மேல் புறப்பட்டு, கோர்ட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

அப்போது கோர்ட்டில், சென்னையில் மைலாப்பூர் அறுபத்து மூவர் உற்சவத்திற்கு எவ்வளவு ஜனம் போகுமோ, அதற்கதிகமென சொல்லமுடியுமே யல்லாது, வேறு வகையில் அந்த ஜனத்தொகையைச் சொல்லிமுடியாது. இவ்வளவு ஜனக் கூட்டங்களிலும், மிகவும் சிறமப்பட்டு நமது சாமியார், உள் நுழைந்து, கோர்ட்டில் வக்கீல்களுக்காக போடப்பட்டிருக்கும் ஆசனங்களினருகில் சென்றார். அங்கு ஆயத்தமாக வக்கீல் சாமராஜன், தனது லா புஸ்தகங்களை எதிரிலுள்ள மேஜைமேல் அடுக்காய் வைத்துக்கொண்டு, வெகு கம்பீரமாயமர்ந்திருந்தார். அவாருகில் போடப்பட்டிருந்த ஆசனத்தில், சாமியாரும் போயுட்கார்ந்தார். உடனே இருவரும் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டனர். கோர்ட்டில், இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு ஆயத்தமாயிருந்தார். பிராசிகூஷன் தரப்புக்காக, போலீஸ் புலி ஸ்ரீராமுலு நாயுடு, பாரிஸ்டர் பாப்பரை வரவழைத்திருந்தார். இந்த பாரிஸ்டர் பாப்பரென்பவர், உண்மையான கேஸ்களை பாப்பராக்குவதில், வெகு சமர்த்தராம். கொலையாளி கையுமெய்யுமாகப் பிடிபட்டிருந்தாலும் இவர், அவனுக்கு லாயராக ஏற்பட்டுவிட்டால், கைதி கட்டாயம் விடுதலையடைந்துவிடுவானென்று, சென்னையிலெங்கும் பிரஸ்தாபம். ஆகவே, இப்படிப்பட்ட கெட்டிக்கார பாரிஸ்டர், பிராசிகூஷன் தரப்புக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், இராமசுப்பன், இனி தப்புவது அரிதென்றும், மிகவும் கஷ்ட சாத்தியமென்றும், இன்னும் பலவாறாகப் பேசிக்கொண்டனர்.

அந்தோ! பரிதாபம். பரிசுத்த ஹிருதயயேஸ்வரனான இராமசுப்பன், அநியாயமாய்த் தண்டனையடைந்துவிடுவானோ? என்னமோ? என்று நமது மனம் வருந்துகிறது. ஆயினும் என் செய்வது? போகப்

போகத்தான் தெரியும். கோர்ட்டில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்களென்று சொன்னேமல்லவா? "கும்பல் பெருத்தால் குசு பெருக்கும்" என்பதைப்போல், எங்குபார்த்தாலும் குசுகுசுவென்று பேசும் சப்தம் நிறைந்திருந்தது. மணியும் சரியாக பதினென்றாயிற்று. அப்போது கனம்பொருந்திய நீதிபதியவர்கள், தமதாசனத்தில் வந்து அமர்ந்ததும், இராமசுப்பனுடைய கேசை எடுத்துக்கொண்டார்.

இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலுநாயுடு, தமது ரிபோர்ட்டை (81-82 83-ம் பக்கங்களில் குறித்துள்ளது.) வாசித்தார். முறைப்படி, உடனே விசாரிக்கத் தொடங்கினர்.

முதன்முதலில், இன்ஸ்பெக்டரே சாட்சிக் கூண்டில் நின்றார். அவரிடம் சத்தியம் வாங்கியபின், அவர் பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தார்.

நான் பிரக்யாதி பெற்ற கள்ளனை, குமாரசாமி நாடானைப் பிடிக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறேனென்பது, யாவரும் அறிந்த விஷயம். அதற்காக நேற்றிரவும், பலவிடங்களில் அலைந்து திரிந்து விட்டு, இரவு சுமார் பதினொரு மணிக்கு, எனது ஜாகைக்குச் சென்றேன். எனது உடைகளை கழற்றப்போகும் சமயம், ஒரு ஆள் வேகமாய் வந்து, கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்ட சங்கதியைச் சொன்னான். நான், உடனே சில கான்ஸ்டேபிள்களுடன், அங்கு சென்றேன். மற்ற விவரங்களெல்லாம், எனது ரிபோர்ட்டிலேயே தெளிவாய்க் கண்டிருக்கிறது.—என்று சொல்லி முடித்தார்.

உடனே கோர்ட்டார், சாமராஜனை நோக்கி, கேள்விகள் கேட்பதானால் கேட்டுக்கொள்ளலாமென்றார்கள்.

சாமராஜனும் அவ்வாறே எழுந்து, கீழ்வரும் கேள்விகளைக் கேட்டார்.

சாமராஜன்:— இன்ஸ்பெக்டரவர்களே! நான் கேட்கும் சில கேள்விகளுக்கு, தாங்கள் கோபங்கொள்ளாமல் பதிலளிக்கக் கோருகிறேன். முதலில் தாங்கள் கோபாலகிருஷ்ணய்யர் அரையுள் நுழைந்தபோது, இதோ கைதி செய்யப்பட்டிருப்பவன், எப்படி யிருந்தானென்று சொல்லுங்கள்.

இன்ஸ்பேக்டர்:— இவன் மூர்ச்சையுற்றுக் கீழே கதவருகில்

வீழ்ந்துக்கிடந்தான். இவனது வலது புஜத்திலிருந்து, இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது.

சாம:— அப்போது கோபாலகிருஷ்ணய்யருடைய சவம், எப்படியிருந்தது?

இன்ஸ்:— மேஜைக்கருகில், கீழே மல்லாந்தபடி விழுந்திருந்தது.

சாம:— சவம் எதை நோக்கியவாறு விழுந்திருந்தது?

இன்ஸ்:— மேஜையை நோக்கியவாறு இருந்தது.

சாம:— சவம் உயிர் பெற்றெழுந்தால், மேஜையைத்தானே பார்க்க முடியும்?

இன்ஸ்:— (சிறித்துக்கொண்டே) ஆமாம். மேஜையைத்தான் பார்க்கலாம். தாங்கள் கேட்கும் கேள்விகள், விநோதமாயிருக்கிறதே. சவம் எங்கேயாவது உயிர் பெற்று வருமா?

சாம:— வந்தாலும் வரும். அதைப்பற்றி இப்போதென்ன? கேட்கும் கேள்விகளுக்கு மட்டும், பதில் சொன்னால் போதும். சவத்தைச் சோதித்ததில், என்னென்ன கண்டெடுத்தீர்கள்?

இன்ஸ்:— துப்பாக்கியைத் தவிர, வேறொன்றும் கிடைக்கவில்லை.

சாம:— அரையைச் சோதித்ததில், என்னென்ன கிடைத்தது?

இன்ஸ்:— கோபாலகிருஷ்ணய்யர் கைப்பட எழுதப்பட்டிருந்த உயில்தான் கிடைத்தது. வேறொன்றுமில்லை.

சாம:— என்னென்ன காணமற் போய்விட்டது?

இன்ஸ்:— ஓர் சீல் செய்த சிப்பமும், ஐந்துகோடி ரூபாய் மதிப்புள்ள நோட்டுகளும் களவாடப்பட்டிருக்கிறது.

சாம:— கைதியைப் பரிசோதித்ததில், என்னென்ன கண்டெடுத்தீர்கள்?

இன்ஸ்:— ஒரு பங்களாவின் புகைப்படமும், ஒரு வைர மோதிரமும், ஒரு கடிதமும், இரண்டு மூன்று ரூபாய்களும் கண்டெடுத்தோம்.

சாம:— அப்போது அங்கு யாராிருந்தது?

இன்ஸ்:— ஸ்ரீலோல சாஸ்திரிகளும், ஞானனந்த சுவாமிகளும், இன்னும் சில வேலைக்காரர்களும், கான்ஸ்டேபிள்களுமிருந்தார்கள்.

சாம:— அவர்களுக்கெல்லாம், இவ்வஸ்துக்களைக் காட்டினீர்களா?

இன்ஸ்:— இல்லை. ஞானனந்த சுவாமிகளும், ஸ்ரீலோல சாஸ்திரிகளும் பார்த்தார்கள்.

சாம:— தாங்கள் இப்போது அவைகளைக் கோர்ட்டில் ஆஜர் செய்திருக்கிறீர்களே, அவைகள் கண்டெடுத்தபடியே இருக்கவேண்டியதல்லவா? ஆகையால், அதை நீர் குறித்த இருவரும் கண்டால், முன்பிருந்த அடையாளங்களைத் தெரிந்துகொள்வார்களல்லவா?

இன்ஸ்:— (திடுக்கிட்டு சிறிது நேரம் யோசித்தபின்,) ஆகா! நன்றாய் அடையாளம் தெரிந்துகொள்வார்கள்.

சாம:— "கோர்ட்டாரவர்களே! தயவுசெய்து அம்மோதிரத்தையும், புகைப்படத்தையும் இன்ஸ்பெக்டர் குறித்த இருவரால், பார்வையிடப்படும்படி செய்யக் கோருகிறேன்." என்றதும். கோர்ட்டார் அவ்வஸ்த்துக்களை குமாஸ்தா மூலமாய், சாமராஜனிடம் அனுப்பினர்.

இதற்குள் சாமியார், தன் பக்கத்திலிருந்த ஸ்ரீலோலனிடம், "அவ்வஸ்துக்களில் எவ்வித மாறுதல் இருந்தாலும், ஆச்சரியக்குறி காண்பிக்காதே." என்று, இரகசியமாகப் புகன்றார்.

இதற்குள் சாமராஜன், அவ்வஸ்துக்களை இவர்களிடம் காண்பித்தார். அவர்களும் அதைப் பார்வையிட்டு, ஒன்றும் வித்தியாசமில்லையென்று, திருப்பிக்கொடுத்துவிட்டனர். கொடுக்கும்போது சாமியார், சாமராஜனிடம் ஏதோ இரகசியமாகச் சொன்னார்.

உடனே சாமராஜன், அவ்வஸ்துக்களை கோர்ட்டாரிடம் அனுப்பிவிட்டு, "கோர்ட்டாரவர்களே! இவ்வஸ்துக்களையும், இன்னும், இக்கேஸ் சம்மந்தமான தஸ்தாவேஜிகளையும் தாங்களே, தங்களிடம் வைத்திருந்து, நேரே செஷன்ஸுக்கு அனுப்பும்படி, மன்றாடி வேண்டிக்கொள்கிறேன்.

கோர்ட்டார்:— அப்படியே ஆகட்டும்; மேலே நடத்துங்கள். காலகாரணமாகிறது.

**சாம:**— அப்படியே, உத்திரவுபடி நடந்துகொள்கிறேன். (இன்ஸ்பெக்டரைப்பார்த்து) தங்களிடம் டாக்டர், கோபாலகிருஷ்ணய்யர் எதனுலிறந்திருக்கவேண்டுமென்று சொன்னர்?

**இன்ஸ்:**— ஒருவன் பின்புறமிருந்தபடி குறள்வளையை நெருக்கியதா லிறந்திருக்கவேண்டுமென்றூர்.

**சாம:**— கோபாலகிருஷ்ணய்யர் இறப்பதற்குமுன், அவருடைய தேக நிலைமையைப்பற்றி, டாக்டர் என்ன தெரிவித்தார்?

**இன்ஸ்:**— அவர் இறப்பதற்குமுன், க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு, வெகு பலஹீனமாயிருந்தாரென்றும், அதனுலேயே ஒரு மனிதன் பின்புறமிருந்து குறள்வளையை நெருக்கிக் கொல்ல முடிந்ததென்றும் சொன்னர்.

**சாம:**— சரி! இனி தாங்கள் செல்லலாம்.

என்றதும் இன்ஸ்பெக்டர் போய் தமதாசனத்தி லமர்ந்தார். இரண்டாவதாக டாக்டர் விசாரிக்கப்பட்டார். அவர் கூண்டிலேறி சத்தியம் செய்தபின் பாரிஸ்டர் பாப்பர் கீழ்வருமாறு கேள்விகள் கேட்டார்.

**பாப்பர்:**— டாக்டாவர்களே! தாங்கள் பரிசோதித்ததில் என்ன தெரிந்து கொண்டீர்களென்று சொல்ல வேண்டுகிறேன்.

**டாக்டர்:**— இக்கைதியை பரிசோதித்ததில் இவனுக்கு ஏற்பட்டிருக்கும் காயம் துப்பாக்கியால் சுடப்பட்டுண்டாயிருக்கவேண்டும். அதுவும் இன்ஸ்பெக்டருடைய ரிபோர்ட்டில் கண்டப் பிரகாரம் பத்தடித்து முப்பது நிமிஷத்திற்கெல்லாம் உண்டாயிருக்க வேண்டும். இறந்தவருடைய மரணம் குறவளையை பலமாக நெருக்கியிருப்பதால் உண்டாயிருக்கவேண்டும்.

**பாப்பர்:**— இறந்தவருடைய மரணத்திற்கு வேறேதேனும் காரணமிருக்குமோ?

68840

**டாக்டர்:**— வேறெவ்வித காரணமும் அவருடைய மரணத்திற்கு ஹேதுவாயில்லை.

**பாப்பர்:**— காயமடைந்திருக்கும் கைதிக்குக் காயமேற்பட்டதும், மரணமடைந்தவருடைய மரணமும் ஒரே சமயத்தில் ஏற்பட்டதாய்த்தானிருக்கவேண்டுமல்லவா?

டாக்டர்:— அப்படிச் சொல்ல முடியாது. சற்றேறக்குறைய வும், முன்னது பின்னதாகவும் தான் இருக்கவேண்டும்.—என்றார்.

இதோடு தன் கேள்விகளை நிறுத்திக்கொண்டு, பாரிஸ்டர் பாப்பர் தமதாஸனத்திலமர்ந்தார்.

உடனே சாமராஜன் எழுந்து, "டாக்டரவர்களே! நான் கேட்கும் கேள்விகளுக்கு, நன்றாய் யோசித்துப் பதில் சொல்ல வேண்டும். ஒரு மனிதன் தீய காரியத்தை எண்ணி வந்து, அக்காரியத்தை நிறைவேற்றுங்கால், அவனுக்கோரிடையூறுண்டாகுமானால், அவன் திகிலடைந்து மூர்ச்சையுறுவானல்லவா?" என்றார்.

டாக்டர்:— ஆம்! கட்டாயம் மனப்பிராந்தியால் மூர்ச்சையடைவான்.

சாம:— இப்போது இக்கைதி நேற்றிரவு மூர்ச்சையுற்றது, முற்கூறிய காரணத்தால் நடந்ததாயிருக்குமா? அல்லது காயமடைந்த அதிர்ச்சியினாலேயே, மூர்ச்சையடைந்திருப்பானா?

டாக்டர்:— காயத்தை பரிசோதித்தபோது, அவனுடைய ஹிருதயத்தையும் சோதித்தேனாகையால், இதற்கு நான் சரியான பதில் சொல்ல முடியும். அவன் எவ்விதமான இடையூறையும் எதிர்ப்பார்த்திருக்கவில்லை யென்றும், காயமடைந்த அதிர்ச்சியினாலேயே மூர்ச்சையுற்றிருக்க வேண்டுமென்றும் நம்புகிறேன்.

சாம:— அது போகட்டும்; நமது கனம் பொருந்திய நண்பர் பாரிஸ்டரவர்கள், மரணமடைந்ததும் காயமடைந்ததும் ஒரே சமயத்தில் நேர்ந்ததாவென்று கேட்டதற்குத் தாங்கள் முன்னதுபின்னதாக நடந்திருக்கவேண்டுமென்று பதில் சொன்னது, தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதில் மரணமடைந்தது முன்பு நடந்திருக்குமா? அல்லது காயமடைந்தது முன்பு நடந்திருக்குமா? என்பதை சற்று யோசித்து நிதானமாய்ச் சொல்லக் கோருகிறேன்.

டாக்டர்:— யோசிக்க வேண்டுவது ஒன்றுமில்லை. மரணமடைந்து சில நிமிஷ நேரங்களுக்குப் பிறகே, காயமடைந்தவனுக்கு காயமேற்பட்டிருக்வேண்டுமேன்று திட்டமாய்ச் சோல்கிறேன்.

சாம:— மிக்க வந்தனம். இத்துடன் எனது கேள்விகளை நிறுத்திக்கொண்டேன். எனது கேள்விகளுக்கு திருப்தியான பதிலளித்த

த்ற்காக எனது மனமுவந்த வந்தனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.— என்று சொல்லிவிட்டு, தனதாஸனத்திலமர்ந்தார்.

மூன்றுவதாக, கோபாலகிருஷ்ணய்யருடைய காரியஸ்தன் விசாரிக்கப்பட்டான். அவனை பாப்பர் பின்வருமாறு கிருஸ் செய்தார்.

பாப்பர்:— உனது பெயர், உத்தியோகம் முதலிய விவரங்களைச் சொல்லு?

**காரியஸ்தன்:**— எனது பெயர், கோவிந்தராஜுலு நாயுடு. நான் நுங்கம்பாக்கம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவின் மைத்துனன். நான் சுமார் பத்து வருஷ காலமாய் கோபாலகிருஷ்ணய்யரிடம் வேலைபார்த்து வருகிறேன்.

பாப்பர்:— அதிருக்கட்டும்; கோபாலகிருஷ்ணய்யர் இறப்பதற்குமுன், ஏதேனும் இக்கைதியைப்பற்றிச் சொல்லியதுண்டா?

**காரியஸ்தன்:**— உண்டு. இவர் அன்றிரவு எட்டு மணிக்கு வரப்போவதாகவும், அதற்காக போஜனம் தயார் செய்து வைக்கும்படியும் சொல்லியிருந்தார்.

பாப்பர்:— வேறொன்றும் இவரைப்பற்றிச் சொல்லவில்லையா?

**காரியஸ்தன்:**— இல்லை.

பாப்பர்:— போகட்டும்; என்னென்ன வஸ்துக்கள் காணமற்போய்விட்டன?

**காரியஸ்தன்:**— ஐந்துகோடி ரூபாய்கள் மதிப்புள்ள நோட்டுகளும் ஒரு சீல் செய்த சிப்பமும் காணமற்போய்விட்டன.

இத்துடன் பாப்பர் உட்கார்ந்துகொண்டார். உடனே சாமராஜனெழுந்து, "இன்ஸ்பெக்டருக்கு மைத்துனரென்றீரே, உமது சகோதரியை அவருக்குக் கொடுத்திருக்கிறதா? அல்லது அவருடைய சகோதரியை நீர் கொண்டிருக்கிறீரா?

**காரியஸ்தன்:**— எனது சகோதரியையே அவருக்குக் கொடுத்திருக்கிறது. எனக்கு இன்னும் மணமாகவில்லை.

சாம:— உமக்கு இப்போதென்ன வயது?

**காரியஸ்தன்:**— முப்பத்தைந்து ஆகிறது.

சாம:— உமது பூர்வோத்திரமான ஊர் எது?

காரியஸ்தன்:— காஞ்சீபுரம்.

சாம:— எந்த வீதியிலிருந்தீர்?

காரியஸ்தன்:— தலையாரித் தெருவில் குடியிருந்தோம்.

சாம:— குடியிருந்தோமென்கிறீரே, யார் யார் குடியிருந்தது?

காரியஸ்தன்:— இன்ஸ்பெக்டர் அவர்களும், அவருடைய தாயாரும் அவ்வீட்டின் ஒருபுறமிருந்தார்கள். நானும், எனது தங்கையும் ஒருபுறம் குடியிருந்தோம்.

சாம:— உனக்கு, உன் தங்கையைத் தவிர, வேறே உறவினரில்லையோ?

காரியஸ்தன்:— இல்லை.

சாம:— ஏன் நீங்களெல்லோரும் சென்னைக்கு வந்தீர்கள்?

காரியஸ்தன்:— திடீரென்று இன்ஸ்பெக்டருடைய தாயார் இறந்துவிட்டார்கள். அவருடைய தாயார் இறப்பதற்கு முன்பே கலியாணமாகியிருந்தது. இதற்குள் இவரையும் இங்கு மாற்றிவிட்டார்கள். வரும்போது, "நீமட்டும் ஏன் தனியாயிருக்கிறாய்? என்னுடன் வந்தால், ஏதாவது வேலை பார்த்து வைக்கிறேன்" என்று சொல்லி அழைத்து வந்தார். அதுமுதல் நான் இங்கேயே கோபால கிருஷ்ணய்யரிடம் வேலை பார்த்து வருகிறேன்.

சாம:— அது போகட்டும்; ஏதோ சீல் செய்த வஸ்து காணமற்போயிற்று என்று சொன்னாயே, அந்த சீல் செய்த வஸ்து அவரிடமிருக்கிறதென்பது, உனக்கெப்படித் தெரியும்?

காரியஸ்தன்:— நான்தான் அடிக்கடி அவருடைய இரும்புப் பெட்டியைத் திறப்பவன். அதில் இரண்டு சீல் செய்த சிப்பங்கள் இருப்பதை, பலதடவை கண்டிருக்கிறேன்.

சாம:— இரண்டுமா காணமற்போயிற்று?

காரியஸ்தன்:— இல்லை. ஒரு சிப்பத்தை இரண்டு தினங்களுக்கு முன், எஜமான் உத்திரவுப்படி, இக்கைதியின் மனைவிக்கு நானே அனுப்பிவைத்தேன். இன்னொன்றை அதுமுதல், எனது எஜமானர், தமது மடியிலேயே பத்திரமாய் வைத்திருந்தார். அவர்

சொல்லப்பட்ட அன்றும் அச்சிப்பம், அவர் மடியிலிருந்ததைப் பார்த்திருக்கிறேன்.

சாம:— அவர் அச்சிப்பத்தைப்பற்றி ஏதேனும் சொல்லியதுண்டா?

காரியஸ்தன்:— இல்லை.

சாம:— இனி நீ போகலாம்.—என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

மற்றுமுள்ள வேலைக்காரர்களெல்லாம் விசாரிக்கப்பட்டனர். எல்லாரும் இவ்வத்தியாயத்தின் முதலில் சொல்லியவாறே கூறினர். கைதியாகிய இராமசுப்பனும் இன்ஸ்பெக்டரிடம் சொல்லியவாறே வாக்குமூலம் கொடுத்தான். பிறகு லாயர்கள் ஆர்க்குமேன்ட் செய்யலாமென்று கோர்ட்டாரால் உத்திரவானவுடன் பாரிஸ்டர் பாப்பர் பின்வருமாறு தனதபிப்பிராயத்தை வெளியிட்டார்.

கனம் பொருந்திய நீதிபதி அவர்கள் நான் சொல்வதை முழுமனதுடன் கவனிக்க வேண்டுகிறேன். இக்கைதியை சாதாரணமாய் நோக்கில் யோக்கியனென்று தோன்றவில்லை. இவனுடைய நடவடிக்கைகளை நோக்கினலோ இவன் எத்தகைய கொடிய காரியத்தையும் செய்யவல்லவனென்றே தோன்றுகிறது. மேலும் பல துர்ச்சகவாசமுடையவனென்றும் வெளியாகியிருக்கிறது. இவனுக்கு இவனுடைய தந்தையாலளிக்கப்பட்டிருந்த இரண்டு லட்சம் ரூபாய்கள் வரை பெருமானமுடைய சொத்தை கூத்திக்கும் குடிக்குமாயழித்திருக்கிறான். இப்படி இவன் செலவு செய்திருப்பதால் மோசக்காரர்களும் போக்கிரிகளுமாக பலர் இவனுடன் பழகியிருக்கவேண்டுமல்லவா? ஒருவனுடைய குணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமானல்,

*Tell me your friends and I will*
*Tell you what you are.*

என்று ஒரு ஆங்கிலேயர் சொன்னதுபோல் அவனுடைய நண்பர்களைத் தெரிந்துகொண்டால் அவனுடைய நடவடிக்கைகள் தெரிந்துவிடும். ஆகையால் இவன் பணத்தைத் துர்வழிகளில் செலவு செய்து பல துர்ச்சகவாசமுடையவனென்று ஸ்பஷ்டமாய் தெரிந்திருக்கிறது.

மேலும் காஞ்சீபுரத்தில் பல கனவான்களை சில நாளையில் ஓட்டாண்டியாக்கிய மகா ஜெகஜ்ஜால வித்தைக் கள்ளியான தாசி மோகனு என்பவளிடம் இவன் பத்தாண்டு பழகியிருக்கிறனென்றால் இவனது குணத்தைப்பற்றி விஸ்தரிப்பானேன். (கரகோஷம்) ஆகவே இவன் எத்தகைய கொடிய குற்றத்தையும் செய்யக்கூடியவனென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அன்றியும் கடன் ஒருவன் வாங்கிவிட்டால் அதை அவன் திருப்பிக் கொடுக்கும்போது அவன் படும்பாடு இத்தகையதென்று சொல்லி முடியாது. இப்படி கடன் வாங்கிவிட்டு திருப்பிக்கொடுக்க வகையில்லாது தற்கொலை செய்து கொள்கிறவர்களின் தொகை கணக்கிட முடியாதது. இச்சென்னையில் அத்தகைய தற்கொலை மாதந்தோறும் ஒன்றுவது நடைபெறுமலிருப்பதில்லை. அத்தகைய கொடிய கடனை இவனும் வாங்கியிருக்கிறன். அதிலும் கொஞ்சமான கடன் இவன் வாங்கியிருந்தாலும் பரவாயில்லை. நாற்பதினாயிரம் ரூபாய்கள் கடன் வாங்கியிருக்கிறன். இங்கு நீங்களெல்லோரும் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. ஒருவன் கடன் வாங்கும்போது ஏதோ ஒன்றை திருப்பிக்கொடுக்க ஆதாரமாக வைத்துக்கொண்டே கடன் வாங்குகிறன். அதற்கொரு உதாரணம் சொல்கிறேன். ஒரு உத்தியோகஸ்த னிருக்கிறன். அவன் வீட்டில் ஒரு கலியாணம் வந்துவிடுகிறது. அதற்காக வேண்டி ஆயிரம் ரூபாய்கள் கடன் வாங்கிவிடுகிறன். அவன் என்ன நினைத்து வாங்குவானென்றால், தனது சம்பளத்தில் சிறிது பாகத்தை மாதந்தோறும் மிச்சப்படுத்தி கொடுத்துவிடலாமென்று உத்தேசித்தே வாங்குவான். இப்படியே ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வருகையை நம்பியே முன்பாகக் கடன் வாங்குகிறர்கள். ஆனல் நமது கனம்பொருந்திய கைதியவர்கள் எத்தகைய பெருத்த வரும்படியை நம்பியோ தெரியவில்லை இவ்வளவு பெருந்தொகையைக் கடன் வாங்கிவிட்டார். கைவரண்டுபோகவே வீட்டையும்போய்ச் சேர்ந்து ஒரு உத்தியோகத்தையும் ஜீவனர்த்தத்திற்காக வகித்துக்கொண்டார் போலும். இத்தகைய நிலைமையிலுள்ள இவருக்கு வாரன்ட் வந்து விட்டதென்றல் என்ன செய்வார் பாவம். ஒரே ஒரு வழிதானுண்டு. அதுதான் யாதென்றல் தன் மனைவிக்குச் சேரவேண்டிய பொக்கிஷத்தின் பாகத்தைக் கேட்பது. அப்படி கொடுக்க மறுத்தால் அவரைக் கொன்றுவிட்டு முழு பொக்கிஷத்தையும் தானே அப

கரித்துக்கொள்வது என்ற தீர்மானத்தோடு சென்னைக்கு வந்திருக்க வேண்டும். அதற்கு இன்னொரு அத்தாட்சியுமுண்டு. இவர் எட்டு மணிக்கு வருவதாகத் தந்தி கொடுத்துவிட்டு இரவு பத்தரை மணிக்கு வருவானேன்? இது ஏதோ ஒரு கருத்தை யுத்தேசித்துத்தானே இருக்கவேண்டும்? அதற்குத் தன்னையாரோ ஒரு கொள்ளைக்காரன் மறித்துக்கொண்டானென்றும், எவரோ ஒரு கனவான் தன்னைக் காத்தாரென்றும் சொல்கிறான். அப்படி காத்தது உண்மையானால் என் அக்கனவான் கோர்ட்டிற்கு வரவில்லை? இக்கேஸ் சென்னை முழுதும் பரவியிருப்பதால் இவன் சொல்லும் சங்கதி நிஜமானால் அம்மனிதர் வந்தேயிருப்பார். அப்படி வராததால் இவன் சொல்வதெல்லாம் பொய்யெனத் தோன்றவில்லையா? ஆகவே இவன் முன் கூட்டி யோசித்து தான் முன்னேரத்தில் சென்றால் தன்னுடைய நோக்கம் கைகூடாதெனவெண்ணியே இரவு வெகுநேரங் கழித்துச் சென்றிருக்கவேண்டும். கடைசியாக ஒரு விஷயம் சொல்லிவிட்டு அமர்ந்துவிடுகிறேன். கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டிருக்கும் அறைக்கு ஒரே வாசலைத் தவிர்த்து உள்ளே நுழையவாவது வெளியே செல்லவாவது மார்க்கமில்லை. ஆகவே வெடி சப்தம் கேட்டதும் வேலைக்காரர்கள் வந்துவிட்டபடியால் இவனைத் தவிர்த்து வேறு ஒருவரோ இருவரோ இருந்திருந்தால் வேலைக்காரர்களின் கைகளில் கிடைத்திருக்கவேண்டும். அப்படி வேறு யாரும் அவர்கள் கண்களில் தென்படவில்லை யாகையாலும் அவ்வறையை ஸ்ரீராமுலு நாயுடு ஏற்கனவே மிகுந்த முன் யோசனையுடன் பரிசோதித்ததில் எவ்வித சுரங்கமுமில்லையென்று கண்டுபிடித்திருப்பதாலும் இப்போது கைதி செய்யப்பட்டிருப்பவனையன்றி வேறு யாரும் கொலை செய்திருக்கமுடியாதென்று நான் சொல்லத் தேவையில்லை.

ஆகையால் நமது கனம் பொருந்திய நீதிபதியவர்கள், நான் கூறியவைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து குற்றவாளிக்கேற்ற தண்டனை விதிக்கக் கோருகிறேன்.—என்று சொல்லித் தமதாசனத்திலமர்ந்தார்.

உடனே சாமராஜன் எழுந்து மிகுந்த வணக்கமாய் நீதிமன்றத்தை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

கண்யம் வாய்ந்த நீதிபதி அவர்களே!

ஒரு வஸ்துவை அழித்தலெளிது. ஆனால் ஆக்கலரிது. நமது ஜீவகாருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் கவர்ன்மென்ட் ஒரு சிறு துரும்புக்கும் கெடுதலியற்ற எண்ணிலது. எனவே ஒவ்வொரு நீதிபதியும் நமது காருண்ய கவர்ன்மென்ட்டுக்கு பிரதிநிதிகளேயாவார்கள். ஆகையால் ஒரு குற்றவாளியை தண்டிப்பது நியாயமாயின் ஒரு தீங்குமில்லை. அன்றி அநியாயமாயின், அதனாலுண்டாகும் பாவ மூட்டையும் பழிச்சொல்லும் பொருத்தற்பாலதன்று. ஆகவே இக்கேஸிலும் யாதுமறியாத குற்றமற்ற இக்கைதி விஷயத்திலும் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்த்துப்பின் தீர்ப்பளிக்குமாறு மன்றாடி வேண்டிக்கொள்கிறேன்.

கருணை வாய்ந்த நீதிபதி அவர்களே! இக்கைதி எவ்விதத்திலும் குற்றமற்றவனென்பதை இனி சொல்லப்போவதால் தெரிந்துகொள்வீர்கள். நமது கனம் பாரிஸ்டர் பாப்பரவர்கள் எடுக்கும்போதே கைதியைப் பார்த்தால் யோக்கியனாகத் தோன்றவில்லை என்றார். அவர் சொன்னதை சரியென்று வைத்துக்கொண்டாலும் ஒரு மனிதனுடைய முகத்தைப்பார்த்து இவன் யோக்கியனல்லன் என்று தெரிந்துகொள்ளும்போது அவன் எவ்வளவு அயோக்கியத்தன்மை வாய்ந்தவனென்பதும் தெரியுமல்லவா? அகத்தினழகு முகத்தில் தெரியுமென்பார்கள். அதைப்போல் கொலை செய்தவன் முகத்தில் தோன்றும் பிரம்மஹத்தி தோஷம் இவன் முகத்தில் பிரகாசிக்கின்றதாவென்று பாருங்கள். (எல்லோரும் கைதியின் முகத்தை நோக்கினர்.) இரண்டாவதாக நமது நண்பர் இவன் பணவிரயம் செய்ததால் பல துர்ச்சகவாஸமுடையவனென்று தெரிகிறதென்றார். அப்படிச் சொல்லிய இவர் இன்னின்ன துஷ்டர்கள் இவனுக்கு நெருங்கிய சிநேகிதர்களென்று தெரிவிக்கவில்லை. இதனால் இவர் அவன் துர்ச்சகவாசமுடையவனாயிருக்கலாமென்று சந்தேகிக்கிறாரேயொழிய உண்மையில் அவன் அப்படிப்பட்டவன் என்பதற்கு யாதொரு சாட்சியுமில்லை. அப்படி ருஜூப்படுத்த நமது நண்பர் முயன்றதாகவும் தெரியவில்லை. அவன் எட்டு மணிக்கு வருவதாகத் தந்தி கொடுத்துவிட்டு பத்தரை மணிக்கு ஏன் வந்தான் என்கிறார். அவன் அதற்குத் தகுந்த காரணம் சொல்லியும் அப்போது காப்பாற்

றிய கனவான் இப்போது வாராததால் பொய்யாயிருக்கலாமென்கிறார். மனிதருக்கு மறுநிமிஷத்தில் என்ன நடக்கப்போகிறதென்பதே தெரிவதில்லை. ஒரு மனிதன் இவ்விநாடி உயிருடன் இருக்கிறான். அடுத்த விநாடி ஆவியைத் துறக்கிறான். இவ்விநாடி இத்தேயத்திலிருக்கிறான். அடுத்த விநாடி அயல் தேயத்திற்குச் செல்கிறான். இன்று திடகாத்திர தேகியாக இருக்கிற ஒருவன் நாளை பிழைக்கக் கூடுமென்கிற நம்பிக்கையற்ற வியாதியால் பீடிக்கப்படுகிறான். இத்தகைய காரணங்களால் கைதி குறிப்பிடும் நண்பர் இங்கு வரத் தடைப்பட்டிருக்கலாம். ஆகையால் இதையே ஆதாரமாகக்கொள்ள முடியாது. கடைசியாக நமது நண்பர் ஒரு விஷயத்தை மிகவும் வற்புறுத்திச் சொன்னார். அதை ஆழ்ந்து நோக்கினால் அவருடைய நோக்கத்திற்கு பிரதிகூலமாகவே முடிகிறது. கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டிருக்கும் அறைக்கு ஒரே வாசலைத் தவிர்த்து வேறு வழியில்லையென்றும் வெடி சப்தம் கேட்டவுடன் வேலைக்காரர்கள் வந்துவிட்டதாலும் இவனைத் தவிர்த்து வேறு யாருமில்லையாகையாலும் அப்படி யிருந்து தப்பிச் சென்றார்களென்று சொல்வதற்கு மார்க்கமில்லையென்று இன்ஸ்பெக்டர் கண்டுபிடித்திருப்பதாலும் இக் கைதியே குற்றவாளியாயிருத்தல் வேண்டுமென்று நமது நண்பர் சொல்கிறார். அதை ஆமோதித்தால் அங்கு காணாமற்போன பொருட்களும் இவனைத் தவிர்த்து வேறு யாரும் எடுத்திருக்க முடியாது. ஆகையால் அப்பொருளும் இவனிடம் இருந்திருக்கவேண்டும். இருந்ததா? இல்லை. என் இல்லை? இக்கைதி வாக்குமூலம் கொடுத்தபடி அவனிடம் பொருட்களிருக்கின்றனவே யொழிய வேறு பொருட்களில்லை. இவன் ஒளித்து வைத்திருந்தாலும் அருகிலேயே வைத்திருக்கவேண்டுமாகையால் சோதனையில் அகப்பட்டிருக்கும். இன்னொருவனிடம் கொடுத்தனுப்பியிருப்பானென்பதற்கும் இன்ஸ்பெக்டர் இன்னொருவன் அங்கிருந்து போயிருக்க முடியாதென்று ரூபித்திருக்கிறார். இதை யெல்லாம் கவனித்தால் இவன் எப்படி குற்றவாளியாவான்? **ஆகையால் இன்னொருவன் அவ்வறையிலிருந்திருக்க வேண்டும்.** மேலும் வேலைக்காரர்களை விசாரித்ததில் இரண்டு **வெடி சப்தம்** உண்டானதாகச் சொல்கிறார்கள். அப்படி உண்டாகக் காரணமென்ன? இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணய்யரை இக்

கைதி கொல்ல முயன்ற தருணத்தில் கோபாலகிருஷ்ணய்யரே இவனது வலது தோளில் சுட்டிருக்கவேண்டுமென்றார். அப்படியிருந்தாலும் ஒரு வெடிசப்தந்தானே கேட்டிருக்கவேண்டும்? இரண்டு வெடிசப்தம் எப்படி உண்டாயிற்று? இரண்டும் கோபாலகிருஷ்ணய்யரே யுண்டாக்கினரென்பதற்கும் ஹேதுவில்லை. ஏனெனில்; அவருடைய கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு குண்டு யார் பிரயோகித்தது? இக்கைதியா? அப்படியானல் இவனிடம் துப்பாக்கி யிருந்ததா? இல்லை. ஆகையால் துப்பாக்கி வைத்திருந்த இன்னொரு மனிதன் அந்த அறையில் அப்போது இருந்திருக்கவேண்டும்.

நியாயாதிபதியவர்களே! மேற்கூறிய காரணங்களால் இன்னொருவன் அவ்வறையிலிருந்து எப்படியோ தப்பிச் சென்றிருக்கவேண்டுமென்று நன்கு புலப்படுகின்றதல்லவா? அன்றியும் இன்ஸ்பெக்டர் சொல்லியபடி கோபாலகிருஷ்ணய்யர் உயிர் பெற்றெழுந்திருந்தால் மேஜையையே நோக்க முடியும். ஆகையால் பின்னுலிருந்து ஒருவன் அவர் குரள்வளையை நெருக்கியபோது அவர் சுடவேண்டுமானல் திமிறித் திரும்பிச் சுட்டிருக்கவேண்டும். அப்படி சுட்டிருந்தால் பிணம் வாசற்படியை நோக்கியவாறு விழுந்திருக்கவேண்டும். அவ்வாறு நடைபெருமையால் (ஏனெனில் டாக்டர் சொல்லுகிறபடி அவர் பலஹீனராகையால் திமிறித் திரும்பியிருக்க முடியாதென்பதாம்.) அவர் துப்பாக்கியால் சுட்டேயிருக்கமாட்டார். இராமசுப்பன் சொல்கிறபடி இராமசுப்பனைச் சுட்டவனே வேண்டுமென்று அதையும் பிரயோகித்திருக்கவேண்டும். அதை நிரூபிக்க இன்னொரு சாட்சியுமுண்டு. இரண்டு வெடிசப்தம் கேட்டதல்லவா? ஒன்று இராமசுப்பனைச் சுட்டதாலேற்பட்டிருக்கவேண்டும். இரண்டாவது கள்ளனல் வேண்டுமென்று சவத்தின் கையிலிருந்ததைப் பிரயோகித்ததாலுண்டாயிருக்கவேண்டும். இதனுல் இன்ஸ்பெக்டர் அனுமானித்தபடி நடக்கவேண்டுமென்று எதிர்ப்பார்த்திருத்தல் சகஜந்தானே? நான் சொல்லியதையெல்லாம் ஒருங்கு சேர்த்து ஆராய்ந்துப் பார்த்தால் கைதியான இராமசுப்பன் சொல்லியவை யெல்லாம் உண்மையினும் உண்மையாயிருக்கவேண்டுமென்று ஐயமறத் தோன்றும். தயை பொருந்திய நியாயாதிபதியவர்கள், அவ்வறையில் இருந்

திருக்கவேண்டுமெனத் தோன்றும் மனிதனைக் கண்டுபிடிக்கும் வரை இந்த இராமசுப்பன்மீது குற்றத்தை சுமத்தாமலிருக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். இன்னொரு விஷயம் கவனிக்க வேண்டியிருக்கிறது. டாக்டர், இராமசுப்பன் காயமடைந்தது பத்தரை மணிக்கும் கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டது பத்தடித்து பத்து நிமிஷத்திற்கும் நேர்ந்திருக்குமென்றார். நமது நண்பர் பாப்பரவர்கள் "கொலையுண்டதும் காயமடைந்ததும் ஒரே சமயத்தில் நேர்ந்திருக்கவேண்டுமல்லவா?" என்றுகேட்டதற்கு டாக்டர் என்னசொன்னார்? "முன்னது பின்னதாகத்தான் நடந்திருக்கவேண்டும்." என்று சொன்னார். நான் அதையே எது முன்பு நடந்திருக்கவேண்டுமென்றதற்கு "கொலையுண்டவர் மரணமடைந்து சில நிமிஷ நேரங்களுக்குப் பிறகே காயமடைந்தவனுக்கு காயமேற்பட்டிருக்கவேண்டுமென்று திட்டமாய்ச் சொல்கிறேன்." என்றாரல்லவா? இதனால் இக்கைதிக்கு உண்டாயிருக்கும் காயம் இன்ஸ்பெக்டர் உறுதியாகச் சொல்லியபடி கோபாலகிருஷ்ணய்யரால் உண்டாயிருக்க முடியுமா என்று தாங்களே சிந்தித்துப் பாருங்கள். இக்கைதி அவ்வறைக்குள் நுழைவதற்கு முன்பே கோபாலகிருஷ்ணய்யர் கொல்லப்பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறதல்லவா? நீதிபதியவர்களே! நான் கூறியவைகளெல்லாவற்றையும் சீர்த்தூக்கிப்பார்த்து தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.—என்றதும் நாற்காலியில் அமர்ந்தார்.

நியாயஸ்தலம் நிசப்தமாயிருந்தது. நியாயாதிபதியின் வாயினின்று எத்தகைய தீர்ப்பு வெளிவருமோவென்று ஆவலுடன் எல்லோரும் அவரையே நோக்கினர். எல்லோர் மனமும் படபடத்தது. இந்த நிலைமையில் "மாஜிஸ்ட்ரேட்" அவர்கள் எழுந்து பின்வருமாறு தீர்ப்பளித்தார்.

"நேரமாய்விட்டதென்பதைக் கருதி தீர்ப்பை சுருக்கமாய் வெளியிடுகிறேன். நான் முதலிலிருந்தே இக்கேஸை வெகு கவனமாய் நோக்கி வந்திருக்கிறேன். இரண்டு வக்கீல்களின் வாதத்தையும் கவனித்ததில் இக்கைதியைத் தவிர்த்து அவ்வறையில் இன்னும் ஒருவரோ இருவரோ இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இப்போது இக்கைதி குற்றவாளியல்லவென்றும் தீர்மானிக்க முடியாது. ஆகையால் இன்ஸ்பெக்டரை அவ்வறையில் இருந்திருக்க வேண்டுமென்று அனுமானிக்கும் ஒருவனை கண்டுபிடிக்கும்படி வேண்டிக்

கொள்வதுடன் இக் கைதியையும் தக்க பெரிய மனிதர் ஜாமீன் கொடுக்க ஒப்பினால் ஜாமீனில் விடலாமென்றும் தீர்ப்பு செய்கிறேன். இக்கேஸ் முழுமையும் நன்கு ஆராயும்படி இதில் சம்மந்தப்பட்ட ரிகார்ட்டுகளுடன் செஷன்ஸுக்கு அனுப்பிவைக்கிறேன்." என்று சொல்லி முடித்தார்.

உடனே வக்கீல் சாமராஜன் ஜாமீன் கொடுத்து இராமசுப்பனை விடுவித்தார். எல்லோருமாக உடனே வண்டிகளில் ஏறிக்கொண்டு ஞானானந்த சாமியாரிடம் விடைபெற்றுச் சென்றனர். அத்தருணம் ஒரு சேவகன் சாமியாரிடம் வந்து "குமாரசாமி நாடான் தப்பித்தோடிவிட்டான்." என்றான். அதைக் கேட்ட சாமியார் "ஆ! அப்படியா!" என்றதும் ஆச்சரியவசத்தரானார்.

# ஆரும் அத்தியாயம்.

## ஒரு ரோமம் போனாலும் கவரிமான் வாழாது.

1. பன்றி பலகுட்டி பயந்ததனாலேது பயன்
ஒன்றமையாதோ கரிக்கென்றேது.

2. அற்றது பற்றெனின் உற்றது மோட்சம்

3. —கற்றான்
பிளந்திறுவதல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான்

4. இறந்திடவரினுமல்லா விடுக்கவொன்று(உ)றினும் தம்பாற்
பிறந்திடு மானந்தன்னை விடுவரோ.

---

நுங்கம்பாக்கத்தில் கோபாலகிருஷ்ணய்யர் கொலையுண்ட இரவிற்கு மறுநாள் அதே சமயத்தில் எனுத்தூரில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம். அன்று சாயங்காலம் மஹலட்சுமி அதிக மனவேதனையோடு வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளப்போது விசனித்துக் கொண்டிருந்தாள் என்பது அப்போதைய தோற்றத்தால் நன்கு புலப்பட்டது. அவளது மாமியார், சுப்புலட்சுமி ஒரு மூலையில் படுத்துக் கொண்டிருந்தாள். காலம் சென்று கொண்டேயிருந்தது. இரவு 7 மணியாயிற்று. அப்போதே மின்சாரம்தாக்கப்பட்டவள் போல மஹலட்சுமி எழுந்து சுப்புலட்சுமியை உண்பதற்கழைத்தாள். சுப்புலட்சுமியும் எழுந்துப் போய் போஜனத்தை முடித்துக்கொண்டு மறுபடியும் படுத்து விட்டாள். ஆனால் மஹலட்சுமி மட்டும் உண்ணுமல் மிகுந்த துக்கத்துடன் புறக்கடைப் பக்கமுள்ள சோலையிற் சென்று அங்கு கிடந்த பாறையின் மீதுட்கார்ந்தாள். இச்சோலை செயற்கை யழகோடு பிரகாசிக்காவிட்டாலும் இயற்கைத் திருநலங்கள் யாவும் அமையப்

பெற்று பார்ப்பதற்கு மனோரம்மியமாய் விளங்கியது. அது முன்னிருட்டுக் காலமாகையால் அச்சோலையினருமை அப்போது நன்கு தெரியவில்லை. ஆனாலும் நாழிகை செல்லச் செல்ல அர்த்தச் சந்திரன் ஆகாயத்தில் மாசில்லா மணியாய்த் தோன்றியவுடன் அச்சோலை நிலமகள் திலகமாய் விளங்கி அதன் அந்தத்தை ஆயிரமடங்குயர்த்திக் காட்டிற்று. இப்படிப்பட்ட சோலையில் சொர்னப் பாவையைப் போல் பாறையின்மீதமர்ந்திருந்த பைந்தொடியாள் தென்றலாலும் நிலவினாலும் மனம் பரவசமடையாது வருந்திக்கொண்டிருந்தாளென்றால் அவ்வருத்தத்தின் காரணம் மிக்க விபரீதமானதாகவேயிருக்கும். அம்மங்கை நல்லாள் அங்கையில் சிரம் வைத்து அழுதுகொண்டிருந்தாள். கண்ணாடியில் முத்துகள் உருள்வதைப்போல் அவ்வனிதாமணியின் நயனங்களிலிருந்து கண்ணீர் கன்னங்களில் உருண்டோடியது.

இவ்வாறு சிறிது நேரம் விம்மி விம்மி அழுதபின்,

துட்ட வஞ்சக நெஞ்சகமே யொன்று
சொல்லக் கேள் கடல் சூழுலகத்தில்
யிட்ட மென்கொலி றையள வேனுமோ
ரின்பமில்லை யிடைக் கிடை யின்னல்க
ணட்ட மிக்குறல் கண்டுகண் டேகினை
நாணு கின்றிலை நாயினுங் கடையை நீ
பட்ட வன்மைக ளெண்ணி லெனக்குடற்
பதைக்கு முள்ளம் பகீரென வேங்குமே.

என்ற பாடலை நினைத்துருகி மனம் வெதும்பினாள். இன்னும் அவளது ஆருத்துயரம் குறைந்தபாடில்லை. விம்மினாள்; பிதற்றினாள்; எழுந்து நின்றாள்; உட்கார்ந்தாள்; மறுபடியும் எழுந்து இங்குமங்கும் உலவினாள்; திடீரென்று கீழே மண்டியிட்டு அண்ணாந்துப் பார்த்துக் கீழ் வருமாறு பிரலாபித்தாள்.

உன்னை நினைந்திங்கே யுலாவுகின்றேனன்றி யெந்தாய்
பின்னை நினைப் பொன்றும் பெற்றிலேன்.

ஏ கருணாநிதியே! கிருபைக் கடலே! கண்ணாரமுதே! எண்ணாதெண்ணுமிந்த யேழை முகம் பாராயோ; அண்ணலே! அடியாள் நின்னை எண்ணிலேன் என்று கோபமோ? கோபத்தைத் தாங்க

பேயினுங் கொடிய பேதையேனாலாகுமோ? பஞ்ச பாணனும் தாங்கா தவத் தாபத்தை யெனக்கோ பணித்தருளினாய். வேண்டாம். வேண்டாம். ஆவித் துணையே! என் ஆரமுதே! உயிர்க்குயிரே! நினையல்லால் கதியேதப்பனே! இன்னுமிந்த துன்பச் சுமையை சுமக்க முடியாதென்றால். என்னரசே! அன்பர்க் கருள்வோய்! என்னையும் ஆண்டு இரட்சித்தருள்வாய். விண்ணமுதே!

இன்பப் பெருக்கே! அருட் கடலே!
இறையே! அழியா இரும் பொருளே!
அன்பர்க் கருளும் பெருங் கருணை
அரசே! உணர்வால் ஆம் பயனே!
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி வடிவே!
வடி வேல் மணியே! என்
துன்பத் திடரைப் பொடி யாக்கிச்
சுகம் தந் தருளத் துணியாயோ!

என்று பாடியதும் அப்படியே மயங்கிப் பூமியில் விழுந்தாள். பக்திப் பரவசமுற்றாள். மறுபடியும் உணர்வு பெற்றாள். பிதற்றலுற்றாள்.

"ஏ! கருணையங் கடவுளே! நான் கேள்விப்பட்டது உண்மை தானா? இப்படியும் நடக்குமா? என் கணவன் பல வழிகளில் கெட்டுப் போயிருந்தாலும் கொலைபாதகனல்லவே? அவரைப்பற்றி வெளிவந்திருக்கும் அவதூறு மெய்யாயிருக்குமா? ஐயோ! அப்படியிருந்தால் என்னைப் போல் அபாக்கியவதியு முண்டா? ஏ! ஷண்முகநாதா!

இளமையில் வருமை மிகவும் பொல்லாது
இப்படிக் கடவுள் அமைத்ததும் தீது.

என்பதைப்போல் பாலப் பிராயமுதல் வறுமையையே அனுபவித்தவளன்றோ? இனியும் துன்பம் வந்தால் நானெப்படி சகிப்பேன்? வேலு மயிலும் தரித்துச் சூரனைக் கொன்ற வீராதி வீரனே! என் கணவன் குற்றவாளியா? கொலைக்காரனா? அப்படியானால் இப்போதே எவ்விதத்திலும் தெரியும்படிச் செய். எனது அற்ப ஆயுளை முடித்துவிடுகிறேன். இனி சகிக்கேன். மானம் போனபின் வாழ்வேதற்கு? நானிருப்பதில் யாருக்குப் பயன்? ஆறுமுகப் பெருமானே! அத்தியின் உரியாய்! அருந்தமிழ் முதல்வா! பக்தியால் கனிந்து பாடிடும் அடியார் பண்புறப் பாலிக்கும் வள்ளால்! சத்திய நெறியே!

சற்குண முதலே! சந்ததம் நினதடி வழுத்தும் யான் இனி சகிக்கேன்! சகிக்கேன்!! இவ்விடரைச் சகிக்கேன்!!!

என்றதும் அடியற்ற பனைபோல் அவனியில் விழுந்தாள்.

* * * * * *

விழித்துப் பார்த்ததும் திடுக்கிட்டாள். ஏன்? தான் ஏதோ ஒரு சுகமான படுக்கையில் படுத்திருப்பதாகத் தோன்றியதால்தான். அவளுக்கு இன்னும் சரியான உணர்வுண்டாக வில்லை. அவள் விழித்துக்கொண்டிருப்பதும் அல்லது தூங்கிக்கொண்டிருப்பதும் இரண்டுமின்றி உணர்வற்றிருப்பதும் எதுவும் அவளுக்கு நன்ருய் விளங்கவில்லை. தான் கடைசியாக கடவுளைச் சோலையில் துதித்துக் கொண்டிருந்ததும் பக்திப் பரவசமுற்றதும் தன்னை மறந்து மூர்ச்சையுற்றதும் அவளுக்குச் சிறிது சிறிதாக நினைவிற்கு வந்தது. அவள் மறுபடியும் விழியை நன்ருய்த் திறந்து தன்னைச் சுற்றி நோக்கினுள். அப்போதே அவளுக்கு தான் ஒரு மிருதுவான பஞ்சணைகள் போடப்பட்டிருக்கும் கட்டிலில் படுக்கவைத்திருப்பதாகத் தோன்றிற்று. அது ஒரு விசாலமான அரை போன்றும் தெரிந்தது. அவளடைந்த பீதிக்கோரளவேயில்லை. அவள் இன்னுமொருதரம் அவ்வரையை நன்ருய் உற்று நோக்கி, "ஆ! தெய்வமே! இதென்ன விபரீதம்? நானெங்கிருக்கிறேன்? எனுத்தூரில் எனது வீட்டின் சோலையிலல்லவா கடவுளைத் தொழுதுகொண்டிருந்தேன்? இங்கு எப்படி வந்தேன்? இதைப் பார்த்தால் படுக்கையரையைப்போல் இருக்கிறதே! இம்மஞ்சம் யாருடையதோ?.........என்ன இது? நான் இப்போது காண்பதெல்லாம் கனவோ? அல்லது நினைவோ? நான் சுயவுணர்வோடுதானிருக்கிறேனு? அப்படியானுல் இதெல்லாம் உண்மைத்தோற்றந்தானு? ஐயோ! கடவுளே! இப்படியும் நடக்குமா? என்னை யாரேனும் தூக்கிக்கொண்டு வந்து இங்கு வைத்திருப்பார்களோ?......என் என்னைத் தூக்கிக்கொண்டு வரவேண்டும்? திருடர்கள் தூக்கிக்கொண்டு வந்திருப்பார்களென்பதற்கும் என்னிடம் எவ்வித அணியுமில்லையே! எந்த பயனை யுத்தேசித்து என்னை யெடுத்து வந்திருப்பார்கள்?.........இப்போது எங்கு பார்த்தாலும் சூரியக் கிரணங்கள் பரவி யிருக்கின்றதே! நான் சோலையிலிருந்தது இராக்காலமல்லவா? என்னை எவ்வளவு தூரத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்

களோ தெரியவில்லையே! ஆ! தெய்வமே! இப்படியும் என் விஷயத்தில் சதி செய்யலாமா? இது நீதியாமா? தர்மமாமா? அடியார்க் கடியனே! அடியாள் நினக்கிழைத்த அபாராதமென்னவோ? குறமகளை மணந்த கோமானே! மாலின் மருகனே! உன்னை நினையாத நேரம் எனதாயுளின் பாரமாகக் கருதினவளல்லவா? எனக்கு ஒன்றன்பின் ஒன்றாய் துன்பங்களை உண்டாக்கினால் எப்படி இவ்வுயிரைத் தரித்திருப்பேன்? ஆதியிலிருந்து கணவனால் கஷ்டமெய்தினேன். அதை நிவர்த்தித்தாய். அவர் என்னை வந்தடையச் செய்தாய். ஆனால் குருடனுக்கு ஒரு நிமிடம் பார்வையளித்து மறு நிமிடம் பறித்துக் கொண்டதைப்போல் கொஞ்ச காலம் சுகத்தைத் தந்து மறுபடியும் இடாகத்தில் புகுத்தினையே. அதுவும் ஒன்றாயிருந்தாற் பரவாயில்லை. முதலில் கூடிப் பிரியாதிருந்த பிராணபதியைப் பிரியச் செய்தாய். அவர் கொலை செய்துவிட்டார் என்ற வதந்தியை என் காதில் புகச் செய்தாய். அதைப்பற்றி வருந்தி உன்னிடம் முறையிட்டால் அதற்கு செவிசாய்த்தருளாது இன்னுமிப் புதிய துன்பத்தை யுண்டாக்கிச் சோதிக்கின்றனையே!...........உன்னை நோவதில் உபயோகமில்லை. எல்லாம்,

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

என்பது எனக்குமட்டும் சொல்லியதா? உலகிற்கே சொல்லியதல்லவா? "அவனன்றி யோரணுவும் அசையாது." என்பதும் பொய்க்குமா?

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன தொட்டுன்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படி வருமோ சலியாதிரு ஏழைநெஞ்சே.

என்றதும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டாள். என்னவிருந்தாலும் பெண்பால் தானே. புத்தி சபலிக்காமலிருக்குமா? கொஞ்ச நேரம் துக்கிப்பதும் சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாது மௌனமாய் மனதைத் தேற்றிக்கொள்வதுமாக வெகு நேரம் பொழுதைப் போக்கினாள். அடிக்கடி ஏதேனும் ஒலியோடும் சப்தம் கேட்டாலும் யாராவது வருவார்களா? அவர்களைக் கேட்டாவது விஷயத்தைத்

தெரிந்துகொள்ளலாமல்லவா? என்று நினைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்து ஏமாற்றமடைவாள். இப்படியாகக் காலம் சென்றது.

சரியாகப் பகல் 12-மணி சமயத்திற்கு அவ்வறையின் கதவு சிறிது சிறிதாகத் திறக்கப்பட்டதும் ஓர் விருத்தாப்பிய முகம் உட்புறத்தை நோக்கிற்று. இதைக் கண்டவுடன் மஹலட்சுமி தட்டென்று கதவிற்கருகில் ஓடினாள். இதற்குள் கதவைத் திறந்த கிழவி உட்புறம் வந்து கதவை மறுபடியும் மூடித் தாளிட்டுவிட்டாள். அதைக் கண்ட மஹலட்சுமி அதிக ஆச்சரியமும் கோபமுமடைந்தாளாயினும் நயத்திலல்லாது காத்திலொன்றும் பலியாதென மனதில் எண்ணிக்கொண்டு அக்கிழவியை நோக்கி "பாட்டி! இது யாருடைய வீடு? நானெங்கிருக்கிறேன்? என்னை யார் கொண்டுவந்தார்கள்? இதையெல்லாம் எனக்குத் தெரிவித்தால் உனக்கு மிகுந்த புண்ணியமுண்டு." என்று நயமாக வினவினாள்.

கிழவி:— அம்மா! எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது. எனக்கிட்டிருக்கும் கட்டளையை நிறைவேற்றவே வந்தேன். உனக்கு ஏதேனும் ஆகாரம் தேவையாயிருந்தால் கேள். கொண்டுவந்து தருகிறேன்.

மஹலட்சுமி:— அதிருக்கட்டும்; உன்னுடைய எஜமானர் யார்? அதைமட்டும் சொன்னால் போதும்.

கிழவி:— ஆண்டி அம்பாரக் கணக்கைப் பார்ப்பதுபோலிருக்கிறது நீ என்னை பதில் சொல்லச் சொல்கிறது. நான் ஏதோ பிழைக்க வந்தேன். உனக்கு சொல்லக் கூடாத சமாச்சாரத்தை சொல்லிவிட்டால் உடனே நான் என் வேலைக்கு ராஜிநாமா கொடுக்க வேண்டியதுதான். அதெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் நேரமாகிறது. உனக்கு ஆகாரம் வேண்டுமா? வேண்டாமா?

மஹலட்சுமி:— நீயும் என்னைப்போலொரு பெண்ணாய்ப் பிறந்தும் காருண்யமற்ற நெஞ்சுடையவளா யிருக்கிறாயே. உன்னிடம் உணவருந்துவதைவிட சாக்கடைத் தண்ணீரை யருந்தலாம்.

உபசரித் துண்மைபேசி யுப்பிலாக்
கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்.

ஆகையால் உன் கையாலளிக்கும் எவ்வித ஆகாரத்தையும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

ஆலைப் பலாவாக்கலாமோ வருஞ் சுணங்கன்
வாலை நிமிர்த்த வசமாமோ—நீலநிறக்
காக்கை தனைப் பேசுவிக்கலாமோ கருணையிலா
மூர்க்கரைச் சீராக்கலாமோ.

என்பதைப்போல் உன்னைப் போன்ற கருணையிலாருக்கு என்ன சொன்னாலும் ஆற்றிற் கரைத்த புளிதான். அதற்கொன்றும் சந்தேக மேயில்லை. ஆனால் கருணையிலா நெஞ்சு படைத்த உன்னிடம் ஒரு அருமையான சக்தியிருக்கிறது.

கிழவி:— (கேலியாக நகைத்து) என்னம்மா அது? சற்று சொல்லுங்கள் கேட்போம்

மஹாலட்சுமி:— ஆன்றோர் வாக்கு என்றைக்கும் பொய்ப்ப தில்லை. அதையும் பொய்க்கும்படிச் செய்துவிட்டாய். எப்படியெனில், "பெண்ணென்றால் பேயுமிரங்கும்" என்பார்கள். அதையும் பொய் யென்று நிரூபித்து பேயினும் பெரியவளாய் நீ இப்போது இங்கு தோன்றியிருக்கிறாய். "இனம் இனத்தைக் காக்கும்" என்ற ஆன் றோர் வாக்கையும் பொய்ப்படுத்திவிட்டாய்.

கிழவி:— அம்மா! நீ மிகவும் மேதாவியென்றே மதிக்கின் றேன். நான் அறியாத்தனமாய் மொழிந்த சில கருணையற்ற வார்த்தை களை மறந்து என்னை மன்னிக்கவேண்டும்.—என்று கேலியாக மொழிந்துகொண்டே வெளியில் சென்று கதவை பூட்டிக்கொண்டு சென்றுவிட்டாள்.

மறுபடியும் மஹாலட்சுமிக்கு பழைய நினைவுகளெல்லாமுண்டா யிற்று. என்ன நினைத்தும் ஒன்றும் அவளுக்குப் புலப்படவில்லை. தான் இருப்பது எந்தவிடம்? தன்னைக் கொண்டுவந்து எத்தனை தினங் களாகியிருக்கும்? என்பன போன்ற பல கேள்விகளைத் தனக்குள் ளாகவே பலதரங் கேட்டுக்கொண்டாள். இதற்கெல்லாம் யார் பதில் சொல்வது?

இன்னும் யாராவது வருவார்களா? அவர்களையாவது கேட்டு விவரம் தெரிந்துகொள்வோமென்று வெகு நேரம் ஆவலுடன் காத் திருந்தாள். மாலை நேரம் நெருங்கலாயிற்று. அவள் மனம் பட்ட வேதனையை யாரே விவரிக்கவல்லார்? கடைசியில் அவள் பின் வரு மாறு யோசிக்கத் தொடங்கினாள்.

"இப்போது நடந்திருக்கும் விஷயங்களையும் நம்மை இவ்வளவு பந்தோபஸ்தாய் வைத்திருப்பதையும் நோக்கினால் யாரோ ஒரு தூர்த்தனே துராசைகொண்டு சமயம் பார்த்திருந்து கொண்டுவந்திருக்க வேண்டும்...............ஆஹா! நான் இத்தகைய ஆபத்திலா சிக்கிக்கொண்டேன்? நான் எப்படி தப்பித்துக்கொள்ளப் போகிறேன்? இவ்வறையை விட்டு வெளிச் செல்ல ஒரு வழியையுங் காணேமே! ஏ! தெய்வமே! நான் என்ன செய்யப்போகிறேன்? அத் தூர்த்தன் என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு என்னை விட்டுவிடுவானு? ஒருக்காலும் விடமாட்டான். இவ்வளவு சிரத்தையுடன் கொண்டுவந்திருப்பவன் இலேசில் விட்டுவிடுவானு? இவ்வறையில் வந்து பலவந்தம் செய்தால் என் செய்வேன்? கலிகாலத்தில் கற்பென்பதே யில்லையோ? கற்புடன் வாழும் உத்தம ஸ்திரீகள் இவ்வுலகில் இல்லவே யில்லையோ? இப்பேர்ப்பட்ட தூர்த்தர்கள் நிறைந்த கலியுகத்தில் அவர்களெல்லாம் எப்படி கற்பைக் காத்துகொள்கிறார்கள்?

மிடியினர் குணமிலர் விருத்தர் நோயினர்
வடிவிலர் உறுப்பிலர் வஞ்சர் மூடர்வெங்
கொடியவ ராயினும் கொழுநர் தம்மிடை
மடிவில ரன்பு கற்புடைய மாதரே!

ஆகையால் என்னதான் துஷ்டனுயினும் கணவனையன்றி கனவிலும் மாற்றானைக் கருதல் கற்புடைய மங்கையற்கழகாமா?

கொண்டக் கணவன் குரூபியே யானாலும்
பண்டு தான்செய்த பலனெனவே—கண்டுகொண்டு
குற்ற மெனவெண்ணி மனங்கோணு தவன்பணியைப்
பற்ற மிகச் செய்வார் பரிந்து.

ஆகவே என் கணவன் எவ்வளவு அசேதகனுனாலும் குற்றவாளியானாலும் கொலைக்காரனானாலும் அவனையன்றி திரிகரண சுத்தியாய் மாற்றானுக் குடன்படுவது சகியேன். கற்பைக்காக்க உயிரிழக்க வரினும் ஒப்புவேனல்லாது உடன்படேன்.—என்று உறுதியாகத் தீர்மானித்துக்கொண்டாள். இவ்வாறு இவளுடைய நிலைமை சுவற்றுப் பூனை போலிருக்க சாயங்காலமும் வந்தது. மறுபடியும் கதவு திடீரெனத் திறந்ததும் ஆஜானுபாகுவான கம்பீர புருஷர் ஒருவர் அறையில் தோன்றினர். அவரைக் கண்டதும் மஹாலட்சுமி புலியைக் கண்ட

மானென மருண்டாள். ஒரு வேளை இம்மனிதரே தன்னைத் தூராக்கிரதமாய்க் கொண்டுவந்திருக்கலாமென்னும் நினைவுண்டாயிற்று. தேகம் வியர்வையால் நனைந்தது. முகத்தில் முத்துகள்போல் வியர்வை யரும்பிற்று. மனம் கடியாரம்போல் "பட பட" வென்றடித்துக்கொண்டது.

இவைகளையெல்லாம் கண்ட அம்மனிதர் புன்னகை புரிந்து "மஹாலட்சுமி! ஏன் பயப்படுகிறாய்? பயப்படாதே; நான் உன்னையொன்றும் செய்துவிடமாட்டேன். நீ காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமலிருக்கிறாய். நான் ஆகாரம் கொண்டுவரச் சொல்கின்றேன். ஏதாவது கொஞ்சம் புசித்து பசியைப்போக்கு. பிறகு சாவதானமாய்ப் பேசிக்கொள்ளலாம்" என்றார். மஹாலட்சுமிக்குப் பேசுவதா கூடாதா என்ற சந்தேகம் தோன்றிப் போராடியது. பிறகு பேசினால் தனக்கேதேனும் அநுகூலமுண்டாகலாமென எண்ணித்துணிந்து, "எனக்குப்பசிப்பிணியுண்டாகவில்லை. எனக்கு எவ்வித ஆகாரமும் தேவையில்லை. அதிருக்கட்டும் என்னை இங்கு இப்படித்திருட்டுத்தனமாய்க் கொண்டுவந்தவர் யார்? தாங்கள்தானோ?"

வந்தவர்:— நீ அப்படி சந்தேகப்படவேண்டிய முகாந்தாமென்ன? நான்தான் உன்னைக்கொண்டுவந்தேன்.

மஹாலட்சுமி:— தாங்கள் தைரியமாய்ப் பேசுவதைப்பார்த்தால் தங்களுக்கு என்னைக்கொண்டுவர அதிகாரமிருப்பதைப்போலிருக்கிறதே. என்ன அதிகாரத்தை முற்கொண்டு என்னைக்கொண்டு வந்தீர்கள்?

வந்தவர்:— நான் இன்னான் என்று உனக்குத்தெரிந்திருந்தால், அதிகாரமிருக்கிறதா இல்லையாயென்பது தெரியும்.

மஹாலட்சுமி:— அதைத்தான் நானும் கேட்கிறேன். தாங்கள் இன்னாரென்று தெரிவியுங்கள்?

வந்தவர்:— நான் யாரென்று நீ தெரிந்துகொள்வதற்கு முன், நான் கேட்கும் சில கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

மஹாலட்சுமி:— தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதிலளிக்காவிட்டால் எனக்கு என்ன தண்டனை விதிக்க உத்தேசித்திருக்கிறீர்கள்?

வந்தவர்:— உன்னைத்தண்டிக்க எந்தக் கல் நெஞ்சனுக்கும் மனம் வாராதே. அப்படியிருக்க நான்மட்டும் உன்னைத்தண்டிப்பேனு?

மஹலட்சுமி:— அந்த வீண் முகஸ்துதிகளை யெல்லாம் ஒன்ருய்க்கட்டி மூலையில் போடுங்கள். வீண் வார்த்தை வளர்த்தி கால காணம் செய்யவேண்டாம். கேட்கவேண்டியவைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு என்னுடைய இருப்பிடத்திற்கனுப்பிவையுங்கள்.

வந்தவர்:— அப்படியே ஆகட்டும்; உனக்கு உன்னுடைய கணவன் கொலைக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருப்பது தெரியுமா?

மஹலட்சுமி:— தெரியும்.

வந்தவர்:— அவன் விடுதலையடையவேண்டும் என்ற எண்ணம் உனக்குண்டா?

மஹலட்சுமி:— தாங்கள் கேட்பது மிகவும் நூதனமாயிருக்கிறது. எவளேனும் தனது கணவன் தண்டனையடைய விரும்புவாளா?

வந்தவர்:— அதற்காக அம்மணி எத்தகைய உதவியும் செய்ய வேண்டுமல்லவா?

மஹலட்சுமி:— தடையென்ன? கணவனை மீட்பதற்காகச் செய்யக்கூடிய உதவிகளெல்லாம் செய்துதான் தீரவேண்டும்.

வந்தவர்:— எல்லாவற்றிற்கும் சரியான மறுமொழியே தந்தாய். அதற்காக அதிக சந்தோஷப் படுகின்றேன். என்னல் இப்போது உன் கணவனுயிரைக் காப்பாற்ற முடியும். ஆனல் எனக்கு உன்னல் ஒரு உபகாரம் ஆகவேண்டியிருக்கிறது. அவ்வுபகாரத்தை நீ எனக்குச் செய்தால், நான் உனது கணவனைக் காப்பாற்றுகிறேன்.

மஹலட்சுமி:— தாங்கள் சொல்வது மிகுந்த நியாயமான விஷயம். என்னல் செய்யக்கூடிய எந்தவிதமான உதவியையும் நீங்கள் எதிர்ப் பார்க்கலாம். உடனே உங்களுக்கு வேண்டிய உதவியைப் பெற்றுக்கொண்டு, என்னுடைய நாதரை யென்னிடம் சேர்த்துவிடுங்கள்.

வந்தவர்:— உனது வார்த்தையை நம்பி நான் உன்னல் ஆக வேண்டியதைக் கேட்கலாமல்லவா?

மஹாலட்சுமி:— ஆஹா! தாராளமாய்க் கேட்கலாம்.

வந்தவர்:— நான் சில நாட்களாக அதிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதை தயவுசெய்து நிவர்த்தித்தால் உன் கணவனை மீட்பதோடு உனக்கு வேண்டிய எதையும் செய்வேன்.

மஹாலட்சுமி:— தங்களுக்கு வேண்டியது இன்னதென்று தெரிவிக்காமலே பேசிக்கொண்டுபோனால் என்ன பதில் சொல்வது? என்னால் ஆகவேண்டியதைக் கேளுங்கள். என்னால் செய்யக் கூடுமானால், தாமதமன்னியில் செய்கிறேன்.

வந்தவர்:— கண்மணி! என் காதலைத் தீர்க்கவேண்டிய உதவியொன்றுமட்டும் செய்தால் உனக்கு வேண்டியதெதுவானாலும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

மஹாலட்சுமி:— அடே! பாவி! உனக்கு என்ன தைரியமடா? என்னை பிறன் மனைவியென்றும் கருதாது கொண்டுவந்ததுமன்றி "கண்மணி!" என்றும் அழைக்கின்றாயே. நீ நாசமாய்ப் போக. இனியொருதரம் என்னிட மத்தகைய வார்த்தைகளை உபயோகித்தால் அவமானமடைவாய். ஜாக்கிரதை.

வந்தவர்:— காதற்கிளியே! உன்னுடைய பழிச்சொற்களெல்லாம் எனக்கு சொர்ணாபரணங்களாகவே தோன்றும். நீ கோபமாகப் பேசுவதும் ஒரு அழகாகத் தானிருக்கிறது. ஆயினும் ஒரு கஷ்டம் என் மனதை வாட்டுகிறது. உன்னுடைய படபடத்தத் தோற்றம், எங்கே உனது உடம்பைக் கெடுத்து வியாதியுண்டாக்கிவிடுகிறதோ என்று பயப்படுகிறேன். கண்மணி! என் இவ்வளவு கவலையுறுகிறாய்? என்னிடம் ஒரு நாள் மனைவியாயிருப்பதால் உனக்கென்ன நஷ்டம்? அதற்கு மாறாக எவ்வளவு இலாபம் உனக்கு உண்டாக்கி வைக்கின்றேன்? உனது கணவனை மீட்டு வைப்பேன்; அதல்லாமல் உன் தங்கத்திருமேனியெங்கும் பொன்னாபரணமும், வைரமிழைத்த அணிகலனும் போட்டு அழகுபடுத்திப் பார்ப்பேன். உன்னுடைய ஏழைத் தோற்றத்தை மாற்றுவிப்பேன். இன்னும் எவ்வளவு செய்ய வேண்டுமென்று கேட்கிறாயோ அவ்வளவும் செய்வேன். என்னாசையை உடனே விலக்க வாயேன். கண்மணி!—என்று கெஞ்சிக் கொண்டே அருகில் நெருங்க வாரம்பித்தார்.

மஹாலட்சுமிக்கு அடங்காக் கோபம் உண்டாய்விட்டது. கோபமூட்டப்பட்ட புலிபோல் மாறினாள். ஒரு சிறு சிறிக் கட்டிலின் மறு பக்கம் சென்று நின்றாள். தனது அழகிய நயனங்களால் திறுதிறு வென்று முறைத்துப் பார்த்தாள். கோபாக்கினி சுடர்விட்டெறிந்தது. பின்பு அவனை நோக்கி, "அடே! அப்படியே நில். நீ தலை கீழாகப் புரண்டாலும் என்னிடம் ஒன்றும் பலியாது. என்னிடம் உன்னுடைய ஜபம் ஒன்றும் சாயாது. என் வீணாக ஆசை மேலிட்டு, பிரயாசைப்பட்டு அவமானமடையப்போகிறாய்?

வந்தவர்:— (புன்னகையோடு) கண்ணே! கனியே! கரும்பே! காதலியே! என்னிடம் வாதிடாதே பாதகம் உனைச் சேரும். நான் உன்னைக்கொண்டுவர, எத்தனை நாட்களாகப் பாடுபட்டுக்கொண்டிருந்தேன் தெரியுமா? கடைசியில் நான் உன்னைக் கொண்டுவந்தேன். இப்போது நீ இப்படி முரண்டினால், என் மனம் என்ன பாடு படும்? பிறர் மனம் நோகவைக்காத இளகிய நெஞ்சையுடைய உனக்கு என்னிடம் என் இரக்கம் உண்டாகவில்லை? தகையணங்கே! தயவுசெய்! உன் பாதத்தடியில் விழச் சொன்னாலும் விழுகிறேன்.

மஹாலட்சுமி:— (கோப நகை புரிந்து) ஓகோ! காலில் விழப் போகிறாயோ? எதற்காக? காம இச்சையைப்பூர்த்தி செய்யவோ? அடே! என் வீணில் கெட்டுப்போகிறாய்? பதிவிரதைகள் மனம் நொந்து சாபமிட்டால் பலிக்கும். வேண்டாமடா; வீணில் கெட்டுப் போகாதே; கெடுமதி கண்ணுக்குத் தோற்றுது. உன்னைப்போல் எத்தனைபேர் இப்படி அழிந்துபோனார்கள். நீ அநேகமாக நூல் களைக் கற்றிருப்பாயெனவே நம்புகிறேன். "கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்பது தெரியாதா? பரதார விருப்பங்கொள்ளலாமா? அடே! உனக்குத் தெரியாவிட்டால் நான் சொல்கிறேன். என்னிடமாவது கற்றுக்கொள்.

ஈர மாவது மிப்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொருவன் புணர்
தார மாவதைத் தாங்குந் தருக்கதோ.

அடே! நீ ஒரு ஆண்பிள்ளையா? வீரபுருஷனா? முகத்தில் மீசையுடையவனா? அப்படியாயின் நீ பிறன் மனைவியை இச்சிக்கலாமா? அடே!

இத்துரெண்ணத்தை விட்டுவிடு. வீண்பழிக்காளாகாதே. அனாவசிய மாக ஒருயிர்ச்சேதத்திற்குக் காரணமாயிராதே. உனக்கு ஸ்திரீஹத்தி தோஷ முண்டாகும்

**வந்தவர்:—** இம்மிரட்டெல்லாம் யாரை மிரட்டுகிறாய்? ஏதோ பெண்பாலாயிற்றே; நயமாகப் பேசிக் காரியத்தை முடிப்போமென்றால் அதிகம் பேசுகிறாயே; ஆடிக்கறக்கிறமாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக்கறக்கிறமாட்டைப் பாடிக்கறக்க வேண்டும். மயிலே! மயிலே! என்றால் இறகு கொடுக்குமா? பிடிங்கினால்தானே முடியும். ஆகட்டும். உன்னால் ஆவதை நீ பார்த்துக்கொள். என்னால் ஆவதை நான் பார்க்கிறேன். உன் கைவரிசையை என்னிடமா காட்டுகிறாய்.—என்றதும் பாய்ந்தோடி அவளைப்பற்றப் பார்த்தான்.

பார்த்தாள் மஹாலட்சுமி! பரிதவித்தாள். பதரியோடவும் வழியில்லை யென்பதைக் கண்டாள். கட்டிலைச்சுற்றிச் சுற்றி ஓடவாரம்பித்தாள். அவள் மிகுந்த மெல்லிய தேகமுடையவளாகையால் மான் குட்டிப்போல் பாய்ந்துப் பாய்ந்து கட்டிலைச் சுற்றி ஓட்டங்காட்டினாள். வந்தவர் மிகவும் அஜானுபாகுவான தேகமுடையவர். பெருத்த தொந்தி குலுங்கக் குலுங்க ஓடினார். ஓடும் குதிரைக்கு வியர்வை யுண்டாவதைப்போல் அவருக்கும் வியர்வை வெளிப்படத் துவக்கியது. சரீரமெல்லாம் வியர்வை மயமாயிற்று. சட்டைகளெல்லாம் நனைந்துபோயிற்று. வாயில் நுறை தள்ளவாரம்பித்தது. பெருமூச்சும், இரைப்பும் உண்டாய்விட்டது. இன்னும் அவர் ஓடுவதை நிறுத்தவில்லை. கடைசியில் அவராலும் சாயாமல் கட்டிலின் மேல் தொப்பென்று விழுந்தார்.

உடனே மஹாலட்சுமிக்கு சரியான மூச்சுண்டாயிற்று. ஓரிடத்தில் நின்று சற்றுத்தாராளமாக மூச்சு விட்டாள். அவளுக்கு அதிக பிரயாசை யுண்டானதால் சற்று நேரம் நின்ற நிலையிலிருந்தபடி என்ன செய்யலாமென்று யோசித்தாள். அவளுக்கு திடீரென்று மின்னல் தோன்றி மறைவதைப்போல் ஒரு யோசனை தோன்றியது. "ஏன்! அப்படி செய்யக்கூடாது. அப்படியே செய்து தப்பித்துக்கொள்வோமே." என்று மனதிற்குள் தீர்மானித்தாள்.

உடனே அவளது இருகையும் தன்னையுமறியாமல் மேலுயர்ந்தது. அங்குக் கொசுவலையைக் கட்டியிருந்த மணிக்கயிற்றை மெல்ல

அவிழ்த்தாள். கையில் அதை நன்றாய்ச் சுருட்டிக்கொண்டு மெது வாய்க் கீழே உட்கார்ந்தபடி கட்டிலின் கீழ் நுழைந்தாள். கைகள் வெகு சுறுசுறுப்பாகவே வேலை செய்தன. வந்தவர் தலையில் கால் களை ஊன்றியபடி கட்டிலில் சாய்ந்துகொண்டிருந்தாராகையால், அவள் மெதுவாக அவரது இரு கால்களையும் ஒன்றாய்ச் சேர்த்து அவருக்குத் தெரியாமலும், கால்களின்மேல் படாமலும் சுருக்கு முடி போட்டுவிட்டு வெளியே வந்தாள்.

இப்போது அவளுக்கு அதிக தைரியமுண்டாகிவிட்டது. அப் போதே அம்மனிதர், தலையை நிமிர்ந்து நோக்கினர். இதைக் கண்ட வுடன் இனி தாமதிக்கலாகாதென்று எண்ணிய மஹலட்சுமி, அதி வேகமாய்த் தன் முழு பலத்தையு முபயோகித்துக் கயிற்றை யிழுத் தாள்.

அந்தோ! பாபம்! இழுத்ததுதான் தாமதம் பெருத்த தேகத் தையுடைய அம்மனிதரின் கால்களைக் கயிறு சுருக்கிட்டுக்கொண்டது மன்றி, இன்னும் பலமா யிழுபடவே, அம்மனிதரை அடியோடு கீழே விழும்படிச் செய்தது. அவருடைய பின்னக்காய்போன்ற தலை நேரே சுவற்றில்போய் மோதிற்று. அவருடைய பொறி கலங்கி விட்டமையால், அப்படியே மூர்ச்சை யடைந்துபோனர்.

வந்தவர் உணர்வு பெற வெகுநேரமாகுமென்பதை யறிந்து கொண்டு, உடனே கதவைத் திறந்தாள். வெளியே போவதற்கு முன், அங்கு யாரேனும் காவலிருக்கிறார்களோ வென்று உற்று நோக்கினள். அங்கு ஒருவரும் காவலில்லை யென்பது தெரிந்ததும், மெதுவாக அடிமேலடி வைத்து வெளியே வந்து, மறுபடியும் அவ் வறையின் கதவை மூடித் தாள் போட்டாள். மெதுவாக பல அறை களையும், கூடங்களையும், தாழ்வாரங்களையும் கடந்துகொண்டேபோய் ஒரு பெரிய கலியாணக் கூடத்தை யடைந்தாள். அங்குச் சென்ற வுடனே சற்று நின்று, எந்தப் பக்கம் போனல் வெளியில் போக முடியுமென்பதை யோசித்தாள். அக் கலியாணக் கூடத்தில் ஒரு "பவர்லைட்" எரிந்துகொண்டிருந்ததால், எல்லா பொருட்களும் நன்கு தெரிந்தது. அவளுக்கு பயத்தால் தேகமெல்லாம் நடுக்கமுற்றது. தான் இன்னும் தாமதித்திருந்தால், ஒருவேளை யாரேனும் கண்டு

பிடித்துவிடுவார்களோ வென்ற பயம் அதிகரித்து, அவளை விரைவாக நடக்கும்படித் தூண்டியது. அவள் தெய்வமே கதியென்று கடவுளைத் துதித்தவளாய் நடந்து மனதிற்குத் தோன்றிய வழிகளில் சென்றாள். கடைசியில் பல வாசல்களைக் கடந்து ஒரு தோட்டத்திற்குள் பிரவேசித்தாள். அத் தோட்டத்தில் அதிவேகமாக நடந்துகொண்டே அப்பங்களாவைத் திரும்பி நோக்கினாள். அப்பங்களா ஒரு பெரிய அரண்மனைபோல் தோன்றிற்று. அவளுக்குண்டான வியப்பிற்கோரளவேயில்லை. இருள் நிறைந்த ஒரு தோட்டத்தில் வழிநடக்கும் மாதுசிரோன்மணியின் மனம் படும் பாட்டை விவரிக்கக் கூடியதா? அவள் எண்ணாததெல்லாம் எண்ணி, மனதைப் புண்ணாக்கிக்கொண்டாள். அவளுக்குத் தன்னை யெங்கு மறுபடியும் பிடித்துவிடுகிறார்களோ வென்ற பீதியோடு, இருட்டில் தான் எப்படி இந்தத் தோட்டத்தைக் கடப்பதென்ற மலைப்புத் தோன்றி வருத்தியது. கடைசியில் ஒரு யோசனை தோன்ற, அதன் பிறகாம் நடக்கத் துணிந்தாள். அவளுக்கு என்ன தோன்றியதென்றால், "இவ்வளவு பெரிய தோட்டத்தினடுவே அரண்மனைப்போன்ற பங்களாவைக் கட்டினவர், அத்தோட்டத்தைச் சுற்றி சுவரெழுப்பி அதற்குள் வண்டி முதலியன போவதற்கும் வருவதற்கும் சாதனமாக வெளி வாசல் ஒன்று ஏற்படுத்தி யிருப்பார். அன்றியும் இப்பங்களா அநேகமாக ஒரு இராஜபாட்டையின் அருகில்தானிருக்க வேண்டும். நாம் இத் தோட்டத்தின் குறுக்கே நேராகச் சென்றால் சுவற்றைக் கண்டுபிடிக்கலாம். பிறகு சுவரோடே சென்றால், வெளிவாசலை யடைந்துவிடலாம். அதன்பிறகு மனதிற்குத் தோன்றிய வழியில் நடந்து தப்பித்துக்கொள்வது. கடவுள் விட்ட வழியாகிறது. என்ன செய்வது? எல்லாம் பூந்தாமறையோன் பொறி வழியே நடக்கிறது." என்று தீர்மானித்துக்கொண்டவளாய் தோட்டத்திற்குக் குறுக்கில் சென்று சுவறையடைந்தாள்.

சுவற்றை யடைந்தவுடன் தன் உத்தேசம் பலித்துவிட்டதென்ற சந்தோஷமடைந்து, சுவற்றைப் பின்பற்றி ஒரு திக்கில் சென்றாள். அப்போதே இரவு மணி சுமார் பனிரண்டாயிற்று. எங்கும் காரிருள் சூழ்ந்துகொண்டு எதிரிலுள்ளதையும் காண முடியாதபடிச் செய்தது. என் செய்வாள் பேதை? கூடியவரையில் மனதைத்தேற்

றிக்கொண்டே சென்றாள். கடைசியாக ஒரு விளக்கு வெளிச்சம் தெரிந்தது. உடனே அதுதான் வெளிவாசலாயிருக்குமென்று யூகித்துக்கொண்டு வெகு வேகமாய் நடந்தாள். ஆஹா! அவள் அருகில் நெருங்கினதும், இடியோசை கேட்ட நாகம்போல் நடுங்கினாள். ஏன்? அவள் சற்றும் எதிர்ப்பாரா விதமாய் ஒரு டவாலி யணிந்த சேவகன் காவல் காத்திருந்தான். அவன், கோட்டான்போல் கையில் தடியுடன் இங்குமங்குமாக வுலவியவாறு பாரா கொடுத்துக்கொண்டிருந்தான்.

இதைக்கண்ட மடமங்கை அசைவற்று, "இனி நாம் எப்படித் தப்புவது?" என்ற மலைப்பினால் பீடிக்கப்பட்டு, அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

# ஏழாம் அத்தியாயம்.

## துப்பறியும் ஞானனந்த சாமியார்.

1. முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்!
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்.

2. ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு.

3. தார் உறு வசந்தகாலந் தழைத்திடு மடவிபோலுஞ்
சீர் பெறு குலத்தில் வாழும் செல்வர்க்கு ஊக்கஞ்சாரும்.

4. —யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கு மொவ்வொன் றெளிது.

---

குமாரசாமி நாடான் தப்பித்துக்கொண்டான் என்றதைக் கேட்ட ஞானனந்த சாமியாருக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அவர் அப்படியே பிரமிப்படைந்து நின்றுவிட்டார். பிறகு சிறிது யோசித்துவிட்டு, “சரி! இருக்கட்டும்; நீ போ. நான் வந்து விசாரித்துக்கொள்கிறேன்.” என்று சொல்லி அந்த சேவகனை அனுப்பிவிட்டு, நேரே ஸ்ரீலோலனிடம் சென்றார். அவன், தன்னுடைய மைத்துனன் எப்படியும் விடுதலையடைந்துவிடுவான் என்ற சந்தோஷத்துடன், இராமசுப்பனை அழைத்துக்கொண்டு போவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான். அப்போது அங்கு போய்ச் சேர்ந்த ஞானனந்த சாமியார், ஸ்ரீலோலனை விளித்து “ஸ்ரீலோலா! உனது தமக்கையை அழைத்து வரும்படி கோவிந்தனை அனுப்பிவைத்தாயே. அவன் வந்துவிட்டானா?” என்றார்.

ஸ்ரீலோலன்:— இல்லை சுவாமிகளே! அவன் போனவுடனே அழைத்துவந்திருந்தால், இன்று காலையே வரவேண்டியவன். இது

வரை வராத காரணமென்னவோ தெரியவில்லையே! அவனுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டதோ! அவனைத் தேடிக்கொண்டு நாமாவது சென்றுவருவோமா?

**ஞானனந்த சுவாமி;—** நான் வரமுடியாது. எனக்கு இங்கு இன்னும் பல வேலைகள் கவனிக்கவேண்டியிருக்கிறது.

**ஸ்ரீலோலன்:—** சுவாமிகளே! கோவிந்தனை, நானும் எனது மைத்துனரும் தேடிக்கொண்டு போகிறோம். அதைப்பற்றி தாங்கள் கவனியாமல் எப்படியாவது முயன்று உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கப் பாருங்கள்.

**சாமியார்:—** அப்படியே! ஆகட்டும்; எப்போது ஒருதரம் வாக்களித்துவிட்டேனே, பிறகு அதனல் என்ன வந்தாலும் அதை மாற்ற மாட்டேன்.—என்றதும் அவர் வெளியே சென்றுவிட்டார். அதன் பிறகே இராமசுப்பனும், ஸ்ரீலோலனும், சாமராஜனும் வண்டியிலேறிச் சென்றனர்.

வெளியில் சென்ற ஞானனந்த சாமியார் நேராகத் திருவாமூரை நோக்கிநடந்தார். கொஞ்சதூரம் சென்றதும் அங்குகிடைத்தவாடகை மோட்டாரில் எறிக்கொண்டு துரிதமாக திருவாமூர் இராஜலட்சுமியின் பங்களாவிற்கு விடச் சொன்னர். சிறிது நேரத்தில் அப்பங்களாவினெதிரில் மோட்டார் சென்று நின்றது. உடனே சாமியார் உள்ளே போய் கூடத்தில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கொரு மூலையில் இராஜலட்சுமி அழுதுகொண்டு படுத்திருந்தாள். சாமியார் அவளை எழுப்பி என்ன விசேஷம் நடந்ததென்றார். அவள் ஒன்றுமில்லையென்று ஒரேயடியாய் சொல்லிவிட்டாள். அதைக்கண்ட சாமியார், மிகுந்த அவசரம் தோற்றுவித்து, "இராஜலட்சுமி! நான் யாரென்று உனக்குத் தெரிந்தால் நீ இப்படி மறைத்துப் பேசமாட்டாய். நான் இந்த இந்தியா முழுதும் கவர்ன்மென்ட்டாரிடம் அத்தாட்சிபெற்ற துப்பறிவோன். உனக்கு சந்தேகமாயிருந்தால் இதோ பார். (என்று தனது மார்பங்கியை விலக்கி உள்ளிருந்த தனது உத்தியோகத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகார பதக்கத்தைக் காண்பித்தார்.)

இராஜலட்சுமி:— நீங்கள் துப்பறிபவர்களாயிருக்கலாம். அத ஞலென்ன? என்னை என்ன சொல்லச்சொல்கிறீர்கள்?

சாமியார்:— இராஜலட்சுமி! நீ வீணில் மறைத்துப் பேசுவதால் அதிக குற்றம் செய்தவளாகிருய். உன்னுடைய விவகாரமெல்லாம் எனக்குத் தெரியும். நீ குமாரசாமி நாடானுடைய வைப்பாட்டி யென்பதையும், சாவித்திரி உன்னுடைய மகளல்லவேன்பதையும் நானறிவேன். நான் உன்னைக் கேட்பதெல்லாம் அந்தப் பெண் உனக்கு எப்படிக் கிடைத்தது? இப்போது அந்தப் பெண் எங்கே? குமாரசாமி நாடான் எங்கே போயிருப்பான் என்பதே.

இராஜலட்சுமி:— ஐயா! நீர் தப்பாகக் கேள்விபட்டிருப்பீர்கள். சாவித்திரி எனது மகள்தான். என்னை வைப்பாக வைத்திருந்தவர் குமாரசாமி நாடானென்பவால்ல. என்னைக் காப்பாற்றி வந்தவர், பிளுங்கிலுள்ள ஒரு தோட்ட வியாபாரி. அவர் நேற்று புறப்பட்ட பிளுங்கு கப்பலில் என் மகள் சாவித்திரியோடு சென்றிருக்கிருர். வேண்டுமானுல் விசாரித்துக்கொள்ளுங்கள்.

சாமியார்:— இராஜலட்சுமி! என் இப்படி அடாவடியடிக்கிருய்? உனக்கு நல்லதற்குக் காலமில்லை. நீ இப்போதே உண்மையை ஒப்புக்கொண்டால் உனக்கு விடுதலையுண்டாக்கிவைப்பேன். இல்லையேல் தண்டனையடைய நேரிடும்.

இராஜலட்சுமி:— என்னய்யா இது? பெண்பிள்ளை தனியாயகப்பட்டுக்கொண்டேனென்று இல்லாத குற்றங்களெல்லாம் என் தலைமேல் கட்டப் பார்க்கிறீர்.

சாமியார்:— ஓகோ! இந்த விதமாய் மிரட்டப் பார்க்கிருயோ? இருக்கட்டும்; இதெல்லாம் என்னிடம் பலியாது. உனக்குக் கொடுப்பதைக் கொடுத்தால்தானே வழிக்கு வருவாய்.—என்றதும் தனது போலீஸ் ஊதுகுழலை யெடுத்து பலங்கொண்டமட்டும் ஊதினுர்.

சில விநாடிகளுக்குள் ஒரு போலீஸ் வீரன் எதிரில் தோன்றினுன். அவனைக் கண்டதும் சாமியார், "நான் யாரென்று தெரியுமல்லவா? ஜாக்கிரதை. இம்மாதிற்கு இப்போதே விலங்கிட்டு அழைத்துகொண்டுபோய் காவலில் வை. பத்திரம். குமாரசாமி

நாடானை விட்டுவிட்டதைப்போல் இன்னொரு முறை நடந்தால் உங்களையெல்லாம் முன்பு வேலையிலிருந்து நீக்கிவிட்டு மறுவேலை பார்ப்பேன்." என்று கண்டிப்பாக மொழிந்தார். அதைக் கேட்டதும் சேவகன் பயந்துகொண்டு, "தங்களுத்திரவுபடிச் செய்கிறேன்." என்று கூறியதும், இராஜலட்சுமிக்கு பலாத்காரமாக விலங்கிட்டு, இழுத்துகொண்டுபோனான்.

அது முடிந்தவுடன் சாமியார் மோட்டாரிலேறி நேராக நுங்கம்பாக்கம் போகச் சொன்னார். அங்கு சென்றதும் ஸ்ரீலோலன் பங்களாவை (கோபாலகிருஷ்ணய்யர், தமது பங்களாவை உயில் மூலமாக ஸ்ரீலோலனுக்குச் சொந்தப்படுத்திவிட்டிருந்தா ராகையால், இனி அதை ஸ்ரீ லோலனுடைய பங்களாவென்றே சொல்வோம்.) அடைந்ததும், அதற்குள் சென்று ஸ்ரீலோலனைப் பார்த்து, "ஸ்ரீலோலா! நேற்று இரவு சென்ற கோவிந்தன் இதுகாறும் வாராமலிருப்பது அதிக சந்தேகத்தை யுண்டாக்குகிறது. ஆகையால் நீயும் உனது மைத்துனரும் சென்று, கோவிந்தனைப்பற்றியும் உனது தமக்கையைப்பற்றியும் அறிந்து வாருங்கள். ஏதேனும் உங்களுக்கு விசேஷம் தோன்றினால் அதையொரு கடிதத்தில் எழுதி என்னுடைய வீட்டில் முத்து என்ற வேலைக்காரனிடம் சேர்பித்து விடு. பிறகு நான் அதைப் பார்த்துக்கொண்டு அதன்படி நடக்கிறேன். இதோ என்னுடைய ஜாகையின் விலாசம்." என்று தனது விலாசம் அச்சடித்திருந்த ஒரு கார்ட்டைக் கொடுத்துவிட்டுத் தான் வந்த வாடகை மோட்டாரிலேயே போய்விட்டார். ஞானனந்த சாமியார் நேராக தமதுஜாகை யிருக்கும் மைலாப்பூர் அடைந்து வீட்டிற்குள் நுழைந்தார். முத்தன் என்ற வேலைக்காரன் வீதியிலேயே இவர் வரவிற்காகக் காத்திருந்தான். அவனைக் கண்ட ஞானனந்த சாமியார் "என்ன முத்து? நான் டெலிபோன் மூலமாகத் தெரிவித்ததைத் தயார் செய்தனையா?"

முத்து:— "எஜமானே! நீங்கள் காலையிலே டெலிபோன் மூலமாக உத்திரவிட்டபடி எல்லா சாமான்களையும் தயார் செய்து உங்களுடைய அரையில் மேஜையின் மேலேயே வைத்திருக்கிறேன்.

ஞானனந்தர்:— "ஆனல் சரி! நீ என்னுடன் வந்து எனக்கு வேண்டிய உதவிகளைச்செய்."

என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று தனது அரையில் நுழைந்தார். அந்த அரை முழுவதும் பீரோக்கள் வைக்கப்பட்டிருந்தது. அப் பீரோக்களில் அநேக விதமான மாறு வேடங்களுக்கு அணியவேண்டிய உடைகள் வைக்கப்பட்டிருந்தது. சுவற்றில் பல விதமான ஆயுதங்களும், கருவிகளும் தொங்கிக்கொண்டிருந்தது. அங்கு போடப்பட்டிருந்த மேஜைமேலும் உள்ளும் பல விதமான இரசாயனக்கருவிகள் வைக்கப்பட்டிருந்தது. விதம் விதமான மின்ஸார விளக்குகளும் விசிரிகளும் அமைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்ற சாமியார் சிறிது நேரத்தில் மேஜைமேல் இருந்த உடைகளை முத்துவின் உதவியால் அதி சீக்கிரம் உடுத்திக்கொண்டு ஒரு ஏழை சாயபுவாக மாறினர். உடுத்தியானதும் தனது மேஜையைத் திறந்து அதிலிருந்த கெட்டித்த கைத்துப்பாக்கியொன்றை எடுத்து தனது வலது கால் சராயிலுள்ள பையில் வைத்துகொண்டார். இன்னுமொரு நூதனக் கருவியை ஒரு தோற்பையில் போட்டு அதை வெகு ஜாக்கிரதையாக தனது உள் அங்கியில் மறைவாய் வைத்துக்கொண்டார். கையில் ஒரு கருங் காலித்தடியோடு வெளியிற்செல்ல ஆயத்தமாகியவுடன் முத்துவை நோக்கி "முத்து! நான் ஒரு அபாயகரமான கள்ளனைக் கண்டு பிடிக்கப்போகிறேன். அதில் ஒருவேளை ஜயம் பெற்றால் மீண்டு வருவேன். இன்றேல் மாண்டாலும் மாண்டு போவேன். இரண்டு தினங்கள் கழித்து யாராவது ஒருவர் என்னுடைய கைப்பட எழுதப்பட்ட லெட்டர் கொண்டுவந்தால் அதைக் கொண்டுவருபவரை எஜமானனக ஏற்றுக்கொண்டு என்னுடைய சுதந்தரங்களை யெல்லாம் அவரிடம் ஒப்பித்துவிடு" என்றதும் தான் வந்த மோட்டாரிலேயே ஏறிக்கொண்டு மறுபடியும் நுங்கம்பாக்கத்தை நோக்கிப் போனர். ஆனல் இந்தத் தரம் சாளரங்களை யெல்லாம் மூடி தான் உள்ளிருப்பதை யாரும் அறிந்துகொள்ளாதபடி செய்துவிட்டார். மோட்டார் சேத்துப்பட்டை நெருங்கியபோது சாமியார் அங்கு மோட்டாரை நிறுத்தச்சொல்லி ஒருவீட்டிற்குள் சென்றார்.

அப்போது அங்குக் காவல் இருந்த ஒரு ஆள் அவரை போகவிடாமல் தடுத்தான். அவர் தமதுபெயரை அவனுடைய காதில் சொன்

னதும் அவன்பேசாமல் விலகி வழிவிட்டான். அவர் உள்ளேசென்று "தாஸ்! தாஸ்!" என்று உறக்கக்கூப்பிட்டார். இரண்டொரு விநாடிக்குள் உள்ளிருந்த ஒரு நெட்டையான மனிதர் வெளியே வந்தார். அவர் இந்தசாயபுவைக் (சாமியாரை சாயபுவென்று சொல்வோம்.) கண்டதும் அதிக கோபங்கொண்டு "என்னையா இது? இப்படித்தான் சாயபுகள் இந்த பிராமணர் வீடுகளில் நுழைந்து விடுகிறதோ?" என்று அதட்டிக்கேட்டார்.

சாயபு காலதாமதமாவதைக் கருதித்தன்னுடைய உண்மையான பெயரைக் கூறினர். அதைக்கேட்ட அம்மனிதர் பெட்டிப்பாம்பைப் போல் அடங்கி யொடுங்கி, "என்ன வேண்டும்? எதற்காக வந்தீர்கள்" என்று வினவினர்.

**சாயபு:—** ஐயா! ராமதாஸவர்களே! தாங்கள் (Cinema) பையாஸ்கோப்புகளில் காண்பிக்கப்படும் படங்களை போட்டோ பிடிப்பதில் பிரசித்திபெற்றவர்கள் என்று கேள்விப்பட்டேன். அப்படித்தானே?

**ராமதாஸ்:—** ஏதோ! ஜீவனர்த்தமாய் அந்தத் தொழிலையே செய்துவருகிறேன். அதற்கு பலபோட்டிகள் ஏற்படுவதால் சரியாக தொழில் நடைபெறுவதில்லை.

**சாயபு:—** அதெல்லாம் இருக்கட்டும்; இப்போது எனக்கு நீங்கள் ஒருபெரிய உதவிசெய்ய வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?

**ராமதாஸ்:—** ஆகா! அப்படியே செய்கிறேன்.

**சாயபு:—** ஆனல் சரி! உடனே புறப்படுங்கள். நேரமாகிறது. உங்களுடைய போடோ பிடிக்கும் கருவியை (Camara) உபயோகத்திற்குத் தயார் செய்துகொண்டு புறப்படுங்கள்.

**ராமதாஸ்:—** அதில் கொஞ்சம் கெட்டுப்போயிருந்தது. அதனல் அதைப் பழுதுபார்த்துக் கொடுக்கும்படி சென்னைக்கு அனுப்பியிருக்கிறேன்.

**சாயபு:—** ஓகோ! அப்படியா? எதற்கும் நான் முன்யோசனையாகவே அத்தகைய கருவியை (Camara) கையோடு கொண்டுவந்திருக்கிறேன். ஆகையால் நீர் உடனே புறப்பட்டால் போதுமானது—

என்றதும் ராமதாஸ் கூடவே புறப்பட்டு விட்டார். இருவரும் மோட்டாரிலேறி நுங்கம்பாக்கத்தை யடைந்தனர். நுங்கம்பாக்கத்திற்கு போகும்பாதையில் அடர்ந்த தோப்புகளிருப்பது முன்னமே கூறப்பட்ட விஷயம் நுங்கம்பாக்கத்திற்கு அருகிலுள்ள ஒருதோப்பிற்குள் மோட்டாரை நிறுத்தச்சொல்லி மோட்டார் ஓட்டியிடம் தாங்கள் கூடிய சீக்கிரம் வந்துவிடுவதாகவும், அதுவரை யாருக்கும் தெரியாமல் அங்கிருக்கும்படியும் சொல்லிவிட்டுச் சென்றனர்.

அப்போது மாலை சுமார் ஆறுமணியாயிற்று. எங்குபார்த்தாலும் இருள்சூழவாரம்பித்தது. மின்சாரவிளக்குகள் ஏற்றப்பட்டன. சாயபுவும் தாஸனும் நுங்கம்பாக்கத்திற்குள் கால்நடையாகவே சென்றனர். இவர்கள் நேரே நுங்கம்பாக்கத்திலுள்ள ஒரு தனித்த பங்ளாவை அடைந்ததும் சாயபு சற்று தயங்கி நின்று தாஸை நோக்கி மிகவும் தாழ்ந்த குரலில் "ஐயா! நான் இப்போது இந்த பங்ளாவிற்குள் நுழைந்து உள் செல்லப்போகிறேன். நான் பகிரங்கமாக செல்லவில்லை. பின் புறவழியாகவே செல்லப்போகிறேன். நீரும் நான்செல்கிறபடியெல்லாம் வரவேண்டும். தெரிகிறதா? சற்றும் சந்தடிசெய்யக்கூடாது" என்று சொல்லிவிட்டு அப்பங்களாவின் பக்கத்திலுள்ள சந்தில் நுழைந்தார். தாஸனும் சந்தடியன்றி பின்தொடர்ந்தார். இருவரும் சிறிதுநேரத்தில் அப்பங்களாவின் பின் வாசலையடைந்து சுவரேறிக்குதித்து தோட்டத்திற்குள் சென்றனர். உள்ளேசென்றதும் சாயபு அண்ணாந்து பங்களாவின் மேன்மாடியை நோக்கினர். மொட்டை மெத்தையிலிருந்து மழைஜலம் கீழேவிழுவதற்காக ஒரு தகரக்குழாய் வைக்கப்பட்டிருந்தது. சாயபு மெதுவாக அக்குழாவைப் பற்றியபடி சிலநிமிஷங்களில் மொட்டை மெத்தைக்கு ஏறிச்சென்றார். தாஸனும் கூடிய விரைவில் தட்டித்தடுமாறி மேலே ஏறிப்போனர்.

இருவரும் மொட்டை மெத்தையை யடைந்ததும் அங்கிருந்து கீழிரங்கும் படிகளின் வழியாய் சந்தடியின்றி பூனைபோல் இரங்கினர். எங்கும் இருளும் நிசப்தமும் நிறைந்திருந்தது. தாஸனுக்குமட்டும் இருதயம் பயத்தால் பட படவென்றடித்துக்கொண்டது. இருவரும் பூனைபோல் சென்று ஒரு அரையையடைந்தனர். அவ்வரையின் கதவு உட்புரத்தில் தாளிடப்பட்டிருந்தது. உள்ளே மின்சார விளக்கெரிந்துக் கொண்டிருப்பதை கதவிடுக்கில் பார்த்தனர்.

உள்ளே யாரோ ஒருவர் மெஜைக்கருகில் நாற்காலியி லமர்ந்து கொண்டு எதையோ உற்று நோக்கிக் கொண்டிருந்தார். இருவ ரும் மறுபடியும் பூனைபோல் நகர்ந்து மறுபக்கமுள்ள சாளரத்தை (ஜன்னல்) நெருங்கினர். சாளரத்தின் கதவு திறந்திருந்தது. அவ்வழி யாக எட்டிப் பார்த்தனர். உடனே அங்கு உட்கார்ந்திருப்பவர் இன் னாரென்று சாயபு தெரிந்துகொண்டார். தாஸை மறைந்துகொள் ளும்படிக்கு சொல்லிவிட்டு சாயபு வெகுஜாக்கிரதையாக சாளரத் தின் கதவின்மேல் ஏறி உட்கார்ந்திருப்பவர் கவனிக்கும் வஸ்துவை உற்று நோக்கினர். அவருடைய முகம் மலர்ந்தது. அடுத்தட்சணம் கீழேசந்தடி யன்னியில் இரங்கினர். தன் உட் சோபியில் வைத்தி ருந்த தோற்பையையெடுத்து தாஸிடம் கொடுத்து படம்பிடிக்கச் சொன்னர். தாஸும் பூனைபோல் சாளரக் கதவின்பேரில் ஏறி நின் றுகொண்டு புகைப்படம் பிடிக்கும் கருவியையெடுத்து அங்கு உட் கார்ந்திருந்தவர், அவர்கையிலும், மேஜைமேலும், முற்றும் உள்ளவை உட்பட ஒரு படம் பிடித்துக்கொண்டார். உடனே இருவரும் வந்த வழியே சென்று வீதியை யடைந்தனர். அங்கொரு மூலையில் இரு வரும் சென்று மறைந்துகொண்டு அப்பங்களாவையே கவனித் துக்கொண்டிருந்தனர்.

இரவு சுமார் ஒன்பது மணியாயிற்று. அப்போது ஒரு பெரிய மோட்டார் வெகு வேகமாக வந்து அப் பங்களாவிற்கெதிரில் நின் றது. அதில் டிரைவரோடு சேர்ந்து மூவரிருந்தனர். மோட்டார் வந்து நின்வுறடன் அப்பங்களாவிலிருந்து ஒருவர் வந்தேறினர். புதியதாய் ஏறினவர் டிரைவரை நோக்கி "திருவொற்றியூருக்கு விடு" என்றார். மோட்டாரும் புறப்பட்டு விட்டது.

இவைகளை யெல்லாம் வெகு கவனமாய்ப் பார்த்துகொண் டிருந்த சாயபு தாஸை அழைத்துக்கொண்டு வேகமாக ஓடித் தங்கள் மோட்டார்விட்டிருந்த இடத்தையடைந்து அதில் ஏறினதும் "திரு வொற்றியூர் போகும் ரஸ்தாவில் ஒரு மூடி போட்ட பெரிய மோட் டார் போய்க்கொண்டிருக்கிறது அதைப் பின் பற்றவேண்டும். வேகமாய்விடு." என்றார். மறுநிமிடம் இந்த மோட்டாரும் புறப் பட்டுவிட்டது. சாயபு சென்ற மோட்டார் கன வேகமாய்ச்சென் றது. சிறிது நேரத்தில் அப்பெரிய மோட்டார் கண்களுக்குப்புலப்

பட்டது. அதைக்கண்ட சாயபு டிரைவரை விளித்து, "அப்பெரிய மோட்டாரின் நெம்பரைக் குறித்துக்கொள்ள வேண்டும். கொஞ்சம் நெருங்கினாற்போல் ஓட்டு" என்றார். அவனும் அப்பெரிய மோட்டாருக்கு பத்துகஜ தூரத்தில் ஓட்டிக்கொண்டு போனன். உடனே சாயபு தமது குறிப்புப் புத்தகத்தில் அம்மோட்டாரின் நெம்பரை வரைந்துகொண்டார். இரண்டு மோட்டாரும் அதிவேகமாகச் சென்றது. சுமார் ஒருமணி நேரத்தில் திருவொற்றியூரை நெருங்கியது. திருவொற்றியூரில் ஆலயமிருப்பது யாவருமறிந்த விஷயம். அவ்வாலயத்தின் பின்புறம் உள்ள ஒரு பிரம்மாண்டமான மாளிகையின் எதிரில் அப்பெரிய மோட்டார் நின்றது. சாயபு வந்த மோட்டார் நிற்காமல் சென்று ஒரு சந்து வழியாகத் திரும்பி சிறிது தூரம்போய் நின்றது. உடனே சாயபு பரபரப்பாக தாஸை அழைத்துகொண்டு சந்தடி செய்யாமல் அம் மாளிகையை நோக்கி வந்தார். இவர்கள் வரும் சமயம் பெரிய மோட்டாரில் வந்தவர்கள் கீழேயிரங்கி அம் மாளிகையின் வாயிற்காப்போனிடம் ஏதோ சச்சரவு செய்துகொண்டிருந்ததைக் கண்டனர். உடனே இருவரும் பேசாமல் ஒரு மரத்தின் மறைவில் மறைந்துகொண்டனர்.

அப் பெரிய மோட்டாரில் வந்திருந்தவர்கள் டிரைவரோடு நால்வர். இந்நால்வரும் கீழேயிரங்கி அம்மாளிகையில் நுழையப் போயினர். அப்போது அங்கு காவல்காத்திருந்த சேவகன் இவர்களைத் தடுத்து யாரென்று வினவினன். அவர்கள், அம்மாளிகையின் எஜமானைப் பார்ப்பதற்காக வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டனர். அதைக்கேட்ட அம்மனிதன் கலகலவென்று நகைத்து "என்னையா இது? நீங்கள் பூலோகத்து மனிதர்கள் தானு? அல்லது தெய்வ லோகத்து மனிதர்களா? ஒன்றும் தெரியாதவர்கள்போல் பேசுகிறீர்களே! இந்த மாளிகையின் எஜமானர் நேற்று கொல்லப் பட்டார் என்பது உலகமறிந்த விஷயம். நீங்கள் எங்கே இதுவரையில் தூங்கிக்கொண்டிருந்தீர்கள்?" என்றார்.

வந்தவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டவர்களைப்போல் தோன்றினர். அவர்களில் ஒருவர்:— "என் அப்பா! கோபாலகிருஷ்ணய்யரா கொல்லப்பட்டார்? ஐயோ! பாவம்! அவர் எனக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதராயிற்றே! நாங்கள் இருப்பது பம்பாய். இவர்

எங்களை வரும்படிச் சொன்னார் அதனால்தான் வந்தோம். இச் சென்னையில் இவரைத் தவிர எங்களுக்கு வேறு யாரும் தெரியாது. தயவுசெய்து இன்றிரவுமட்டும் எங்களுக்கு இங்கு தங்கும்படி இடங் கொடுத்தால் நாங்கள் காலையில் புறப்பட்டு ஊருக்குப் போய்விடுகிறோம்" என்று நயமாகக் கேட்டார்.

வாயிற்காப்போன் முதலில் சம்மதிக்கவில்லை. உடனே அவனுடைய கையில் சில வெள்ளி நாணயங்கள் வைக்கப்பட்டது. பணம் எதைத்தான் செய்யாது? பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமென்பார்கள். மாந்தர்களை வசியப்படுத்த பணத்தைத் தவிர உயர்ந்த கருவி வேறெதுவுமில்லை. பணம் பாதாளம் வரைப் பாயுமல்லவா? பணம் எதையும் வசப்படுத்த வல்லது. கற்புடைய மாதர்களைத் தவிர, உலகிலுள்ள எந்தவிதமான உறுதிப்பாடமைந்த வஸ்துவையும் வசப்படுத்தும். எனவே காவற்காரன் இணங்கிவிட்டது ஓராதிசயமல்ல. அவன் அவர்களை யழைத்துப்போய் அம்மாளிகையின் நடுப்பாகத்தில் விட்டு, "இங்கு நான்கு சயன அரைகளிருக்கின்றன. அவைகளில் நீங்கள் சுகமாய்த் தூங்கி நாளை காலையிலெழுந்ததும் போய்விடுங்கள். பிறகு விஷயம் வெளியானால் என் வேலையே போய்விடும்" என்றான். அதற்கவர்கள் சம்மதிக்க அவன் மறுபடி வெளிவாயிற்படிக்குச் சென்றுவிட்டான்.

மரத்தின்மறைவிலிருந்த சாயபு தாஸிடமுள்ள படம்பிடிக்கும் கருவியினுதவியால், அந்நால்வர்கள் காவலனிடம் சச்சரவு நிகழ்த்தியதிலிருந்து படம் பிடிக்கச் சொன்னார். அவனும் அப்படியே படம் பிடிக்கவாரம்பித்தான். அவர்கள் காவலனுடன் உள்ளே போகும் போதும் படம் பிடித்துக்கொண்டே பின்தொடர்ந்தனர். அவர்களைக் கூடத்தில் விட்டுவிட்டு காவற்காரன் திரும்பும் சமயம் இவர்களிருவரும் சுவற்றின் மறைவில் மறைந்துகொண்டனர். கூடத்தில் எறிந்துகொண்டிருந்த மின்ஸார தீபம் வெளிவாயிற்படிவரை ஒளி வீசிக்கொண்டிருந்ததேயன்றி, அதன் பக்கங்களில் இருள் சூழ்ந்திருந்தது. ஆகவே, இவர்கள் ஒளிந்துகொண்டிருந்ததை காவற்காரன் கவனிக்கவில்லை.

காவற்காரன் போனதும் அந்நால்வரும் கூடத்திலுள்ள ஒரு அறைக்குள் நுழைந்தனர். அதுதான் சமயம் என்றெண்ணிய சாயபு

தாஸனுடன் உள்ளே நுழைந்து, அந்நால்வர் நுழைந்த அறையின் சாளரத்தருகில் சென்று படம் பிடிக்கத் துவக்கினர்.

அறைக்குள் சென்ற அந்நால்வரும் அங்கு கிடந்த மேஜையைச் சுற்றி யமர்ந்தனர். அவர்கள் ஏதோ குசுகுசுவென்று பேசியதும், எழுந்து வெளியில் வந்து தோட்டத்திற்குள் நுழைந்தனர். தோட்டத்தின் கிழக்குக் கோடியில் ஒரு பிரம்மாண்டமான ஆலமர மிருந்தது. அதைச் சுற்றி ஒரு ஆள் உயரத்திற்கு வேலியிடப்பட் டிருந்தது. இந்நால்வரும் அதை நோக்கியே சந்தடியின்றி சென்ற றனர். சாயபுவும் தாஸனும் பின்பற்றினர் என்று சொல்வது மிகையே. சிறிது நேரத்தில் நால்வரும் அவ்வேலியைக் கடந்து ஆலமரத் தடிக் குச் சென்று அவர்களிடமிருந்த மின்ஸார விளக்கைப் பொருத்தி அங்கு வெளிச்சமுண்டாக்கினர். மறுநிமிடம் அந்நால்வரில் ஒரு வன் மரத்தின்மீது ஏறி பங்களாவை நோக்கியவாறிருந்த கிளையிற் சென்று மத்தியில் உட்கார்ந்துகொண்டு தன் கையிலிருந்த கயிற்றை கீழே விட்டான். அக் கயிற்றின் முனையில் ஒரு கல் கட்டப்பட் டிருந்தது. அந்தக்கல் தரையில் வந்து நின்றதும் கீழேயிருந்த மூவ ரும் ஏதோ அளவுகள் எடுத்து கல் தரையிற் பட்ட விடத்தில் இரண் டடி சதுரத்திற்கு கோடு கிழித்தனர். இதற்குள் மரத்தின்மீதிருந்த வன் இறங்கிவந்து, "ஆகட்டும்" என்று அதிகாரமாகப் புகன்றான். இதிலிருந்து அவனே அவர்களின் தலைவனெனத் தெரிந்தது. தங்க ளது தலைவன் உத்திரவுப்படி அம்மூவரும் தாங்கள் மறைத்துவைத் திருந்த சிறிய மண்வெட்டிகளால் கோடு கிழித்த இடத்திற்கு உட் புறத்தை வெட்ட வாரம்பித்தனர். சிறிது நேரத்தில் இரண்டடி ஆழம் தோண்டிவிட்டனர். அப்போது வெட்டும் சப்தம் வேற்றுமை புலப்படுத்தியது அந்தத் தலைவன் அவர்களை நிறுத்தச் சொல்லி, தானே ஒரு மண்வெட்டியை வாங்கித் தோண்டினான். அவன் வெகு ஜாக்கிரதையாக வேலை செய்தானென்பது, அவன் மிருதுவாக மண்வெட்டியை உபயோகித்ததிலிருந்து தெரிந்தது. கொஞ்ச நேரம் அவன் அவ்வாறு வேலை செய்தபின், "ஆ! இதோ!" என்று கூறிக் கொண்டே ஒரு அடி நீள அகலமுள்ள ஒரு தங்கப் பெட்டியை வெளியிலெடுத்தான். அது மண்ணிலிருந்ததால் பிரகாசமற்று மங்க லாயிருந்தது. அதை வெளியிலெடுத்தவுடன் கீழே வைத்துத் திறக்க

முயன்றான். முடியவில்லை. "அட சனியனே! இதைத் திறக்க முடியாதுபோலிருக்கிறதே. இதைத் திறக்கவேண்டுமானால் அதில் குறிப்பிட்டிருக்கும் திறவுகோல் வேண்டுமே. இருக்கட்டும்; எதற்கும் வீட்டிற்கு போய்ப் பார்ப்போம்." என்று சொல்லிக்கொண்டே அதையெடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். மற்றவர்களும் பின் தொடர்ந்தனர்.

இதுகாறும் நிகழ்ந்தவையெல்லாம் வேலியின் மறைவிலிருந்து சாயபுவும் தாஸும் **புகைப் படம்** பிடித்துக்கொண்டிருந்தார்களென்று சொல்லத் தேவையில்லை. அந்நால்வரும் மறுபடியும் மாளிகைக்குச் சென்று ஏதோ ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். கால்மணி நேரங்கழித்து வெளியே வந்து வெளிவாசலை நோக்கி நடந்தனர். வாயிற்காப்போன் உறங்கி விழுந்துகொண்டிருந்தான். இவர்கள் அவனை நெருங்கிப் புலிபோல் பாய்ந்துப் பிடித்துக்கொண்டனர். அவர்களில் ஒருவன் அவனது கண்களை கைகுட்டையால் கட்டிவிட்டான். கைகளும் கால்களும் கட்டப்பட்டன. உடனே அவர்கள் அவனை குண்டுகட்டாகத் தூக்கிக்கொண்டுபோய் பெரிய மோட்டாரில் வைத்தனர். மறு நிமிடம் மோட்டார் புறப்பட்டுவிட்டது.

சாயபுவும் தாஸும் வெகு சந்தோஷமாய் வெளிவந்தனர். அம்மாளிகையிலிருந்து புறப்பட்டு தாங்கள் வந்த மோட்டார் நிற்கிற இடத்தை நோக்கி நடந்தனர். அப்போது சாயபு தாஸை நோக்கி "எதுவரை படம் பிடித்தாய்?" என்றார். அதற்கு தாஸ் "என்? அவர்கள் காவற்காரனை பிடித்துக்கட்டி மோட்டாரில் போட்டுக்கொண்டு போன வரையும் படம் பிடித்துவிட்டேன்." என்றார்.

அதை கேட்டு சந்தோஷமடைந்த சாயபு துரிதமாக நடந்து மோட்டாரை யடைந்து அதில் ஏறிக்கொண்டு நேராக சேத்துப்பட்டிற்கு வந்து தாஸை இரக்கிவிட்டு "பத்திரம் விஷயம் கொஞ்சமும் வெளிவாக்கூடாது." என்று எச்சரித்தவுடன் மைலாபூரிலுள்ள தனது ஜாகைக்கு விடச் சொன்னார். மோட்டாரும் சிறிது நேரத்தில் அங்கு போய் நின்றது. சாயபு இரங்கியவுடன் டிரைவருக்குச் சேரவேண்டிய வாடகை பூராவும் கொடுத்துவிட்டு, "ஐயா! நான் யாரென்று உனக்குத் தெரியும். ஆகையால் இப்போது நடந்த விவகாரங்கள் ஒரு சிறிதும் வெளிவாக் கூடாது. ஜாக்கிரதை. வெளி வந்ததோ, நீ தொலைந்தாய். பத்திரம்! பத்திரம்!!" என்று எச்சரித்துவிட்டு, அவனுக்கு இனாமாக பத்து ரூபாய் நோட்டு ஒன்று கொடுத்து அனுப்பிவிட்டார்.

# எட்டாம் அத்தியாயம்.

## யானைக்குமடி சரக்கும்.

1. வல்லவர்க்கு பாரமெனக் காணுவ தொன்றில்லை.
2. ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.
3. பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் றமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

ஞானனந்தர் தமது வீட்டிற்கு வந்தபோது இரவு சுமார் பனிரண்டு மணியிருக்கும். இவர் கதவைத் தட்டின சில நிமிடங்களில் வேலைக்கார முத்து வந்து கதவைத் திறந்தான். அவன் சாமியாரைக் கண்டதும் வியப்படைந்தான். அதைக்கண்ட சாமியார் "என்ன முத்து வியப்படைகிறாய்? நான் சொன்னபடி செய்யாமல் இன்றிரவே வந்து விட்டேனென்று ஆச்சரியப் படுகிறாயோ? அப்படி நீ இரும்பூதெய்தத் தேவையில்லை. என்னுடைய வேலை நிரண்ய முள்ளதல்லவே. ஒரு வேலையை நோக்கிச் சென்றால், அது சில நிமிஷங்களில் முடிந்தாலும் முடியும்; அல்லது நாட்கள் சென்றாலும் செல்லும்; மாதங்களானாலும் ஆகும்; ஒரு வேளை அதனால் இறக்கவும் நேரும். ஆகையால் இதற்கெல்லாம் நீ கலவரப்படாதே" என்று சொல்லிக்கொண்டே தமது அறைக்குச் சென்று சாயபு உடைகளைக் களைந்துவிட்டு ஒரு ஆசனத்திலமர்ந்தார். முத்துவும் சாமியார் பின்னாலேயே வெளிக் கதவை யடைத்துவிட்டு வந்து சேர்ந்தான். சாமியார் அவனை நோக்கி, "என்ன முத்து? நானில்லாத வேளையில் ஏதேனும் விசேஷம் நடந்ததா?" என்று வினவினர்.

முத்து:— ஆம். ஸ்ரீலோல சாஸ்திரிகள் கொஞ்ச நேரத்திற்கு முன் வந்துவிட்டுப் போனார்.

சாமியார்:— என்ன? ஸ்ரீலோலனா வந்திருந்ததாகச் சொல் கிறாய்!

முத்து:— ஆமாம்! எஜமானே! ஸ்ரீலோல சாஸ்திரிகளே வந் திருந்தார். அவர் தங்களைக் காண வந்ததாகவும், தாங்களில்லை யாகையால் ஒரு கடிதம் கொடுத்து தாங்கள் வந்தவுடன் கொடுத்து விடும்படியும் சொல்லிப் போனார்.—என்று சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்தான். கடிதத்தை வாங்கிய சாமியார், நிதானமாக கடித வுறையை நீக்கி லிகிதத்தை யெடுத்துப் பின்வருமாறு மனதிற்குள் ளாகவே படித்தார்.

## கடிதம்.

துப்பறியும் ஞானானந்த சுவாமிகளுக்கு ஸ்ரீலோலன் அதிக வணக்கமாய் விண்ணப்பித்துக்கொள்வது யாதெனில், தங்களுத்திரவுப்படி நான் மரண விசாரணையன்று சாயங்காலமே புறப்பட்டுக் காஞ்சீபுரம் போனேன். என்ன அதிசயம்! அங்கு கோவிந்தன் வரவேயில்லையாம். அத்துடன் எனது தமக்கை யான மஹாலட்சுமி அன்றிரவே காணமற்போயிருக்கிறாள். அங்கு எனது தமக் கையின் மாமியார் மிக்க துயரங்கொண்டு வியாதியுற்றிருந்தாள். அவள் சொல் வதையும் அங்கு காணும் சில குறிகளாலும் மஹாலட்சுமி பலவந்தமாகக் கொண்டுபோகப்பட்டாளென்று எண்ணுகிறேன். தாங்கள் தயவு செய்து எப்படியாவது எனது தமக்கையை கண்டுபிடித்து என்னிடம் சேர்க்கவேண்டு மென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அதுவுமன்றி என்னுடைய உயிர்க் காதலியான சாவித்திரியையும் காணேம். தாங்கள் எப்படியேனும் முயன்று என்னுயிரனைய இவர்களை என்னிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

நுங்கம்பாக்கம்.
10—3—19'

இப்படிக்குத் தங்களன்பன்,
**ஸ்ரீலோலன்.**

என்றெழுதியிருந்ததை சாமியார் படித்து முடித்தார்.

அவருக்குப் பலவித யோசனைகள் தோன்றிற்று. அன்றிரவு பனிரண்டு மணிக்குமேல் சைகிள் மோட்டாரில் காஞ்சீபுரத்திற்குச் சென்ற கோவிந்தன் எப்படி மறைந்துவிட்டிருப்பான்? அத்துடன் மஹாலட்சுமி எப்படி காணமற்போனாள்? பலவந்தமாகக் கொண்டு போகப்பட்டிருக்கவேண்டுமென்று ஸ்ரீலோலன் சொல்கிறானே. ஒருவேளை அப்படி நடந்திருக்குமா? அல்லது சுயேச்சையாகச் சென் றிருப்பாளா? என்று இன்னும் பலவாறு யோசித்துக்கொண்டே

யிருந்தார். அப்போது திடீரென்று அங்கு வைக்கப்பட்டிருந்த டெலிபோனில் (Telephone) "கிண்; கிண்" என்று மணியடித்தது. அதைக் கேட்ட சாமியார், டேலிபோனருகிற் சென்று "யார்" என்று வினவினர்.

பேசுபவர்:— பேசுகிறது யார்? ஞானனந்த சுவாமிகளா?

சாமியார்:— ஆம். நான் தான். தாங்கள் யார்? என்ன விஷயம்?

பேசுபவர்:— நான் சேட் மோகன்லால். இங்கு ஒரு விபரீதமான கொலை நடந்திருக்கிறது.

சாமியார்:— கொலையா! யார் கொல்லப்பட்டது? எங்கே? நீர் எங்கிருந்து பேசுகிறீர்?

பேசுபவர்:— நான் வண்ணாரப்பேட்டையிலிருந்துப் பேசுகிறேன். கொலையுண்டது எனது மனைவியே. தாங்கள் தயவுசெய்து உடனே வர முடியுமா?

சாமியார்:— போலீசாருக்கு அறிவிக்கப்பட்டதா?

பேசுபவர்:— ஆம். ஆள் அனுப்பியிருக்கிறேன்.

சாமியார்:— ஆனல் சரி! நான் இப்போது வர முடியாது. ஏனெனில், இந்நேரத்தில் அவ்வளவு தூரம் நடந்து வர இயலாது. இங்கு யாதொரு வண்டியும் இப்போது கிடைக்காது.

பேசுபவர்:— ஐயோ! தாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. எனது மோட்டாரை உடனே தங்கள் ஜாகைக்கு அனுப்பிவைக்கிறேன். அதில் உடனே வந்தால் மிகவும் நலம். எப்படியேனும் முயன்று குற்றவாளியைக் கண்டுபிடிக்கவேண்டும்.

சாமியார்:— (சிறிது யோசித்துவிட்டு) ஆனல் சரி! உமது மோட்டாரை யனுப்பும் நான் வருகிறேன்.—என்றதும் டெலிபோனை விட்டு நாற்காலியில் வந்துட்கார்ந்தார். அவருக்கு இப்போது பல வித எண்ணங்களுண்டாயிற்று. கோவிந்தனைக் கண்டுபிடிப்பதா? மஹலட்சுமியைக் கண்டுபிடிப்பதா?; குமாரசாமிநாடானையும், அவனே துராக்கிரதமாய் தூக்கிச் சென்றிருக்க வேண்டுமென யூகிக்கப்படும் சாவித்திரியையும் கண்டு பிடிப்பதா? இவர்கள் நால்வரையும் கோபால

கிருஷ்ணய்யர் கொலைக் கேஸ், செஷன்ஸில் விசாரிக்கப்படுமுன் கண்டுபிடித்தே தீரவேண்டும். இதற்குள் இன்னொரு புதிய கேஸில் தலையிட்டுவிட்டால், இதையெல்லாம் எப்படிக் கண்டுபிடிப்பது? ஆகையால் இப்போது அழைத்தவரிடம் சென்று இருக்கும் நிலைமைகளைக் கூறி முடியாதென்று சொல்லிவிடுவோம் என்று தீர்மானித்துக்கொண்டார்.

இதற்குள் வீதியில் மோட்டார் வந்து நின்ற சத்தம் கேட்டது. உடனே சாமியார் உடையணிந்துகொண்டு, நாம் முன்பு கூறிய கைத் துப்பாக்கியை தனது வலதுகால் நிஜாரிலுள்ள பையில் வைத்துக்கொண்டு புறப்பட்டு மோட்டாரில் ஏறினர். அந்த மோட்டார் ஒரு புதுமாதிரியானது. அதனுடைய மேல் மூடி (Top) மடிக்க முடியாதது. பக்கங்களில் கனத்த கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தது. அந்த மோட்டாரில் ஒரு டிரைவர் தவிர வேறு யாருமில்லை. சாமியார் ஏறி உட்கார்ந்ததும் மோட்டார் புறப்பட்டுவிட்டது. சாமியாருடைய முழு கவனமும் காணமற்போன நால்வர் மேலேயேயிருந்ததால், மோட்டார் எவ்வளவு நாழிகை சென்றதென்பதையே கவனிக்கவில்லை. கடைசியில் மோட்டார் ஒரு பங்களாவிற்குள் சென்று நின்றது. உடனே சாமியார் கீழேயிறங்கி அம்மாளிகையை நோக்கிச் சென்றார். இவருடைய வரவிற்காக சேட் மோகன்லால் என்பவர் வாயிற்படியிலேயே ஆயத்தமாகக் காத்திருந்தார். சாமியார் அவரை நெருங்கியதும் அவர் மிகுந்த துயரத்தோடு சாமியாரை நோக்கி, "தாங்கள் இவ்வளவு தூரம் பெரிய மனது வைத்து வந்ததைப்பற்றி அதிக சந்தோஷமும் நன்றியும் பாராட்டுகிறேன்." என்றார்.

**சாமியார்:—** உத்தியோகம் அத்தகையது. எந்த நேரத்திலும் யார் அழைப்பினும் செல்ல வேண்டியதுதான். ஆனல் நான் இப்போது ஒரு கொலைக் கேஸில் சம்மந்தப்பட்டிருக்கிறேன்.

**மோகன்லால்:—** ஓகோ! கோபால்கிருஷ்ணய்யர் கொலைக் கேஸில் துப்புத் துலக்கத் தாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்களா?

**சாமியார்:—** நான் அதில் வேலை செய்து வருகிறேன். ஆகையால் தங்களுக்கு நான் உதவமுடியாமல் போகிறதே யென்று வருத்தப்படுகிறேன்.

மோகன்லால்:— சுவாமிகளே! தாங்கள் அப்படி சொல்லி விடக் கூடாது. இப்போது தங்களையன்றி எனக்கு வேறு யாரும் துணையில்லை. என் மனைவி அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறாள். அக்கோரக் காட்சியைத் தாங்களே நேரில் கண்டால் அப்போதே னும் தங்கள் மனம் திரும்பாதா? சீக்கிரம் வாருங்கள். அக்கோரக் காட்சியைக் காண்பிக்கிறேன். — என்று சொல்லி சாமியாரை அழைத்துகொண்டு கூடத்தைக் கடந்து பின்கட்டிற்குள் பிரவேசித் தான். சாமியார் வந்ததிலிருந்து வெகு கவனமாக சேட் மோகன் லாலை உற்று நோக்கினார். அவன், இதற்குமுன் எப்போதும் காணாத புது மனிதனாக விருந்தான். இருவரும் சிறிது நேரத்தில் பின்கட்டுக் கூடத்தை யடைந்தனர். அக் கூடத்தின் இருபுறத்திலும் இரண் டறைகளிருந்தன. சேட், இடதுபுறமாயிருந்த அறைக்குச் சென்று அதன் கதவைத் திறந்து உள் நுழைந்தான். சாமியாரும் பின்னாலேயே உள்ளே நுழைந்தார். இருவரும் உள்ளே சென்று அறையின் நடு வில் நின்றனர். அவ்வறையில் ஒரு பவர் லைட் எரிந்துகொண்டிருந் தது. ஒருபுறம் ஒரு தடித்த கறுப்புத் திரை தொங்கிக்கொண்டிருந் தது. இருவரும் உள்ளே சென்றதும் சேட் கதவை மூடிவிட்டு, "சுவாமிகளே! இதோ! இத்திரையின் பின்னாலிருக்கும் கட்டிலில் எனது மனைவி படுத்திருந்தாள். திடீரென்று ஒருமணி நேரத்திற்கு முன், 'கொலை; கொலை' என்று என் மனைவி கூச்சலிட்டதைக் கேட்டு நானும் சில வேலையாளரும் ஓடி வந்து பார்த்தோம். அதற்குள் அவள் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். வேறு யாரும் இங்கு தென்பட வில்லை." என்று அதிக வருத்தத்துடன் மொழிந்தான். இதைக் கேட்ட சாமியார் அந்தத் திரையைச் சட்டென்று விலக்கினார். அந்தக் கட்டிலின்மேல் ஒரு ஆள் படுத்துக்கொண்டிருந்ததுபோலிருந்தது. அந்த உருவம் ஒரு போர்வையால் முழுதும் போர்த்தப்பட்டிருந்தது. அதை அவசரமாக விலக்கிய சாமியார், திடுக்கிட்டுவிட்டார். என்? அங்கு ஒரு தலையணை மட்டுங் கிடந்தது. இதைக் கண்ட சாமியார் அதிக தைரியசாலியாகையால், திகில் கொள்ளாமல் நாம் ஏதோ ஒரு ஒரு தந்திரமான சதியாலோசனையில் சிக்கிக்கொண்டோம் என்பதை யறிந்துகொண்டு புன்னகையுடன் திரும்பினார். சேட் மோகன்லால் அங்குள்ள மேஜைக்கருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துக்கொண்டு சாமியாரைப் பார்த்து சிறித்துகொண்டிருந்தான். சாமியார் அதிக

நிதானமாயும் கோபங்கொள்ளாமலும் மற்றெவ்வித அதிசயமும் காணுதவர்போல், சாவதானமாய்த் திரும்பி வந்து சேட்டுக்கு எதிரிலுள்ள இன்னொரு நாற்காலியிலமர்ந்து, "சேட் மோகன்லால் அவர்களே! தாங்கள் இனி சாவதானமாய்ப் பேசலாம். எதற்காக நம்மை இவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டு தந்திரமாக வரவழைத்தது" என்று கேட்டார்.

சேட்:— இன்னும் தங்களுக்கு நான் யாரென்று தெரியவில்லையோ?

சாமி:— ஏன்? தங்களை ஆதியிலிருந்தே தெரியும்.

சேட்:— என்னைத் தங்களுக்கு முதலிலிருந்தே தெரியுமென்றால் எப்போது தெரியும்?

சாமி:— தங்களுடைய சாமர்த்தியமான மாறுவேடத்திற்குள்ளிருக்கும் மனிதர், பதின்மூன்று வருடங்களுக்குமுன் சென்னைக்கு வந்திருந்த டில்லி திவான்பகதூர் நாராயணசாமி முதலியாரை வழிப்பறியடித்து பணம் எடுத்துக்கொண்டதுமன்றி, அவரது ஒரு வயதுடைய பெண் மகவையும் அபகரித்துக்கொண்டு போனதிலிருந்து தெரிந்தவரே.

சேட்:— என்ன? தாங்கள் சொல்வது மிகுந்த விபரீதமான விஷயம். நான் யாரென்றே உங்களுக்குக் கொஞ்சமும் தெரியாது. தெரிந்திருந்தால் தாங்கள் இங்கு வந்தேயிருக்கமாட்டீர்கள்.

சாமி:— அப்படி நீர் நினைத்துக்கொள்வது தவறு. நீர் நம்மை டெலிபோனில் அழைத்தபோதே இது உண்மையான விஷயமல்லவென்று யூகித்தேன். அதுவும் இங்கு நான் வந்தபோது யாதொரு குழப்பமுமின்றி அமைதியாயிருப்பதைக் கண்டவுடன் ஊர்ஜிதப்பட்டது. அதோடு உம்மை நேரில் கண்டவுடன் நீர் இன்னாரென்று தெரிந்துபோயிற்று.

சேட்:— (திகிலடைந்த மனதோடு) ஆனால் நான் யாரென்று சொல்லும் பார்ப்போம்.

சாமி:— நீர் யாரென்று சொல்லவேண்டுமா? சொல்கிறேன். நீர் தான் பிரசித்தி பெற்ற வழிப்பறிக் கொள்ளைக்காரனை குமாரசாமி நாடான் என்பவர். இதில் எள்ளளவு சந்தேகமுமில்லை.

குமார்சாமி:- – "தாங்கள் தெரிந்துக்கொண்ட வரையில் நான் மறைப்பதில் ஒரு பிரயோஜனமுமில்லை" என்று சொல்லிக்கொண்டே தனது தலைப்பாகை முதலிய மாறுவேடமணிந்திருந்த உடைகளை யெல்லாம் களைந்துவிட்டான்

சாமி:— சரி! நான் இனி தாமதிக்க முடியாது. நான் அதி சீக்கிரம் போகவேண்டும். நீர் நம்மை எதற்காக இவ்வளவு பிரயாசையோடு வரவழைத்தீர்?

குமாரசாமி:— சுவாமிகளே! தாங்கள் இப்போது என் கை வசத்தில் நன்றாய் சிக்கிக்கொண்டிருக்கிறீர். இங்கு உமது சாமர்த்தியமொன்றும் செல்லாது. ஆகையால் நமது இஷ்டப்படி நடந்து சில நிபந்தனைகளுக்கு ஒத்துக்கொண்டால் நீர் உயிரோடு போகலாம். இன்றேல் மடியவேண்டியதே

சாமி:— "பெண்ணினும் கோழை மனிதனே! நீயா என்னைக் கொல்பவன்? உன்னுடைய நிபந்தனைகளுக்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். எதோ! உன் கைவரிசையைக் காட்டு பார்ப்போம்!" என்றதும் குமாரசாமி நாடான் தனது உட்ஜோபியிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்து அவரது முகத்திற்கு நேராக நீட்டி, "இப்போதென்ன சொல்கிறீர்கள்? நமது நிபந்தனைகளுக்கு நீர் சம்மதித்தால் தப்பலாம். இல்லையேல் அடுத்த நிமிஷம் உமது மூளை சிதறிவிடும்" என்றான்.

சாமி:— (சாவதானமாய் திகிலும் கலவரமும் அடையாதவர்போல்) ஏ! நாடான்! நீ யாருடன் இந்த வாதிடுகிறாயென்று தெரியுமா?

குமாரசாமி:— ஓ! நன்றாய்த் தெரியும். இந்தியாவெங்கும் கீர்த்தி வாய்ந்த துப்பறியும் வீரகேசரியான ஞானனந்தரிடமே வாதிடுகிறேன் என்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

சாமி:— தெரியுமா? தெரிந்துமா நம்மிடம் விளையாடுகிறாய்? ஜாக்கிரதை.

குமாரசாமி:— பயமுறுத்துகிறீரா? உம்முடைய பயமுறுத்தலை நான் இப்போது இலட்சியம் செய்யவில்லை. நீர் எவ்வளவுதான்

கெட்டிக்காரராயினும் உமக்கும் மேலானவன் ஒருவன் இராமற் போகான். உம்மை விட நான் மேலானவனென்றே மதிக்கிறேன். அதனால்தான் இவ்வளவு துணிகரமாக உம்மை நமது வாசஸ்தலத்திற்கே வரவழைத்தேன்.

சாமி:— அடே! குமாரசாமி! நான் உன்னிடம் பூரணமாகச் சிக்கிக்கொண்டிருக்கிறேன் என்று செருக்குற்று ஏதோ உளறுகிறாய். நான் வேண்டுமென்று நினைத்தால் நடக்கின்ற நிமிஷத்திலேயே தப்பிப் போவேன்.

குமாரசாமி:— நீர் இப்போது தப்பிப்போக ஏதேனும் முயற்சித்தால் அடுத்த நிமிஷம் பிணமாவீர்.—என்று துப்பாக்கியைத் தலைக்கு நேராக அசைத்துக் காட்டினான்.

சாமி:— அவ்வளவு நம்பிக்கையுனக் கிருக்கிற வரையில் அது சரியானதல்லவென்பதைக் காட்டுகிறேன்.—என்றதும் அவருடைய நாற்காலி திடீரென்று தலைகீழாகச் சாய்ந்துவிட்டது. இதைக் கண்ட குமாரசாமி நாடான் ஏன் விழுந்துவிட்டாரென்று பார்ப்பதற்காக துப்பாக்கியை நீட்டியவண்ணம் எழுந்து நின்றான். அவன் நின்றதுதான் தாமதம். "டமீர்" என்ற சப்தம் கேட்டதும் அவனுடைய கையிலிருந்த துப்பாக்கி ஆகாயத்தில் பறந்தது. அத்துப்பாக்கி அவன் கையிலிருந்து விடுபட்டு மேஜைமேல் விழுந்தது. கண்மூடித் திறப்பதற்குள் சாமியார் குதித்தெழுந்து அத்துப்பாக்கியைக் கைப்பற்றிக்கொண்டார்.

அங்கு நடந்தது நன்கு புலப்படும்பொருட்டு சில விவரம் கூறிவிட்டுக் கதையைத் தொடர்வாம். அவன் அவரை முடியுமானால் தப்பித்துக்கொள்ளும் என்று சொன்னதும் சாமியார் வேண்டுமென்றே நாற்காலியை திடீரென்று சாய்த்துக் கீழே விழுந்துவிட்டார். குமாரசாமி நாடான் எழுந்திருப்பதற்குள் தமது துப்பாக்கியை யெடுத்து அவனது துப்பாக்கியைச் சுட்டுவிட்டார். அந்தத் துபபாக்கிச் சுடப்பட்ட வேகத்தால் அவன் கையிலிருந்து பிய்த்துக் கொண்டு மேஜை மேல் விழுந்தது. அவர் அதைபுடனே இன்னொரு கையிலெடுத்துக்கொண்டார்.

மேற்கூறியவைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் ஒரு விநாடியில் நடந்துவிட்டது. திடீரென இச்சம்பவம் நேருமென்று சற்றும் எதிர்ப்பாராதிருந்த குமாரசாமி நாடான் திகைத்து சில விநாடி நேரம் அசைவற்று நின்றுவிட்டான். அதற்குள் சாமியார் தமது இருகைகளிலும் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு கதவினருகில் சென்று அக்கதவின்மேல் தமது முதுகை வைத்து சார்ந்துக்கொண்டு குமாரசாமி நாடானுடைய தலைக்கு நேராக இரண்டு கைத்துப்பாக்கிகளையும் குறிவைத்துக்கொண்டு நின்றார்.

தான் அகஸ்மாத்தாய் எமாற்றப்பட்டதையுணர்ந்த குமாரசாமி நாடான், ஒன்றுந் தோன்றாது அசைவற்று சில விநாடிகளே நின்றான். மறுபடியும் தனது தைரியத்தையெல்லாம் சேகரித்துக்கொண்டு சாமியாரை நோக்கி, "சுவாமிகளே! இப்போதும் தாங்கள் தப்பித்துக் கொள்ளவில்லை. என் வீணான சச்சரவுகளை விளைவித்துத் தங்களுடைய அருமையான தேகத்தைக் கெடுத்துக்கொள்கிறீர்கள்?

சாமி:— அடே! இந்த வீண்மிரட்டுக்களெல்லாம் வேண்டாம். இப்போது நீ சாவித்திரிதேவியை ஒளித்துவைத்திருக்கும் இடத்தைக் காண்பித்துவிட்டால் பிழைப்பாய். இன்றேல் கட்டாயம் உன்னை சுட்டுத் தள்ளுவேன்.

குமாரசாமி:— சுவாமி! தங்களுக்கு நான் என்ன சொன்னாலும் ஏற்கப்போகிறதில்லை. எனக்கு எப்படி சாவித்திரிதேவி காணாமற்போனாளோ தெரியாது. அவளை யாரோ துஷ்டர்கள் கொண்டு போயிருக்கவேண்டும்.

சாமி:— அடே! வீணான பொய் வார்த்தைகளை மொழிந்து எனக்குக் கோபத்தை யுண்டாக்கினையோ, அடியோடு அழிந்து போவாய். பத்திரம்.

குமாரசாமி:— அதிகமாக மிரட்டாதீர்கள். நான் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுகிற ஆசாமியல்ல. உங்களைப்போல அநேக துப்பறிபவர்களைக் கண்டவன். உங்களை நான் சமாதானமாய்க் கேட்கிறேன். எச்சரிக்கிறேன். என்னுடைய நிபந்தனைகளுக்கு ஒருப்பட்டு சமாதானமாய் உயிர்வாழப் பிரியமா? அல்லது எனக்கு

விரோதமாகக் கிளம்பி, என்னால் சிறைசெய்யப்பட்டு மரணமடையப் பிரியமா?

சாமி:— நீ என்ன? உன்னுடைய சாமர்த்தியத்தை அளவு கடந்து புகழ்ந்துக்கொள்கிறாயே. உன்னால் என்னை இப்போது சிறையாக்க முடியுமா? நீ மீசையுள்ள ஆண்பிள்ளைக் கேசரியானால் என்னைச் சிறைப்படுத்துப் பார்க்கலாம்.—என்றதும் இன்னும் ஸ்திரமாக தமது கால்களை யூன்றியவாறு அவனையே உற்றுப்பார்த்துக் கொண்டு சூது செய்தால் சுட்டுவிடுவதாக பயமுறுத்தினார். குமாரசாமி நாடான் சிறிது நேரம் இவரையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். சாமியார் இங்கிருந்து தாம் எப்படித் தப்பிப் போவதென்பதையே யோசித்துக்கொண்டிருந்தார். இவரையே ஐந்து நிமிஷ நேரமாக முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்த குமாரசாமி நாடான், திடீரென்று மின்ஸாரம் தாக்கப்பட்டவன்போல் மேஜையை நோக்கிப் பாய்ந்துபோய் அங்கு வைக்கப்பட்டிருந்த வேலையாளைக் கூப்பிடும் மணியை (Calling bell) யழுத்தினான். இதைக் கண்ட சாமியார் அவனது தலையை நோக்கிச் சுட்டார். ஆனால் குறி தவறிவிட்டது. மறுமுறை சுடுவதற்குள் ஒரு அபூர்வ சம்பவம் நேர்ந்தது. குமாரசாமி நாடான் மணியை அழுத்தியது தான் தாமதம். அந்தோ! சாமியாருடைய காலின் கீழே திறக்கப் பட்ட கற்கதவின் வழியாகத் தடாலென்று விழுந்துவிட்டார். அவர் கீழே விழுந்ததும் அங்கு திறந்த கதவு தானாகவே மூடிக்கொண்டது.

கீழே பாதாளத்தில் விழுந்த சாமியாருடைய தேகமெங்கும் பலத்த காயங்களுண்டாயிற்று. தான் படுமோசம் செய்யப்பட்டிருப்பதை யுணர்ந்தார். அது ஒரு தரையிலுள்ள சுரங்க அறை யென்பதையு மறிந்துக்கொண்டார். அவர் அப்போதும் திகிலாவது பயமாவது, எவ்வித பீதியாவது அடைந்தவரேயல்ல. அவர் அப்போதும் எவ்வித ஆத்திரமுங்கொள்ளாது மிகுந்த சாந்தமாய் அவ்வறையை உற்று நோக்கினார். அறை ஒரே இருள் மயமாயிருந்தது. ஒன்றும் நன்றாய் விளங்கவில்லை. சுமார் பனிரண்டடி உயரத்திலிருந்து கீழே விழுந்த அதிர்ச்சியால் அவருடைய புலன்களெல்லாம் பொறி கலங்கியிருந்தது. மூளை சுழன்று மயக்கத்தை யுண்டாக்கிற்று. பாவம்! என்ன செய்வார். தானே கழுவில் மாட்டிக்கொண்டவர்

போல், அசைவற்று அரைமணி நேரமிருந்தார். கடைசியாக அவர் தம்மைத் தாமே சாமாளித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார். இருளில் ஒன்றும் கண்களுக்குப் புலப்படவில்லை. அவருக்கு அப்போதும் பூரணமாக மயக்கம் தீரவில்லை. மேலேயிருந்து கிழேவிழுந்த போது கால்களே அதிகமாய்த் தாக்கியதால் அவருக்கு எழுந்து நடமாட முடியவில்லை. வெகுப் பிரயாசையுடன் உட்கார்ந்து தம்மிடமிருந்த நெருப்புப் பெட்டியையெடுத்து ஒரு குச்சியைக் கிழித்து வெளிச்சமுண்டாக்கி அரையின் நாற்புறங்களையும் நோக்கினார். அவ்வரையின் சுவர்களெல்லாம் கருங்கல்லாலாக்கப்பட்டிருந்தது. வெளியிலிருந்து எவ்விதமான வெளிச்சமும் உள்ளே தோன்றவில்லை. ஆயினும் குளிர்ந்த காற்றுமட்டும் எங்கிருந்தோ வருகிறதென்பதை அவருடைய நுட்பமான புத்தி அதிசீக்கிரத்தில் தோற்றுவித்தது. அவருடைய புத்தி இன்னும் சரியான சுவாதீன நிலைமைக்கு வாராமையால் இன்னும் ஓரரைமணிநேரம் பொறுத்தார். மறுபடியும் ஒரு தீக்குச்சியைக் கிழித்து நன்றாய் நாற்புறமும் வெகு கவனமாய் நோக்கினார். அப்பாதாள அரையின் ஒரு மூலையில் வாசலொன்றிருந்தது. அங்கு ஒரு தண்ணீர்க் குழாயும் குளிப்பதற்காக ஒரு தொட்டியுமிருந்தன. அவைகளையன்றி அவ்வரையின் ஒரு மாடத்தில், சுவற்றில் மாட்டும் கண்ணாடி விளக் (Wall Lamp) கொன்றிருந்தது. இதைக் கண்ட சாமியார், அதிக அவஸ்தையுடன் எழுந்து மெதுவாக நடந்துச் சென்று அக்கண்ணாடி விளக்கை யேற்றினார். உடனே அவ்வரை முழுதும் வெளிச்சம் நிறைந்தது. சாமியார் அரையின் நடுவில் நின்று நன்றாகச் சோதிக்கத் தொடங்கினார். அவ்வரை சுமார் இருபதடி அகல நிகளமுள்ள ஓர் சதுரமான பாதாளச் சுரங்கம்போன்றிருந்தது. அவ்வரையினின்று இன்னொரு அரைக்குப் போவதற்காக ஒரு வாசற்படியும் தடித்த இரும்புக் கதவுமிருந்தது. இதைக்கண்ட சாமியார், ஓகோ! இந்த பாதாளச் சுரங்கம் மிகவும் விசாலமும், பல வரைகளையும் உடையதுபோலும். பல பேரை இங்கு சிறை வைக்கவே கட்டப்பட்டதாயிருக்கவேண்டுமென்று யோசித்துக்கொண்டே கதவை சோதிக்கத் தொடங்கினார். அக்கதவு பலமான எஃகுத் தகட்டுகளாலாகிய தாட் கோல்களாலும் இரும்புச் சங்கிலிகளாலும் பிணிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஒரு

பெரிய புது மாதிரியான பலத்தப் பூட்டும் போடப்பட்டிருந்தது. இவைகளெல்லாம் நொடியில் கவனித்த சாமியார், முன்பின் யோசியாமல் அடுத்த அறைக்குள் நுழையவேண்டுமெனக் கருதித் தம்மிடமிருந்த கைத்துப்பாக்கியால் பூட்டின் வாயிற் சுட்டு அப்பூட்டை அரைக்ஷணத்தில் விலக்கினர். மறுநிமிஷம் சங்கிலிகளும் தாட்கோல்களும் விலக்கப்பட்டன. கதவை யிழுத்துப் பார்த்தார். அக்கதவு அசையவேயில்லை. என்ன இழுத்தும் கதவு திறந்தபாடில்லை. இதைக் கண்ட சாமியார், ஒருவேளை மறுபக்கமும் பூட்டிடப்பட்டதோ வென்று சந்தேகித்து மனத்தளர்வடைந்தார்.

அப்போது அடுத்த அறையிலிருந்து "யார் அது?" என்று யாரோ கேட்டதுபோலிருந்தது. அதை யுணர்ந்த சாமியார் தம்மைப்போல் இன்னும் யாரோ ஒருவர் அடுத்த அறையில் சிறை வைக்கப்பட்டிருக்கிறரென்பதை யறிந்துக்கொண்டு, "அடுத்த அறையிலிருப்பது யாராயினும் சரி! அவர்களும் என்போலவே சிறையாக்கப்பட்டிருக்கவேண்டுமென்றே நினைக்கிறேன். ஆகையால் தயவுசெய்து உட்புறம் தாளிடப்பட்டிருந்தால் உடனே திறந்துவிடக் கோருகிறேன். பிறகு இருவரும் யோசித்து எப்படியேனும் தப்பிச் செல்லவேண்டும்." என்று உறத்துக் கூறினர். உடனே "ஐயா! இங்கு தாள்மட்டும் போட்டிருந்தால் திறந்துவிடலாம். பலமான பூட்டு போட்டிருக்கிறதே. நான் எப்படித் திறக்கமுடியும்?" என்று பரிதாபமான குரலில் பதில் வந்தது.

சாமியார் முதலில் இக்குரலைக் கேட்டதும் பிரம்மித்துவிட்டார். தாம் எங்கோ அக்குரலைக் கேட்டதுபோலிருந்தது. தாம் அவரை அறிந்தவரென்றே அவர் மனதிற்குத் தோன்றிற்று. அவர் தம்மாலானவரை யோசித்துப் பார்த்தார். அடுத்த அறையிலிருந்து வந்த குரலொலியிலிருந்து அவரை இன்னரென்று தெரிந்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால் எபபடியேனும் முயன்று அக்கதவைத் திறந்து அவர் யாரென்று தெரிந்துக்கொண்டு பகீரதப் பிரயத்தனம் செய்து இருவரும் தப்பிச் செல்லவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். உடனே அவர் பலதாம் தமது முழு பலத்தையும் உபயோகித்து அக்கதவை இழுத்துப்பார்த்தார். அக்கதவு கொஞ்சமும்

அசையவேயில்லை. அவருடைய பலமெல்லாம் வியர்த்தமாயிற்று. மனம்சோர்ந்து உட்கார்ந்துவிட்டார். மறுபடியும் தரையைநோக்கிய வாறு யோசிக்கலானார். பல நிமிஷங்கள் சென்றது. அவருக்கு அந்த சொற்ப காலம் ஒரு கற்பகாலமாய்ப்பெருகி அவர் மனத்தை தோல்வியடைந்த சுத்த வீரன் மனதைப்போல் வாட்டியது.

மனிதருக்கு யோசனை என்பது கடவுளால் அளிக்கப்பட்ட பல நன்மைகளிலும் முதன்மையானது. ஆறறிவில் பகுத்தறிவு சிறந்தது. அப்பகுத்தறிவின் பெரும்பாகமே யோசனையென்பது. இந்த யோசனையானது ஒரு மனிதனின் சாமர்த்தியத்தால் உண்டாக்க முடியாதது. ஒவ்வொரு மனிதனும் அபாரமான துன்பத்தை அனுபவிக்கும் காலம், அதனின்று அவன் கரை யேற ஊன்றுகோல்போல, **சமயத்தில் கடவுள் யோசனையை அளிக்கிறார்.** அதை அம்மனிதன் நேர் வழியாகக் கொண்டு கரையேற முயல வேண்டும். இவ்வித யோசனையும் அவனவனுடைய **பகுத்தறிவைப்** பொருந்தியதாயிருக்கிறது. ஒரு மனிதனுடைய பகுத்தறிவு (குணம்) நன்மையே சிந்திக்குமாயின், அவனுடைய யோசனைகளும் நன்மையே பயக்கும். அன்றி தீயவையை சிந்திக்குமாயின், அவனுடைய யோசனை தீமையையே விளைவிக்கும். ஆகவே "நினைக்கத்தனக்கு" என்பது உண்மை வாக்கியமல்லவா? தான் கெடக்காலம் வந்தால், தான் பிறர்க்கு கேடு விளைவிக்கக்கூடிய யோசனை ஒருவனுடைய மனதில் உதிக்கும் இன்றேல் உதிக்காது. ஒருவன் நன்மையே செய்துகொண்டு போனால், அவன் பல இடுக்கண்கள் எய்துவதாக அவனுடையசலன மான மனம் நினைத்தாலும் கடோசியில் அவன் செய்த நன்மைக் கேற்ற பலனை அடைகிறான். "வினைவிதைத்தவன் வினையறுப்பான்" என்பது யாவரும் அறிந்த விஷயம். கெடுமதி கண்ணுக்குத்தோற்றுதல்லவா? அதைப்போல் நன்மதியும் அது நிகழ்வதற்கு முன் ஒரு சிறிதும் தோற்றாது. ஆகையால் அன்பர்கள் எப்போதும் நன்மதியிலேயே நாட்டம் வைத்துப் பிறர்க்கு இன்னாபுரியாமல் அதற்கேற்ற வாறு தமது யோசனைகளை சீர் திருத்திக்கொள்ளல் வேண்டும்.

அடுத்த அரையில் பிரவேசித்து அதில் சிறைப்பட்டிருப்பவரையும் தம்முடன் தப்பச்செய்ய வேண்டும் என்ற உத்தமமான நினைவைக்கொண்டு பயனடையாமல் கீழே உட்கார்ந்த நன்மதி படைத்த

நம் சாமியாருக்கு ஓர் அதிசயமான யோசனை யுதித்தது. அங்கு பக்கத் தரையிலிருந்து தண்ணீர் தமது அரை வழியாய் வெளியிற் செல்ல ஒரு சாலவம் கட்டியிருந்தது. அது பக்கத்தரையிலிருந்து ஒரு மூலையில் சுவற்றை யூடுருவி சாமியார் இருக்கும் அரைக்குள் நுழைந்து தண்ணீர்க் குழாய் வரை சென்று அங்கிருந்து வெளிச்செல் லும் சாக்கடையில் சேருகிறது இதைக் கவனித்த சாமியார் துள்ளிக்குதித்து பக்கத்தரையிலிருப்பவரைவிளித்து, "ஐயா! நான் உம்முடைய அரையிலிருந்து வரும் சாலவத்தில் எனது கையைவிட்டு ஒரு கைத்துப்பாக்கியைக் கொடுக்கிறேன். நீர் உம்முடைய கையை அத் துவாரத்தில் விட்டு அதை வாங்கிக்கொண்டு அங்கு போடப் பட்டிருக்கும் பூட்டின் வாயில் சுட்டு பூட்டை யுடைத்துக் கதவைத் திறக்கலாம்" என்றார். அதற்கு அடுத்த அரையிலிருந்தவர் சம்ம திக்க சாமியார் தமது கையிலிருந்த இரண்டு கைத்துப்பாக்கி களிலொன்றை சாலவத்தில் கையை நீட்டிக்கொடுத்தார். அதை மறு அரையிலிருந்தவர் வாங்கிக்கொண்டார். அடுத்த நிமிஷம் 'டமீர்' என்ற சப்தம் கேட்டதும் சங்கிலிகள் கழற்றுவது போன்ற ஓசை யுண்டாயிற்று. உடனே கதவு திறக்கப்பட்டது. அடுத்த அரையில் சிறைவைக்கப்பட்டவர் யாவர் என்றறிய அதிக ஆவல் கொண் டிருந்த நமது சாமியார் அதிக துரிதமாகத் தமது பார்வையைச் செலுத்தினர். அவ் வரையில் தாம் நினைத்தபடி சிறைவைக்கப்பட் டிருந்தது ஒரு ஆண் மகனையல்லாது ஒரு பேதையா யிருப்பதையும் அதிலும் சாவித்திரிதேவியா யிருப்பதையும் கண்ட சாமியார் எத் துணை வியப்பெய்தி யிருப்பாரென்று சொல்லத்தேவையில்லை.

அதிக துக்கத்தால் முகமெல்லாம் வாடிக் கருத்தும் இளைத் தும் தோன்றிய அத்தோகை யன்னாள் தன்னை அவ்வரையினின்று மீட்கமுயன்றது, தனதுநாதரோடு (ஸ்ரீலோலன்) வந்தவரும், குமார சாமி நாடானை கைது செய்தவரும், துப்பறியும் சிங்கமுமாகிய ஞானனந்த சுவாமிகள் என உணர்ந்ததும், கரை கடந்த சந்தோஷம் கொண்டவளாய் "சுவாமிகளே! தாங்கள் எனது குலதெய்வ மென்றே கருதுகிறேன். அன்று எனது நாதரை குமாரசாமி நாடான் கொல்லக் கருதியபோது சமய சஞ்சீவியாய் அவருடைய ஆவியைக் காத்தருளினீர்கள். இன்று என்னை அக்கிரமமான சிறை

யினின்று மீட்க வந்திருக்கிறீர்கள். தங்களைப் போன்ற ஒரு சுத்தாத்மாவை எனது நாதர் நண்பராக அடைந்ததற்காக நானும் அவரும் என்றென்றைக்கும் தங்கள் க்ஷேமத்திற்காகக் கடவுளைப் பிரார்த்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்'' என்றாள்.

சாமியார்:— அம்மா! நீ அப்படியெல்லாம் என்னைப் புகழ வேண்டிய அவசியமின்றும். உனக்காக நான் எனது ஆவியையும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் காரணத்தைப் பிறகு நீ தெரிந்துக்கொள்வாய். நீ எப்படி இங்கு சிறையாக்கப்பட்டாய்? அதை முன்பு சொல்லு.

சாவித்திரி:— சுவாமி! நான் இப்போது தங்களுக்கு முதலில் சொல்லவேண்டியதென்னவென்றால், நாளை காலை என்னை குமாரசாமி நாடானுக்கு கட்டாயப்படுத்தி மனைவியாக்க உத்தேசித்திருக்கிறார்களென்பதே.

சாமியார்:— என்ன! என்ன!! உன்னை குமாரசாமி நடானு மணக்க உத்தேசித்திருக்கிறான்? என்ன அநியாயமிது? உன்னை சிறுபிராயமுதல் வளர்த்தவனல்லவா? "தனை வளர்த்தோனொரு பிதா" என்று நீதி நூற்கள் முறையிடுகின்றன. அப்படியிருக்க தந்தை மகளை மணப்பதா? பேஷ்!

சாவித்திரி.— இதையொரு பிரமாதமாக எடுத்துக்கொண்டு உலகமே புரண்டுவிட்டதென்று வருத்தப்படுகிறீர்களே. இன்னொரு அநியாயமும் நாளை நடக்கப்போகிறது. ஒருவனை யொருதாம் மணந்துக்கொண்ட ஓர் உத்தமியை பலவந்தமாய்க் கொண்டுவந்து இன்னொருவனுக்கு மணம் செய்துவைக்கப் போகிறார்களாம். இதையென்னவென்பது?

சாமியார்:— இந்த அக்கிரமங்களெல்லாம் செய்பவன் குமாரசாமி நாடானல்லவா? அவனுடைய கெட்ட காலத்தின் கூற்றே அவனை இப்படியெல்லாம் செய்யத் தூண்டுகிறது. மகள்போன்றாளை மணக்கவும், பிறன் மனைவியை இன்னொருவனுக்கு மணம் செய்து வைக்கவும் எப்போது நினைத்தானோ அப்போதே அவனது பாப மூட்டை போதுமான அளவுக்கு பெருத்துவிட்டதென்றும், இனி அதற்குரிய தண்டனைகளை அடையவேண்டிய தருணம் நெருங்கி

விட்டதென்றும் நான் தீர்மானமாய் மொழிகிறேன். அக்கிரமம் என்றும் நீடித்திராது. அதற்குக் குறுகிய ஆயுளேயுண்டு.

**சாவித்திரி:—** நான் அவரை எனது தந்தையென்றே வெகு காலம் நினைத்திருந்தேன். பிறகு தந்தையல்லவென்பதை யுணர்ந்த பின்னும் நம்மை வளர்த்தவரும் தந்தையாவாரென்று தந்தைக்குரிய மரியாதையே கொடுத்துவந்தேன். ஆனல் அவர் என்னிடம் வந்து இந்த அக்கிரமமான பிரஸ்தாபத்தை யுண்டாக்கியபின் அவருக்கு நான் போதிக்காத புத்திமதியில்லை. அதையெல்லாம் அவர் கவனித்தாரில்லை.

**சாமியார்:—** சாவித்திரி! எங்கேனும் அவனை சீர்த்திருத்த முடியுமோ? ஆலைப்பலாவாக்கலாமோ? நாயின் சுருண்டவாலை யாரேனும் நிமிர்த்த வசமாமோ? கரிய நிறமுடைய காக்கைகளைப் பேசுவிக்க முடியுமோ? ஆகையால் சிறிதும் கருணையென்பதே யில்லாத மூர்க்கரைச் சீராக்க வியலுமோ? ஆகவே அவனைப்பற்றி பேசுவதை விடுத்து, இப்போது அவர்களிடம் சிக்கியிருக்கும் உத்தமி யாரென்றும், அவளை மணக்கப்போகிறவன் யாவனென்றும், நீ எப்படி இவ்விவகாரங்களை யறிந்தாயென்றும் இன்னும் உனக்குத் தெரிந்தவைகளையெல்லாம் ஒன்று விடாமல் சொல் கேட்போம். அதன் பிறகு எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமோ, அப்படியே சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்துக்கொள்கிறேன்.

**சாவித்திரி:—** சுவாமி! நான் அவனுடைய அக்கிரமமான நடக்கைகளையெல்லாம் எடுத்துரைப்பதாயின், நாட்கள் பல செல்லும். சுருக்கமாகச் சொல்கிறேன். அன்றைக்கு நீங்கள் அவனை அரஸ்ட் செய்துக்கொண்டு போன இரவே சரியாய் ஒரு மணிக்கு வீட்டிற்கு வந்தான். தூங்கிக்கொண்டிருந்த எனது கைகால்களெல்லாம் கட்டப்பட்டன. வாயில் துணிப்பந்தடைக்கப்பட்டது. உடனே இருவர் வந்து என்னைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு மோட்டாரில் போட்டு அவர்களும் உட்கார்ந்தனர். என்னைப் பின்னலிருக்கும் ஆசனத்தில் போட்டு எனக்குக் காவலாக குமாரசாமி நாடான் உட்கார்ந்தான். முன்னே டிரைவரும் இன்னொருவனும் உட்கார்ந்திருந்தனர். மோட்டார் வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. எதுவும் எனக்கு நன்ருய் விளங்கவில்லை. எந்தத் திக்கில் எந்த வூரை நோக்கி மோட்

டார் சென்றதென்றே எனக்குத் தெரியாது. சுமார் அரைமணி நேரம் சென்றிருக்கும். அப்போது எதிரில் ஒரு மோட்டார் சைகிள் தென்பட்டது. அதை நானிருந்த மோட்டார் நெருங்கியது. அந்த சைகிள் மோட்டாரும் அதிவேகமாய்ச் சென்றுகொண்டேயிருந்தது. ஒன்றுக்கொன்று பந்தயம் விடுவதைப்போல் வாயுவேக மனோவேக மாய்ச் சென்றுகொண்டிருந்தன. ஒன்றைவிட மற்றது அதிவேக மாய்ப் போவதுபோலிருந்தது. நானிருந்த மோட்டாரிலிருந்தவர் களெல்லாம் சைகிள் மோட்டார் விடுபவரையே கண்ணும் கருத்து மாய்க் கவனித்தனர். இதையுணர்ந்த அவரும் இவர்களை நோக்கி னார். அப்போதும் இரு மோட்டாரும் சொல்லொணு வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. அப்போது என் மூடத்தனத்தால் ஒரு கெட்ட சம்பவம் நிகழ்ந்தது. மோட்டார் வேகமாய்ப் பள்ளம் மேடு களைத் தாண்டிச் செல்லும்போது, அந்த அதிர்ச்சியால் என் வாயி லிருந்தத் துணிப்பந்து வெளியில் விழுந்துவிட்டது. எனக்கு மூச்சு நன்றாய் வரத் தொடங்கியது. உடனே நான் நிமிர்ந்து உட்கார்ந்து "ஐயோ! என்னை அக்கிரமமாகக் கொண்டுபோகிறார்களே! துணை யாரும் செய்வாரில்லையே!" என்றொரு பெருங் கூச்சல் போட்டேன். மறுநிமிடம் என் வாயில் துணிப்பந்து வந்து சேர்ந்தது. நான் ஏன் அப்படிக் கூச்சல் போட்டேனென்றால், அச்சைகிள் மோட்டாரில் சென்றவர் ஒரு போலிஸ் உத்தியோகஸ்தர் என்றெண்ணிக்கொண் டேன். ஆகையால் நாம் இப்போது கூச்சலிட்டால் ஒருவேளை அவர் உதவிசெய்யக் கூடுமென்று நினைத்தே அவ்வாறு செய்தேன். ஆனால் நான் பெருத்த தீங்கிழைத்துவிட்டேன். அதனால் எனக்கும் நன்மையுண்டாகவில்லை. சாலையோடு போனவருக்கும் கஷ்டம். குமாரசாமி நாடானுடைய சிநேகிதர்களும் மரணகாயமடைந்தனர்.

நான் கூச்சலிட்டதுதான் தாமதம். சைகிள்மோட்டாரிலிருந்த வர் குமாரசாமி நாடானுடைய மோட்டார் டிரைவரை நோக்கி, "அடே! வண்டியை நிறுத்து" என்றார். அவன் அதை இலட்சியம் செய்யாமல் மேலும் அதிவேகமாய் விடவாரம்பித்தான். உடனே அவருக்கு அதிக கோபமுண்டாகத் தமது கைத்துப்பாக்கியால் அம் மோட்டாரின் டியூப்பைச் (Tube) சுட்டார். அடுத்த விநாடி மோட் டார் நின்றுவிட்டது. மோட்டார் டியூப்பைச் சுட்டு வண்டியை

நிறுத்தியதைக் கண்ட குமாரசாமி நாடான் ஆத்திரத்துடன் வண்டியை விட்டிரங்கி அவரை நெருங்கினன். இருவரும் நேருக்குநேர் நின்றனர். குமாரசாமி நாடான் தன்னை நெருங்கி வந்ததும் அம்மனிதர் "அடே போக்கிரிப் பயல்களே! நீங்கள் எல்லோரும் யார்? நீங்கள் யாரையோ அக்கிரமமாகப் பிடித்துக்கொண்டு போவதாகத் தெரிகிறது. அது யார்? என் அப்படிச் செய்கிறீர்கள்?" என்று அதட்டிக் கேட்டார். குமாராமி நாடானுக்குக் கோபம் அதிகரித்தது. அவரை அடித்து வீழ்த்தவே யோசித்தான். ஆனல் அவரது கையில் அப்போதும், சுட்டதனல் புகைந்துக்கொண்டிருந்த முறுக்குக் குழல் துப்பாக்கி பளபளப்பாக அசைந்தாடிக்கொண்டு இவனையே நோக்கியவாறிருந்ததைக் கண்டே, பேசாமல் எதிரில் நின்றான். இரண்டொரு விநாடிகள் நிசப்தமாயிருந்தது. அப்போது குமாரசாமி நாடானுடைய மோட்டார் டிரைவர் தனது கைத்துப்பாக்கியையெடுத்து சைகிள் மோட்டாரில் வந்தவரை நோக்கிச் சுட்டுவிட்டான். ஐயோ! பாவம்! அவர் இறந்தேபோயிருப்பார். ஆனல் அது குறி தவறிவிட்டதால் குண்டுஅவருடைய தோளில் உராய்ந்துச் சென்றது. அதைக்கண்ட சைகிள் மோட்டாரில் வந்தவர் தமது துப்பாக்கியைத் திருப்பி மோட்டாரை நோக்கியதுதான் தாமதம். டிரைவருடைய தலை சுக்கல் சுக்கலாய்த் தெறித்துவிட்டது. தனது மோட்டார் டிரைவரை வந்தவர் சுட்டுக் கொன்றுவிட்டார் என்றதையறிந்த குமாரசாமி நாடான், அதிக ஆத்திரங்கொண்டு காட்டு மிருகம்போல் அவர்மேல் பாய்ந்து அவர் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி யெறிந்தான். உடனே இருவருக்கும் கடும்போர் தொடங்கிற்று. வந்தவர் மிகுந்த பால்யராயினும் அதிக பலவான். தந்திர சாமர்த்தியமுள்ள குமாரசாமி நாடானிடம் அவர் எத்தனை நேரம் சண்டை செய்ய வியலும். அத்துடன் மோட்டாரில், டிரைவருடன் வந்தவனும் துணையாகப் போனன். ஆகையால் இரண்டொரு நிமிடங்களில் வந்தவர் கைகால்களெல்லாம் கட்டுண்டார். வாயில் துணியும் அடைக்கப்பட்டது. உடனே இருவரும் அவரைத் தூக்கிவந்து என் பக்கத்தில் போட்டனர். இதுகளெல்லாம் ஆனவுடன் இறந்துகிடக்கும் டிரைவரைக் கவனித்தனர். அவனுடைய மண்டையிலிருந்து ஏராளமான இரத்தம் தெரித்து எங்கு பார்த்தாலும் கரை

யுண்டாக்கியிருந்தது. மோட்டாரெல்லாம் இரத்தமயமாயிருந்தது. இருவரும் அதிக சிரமப்பட்டு மாண்டவனுடைய உடைகளையெல்லாம் களைந்தனர். பிறகு இருவருமாய்ச் சேர்ந்து அப்பிணத்தையெடுத்துச் சைகிள் மோட்டாரில் போட்டுக்கொண்டு வந்தவழியே சென்றனர். சுமார் கால்மணிநேரம் எவ்வித சப்தமுமின்றி நிசப்தம் குடிகொண்டிருந்தது. என் மனதில் அப்போதுதித்த பயத்தை யென்னவென்று சொல்லப் போகிறேன். எனது தேகத்தில் உயிரிருக்கிறதோ என்பதே சந்தேகம் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தவனுடைய கோரத்தைக் கண்டு அதிக திகிலடைந்திருந்தமையாலும், நடு இரவில் தனித்த பாதையில் எவ்வித சப்தமுமில்லாமலிருந்ததாலுண்டான பயத்தாலும், எதற்குமஞ்சாத கொலைப்பாதகர்களிடம் சிக்கிக்கொண்டோமே; இவர்கள் நம்மை என்னபாடு படுத்துவார்களோ? என்று எனக்குத் தோன்றிய மலைப்பினாலும் அப்படியே மூர்ச்சையடைந்து விட்டேன். பிறகு கண் திறந்து பார்க்கும்போது நானிங்கிருக்கக் கண்டேன். அப்போது கதிரோன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் குமாரசாமி நாடான் இந்த அறைக்கு மேலிருந்து இறங்கும் இரகசிய வாயிற்படி வழியாய் ஏணியை விட்டு இறங்கி வந்தான். அவனைக் கண்டதும் எனக்கு அதிக ஆத்திரமுண்டாயிற்று. உண்டானால் என் செய்வது? பேசாமல் ஒரு மூலையிற் போய் நின்றேன். அவன் ஒரு நாற்காலியிலுட்கார்ந்துக்கொண்டு என்னுடைய கலியாணத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தான். நான் அவனுக்கு எவ்வளவோ நயமாக எல்லா நீதிகளையும் எடுத்துரைத்தேன். அவனா கேட்பவன்? கடைசியில் ஒரே பிடிவாதமாக "சாவித்திரி! இவ்வீண் பிடிவாதத்தை நிறுத்திவிடு. உன்னைவிட ஆயிரம் மடங்கு நானும் நூல்களைக் கற்றிருக்கிறேன். உண்மையான ஒரு மகளை அவள் தந்தை விவாகம் செய்துக்கொள்வது தகாதுதான். ஆனால் மாற்றானொருவன் மணப்பது பாவமாகாது. நான் உன்னை குழந்தைப்பருவமுதல் எதற்காக வளர்த்தேன்? உன்னுடைய பருவகாலம் வந்தவுடன் விவாகம் செய்துக்கொள்ள வுத்தேசித்தே. ஆனால் நான் இன்னும் கொஞ்சகாலம் பொறுத்திருப்பேன். என் அப்படிச் செய்யவில்லையென்றால், உனது தாயின் செய்கையே அதற்குக் காரணம்" என்றான்.

நான்:— "என் தாய் யார்? அவள் செய்த செய்கை என்ன?" என்றேன்.

குமாரசாமி:— "உன் தாய் யாரென்று கேட்கிறாய்? உன் தாய் இராஜலட்சுமிதான். வேறு யாருமல்ல. அதைப்பற்றிய சந்தேகத்தை விட்டுவிடு. அவள் எனக்கு எந்த செய்கையால் கோபமூட்டினள் தெரியுமா? நேற்று அந்த மைனர்ப் பயல் ஸ்ரீலோலனிடம் ஒருநாளிரவிற்கு ஐயாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு உன்னை விற்றாள். ஆகையால் அந்தப் பயலையும் நன்றாய்த் தடியினலடித்தேன். உன் தாயையும் உதைத்தேன். அதோடு உன்னையும் கலியாணம் செய்துக்கொள்ள நிச்சயித்துவிட்டேன்" என்றான்.

நான்:— ஐயாவே! தாங்கள் சொல்வதெல்லாம் சற்றும் சம்மதிக்க முடியாத விஷயம். உலகில் பெற்றால்தான் பிள்ளை; வளர்த்தால் பிள்ளையல்லவென்று யாரேனும் சொல்ல முடியுமா? அநேகந் தாய்மார்கள் பெற்ற பிள்ளைகளைத் தான் சோர புருஷனிடம் போனதைத் தெரிந்துக்கொண்ட குற்றத்திற்காகக் கொலை செய்திருக்கவில்லையா? அதே வளர்த்த தாய்மார்களாவது தந்தைகளாவது செய்ததாகக் கேள்விப்படுகிறோமா? ஆகையால் பெறுவதினல் பற்றுதல் உண்டாகாது. ஏதோ ஊழ்வினையின் பயனகவும், கடனுக்காகவும் எத்தனையோ தாய்மார்கள் பிள்ளைகளைப் பெறுகிறார்கள். அத்தனைப் பிள்ளைகளும் பற்றுதலற்ற தாயை வெறுக்கின்றனவா? ஒருக்காலுமில்லை. அவர்கள் வெறுத்தால் பிழைக்க வழியில்லை. ஆனதால் பிள்ளைகள் எப்போதும் தாய்மார்களை நத்திக்கொண்டேயிருக்க வேண்டும். உலகில் தாயினும் சிறந்த சுற்றமில்லையென்பார்கள். முற்றும் துறந்த முனிபுங்கவரான பட்டினத்தடிகளும் *குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளிவைக்க வேண்டும் என்ற பற்றுதலொழித்தாரில்லை. ஆகவே, பெற்ற தாயினும் அதிக பாசமும், அன்பும், ஆதரவும் வளர்த்தத் தாய்க்கும் தந்தைக்கும் உண்டு. வளர்ப்புத் தந்தை தனது வளர்ப்பு மகன் மனங்கோண சகியான். எந்நேரமும், தனது வளர்ப்பு மகன், எங்கே தான் உண்மையான தந்தையல்லவென்று

* அன்னை வயிற்றில் நாம் ஈரைந்துத் திங்கள் குடியிருப்பதால் மேற்கண்ட பெயர் காரணப் பெயராகக் கொள்ளப்பட்டது.

தெரிந்துக்கொண்டு அதனால் வெறுக்க நேரிடுமோவென்று பயந்தப் பிரகாரம் அவனுக்கு வேண்டியவைகளையெல்லாம் அவன் கேட்கா முன்பே தந்துதவி தன்பால் அவன் விசேஷ அன்பு கொள்ளும்படி நடந்துக்கொள்வான். உலக வியல்பு அப்படி யிருக்கத் தாங்கள் எனக்கு வளர்ப்புத் தந்தையா யிருந்தும் இக்கொடியக் காரியத்தில் பிரவேசிப்பது அழகாகுமா? தாங்கள் இதைக்கவனிக்கா விட்டாலும் இன்னொரு விஷயம் கவனிக்க வேண்டிய தல்லவா? எனது தாயை மணந்துக் கொண்டிருக்கிறீர்கள்........

குமாரசாமி:— சீ! சீ!! நானா அவளை மணந்துக் கொண்டவன். அவள் என்னுடன் எத்தனையோ பேரை அனுபவித்தவளாயிற்றே!

நான்:— என்ன! என்ன!! எனது தாயின் சொந்தக் கணவன் தாங்களல்லவோ?

குமாரசாமி:— (தான் அவசரப் பட்டதற்காக மனத்தாங்கலடைந்து) இல்லை. ஆனாலும் அவள் விபசாரியல்ல. தேவதாசிதான்.

நான்:— ஓகோ! இப்போது தெரிந்தது. அவள் ஒரு தாசியோ? அதிலும் தங்களுடைய வைப்பாட்டியோ? நிரம்பச்சரி! நான் இந்த வார்த்தைகளைக் கேட்டும் உயிர் சுமந்திருக்கிறேனே? ஆ! தெய்வமே! நான் என் பெண்ணாய்ப் பிறந்தேன்? பூமி பாரமாகத் தானே இன்னும் இருப்பதைவிட இறப்பதே சிலாக்கியமாகும்.

குமாரசாமி:— சீச்சீ! இதென்ன பேதமை. ஒரு தாசிக்கு மகளாகப் பிறந்து விட்டால் அது ஒரு இழிவாகுமா வென்ன? ஒவ்வொரு * விபசாரிகளும் தங்களை, "நாங்கள் தேவதாசிகள். எங்களுக்கு இந்த வூரில் ஈஸ்வரன் கோயிலில் ஐம்பது காணி நிலம் மான்யம் விட்டிருக்கிறார்கள். அந்தவூர்ப் பெருமாள் கோயிலில் ஆயிரங் காணி மான்யம் விட்டிருக்கிறார்கள்." என்று கௌரவமாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அப்படியிருக்க உண்மையான தேவதாசிகள் எவ்வளவு மேம்பட்டவர்களென்று சொல்லவும் வேண்டுமோ? உயர்ந்த தஞ்சாவூர் தேவஸ்தானம் உலகமெங்கும் பெயர் பெற்றது.

---

* ஆகாயவாணி, பூமிதேவி, அக்கினி முதலியவைகளைச் சாட்சியாகக் கொண்டு மணந்த உத்தம மனைவிகள், பிற புருஷனைச் சேர்ந்தால் விபசாரிகள் எனப் பட்டப் பெயர் பெறுகிறார்கள்.

அத்தகைய அதி உன்னதமான தேவஸ்தானத்துத் தாசிகளில் தலைமை தேவதாசியான இராஜலட்சுமியின் மகளென்றால் எவ்வளவு கௌரவமான ஸ்தானம் தெரியுமா? இதையெல்லாம் யோசியாது தாசியின் மகள் என்றதும் 'அது கேவலம்' என்று நினைத்துக்கொண்டு இறந்துவிடவேண்டுமென்கிறாயே.

நான்:— ஐயா! போதும்! போதும்!! அம்மட்டோடு நிறுத்தும். தாசிகள் என்றால் மகா கௌரவமென்று உமக்குச் சொல்லித் தந்தது யார்? அவரை இப்படி அழைத்துவந்தால் அவருடைய முகத்தில் எச்சிலை உமிழ்வேன். தற்காலத்துத் தாசிகளைச் சிலாக்கித்துப் பேசும் மூடசிகாமணிகள் பரதார விருப்பர்களாயும், சோம்பேரிகளாயும், அவளுடைய தாசித் தொழிலினாலுண்டான சம்பாத்தியத்தைப் பெறவேண்டும்; அதனால் வயிறு வளர்க்க வேண்டும் என்ற விருப்பங்கொண்டு, அவளது காலடியை விடாது பற்றிக்கொண்டு, அவள் உண்டு மிகுந்த எச்சத்தை அன்பின் மிகுதியால் உண்பவர்கள்போல் பாசாங்கு செய்து கடைசிவரை அவளுடைய ஆஸ்தியைக் கரைத்து ஒன்றுக்கு முதவா ஓட்டாண்டிகளாக்கக் காத்திருக்கும் நரமாம்ஸப் பிண்டங்களாயு மிருக்கவேண்டும். இன்றி, சுயமாகச் சம்பாதித்துத் தன்னை நம்பியிருக்கும் மனைவிக்கும், மக்களுக்கும், சுற்றத்திற்கும் உணவளிக்கும் உத்தமனுயின், ஒருபோதும் தற்காலத்து தாசிகளைச் சிலாக்கித்துப் பேசான். ஏன்? அவர்கள் அக்கிரமஸ்தர்கள். நெறிமுறைத் தவறியவர்கள். ஒன்றுக்கு முதவா ஊத்தச் சரீரத்தை விலைப்படுத்தி யுண்டு சுகமனுபவிக்கவே தாசிகளாக வேடந் தரித்திருக்கிறார்களே யொழிய, உண்மைத் தாசிகளல்ல. தாசி யென்றாலென்ன? தாசன் என்ற ஆண்பாற் பெயருக்குப் பெண்பாற்பெயரே தாசியென்பது. தாசன் என்றால் ஒருவனுக்கு அடிமை. தாசியென்பதும் பெண்களுக்கு அதையே குறிக்கிறது. தேவதாசி என்றால் தேவனுக்கு, (கடவுளுக்கு, படைத்து, அளித்து, அழிக்கும் ஆர்வம் படைத்த அருபஸ்வரூபிக்கு) அடிமைகள் என்பதாகும். தேவதாசிகளை ஆலயத்தில் முத்திரையிடல் என்றால், இவர்கள் பிரமோற்சவ காலங்களிலும், மற்ற விசேஷ காலங்களிலும் மேனி யலங்காரம் செய்துக்கொண்டு, நயனங்களுக்கு மைதீட்டி, புருவங்களுக்கும் நெற்றிக்கும் ஜவ்வாதணிந்து, எள்ளுக்கால் பின்னல் பின்னி, உயர்ந்த

ஜரிகைப் பனாஸ் சேலை, அல்லது அங்கமுழுதும் அப்படியே பார்ப்போர்க்குப் புலனாகும் வண்ணம் அவ்வளவு மெல்லிய மஸ்லின் சல்லாத் துணியுடுத்திக் கையில் பட்டுக் கைகுட்டை யேந்தி, அதிலிருக்கும் வாசனை (செண்ட்) பரிமளிப்பதற்காக கைகளை ஒய்யாரமாக வெண்சாமரம் வீசுவதுபோல் வீசி, குலுக்கிப் பிலுக்கி அன்ன நடை நடந்து ஆட்டம் ஆடுவதற்கல்ல. பின் எதற்காக? கடவுளுக்கு அடி பணிந்து, அவருக்காகவேண்டிய குற்றேவல்களைச் செய்துக்கொண்டு அவரது சொந்த மனைவியைப்போல் உத்தமியாய், பிறபுருஷனைக் கண்ணெடுத்தும் பாராமல், தனதாயுட் காலத்தை அவனது ஞாபகத்திலேயே செலுத்தி, கன்னி கழியாமலே இறத்தல் வேண்டும். இதுவே ஆதியிலிருந்த தேவதாசிகளின் கூற்றாகும். அத்தகைய தாசிகளுக்கு மகளாகப் பிறப்பதே பெரும் பாக்கியம். ஆனால் அவர்களுக்கு சந்ததியுண்டாக ஹேதுவில்லை. தற்காலத்து தாசிகள் கோயிலில், தர்ம கர்த்தாக்களுக்கு ஏராளமான இலஞ்சம் கொடுத்து முத்திரை போட்டுக்கொண்டு பல புருஷருடன் சேர்ந்து சுகத்தை அனுபவிப்பதும், இன்னும் அவர்கள் செய்யும் அக்கிரமங்களும் சொல்லவும், கணக்கிடவும் முடியாதவை. அதுதான் போகட்டுமென்றால், கோயிலில் முத்திரையிடுவதற்கு முன்பாவது சற்று யோக்கியதையாக கடவுளுக்குப் பயந்து, அன்னவருக்கு அடிமையாகும் வரையில் தனது கற்பைக் காத்து வருகிறார்களா? அதுவுமில்லை. அநேகமாக முத்திரை நடைபெறும்போது ஒவ்வொருவளும் கர்ப்பிணியாகவே இருக்கிறார்கள். அப்படியில்லாவிட்டாலும் கற்பழிந்தவளாக விருப்பாளென்பதில் சற்றும் சந்தேகமேயில்லை. ஆகையால் எத்தகைய நீசனும் ஒப்பத்தகாத நடத்தையையுடைய ஒரு தாசியின் வயிற்றில் நான் ஜனித்தேனென்றால், இந்த சரீரத்தை நெருப்பிற் போட்டுக் கொளுத்தாமல் அப்படிப் பிறந்தது கௌரவமென்றுக் கருதுவதா?

குமாரசாமி:— சாவித்திரி! நீ உலகமறியாத பால்ய வயதுடையவள். உனக்கு உலக விவகார மென்னத்திற்கு? நடந்தது நடந்துவிட்டது. இனி ஒருநாளும் அது சீர்த்திருந்தாது. அதைவிட்டு நடக்க வேண்டியதைக் கவனிப்போம்.

நான்:— என்ன சொன்னீர்கள்? அது ஒருக்காலும் சீர்த்திருந்தாதென்று சொல்கிறீர்கள்? அப்படி உம்போன்றார் நினைப்பதே

இத்தனை காலமாய் அவ்வட்டூழியம் நடைபெற்று வந்ததற்குக் காரணம். ஆனால் இனி இது நீடித்து நிலைபெறாது. ஏனெனில், தற்போது ஓர் உத்தம மாது இந்த முத்திரையிடும் கொடிய பழக்கத்தைக் கருவறுக்கத் தோன்றியிருப்பதாகக் கேள்வி. அது வுண்மையாகவேயிருந்து, அம்மாதிற்கு நல்லறிவுள்ள ஆண் பிள்ளைகள் ஆதரவளித்து, ஊக்கமளித்தால், கட்டாயம் இவ்வக்கிரமத் தாசிகளின் பூண்டறுபட்டுவிடும்.

குமாரசாமி:— தொன்றுதொட்டு வழங்கிவரும் முத்திரை யிடுவதை இந்த தாசிகள் ஒரு நாளும் விலக்கமாட்டார்கள்.

நான்:— ஏன் விலக்கமாட்டார்கள்? அவர்கள் தாங்களாகவே ஒருபோதும் விலக்கமாட்டார்களென்பது துண்மையே. ஆனால் ஆலயங்களில் ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன செய்வார்கள்? உதாரணமாக மைசூரில் முத்திரையிடும் கொடிய பழக்கம் ஒழிந்துவிடவில்லையா? கோச்சியிலும் கூடிய சீக்கிரம் ஒழித்துவிடுவார்களென்றே எதிர்ப்பார்க்கப்படுகிறது.

குமாரசாமி:— அதெல்லாம் நமக்கென்னத்திற்கு? நீயென்ன சொல்கிறாய்? மணக்கப்போகிறாயா? இல்லையா?

நான்:— ஐயா! இதென்னப் பிடிவாதம்? ஏன் வீணான பாவத்தைத் தேடிக்கொள்கிறீர்கள்? இராஜலட்சுமி எனது உண்மையான தாய்தானென்று நீங்களே சொன்னீர்கள். அப்படியிருக்க தாயையனுபவித்த நீங்கள் மகளையும் கலியாணம் செய்துக்கொள்வது எங்கேனும் அடுக்குமா? இது உலக சம்மதமா? கண்டோர் நகைக்கக் கூடிய இப்பிரஸ்தாபத்தை அடியோடு விட்டுவிடுங்கள்.

குமாரசாமி:— பெண்ணே! சாவித்திரி! நீ இன்னும் அற்பமும் உலகானுபவம் பெறாதவள். உலகில் அதிலும் இச்சென்னை முதலிய பிரதான நகரங்களில் நடப்பவைகளைக் கண்டால் நீ இவ்வாறு சொல்லமாட்டாய். ஒவ்வோரு தாசிகள் வீட்டிலும் தாயையும் மகளையும் வைப்பாக வைத்துக்கொண்டிருப்பது சகஜமாயிருக்கிறது.

நான்:— ஐயா! இந்த ஆபாசக் குப்பைகளையெல்லாம் என் காதில் விழும்படிப் பேசாதீர்கள். அப்பா! என்ன கர்ன கடூரமான

வார்த்தைகள்? ஈயத்தைக் காய்த்துக் காதில் வார்த்தால், இப்போது உம்மால் சொல்லப்பட்ட வார்த்தைகளால், எனக்குண்டான துன்பத்திற்கிணையாகாது. தாசிகள் மகா கெட்டவர்கள். வருபவனுடைய வயதையும் நோக்கார்கள். அந்தஸ்தையும் பாரார்கள். மற்றதையும் கவனியார்கள். ஆனால் பணத்திற்காக எத்தகையவனிடமும் அன்பு காட்டுவார்கள். ஆனால் அவர்களிடம் ஒரு பொல்லாக் குணமுண்டு. அதுதான் யாது? பொறாமை. தன்னிடம் வந்தவனை இன்னொருவள், (அவள் தாயாயினும் சரி! மகளாயினும் சரி!) விரும்பினால், அவர்கள் கட்டாயம் அப்படி விரும்பியவர்களைத் தாயென்றும், மகளென்றுங்கூடக் கருதாதுக் கொன்றுபோட்டுவிடுவார்கள். ஆகையால் தாசிகளில் இத்தகைய நடக்கை இருக்கவே யிருக்காது. ஆதலால் தாங்கள் அத்தகைய சந்தேகங்கொண்டு என்னிடமும் அது பலிக்குமாவென்று சோதனை பார்க்காதீர்கள். தாங்கள் எந்தவிதமான சமாதானம் சொன்னாலும் இந்தக் கொடும் பாதகச் செயலுக்கு உடன்படேன். இதுவே சத்தியமான கடைசி வார்த்தை.

குமாரசாமி:— நான் உனக்கு எவ்வளவோ நயமாகச் சொன்னேன். நீ கேட்கவில்லை. இனிப்பலவந்தந்தான். ஒருகைபார்க்கின்றேன். நாளையே மணத்திற்கு ஏற்பாடுசெய்துவிடுகிறேன். இதற்கேற்ற பிராமணர்களும் தயாராயிருக்கிறார்கள். அவர்களுக்கென்ன மந்திரமா? மண்ணா? ஏதோசடங்கு நடந்தது என்பதற்கு பிராமணன் வேண்டியது. பணம் கொடுத்தால் எத்தனையோபேர், "நான்முன்; நான்முன்;" என்று ஓடிவருகிறார்கள். உன்னைக்கலியாணம் செய்துக் கொள்வது மன்னியில் நீ காதலிக்கும் ஸ்ரீலோலன் குடும்பத்தையும் கெடுக்கப்போகிறேன். அதைக்கண்டு நீ வருத்தப்படுவதை நான் பார்க்கவேண்டும். ஸ்ரீலோலனுக்கு ஒரு தமக்கையிருக்கிறாள். அவளை மணந்துகொண்டவன் நேற்று கொலைக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறான். அவனுடைய மனைவி இப்போது ஏனாத்தூரிலிருக்கிறாள். அவளைக்கொண்டுவரும்படி ஆளனுப்பியிருக்கிறேன். அவள் இந்நேரம் கொண்டுவரப்பட்டிருப்பாள். நான் போய்ப் பார்க்க வேண்டும். நான் போகிறேன். நீ யோசித்துப்பார். வன் வீணாக முரண்செய்து அதனால் தேகத்துன்பமும் மனக்கஷ்டமும் அடையப்போகிறாய்?—என்றதும் ஏணியின் மேலேறிப்போய்விட்டான்"

என்று சொல்லிமுடித்தாள். ஆதிமுதல் அந்தம்வரை அதிக ஊக்கமாய்க் கவனித்த சாமியாருக்கு இப்போது குமாரசாமி நாடானிடம் அகப்பட்டிருப்பவன் ஸ்ரீலோலனுடைய உயிர்த்தோழனை கோவிந்தனாகவே இருக்கவேண்டும் என்னும் சந்தேகமுண்டாயிற்று. அவர் மறுபடி சாவித்திரியை, சைகிள் மோட்டாரில் வந்தவருடைய அங்க அடையாளங்களை விசாரித்தார். அவள் சொன்னதிலிருந்து, இப்போது குமாரசாமி நாடானிடம் சிக்கியிருப்பவன், கோவிந்தனே யென்று தெளிவாய் விளங்கிவிட்டது. ஒருவேளை கோவிந்தனைக் கொல்லக் கருதியிருப்பின் இந்நேரம் அநேகமாகக் குமாரசாமி நாடான் கொன்றே யிருப்பான். எதையும் உடனே தெரிந்துக் கொள்ளவேண்டுமென்று சாமியார் அவசரப்பட்டார். எப்படித் தெரிந்துக்கொள்வது? தான் அந்தப் பாதாளச் சிறையிலிருந்துத் தப்பிச் சென்றால், எப்படியும் கோவிந்தனுடைய நிலைமை தெரிந்து விடும். ஆகவே, அவர் எப்படியும் முயன்று உடனே தப்பிச் செல்லத் தீர்மானித்தார். வெளிச்செல்ல வேண்டும் என்ற நினைவோடு அவ்விரண்டு அரைகளிலும் ஏதேனும் வழியிருக்கிறதாவென்று உற்று நோக்கினர். அவ்வரையில் இவர்களிருக்கும் இடத்திலிருந்து சுமார் எழடி உயரத்தில் ஒரு ஜன்னலைத் தவிர்த்து வேறு வழி காணப்படவில்லை. அந்தப் பலகணியின் மூலமாகவே குளிர்ந்த காற்று வந்துக்கொண்டிருக்கிறதென்பதை அவர் அறிந்துக்கொண்டார். அப்பலகணியில் இரண்டங்குல இடைவெளிக்கொரு தடித்த இரும்புக் கம்பி நாட்டப்பட்டிருந்தது. அவருக்கு இதைக் கண்டவுடன் ஒரு யோசனை யுதித்தது. அதாவது, அப்பலகணி அநேகமாக தரைமட்டத்திலேயே இருக்கவேண்டுமென்று நினைத்தார். ஆதலால் அச்சுரங்க வரை தரைமட்டத்திற்குச் சமார் எழடி ஆழத்திலேயே கட்டப்பட்டிருக்கவேண்டும். கட்டடமும் வெகு காலத்தியதுபோலிருக்கிறதனாலும், அக்கட்டடம்மண்ணோடுசம்மந்தப்பட்டிருப்பதாலும்அநேகமாக பலந் தளர்ந்திருக்க வேண்டும். நாம் நமது முழுபலத்தையுங் கொண்டு எப்படியேனும் முயன்று அப்பலகணியைப் பெயர்த்துவிட்டால், தப்பித்துக்கொள்ளலாமென்று யோசித்தார். அது ஒருவேளைத் தவறாக முடிந்தாலும் பாவாயில்லை. சும்மாயிருப்பதைவிட சுறுசுறுப்பாக ஏதேனும் செய்துக்கொண்டேயிருப்போமென்று தீர்மானித்தார். அதன்படி அவர் உடனே வேலை செய்யத் துவக்கினர். சாவித்

திரிதேவி அடைப்பட்டிருந்த அரையில் ஒரு நாற்காலியிருந்ததென்றும், அதில்தான் குமாரசாமி நாடான் அவளுடன் சம்பாஷிக்கும்போது அமர்ந்திருந்தானென்றும் அவள் சொன்னது சாமியாருக்கு ஞாபகமிருந்தது. அவர் அதை அரைக்ஷணத்தில் கொண்டுபோய்ப் பலகணிக்கு நேராய்க் கிழே போட்டு, அதன் மேலேறி வெளியே நோக்கினர். அது அவர் உத்தேசித்தபடியே தரைமட்டமாயிருந்ததைக் கண்டு அதிக சந்தோஷத்துடன் வெளியில் என்ன விருக்கிறதென்பதை அதிக உன்னிப்பாய்ப் பார்த்தார். அது நள்ளிரவாகையால் அவர் கண்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஸ்தூலமாய்த் தெரிந்துக்கொண்டதென்னவென்றால், அது ஒரு தருக்களடர்ந்த தோட்டமென்றும், அதன் நடுவிலேயே அப்பங்களா அமைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் தான். மரங்களும் நன்றாய்த் தோன்றுவிதம் அதன் கிளைகள் கவிழ்ந்துக்கொண்டு அதிக செழிப்புற்றிருந்தது. தோட்டத்தின் வெளியிலிருந்துப் பார்த்தால் பங்களாவின் வாசற்பக்கம் தவிர்த்து மற்ற மூன்று பாகமும் தெரியக்கூடாதென்னும் நோக்கத்தோடேயே, அப்பங்களாவைச் சுற்றி ஆலம், அரசு முதலிய பிரம்மாண்டமான மரங்கள் பயிராக்கப்பட்டிருக்க வேண்டுமென்று சாமியாருடைய கூர்மையான புத்திக்குப் புலப்படாமற்போகவில்லை. சாமியார் தனது முழுமனதையும் அவ்வொரு விஷயத்திலேயே செலுத்தி, அத்தோட்டம் எவ்வளவு பெரியதாயிருக்குமென்றும் இது எவ்வளவு தூரம் வியாபித்திருக்குமென்றும் இது சென்னையின் எந்த பாகத்திலுள்ளதாயிருக்குமென்றும் இன்னும் இவைபோன்ற பல விஷயங்களை அறிந்துக்கொள்ள முயன்றார்.

அப்போது இரவு சுமார் ஒருமணி சமயமிருக்கும். அதாவது சாமியார் சிறையாக்கப்பட்டு ஒருமணி நேரமே ஆயிற்று. எங்கும் நிசப்தமும், கார்மேகம் போன்ற இருள் மயமும் சூழ்ந்துக்கொண்டிருந்தது. உலகமே தூங்குவதுபோலிருந்தது. ஆனால் மிகவும்கூர்மையான புத்திவாய்ந்த சாமியாருக்கு தோட்டத்தில் யாரோ பலர் வருவதுபோன்ற சத்தம் கேட்டது. உடனே சாமியார் ஏதோ தோட்டத்தில் விசேஷ சம்பவம் நடக்கப்போகிறதென யூகித்துக்கெண்டு வெகு கவனமாய் தோட்டத்தையே உற்று நோக்கியவாறிருந்தார். சிலர், தானடைபட்டிருக்கும் அறையின் சமீபத்திலேயே பேசிக்கொண்டு வருவதுபோலும், யாரையோ பிடித்து வருவதுபோலும்,

அவன் வரமாட்டேன் என்று முரண் செய்வதாகவும், பலர் பலவந்தமாக அவனை யிழுத்துக்கொண்டு வருவதுபோலும் நமது சாமியாருக்குத் தோன்றியது. இதற்குள் நாலைந்து பேர் அந்நிலவரையைத் தாண்டி அதற்கெதிரிலுள்ள ஓர் பிரம்மாண்டமான அரசமரத்தினடியில் சென்று நின்றனர். சாமியார் இருக்கும் ஜன்னலுக்கு நேரே இருபதடி தூரத்திலேயே அச்சிறியக் கூட்டம் நின்றது. அதில் ஒருவனுடைய கைகால்களெல்லாம் கட்டப்பட்டிருந்தது. அவனைத் தவிர அக்கூட்டத்தில் நான்குபேர்களே யிருந்தனர். அதில் கொலைக் கஞ்சா கொடிய இராக்கதனனை குரூர புத்தியுடைய குமாரசாமி நாடான் தலைமையாளனாய் நின்றிருந்ததை, அவர்கள் ஒவ்வொருவரும் கையிலேந்தியிருந்த தீப்பந்தங்களின் ஒளியால் சாமியார் தெரிந்துக்கொண்டார். அவருக்குண்டான கோபத்திற்கும், ஆத்திரத்திற்கும் அளவேயில்லை. கட்டப்பட்டிருப்பவனை கொலை செய்யவே அந்நள்ளிரவில் கொண்டுவந்திருக்கிறார்களென்று சாமியார் அறிந்துக்கொண்டார். கட்டப்பட்டிருப்பவன் யாரென்றறிய முயன்றார். முடியவில்லை. அவனுடைய முதுகுப் புறமே இவருக்குத் தெரிந்தது.

அங்கு வந்து நின்றதும் குமாரசாமி நாடான் மற்றவர்களை நோக்கி, "நமது மாயாண்டித்தேவனைக் கொன்ற மாபாதகனைத் தூக்கி விடுவதில் உங்களுக்கு யாதொரு தடையுமில்லையே?" என்று கேட்டான். அவர்களெல்லோரும் ஒரே குரலாய் "ஒரு தடையுமில்லை" என்றனர். இதானதும், ஒருவன் தன் கையிலிருந்த தடித்த நாற்கயிறை அவ்வரச மரத்தின் ஒரு கிளையில் போட்டு இன்னொரு பக்கமாய் வாங்கிக்கொண்டான். உடனே கயிறின் ஒரு முனையில் சுருக்கு முடி போடப்பட்டுக் கட்டுண்டிருந்தவனின் கழுத்தில் மாட்டப்பட்டது. உடனே குமாரசாமி நாடான் கயிற்றை மேலுக்கிழுத்துத் தூக்குப்போட உத்திரவிட்டுவிட்டான். ஆச்சு! கயிற்றை மூவரும் வலிவாக இழுத்தனர். கட்டுண்டிருந்தவன் சிறிதுசிறிதாக மேலுக்குச் சென்றான். சுமார் அரையடி உயரம் சென்றிருப்பான். இதற்குள் அம்மனிதனுடைய கழுத்தைக் கயிறு இறுகப் பற்றியது. அவனுடைய மூச்சுத் திணறிற்று. மறுநிமிடம் பிணமாகியிருப்பான். கயிறும் சிறிது சிறிதாக மேல்நோக்கிப் போய்க்கொண்டே யிருந்

தது. அப்போது தற்செயலாக அப்பரிதாபகரமான மனிதனுடைய தேகம் மறுபுறம் திரும்பியது.

அப்போதே அம்மனிதனுடைய முகத்தைக் கவனித்த சாமியார் "கோவிந்தன்" என்று அதிகதாழ்மையான குரலில் மொழிந்தார். அவருக்கு அளவுகடந்த ஆத்திரம் உண்டாகிவிட்டது. வீராவேசம் கொண்டவராய் தமது கைத்துப்பாக்கியை யெடுத்துத் தூக்கிடப் பட்டிருக்கும் கயிலைக்குறிவைத்துச் சுட்டார். சுட்டதும் கயிறறு பட்டு அம்மனிதன் கீழேவிழுந்தான். இந்த எதிர்ப்பாராத சம்பவத்தைக் கண்ட அந்நால்வரும் சொல்லொணு பீதியடைந்து சுற்று முற்றும் நோக்கினர். அப்படியே இரண்டொருவிநாடி பிரம்மித்து நின்றூர்கள்.

இதற்குள் சாமியார் தமது முழுபலத்தையு முபயோகித்து அவ்விரும்புக் கம்பியை வெளிக்கிழுத்தார். அதுசீக்கிரம் பெயருவதாகத் தோன்றவில்லை. அதைக்கண்ட சாமியார் அதிக ஆத்திரம் கொண்டு வெகுபலமாக ஒரு ஜிம்மு ஜிம்மவே இரண்டு கம்பிகள்ஓசையோடு பிடிங்கிக்கொண்டு வந்தன. சாமியார்அதை தரையில்யெரிந்துவிட்டு ஒரேபாச்சலில் அப்பலகணி வழியாய் வெளித்தாண்டி கட்டுண்டிருக்கும் மனிதனிடம்போய் அவனுடைய கட்டுகளை யவிழ்க்கமுயன்றூர்.

திடீரென்று இப்படி நடக்குமென்று சிறிதும் எதிர்ப்பாராதிருந்த நால்வரும் கயிறு சுடப்பட்டதும் அதிக திகிலடைந்துத் தங்கள் காரியாதிகளை யாரோ கவனித்துக்கெண்டிருக்கின்றனர் என்று நினைத்தவுடன் அதிக திகிலும் அச்சமுமடைந்து அப்படியே அசைவற்று நின்றுவிட்டனர். இதற்குள் சாமியார் அங்குத்தோன்றி அவனுடைய கட்டுகளையவிழ்ப்பதைக்கண்டதே, குமாரசாமிநாடானுக்கு நடந்தது இன்னதென்று தெரிந்துபோயிற்று. ஆகவே அவர் ஒருவரே இவ்வாறு செய்தவர். அவருடன் வேறுயாரும் இல்லையென்பதை அந்தக் கணத்திலேயே தெரிந்துக்கொண்டான். ஆகையால்அவன் மறுபடியும் தைரியங்கொண்டுத் தன் ஆட்களுக்குச் சமிக்கைசெய்தான். இதைக் கண்ட ஆட்கள் வந்தவரைத்தவிர வேறுயாருமில்லையென்று தெரிந்துக் கொண்டு சாமியார்மேல் ஒரேகாலத்தில் மூவரும் புலிபோற் பாய்ந்தனர். அப்போதே கோவிந்தனுடையக் கைக்கட்டுகளை அவிழ்த்து

விட்டு கால் கட்டுகளை நீக்கிக்கொண்டிருந்தார். அவர்கள் எப்போது பாய்வார்களோ என்று சாமியார் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தாராகையால், அவர்கள் பாய்ந்துவரும்போதே கோவிந்தனுடையக் கட்டுகளை நீக்கிவிட்டுத் தாமும் எழுந்துநின்று சண்டைக்கு ஆயத்தமாய்த் தமது கைச்சட்டையை மேலுக்குத் தள்ளிக்கொண்டார். உடனே போர் தொடங்கிற்று. குமாரசாமி நாடான் தொலைவில் நின்றுக்கொண்டு நிகழ்வதை வெகுகவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். மூவரும் சாமியார் மேலேயே பாய்ந்து அவரைமட்டும் குத்தவும் அடிக்கவும் முயன்றுக்கொண்டிருந்தார்களேயன்றி கோவிந்தனைக் கவனிக்கவேயில்லை. ஆகையால் கோவிந்தன் சில நிமிஷங்களில் கழுத்துவலியைச் சரிப்படுத்திக்கொண்டு அவனும் எழுந்து சாமியாருக்கு உதவியாகச் சென்றான். இருவரும் அம்மூவருடன் சண்டையிட்டனர். கோவிந்தன் அதிக பலசாலியாயினும் வெகுநேரம் கட்டுண்டிருந்ததாலும், தூக்கிடப்பட்டு அப்போதே திணறித்தவித்தவனாகையாலும் இரண்டொரு அடிகளில் கீழே விழுந்துவிட்டான். அவனை அம்மூவரில் ஒருவன் கெட்டியாக மார்பின்மீது முழங்காலை யூன்றிப் படுத்தப்படுக்கையாகப் பிடித்துக்கொண்டிருந்தான். மற்ற இருவரும் சாமியாருடன் போர்செய்துக் கொண்டிருந்தனர். சுமார் பதினைந்து நிமிஷம்வரை சாமியார் அவர்களிருவரையும் பலமாக எதிர்த்துப் போர்செய்தார். அவருடைய பலமான ஒரு குத்து இருவரில் ஒருவன்முகத்தில் தாக்க அவன் ஸ்மரணையற்று அப்படியே தரையில்விழுந்தான். அதைக்கண்ட குமாரசாமிநாடான் தானும் சாமியாருடன் சண்டையிடச் சென்றான். சாமியார் என்னதான் பலசாலியானாலும் முரட்டுமனிதரிடம் எத்தனைநேரம் சண்டை செய்வார்! மேலும் சுமார் பனிரண்டடி உயரத்திலிருந்து விழுந்ததால் அவருடைய தேகத்திலுண்டாகிய துன்பம் கொஞ்சமும் நீங்கினபாடில்லை. இதற்குள் முதலில் மூவரிடம் சண்டைசெய்தார். பிறகு இருவருடன் சண்டைசெய்து ஒருவனை வீழ்த்தினர். மறுபடியும் முரட்டுபலம் படைத்த குமாரசாமி நாடானுடனும் இன்னொருவனிடமும் சண்டை செய்வதென்றால் அவருடையபலம் ஒரு சிங்கத்தின் பலத்திற்கே ஒப்பிடத்தக்கது. ஒரு சிங்கம் மதயானையின்மீது பாய்ந்தடிப்பதுபோல் அவர்களடிக்கு இலகுவாகத் தப்பித்துக் கொண்டு தம்முடைய ஒவ்வொரு பாய்ச்சலிலும் ஒரு பலமானகுத்து

விட்டுக்கொண்டே வந்தார். சுமார் அரைமணிநேரமாகச் சண்டை செய்ததால் அவருக்குச்சிறிது களைப்புத் தோன்றியது. அவர் மறு படியும் கோபாவேசம் கொண்டவராய் ஒரு குத்துகுத்தவே குமார சாமி நாடானுடைய துணையாள் அடியற்ற பனைபோல் தரையில் விழுந்து மூர்ச்சையுற்றான். கடைசியில் சாமியாரும் குமாரசாமிநாட னும் எதிரெதிர் நின்றார்கள். இருவருக்குமிருந்த ஆத்திரம் விவரிக்க முடியாதது. ஒருவர்க்கொருவர் கூடுமானல் அப்படியே கசக்கிச்சார் பிழிந்துவிடலாமென அதிக உக்கிரமாகப்பாய்ந்தனர். ஒருவரையொரு வர் குத்தியும், அறைந்தும், கீழேதள்ளியும், உதைத்தும் வெங்கோபத் தோடு போரியற்றினர். ஆஞ்சநேயரானவர், மகாபல பராக்கிரம சாலியும், தன்மகனென்று சொல்லப்படுமவனுமான மச்சகந்தனோடு எப்படி சண்டையிட்டுத் தோற்றாரோ அவ்வாறே நமது சாமியார் குமாரசாமிநாடானிடம் போரிட்டுக் களைத்துவிட்டார். இதைக் கண்ட நாடான் இதுதான் சமயமென்றெண்ணி பலமான ஒருகுத்து சாமியாருடைய முகத்தில் குத்தினான். ஐயோ! பாவம்! மஹா சூர னும், பலாட்டியனும், தீரவானும், துப்பறிவதில் தனக்கு நிகர் இந்தியா விலேயே இல்லையென்று எல்லாராலும் புகழப்படுபவருமான ஞான னந்தர் தரையில் சாய்ந்தார்.

கொஞ்சமும் ஈவிரக்கமற்ற கன்னெஞ்சனை குமாரசாமிநா டான் தர்மயுத்தமே செய்தறியாதவனாகையால் களைத்துவிழுந்த மாற் றானை ஞானந்தரின் மார்பின்மேல் கிருஷ்ணபகவான் தன்னைக்கொல் லக் கம்சனால் ஏவப்பட்டப் பெண்பூதத்தைக்கொல்லக்கருதி எவ்வாறு மார்பின்மீது தமது திருப்பாதங்களை யூன்றி இருகரங்களாலும் கழுத்தைப்பற்றி யிருந்தாரோ அவ்வாறே நாடானும் சாமியாரைப் பிடித்துக்கொண்டான். எப்பேர்ப்பட்ட திடசாலிக்கும் பலபராக்ரம முடையவனுக்கும் தோல்வியடைய வேண்டிய காலம் வந்து விட்டால் ஒரு பேதையால் தோல்வியடைவான். உருவத்தில் பெரிய தும், கனத்தசுற்றளவுள்ள கால்களையுமுடைய யானைக்குமடி சருக்கு மல்லவா? ஆகையால் வீராதி வீரனை நமது சாமியார் முதலில் பனி ரண்டடி உயரத்திலிருந்து விழுந்ததையும் பொருட்படுத்தாது பலம் பொருந்திய ஜன்னல் கம்பிகளை விலக்கியதுமன்றி முதலில் மூவருடன் போர்செய்து ஒருவனைக் காயப்படுத்தி இரண்டாவது இருவருடன்

சண்டைசெய்து இன்னொருவனை வீழ்த்திக் கடைசியாகக் குமாரசாமி நாடானுடனும் அவன் தோழனுடனும் மல்யுத்தம் செய்தபோதும் அவன் தோழனையும் வீழ்த்தினர். ஒருமணி காலத்திற்குள் இவ்வளவு அபார கார்யாதிகளை நிகழ்த்தியவரின் அரியபுத்தி யுக்தி சாமர்த்தியத்தைப் பற்றியும் அவருடைய அபாரமான திரேகக்கட்டோடு கூடிய பலத்தைப்பற்றியும் வாசகர்களே சிந்திக்கலாம்.

சாமியாரின் மார்பின் மேல் முழங்காலை யூன்றிக் கழுத்தைப் பிடித்துக்கொண்ட நாடான் அவரை நோக்கி, "இப்போதென்ன சொல்கிறீர்? நீர் நமது காரியங்களையெல்லாம் கெடுத்ததுமன்றி, நமக்கு அநேக இடையூறுகளையும் செய்துவருகிறீர். உம்மை இன்னும் உயிரோடு வைத்திருந்தால் ஒரு விஷப் பாம்பை மடியில் வைத்துக்கொண்டு, அது எந்த நிமிஷம் கடித்துவிடுமோவென்று பயந்துக்கொண்டிருப்பதை யொக்குமே யல்லாது, வேறல்ல. ஆகையால் நீர் இப்போது இறப்பது திண்ணம்! நிச்சயம்!! சத்தியம்!!! உம்மை இப்படியே கழுத்தை நெருக்கிக் கொன்றுவிடப் போகிறேன். உமக்குச் சில விநாடி நேரம் சாவகாசமளிக்கிறேன். இதற்குள் உமக்கு அதிக பிரியமான பந்து மித்திரர்களையும், இஷ்ட தெய்வத்தையும் பிரார்த்தித்து இயமனுலகம் செல்வதற்கு விடைபெற்றுக் கொள்ளும்" என்று வெகு அகங்காரமாகச் சொன்னன். பார்த்தார் சாமியார். செயலற்றுக் கிடக்கிறார் நண்பர்கள் அவர் நிகழ்ந்தவைகளால் பயந்துபோயிருப்பாரென்றுக் கருதியிருக்கலாம். அது தவறு. ஒரு சிறிதும் பயமாவது, அச்சமாவது, தன்னை அவன் இன்னும் சில விநாடிகளில் கொன்றுவிடுவானே என்ற பீதியாவது எய்தியவரேயல்ல. அவர் மற்ற சாதாரண மனிதரைப் போலல்லாது, தத்துவ ஞானமுடையவர். அவர் அச்சம், பயம், திகில், பீதியென்ற பதங்களையே அறியாதவர். அவர் எப்போது துப்பறியும் உத்தியோகத்தில் தலையிட்டாரோ, அப்போதே தான் என்றைக்காவது ஒரு நாள் அநாதியாய் எந்தத் திருடனலாவது கொல்லப்படுவோமென்றறிவார். அவர் எவ்விதமான சலனமுமில்லாமல், சாந்தமாய்க் குமாரசாமி நாடானை நோக்கி, "ஐயா! நீர் நம்மை, உம்முடைய சாமர்த்தியத்தால் தோல்வியடையச் செய்தீர். இப்போது இன்னும் சொற்ப நேரத்தில் நான் இறத்தல் நிச்சயத்திலும் நிச்சயமே நான் இறக்க

ஆயத்தமாகத் தற்போது காத்துக்கொண்டிருப்பதும் உண்மையே. அதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. மண்ணில் பிறந்தவன் இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது இறந்தே தீரவேண்டும். ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்.

உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

ஆனதால் என்னுடைய ஆயுள் குறுகியிருப்பதைப் பற்றி ஒரு சிறிதும் அஞ்சவில்லை. "ஆவாரை யாரே யழிப்பாருவன்றி சாவாரை யாரே தவிர்ப்பார்" என்பதைப்போல் நான் உன்னால் மரணமடையப்போவதைத் தவிர்க்க வல்லார் ஈசனன்றி வேறில்லை. ஆகையால் நான் மரணத் தருவாயில் நிம்மதியாகச் சாவதற்காகவும், என் மனசாந்தத்திற்காகவும் என்னுடைய ஒரு சந்தேகத்தைமட்டும் நிவர்த்தி செய்தால் போதும்.—என்றார்.

குமாரசாமி:— என்ன வேண்டுமோ, அதை சீக்கிரம் கேளும்.

சாமியார்:— ஐயா! வேறொன்றுமில்லை. ஒரே ஒரு சந்தேகம். சாவித்திரிதேவி யார்? மஹாலட்சுமியை யாருக்கு மணம் செய்து வைக்க உத்தேசித்திருக்கிறீர்கள்? இந்த அற்ப கேள்விகளுக்கு விடையளித்துவிட்டால், நான் எவ்விதமான இவ்வுலக இச்சையையும் விட்டு, நிம்மதியாய் மறுவுலகம் செல்வேன்.

குமாரசாமி:— இக் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. ஆயினும் சற்று நேரத்தில் சாகப்போகும் உமக்கு இதைச் சொல்வதால் யாதொரு கெடுதலும் உண்டாகாதாதலால் சொல்கிறேன் கேளும். பதின்மூன்று வருடங்களுக்கு முன் டில்லியில் பிரபல கோடீஸ்வரரான திவான்பகதூர் நாராயணசாமி முதலியார் தேசசஞ்சாரமாய் பல பிரதான நகரங்களைக் கண்டுக்கொண்டு சென்னைக்கு வந்தார். அவர் சென்னைக்கு வந்திருப்பதைத் தெரிந்துக்கொண்ட நான், ஒரு தந்திரமான சூழ்ச்சி செய்து அவரைக் குடும்பத்தோடு நுங்கம்பாக்கம் ராஜபாட்டையில் இரவு ஒன்பது மணிக்குப் போகும்படிச் செய்து, வழிப்பறிக் கொள்ளையடித்தேன். அதிர்ஷ்ட வசமாக அவர் தனது யௌவன மனைவியையும், ஒரே வயதையுடைய ஒரு பெண் மகவையும் அப்போது அழைத்துவந்திருந்தார். என் சிநேகிதனை ஒரு முரட்டுப்

பயல் அவருடைய மனைவியின் மண்டைமேல் தடியாலடித்ததால் அவள் இறந்தே போனாள். நாராயணசாமி முதலியாரவர்களுக்கும் மண்டைமேல் அடி விழுந்ததால் அவரும் மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தார். எல்லாப் பொருளையும் எடுத்துக்கொண்டோம். பரிதாபமாக அழுதுக்கொண்டிருந்தக் குழந்தையை விட்டுச் செல்ல எனக்கு மனம் வரவில்லையாகையால், நான் அதை யெடுத்துக் கொண்டுபோய் எனது வைப்பாட்டியான ராஜலட்சுமியை வளர்த்து வரச் சொன்னேன். அக்குழந்தையே இந்த சாவித்திரிதேவியாவாள்.

இனி மஹாலட்சுமியைப் பற்றிச் சொல்கிறேன். எனக்குக் காஞ்சீபுரத்திலொரு வைப்பாட்டி யிருக்கிறாள் அவள் என்னைப் போல தீர ஸ்திரீ. எந்தவிதமானக் கொலையும், களவும் செய்யப் பின் வாங்காதவள். அவளை இப்போது கைது செய்யப்பட்டிருக்கும் இராமசுப்பன் வெகு காலமாக (பத்து வருஷம்) அவளை வைப்பாக வைத்திருந்தான். அப்போது மோகனாவினுடைய தமையன் முனிசாமி என்பவன் இராமசாமியினிடம் நெருங்கிப் பழகி வந்தான். மோகனா இராமசுப்பனை விலக்கிவிட்டபின் எழுத்தூரிலுள்ள அவளுடை வீட்டிற்குப் பலதரம் முனிசாமி போயிருக்கிறான். அப்போது தற்செயலாக மஹாலட்சுமியைக்காண நேர்ந்தது. அதுமுதல் அவன் பித்துப்பிடித்தவன்போல் மஹாலட்சுமியின் மையலில் மயங்கி விட்டான். இதைக்கண்ட மோகனா உண்மையறிந்து என்னிடம் தெரிவித்தாள். மரணவிசாரணை நடந்த பிறகு அவளைக்கொண்டு வர முனிசாமியுடன் சில ஆட்களை அனுப்பியிருந்தேன். அவர்கள் அவளைக் கொண்டுவந்துவிட்டதாகவும், முனிசாமி பலவந்தம் செய்ததாகவும் எனதாள் சொன்னான். சரி! இனி நமது காரியத்தை முடிக்கலாமல்லவா? உமக்குவேண்டிய விவகாரங்களைத் தெரிந்துக் கொண்டீர். இதை நீர் இம்மண்ணுலகில் வெளியிடாமல் விண்ணுலகில் வெளியிடும்'' என்றார்.

சாமியார்:— ஆஹா! நீ இனியும் தாமதிக்கவேண்டிய அவசியமில்லை. உன்னுடைய ஈவிரக்கமற்றக் கொலைபாதகத் தொழிலை நடத்திவிடு—என்றார்.

இதைக்கேட்ட குமாரசாமி நாடான் சற்றும் கருணையென்பதில்லாமல் குரூரமான முகத்தோடு சாமியாரின் கழுத்தை நெருக்கி

னன்; மூச்சுத்திணறிற்று; நாவுலர்ந்தது; கண்கள் விரைத்தன; ஆச்சு! அடுத்தவினடி மரணமடைவார். ஆனல் அதற்குள்யாரோ துப்பாக்கிச் சுட்டசப்தம் கேட்டது. சுட்டசப்தம் ஒடுங்குமுன் துப்பாக்கியின் குண்டு குமாரசாமிநாடானது இடதுதோளின் பின்புறம் புகுந்து ஊடுருவிப்போகவே திரும்பிப் பார்த்துத் தன்னைச் சுட்டது சாவித்திரிதேவியென அறிந்ததும் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான். கீழே மூச்சுத் திணறலுடன் சாகுந்தருவாயில் இருந்த சாமியார், நடந்தவை இன்னதென்பதை யுடனே தெரிந்துகொண்டார். மிகுந்த சிரமத்துடன் சமாளித்து எழுந்தார்.

இதற்குள் சாவித்திரியும் அந்த பெயர்க்கப்பட்ட ஜன்னல் வழியாய் அங்கு வந்துசேர்ந்தாள். நிகழ்வதைக்கண்ட கோவிந்தனைப் பிடித்துக்கொண்டிருந்த ஆள் மெதுவாய் நழுவிவிடப் பார்த்தான். இதையுணர்ந்த சாமியார் அவனுடைய முதுகில் காலினல் ஒரு உதை கொடுத்ததும், அவன் மண்ணைக் கவ்விக்கொண்டு தரையில் விழுந்து விட்டான். உடனே கோவிந்தனும் சமாளித்துக்கொண்டு எழுந்தான். சாமியார், கோவிந்தன், சாவித்திரி ஆகிய மூவருமாக குமாரசாமிநாடான், அவனுடைய தோழர்களான மூவர் ஆக நால்வரையும் அங்கு கோவிந்தனைத் தூக்கிடக் கொண்டுவந்த கயிற்றால் பலமாகக் கட்டினர்கள். இதானதும் சாமியார் கோவிந்தனை ஒரு கைத் துப்பாக்கியுடன் அங்கு காவல்வைத்துவிட்டு மற்றொரு கைத்துப்பாக்கியைக் கையில் எந்தியவண்ணம் சாவித்திரியை அழைத்துக் கொண்டு அப்பங்களாவின் முற்பக்கத்தை நோக்கிநடந்தார். பங்களாவின் முற்பக்கத்தில் தன்னை எற்றிவந்த மோட்டார் நிற்பதைக் கண்டார். அதைக்கண்ட சாமியார் அதில் யாரும் இல்லாதிருந்ததை ஒரு நொடியில் தெரிந்துகொண்டு, மறுபடியும் கோவிந்தனிடம் வந்து அங்கு கட்டுண்டுக்கிடந்த நால்வரையும் ஒருவர்பின் ஒருவாரத் தூக்கிச்சென்று மோட்டாரில் போட்டார். சாவித்திரியையும் கோவிந்தனையும் அதில் எரிக்கொள்ளச்செய்து தானே மோட்டாரை ஒட்டினர். வெளியில் ராஜாபாட்டையை யடைந்ததும் அது எந்த இடமென்பதைத் தெரிந்துக்கொள்வதற்காக அக்கம்பக்கங்களை நோக்கினர். அவர் சென்னையிலுள்ள பலபாகங்களையும் நன்றுயறிவாராகையால், அது ஆலந்தூருக்குச் சென்னையிலிருந்து போகும்பாதை

யென்பதை யறிந்துக்கொண்டு சென்னையைநோக்கி மோட்டாரைத் திருப்பினார். நான்கு ஐந்து அடிதூரங்கூட சென்றிருக்காது. அதற் கடுத்த பங்களாவின் வெளிவாசற் கருகில் யாரோ ஒரு பெண் பரி தாபமாய்க் கூக்குரலிடுவது போன்ற ஒரு சந்தடிகேட்டது. அதை யுணர்ந்த சாமியார் மோட்டாரை நிறுத்திச் சட்டென்று கீழேகுதித்து அப்பங்களாவின் வெளிவாசலைத்தாண்டி யோடினார். அப்போது அப்பங்களாவின் வாசற்காப்போன் ஒரு பெண்ணை பலவந்தமாக இழுத்துக்கொண்டு போவதைக்கண்டார். சாமியாரைக்கண்டதும் அவ்வாயில் காப்போன் இன்னும் பலமாக அப்பெண்ணை பங்களாவை நோக்கியிழுத்தான். சாமியார் அவனருகில் சென்று அவனது வயிற்றைப்பார்த்துத் தன் காலால் ஒருதை கொடுக்கவே அவன் பந்துபோல் பத்தடிதூரத்தில் போய் "தொப்" என்று விழுந்தான். சாமியார் அவனைக்கவனிக்காமலே அப்பெண்ணை யாரென்று வின வினர். அம்மங்கை தான் எனுத்தூர் இராமசுப்பய்யருடைய பாரியா ளென்றும், தன்னுடைய தோட்டத்தில் உலாவியிருந்தவளை யாரோ அக்கிரமமாய்ப் பிடித்துவந்து பலவந்தம் செய்தார்களென்றும், தான் தப்பி வெளியேவந்து வாசலைக்கடக்கும் சமயம் வாயில்காப்போன் பிடித்துக் கொண்டானென்றும் சொன்னாள். சாமியார் அவளே ஸ்ரீலோலனின் தமக்கை யென்பதை யறிந்துக்கொண்டு அவளுக்கு தான் யாரென்று சொல்லி அவளையும் அழைத்துக்கொண்டு மோட் டாரை சென்னையை நோக்கிவிடுத்தார். சிலநிமிஷ நேரங்களில் மோட்டார் சென்னையின் நகரச்சிறைச்சாலைக் கெதிரில் நின்றது. விஸ்தரிப்பானேன். அடுத்தநிமிஷம் குமாரசாமிநாடானும், அவன் தோழர்களாகிய மூவரும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். பிறகு சாமியார் நுங்கம்பாக்கம் சென்று ஸ்ரீலோலனுடைய பங்களா வில் சாவித்திரியையும் மஹலட்சுமியையும் விட்டுவிட்டுத் தமது ஜாகை யுள்ள மைலாப்பூருக்குச் சென்றார்.

மறுநாளதிகாலையில் சூரியன் உதயமாவதற்குள் சாமியார் பிரிசி டென்சி மேஜிஸ்ட்ரேட்டிடம் சென்று இரகசியமாகப் பேசியிருந்து விட்டு அநேகருக்கு வாரன்ட்கள் பெற்றுச்சென்றார். மற்றுமுள்ள அவருடைய அத்யாச்சர்யகரமானதும், இரும்பூதேய்தற்குரியதுமான செய்கைகளெல்லாம் செஷன்ஸ் கோர்ட்டிலேயே வெளியாகுமாத லால், இங்கொருதரம் அநாவசியமாக வரையாது விடுத்தோம்.

# ஒன்பதாம் அத்தியாயம்.

## ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்ருகும்.

1. *அதிக ஆசை அதிக நஷ்டம்.*

2. *ரோக்கின் பைங்கண் அறவிற்குப் பல்லளவே*
*துர்ச்சனர்க்கு அங்க முழுதும் விடமேயாம்.*

3. *கண்மேல் வைத்த மாசென வாகைக் கவருள்ளம்.*
*விண்மேல் வைத்த வான்றிடு வெண்ணு விருள்வீங்கி*
*மண்மேல் வைத்த வாழ்வினை யகட்ட மலிகள்வாய்ப்*
*புண்மேல் வைத்தத் தீத்திரள் சேர்ந்தேன் பதவென்பார்.*

கதிரோன்! கதிரோன்!! விண்ணின் திலகமென ஒளிரும் கதிரோன்! சிவந்தக் கனியெனப் புகழப்படும் கதிரோன்! எறியும் கனியெனப் புகழாநின்றக் கதிரோன்! பூமியெனும் முகத்தின் கண்ணெனப்படும் கதிரோன்! ஆன்ம கோடிகளின் பிரத்தியட்ச பூர்வமான இறைவனும் கதிரோன்! திருமறுமார்பனுன எம்பெருமான் புன்னகைக் கொள்வதற்கிணங்க தினமும் செவ்வரி படர்ந்த இளங் கதிர்களை எங்கும் பரப்பிப் பொங்கும் களிப்புண்டாக்கும் கதிரோன்! பகலில் அவனதனற் கொடுமை பெரிதும் பாராட்டப்பட்டும், காலையிலும், மாலையிலும், கண்டானந்த வெறிகொண்டு, வாயாரப் புகழப்படும் கதிரோன்! வானம் வரண்டு இருள் எய்தவும், ஈனம் சிறந்துத் தலை காட்டவும், ஞானம் என்பது நாற்றிசையிலும் பறந்தோடவும், மானம் சற்றும் தன்னொளி பெருது இறந்துபடவும், ஆன்மகோடிகள் அதிசயமான மாணத்தை அதிசீக்கிரம் எய்தாதிருக்கவும், பயிர்கள் பலமடைந்து செழிப்புற்று, பசுமையோங்கிப் பயன்தரவும் செய்யும்பொருட்டு, அஞ்ஞானத்தி னரியவுருவெனத் தோற்றும் காரிருள் சூழ்ந்த பேரிரவை நீடித்து நிற்காவண்ணம் அவ்வப்போது கிரணங்களென்னும் சாட்டைக் கொண்டோட்

டும் கதிரோன்! பேரொளியின் மயமான பரிதியே! நீ ஒரு நாள் கீழ்த் திசையிலுதிக்காவிடில், மாந்தர்கள் எப்படி உய்வார்கள்? அவர்கள் செய்யும் தொழில்கள் எப்படி நடைபெறும்? ஆ! ஆ!! கணக்கிட முடியாத செங்கதிர்களுடையோய்! நினது, எதிர்ப்பாராதுழைக்கும் கருணை வழிந்தத் தன்மைக்கு மானிடர்கள் எஞ்ஞான்றும் பிரதியயற்ற அசக்தர்களே. நினது அளவிடற் கரியக் கருணையின் மிகுதியே மிகுதி! அளவு கடந்தது!!

இத்தகையக் கதிரோன், எங்கும் தன் செங்கிரணங்களைப் பரப்பி, ஓர் நாள் காலை கீழ்த் திசையில் தோன்றினான். ஒவ்வொரு நாளும் உலகிலுள்ளப் பலருக்கு சபிக்கக் கூடிய தினமாகவும், போற்றக்கூடிய தினமாகவும் முடிவது யாவரும் அறிந்த விஷயம். அந்நாள் யாராருக்குச் சந்தோஷத்தையும், யாராருக்குத் துன்பத்தையும் விளைவிக்கிறது பார்ப்போம். அன்றுதான் கோபாலகிருஷ்ணய்யருடைய கொலைக் கேஸ் செஷன்ஸில் விசாரிக்கக் குறிப்பிடப்பட்ட நாள். முன்னம் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் மரண விசாரணை நடந்த தினத்தன்று, சாமியார் இருந்ததுபோலில்லாமல், அன்று வெகு சுறுசுறுப்பாக வேலை செய்தார். அதிகாலையிலெழுந்து பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட்டிடம் நேரில் சென்று பலரைக் கைதியாகப் பிடிக்கப் பல வாரன்ட்கள் பெற்றார். அவைகளை யெடுத்துக்கொண்டு சென்னைப் போலீஸ் கமிஷனரிடம் சென்று, அவர் மூலமாய் அவ்வாரன்ட்களில் கண்ட பெயர்களை அரஸ்ட் செய்து, அன்று செஷன்ஸில் ஆஜர் செய்யும்படிப் பல சப் இன்ஸ்பெக்டர்களுக்கும், கானிஸ்டேபிள்களுக்கும் உத்திரவு பிறப்பித்தார். வெகு நேரம் கமிஷனரிடம் இரகசியமாய்ப் பேசியிருந்தபின் தமது ஜாகைக்குச் சென்று சில சாமான்களை யெடுத்துக்கொண்டு, கோர்ட்டில் குறித்த நேரத்திற்கு முன்னமே ஆஜராயிருந்தார். அன்று சிலருக்குச் சாமியார் சனீஸ்வரனாகவும், பலருக்கு வியாஸ குருவாகவும் விளங்கினார். கோர்ட்டில் மரண விசாரணைக்கு வந்ததைவிடப் பதின்மடங்கு ஜனங்கள் குறித்த காலத்திற்கு முன்பே குழுமியிருந்தனர். அன்று இக்கேசை விசாரிக்கவேண்டும் என்னும் ஆவல் ஜட்ஜ் துரையவர்களுக்கேயிருந்தமையால் அவரும் அதிசீக்கிரம் கோர்ட்டில் பிரசன்னமானார். இரு கட்சி வக்கீல்களும் வந்திருந்தனர் என்று சொல்லவும் வேண்

டுமா? கைதியாகிய இராமசுப்பன், கைதிக் கூண்டில் நின்றான். இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு தமது உத்தியோக உடையணிந்துக் கொண்டு வெகு தடபுடலாய் வந்திருந்தார். அக்கேஸில் சம்மந்தப் பட்ட சாட்சிகளெல்லாம் வந்திருந்தனர். புதிதாகக் கைதியினு டைய யோக்கியதையை ரூபிக்க இன்ஸ்பெக்டர், காஞ்சீபுரம் தாசி மோகனாவையும், ரொக்க வியாபாரியான க. அ. து. ரங்கைய செட் டியையும் வரவழைத்திருந்தார். முறைப்படி சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர். கைதியாகிய இராமசுப்பன், முன்பு கொடுத்த வாக்கு மூலத்தையே மறுபடியும் சொன்னான். இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்ட் ரேட் கோர்ட்டில் கூறியபடியே கூறினார். மற்ற சாட்சிகளும் முன்பு சொன்னதையே சொல்லினர். இன்ஸ்பெக்டர் கைதியின் அயோக் கியத்தனத்தை ருஜுப்படுத்த இன்னும் புதிய இரண்டு சாட்சிகள் வந்திருக்கிறார்களென்று சொல்லவே, அவர்களும் விசாரிக்கப்பட் டனர். முதலில் மோகனா விசாரிக்கப்பட்டாள். அவள் பின்வரு மாறு சாட்சி சொன்னாள்.

**மோகனா:—** நான் காஞ்சீபுரத்திலுள்ளவள். நான் தாசித் தொழில் செய்தே ஜீவனம் செய்து வருகிறேன். இவர் (இராமசுப் பன்) என்னைச் சென்ற பத்தாண்டுகளாய் அன்னபானாதிகள் கொடுத்து இரட்சித்து வந்தார். இவர் என்னுடைய சகவாசத்தி லிருக்கும்போது, இவருக்கு அநேக துன்மார்க்கர்களும், சோம்பேரி களும், பலதாம் அபாரதம் செலுத்தியப் போக்கிரிகளும் சிநேகமா யிருந்தார்கள். நான் எவ்வளவு தூரம் புத்தி புகட்டினாலும், இவர் கேட்பதேயில்லை. இரவும் பகலும் அத்தூர்த்தர்களோடு சேர்ந்துக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்வார். இவருடைய நட வடிக்கைகள் பிடிக்காமலே இப்போது நான் இவரை நீக்கிவிட் டேன்.—என்றாள்.

இதைக் கேட்ட சாமராஜன், பின்வருமாறு கிராஸ் செய்ய லானார்.

**சாமராஜன்:—** ஏனம்மா! தங்களுக்கு யாரேனும் தமைய னிருக்கிறாரா? அவர் பெயரென்ன?

**மோகனா:—** தமையன் ஒருவருண்டு. அவர் பெயர் முனிசாமி.

சாம:— அவர் இப்போது எங்கேயிருக்கிறார்? அவரையும் ஏன் சாட்சியாகப் போடவில்லை? இக்கைதியின் யோக்கியதையை அவரும் அறிந்திருப்பாரல்லவா?

மோகன:— ஆஹா! அதற்கென்ன ஆட்சேபம்? ஆனால் அவர் சில நாட்களாக ஊரிலில்லை. எங்களுடைய சொந்த ஊரான செகண்ட்ராபாத்துக்குச் சென்றிருக்கிறார்.—என்றதும் அவள் விசாரணை முடிந்தது. பிறகு ரொக்க வியாபாரியான க. அ. து. ரங்கையசெட்டி விசாரிக்கப்பட்டார். அவரும் இராமசுப்பனது நடக்கையைப் பற்றியும், அவன் தன்னிடம் கடன் வாங்கினதைப்பற்றியும் சொல்லி முடித்தார்.

இதானதும் கோர்ட்டார், கைதிப்பக்கம் சாட்சிகளுண்டாவென்று கேட்டதற்கு சாமராஜன் உண்டென்று சொல்லவே, அவர்களையும் விசாரிக்கும்படி உத்திரவிட்டார்கள். உடனே சாமராஜன், "சாட்சி ஷண்முகம்" என்று கூப்பிடச் சொன்னார். கோர்ட் குமாஸ்தா அப்படியே கூப்பிட்டான். அடுத்த நிமிஷம் ஷண்முகம் என்னும் போலீஸ் கமிஷனர் ஆபீஸின் வேலைக்காரன் சாட்சிக் கூண்டில் வந்து நின்றான். சாமராஜன் அவனை நோக்கி, "ஐயா! நீர் கமிஷனருத்திரவுப்படி சில தினங்களுக்கு முன் இக்கைதிக்கு ஓர் தந்தி கொடுத்தீராமே. அதைக் கனம் கமிஷனருடைய உத்திரவின் மேல் கொடுத்தீரா? அப்படியாயின் எந்தத் தந்தி ஆபீஸ் மூலமாய்க் கொடுத்தீர்?" என்று கேட்டார்.

ஷண்முகம்:— அவருடைய உத்திரவுப் பிரகாரம் ஜார்ஜ் டவுன் தந்தி ஆபீஸில்தான் கொடுத்தேன்.—என்றான். சாமராஜன், "சரி! நீ போகலாம்" என்றதும் அவன் போய்விட்டான். அப்போது எந்தக் காரணத்தாலோ இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவின் முகம் அருவருப்பையும், முகச் சுளிப்பையும் புலப்படுத்திற்று. இரண்டாவதாக, நுங்கம்பாக்கம் தந்தி ஆபீஸ் கிளார்க் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அவன் இராமசுப்பனுக்கு அனுப்பிய தந்தியைத் தானே தனது ஆபீஸ் மூலமாய் அனுப்பினதாகவும், அதை இந்த ஷண்முகமென்பவனே வந்துக் கொடுத்ததாகவும் சொன்னான். அந்தத் தந்தியின் கையெழுத்துப் பிரதியைக் கொண்டுவந்தாயாவென்று சாம

ராஜன் கேட்டதற்குக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லி, அதைக் கோர்ட்டில் ஆஜர் செய்தான். இதற்குள் இன்ஸ்பெக்டருடைய தூண்டுதலால் பாரிஸ்டர் பாப்பர் எழுந்து, "கோர்ட்டாரவர்களுக் கோர் மனுப் பண்ணிக்கொள்கிறேன். இக்கேசுக்குச் சிறிதும் சம்மந்தமில்லாத ஒரு விஷயத்தைப்பற்றி விசாரிப்பதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன்." என்றார். அப்போது சாமராஜன், "கோர்ட்டாரவர்களே! நமது நண்பர் அட்சேபிப்பது சரியே. இப்போது நான் விசாரிக்கும் சாட்சிகள் சொல்வது சம்மந்தமில்லாததுபோல் தோன்றினாலும், கடைசியில் இது மிகவும் நெருங்கிய சம்மந்தமுடையதென்று ருஜுவாகும். அதுவரை நமது நண்பரைப் பொறுமையுடன் இருக்குமாறு தங்கள் மூலமாக வேண்டிக்கொள்கிறேன்" என்றதும் கோர்ட்டார், "ஆம்! வக்கீல் சாமராஜன் அவர்கள் சொல்வது சரியே. மிக்க கூர்மையான புத்தி வாய்ந்த அவர், அனுவசியமான சாட்சிகளை விசாரித்து வீண்பொழுது போக்கமாட்டார். ஆகையால் தாங்கள் சற்று நேரம் பொறுமையுடன் இருங்கள். சாமராஜரவர்களே! மேல் நடத்துங்கள்" என்றதும், மறுபடியும் விசாரணை ஆரம்பமாயிற்று. போலீஸ் கமிஷனர் சாட்சியாகக் கூப்பிடப்பட்டார். அவரைச் சாமராஜன் பின்வருமாறு கேட்டார்.

சாமராஜன்:— ஐயா! தங்களுக்கு இந்தச் சிரமம் கொடுக்கும்படி நேர்ந்ததற்காக மிகவும் வருந்துகிறேன். ஆயினும் ஒருயிரைக் காத்தல் பரோபகார குணமாகும். அத்தகைய ஜீவகாருண்யம் படைத்தத் தங்களுக்கு இது ஓர் கஷ்டமாகத் தோன்றாது. ஆகையால் நான் கேட்கும் சில விஷயங்களைத் தயவுசெய்து தெரிவித்துவிடுங்கள். இக்கைதிக்கு ஏதேனும் தந்தி கொடுத்திருக்கிறீர்களா?

போலீஸ் கமிஷனர்:— இக்கைதியை நான் இதற்கு முன் கண்டதுமில்லை; இவனைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. ஆகையால் நான் இவனுக்கு எப்படித் தந்தி கொடுத்திருக்க முடியுமென்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நான் எத்தகைய தந்தியும் இவனுக்குக் கொடுத்ததில்லை.

சாம:— ஆயினும் தங்களுடைய குமாஸ்தா ஷண்முகமென்பவன், இக்கைதிக்குத் தந்திக் கொடுத்ததாகத் தெரிகிறதே. அதைப் பற்றித் தாங்களென்ன நினைக்கிறீர்கள்?

கமிஷனர்:— ஐயா! தங்களுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்பதே தெரியவில்லை. இந்த ஷண்முகமென்பவன், சில விஷயங்களில் திருப்திகரமானவனல்லன் என்று மட்டும் எனக்குத் தெரியுமே யல்லாது, இவன் இப்படி அபாண்டமாகப் புளுகக் கூடியவன் என்று நான் இந்த நிமிஷம் வரைச் சந்தேகிக்கவில்லை.

சாம:— அது போகட்டும்; இக்கைதிக்குக் கொடுக்கப்பட்ட தந்தியின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்து, அதிலுள்ளக் கையெழுத்தை யாருடையதென்றுச் சொல்ல முடியுமானால் தயவு செய்துத் தெரிவித்துவிடுங்கள்.—என்றார். உடனே கோர்ட்டாரிடம் ஆஜர் செய்யப்பட்டிருந்தத் தந்தி, கமிஷனருடைய பார்வைக்கு அனுப்பப்பட்டது. அவர் அதை அதிக உன்னிப்பாய்ப் பார்த்தார். அவருக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே யில்லை. அவர் அதைக் கோர்ட்டாரிடம் கொடுத்துவிட்டு "இந்தக் கையெழுத்தை நோக்கினால், வேண்டுமென்றே சிரமப்பட்டு மாற்றி யெழுத முயன்றதாகத் தெரிகிறது. ஆயினும் இது யாருடைய கையெழுத்தென்று சொல்ல முடியும்?" என்றதும் கோர்ட்டார் அவரை நோக்கி, "அப்படியானால் தயவுசெய்து இதைத் தாங்களனுப்பியதுபோல் பாசாங்கு செய்து, அனுப்பியது யாரென்றுத் தெரிவியுங்கள்" என்றார்.

கமிஷனர்:— இதை அனுப்பியவரும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரே. அவர் என் இப்படி மாறாட்டம் செய்து, நானனுப்பியதுபோல் அனுப்ப வேண்டுமோ தெரியவில்லை. மேலும், இதில் குறித்திருக்கும் விஷயமும், அதிக வியப்பெய்தற்குரியதே. இதை அனுப்பியவரை அறிய நீங்களெல்லோரும் அதிக ஆவல்கொண்டிருக்கிறீர்களென்று தெரிகிறது. ஆகையால் அவர் யாரென்று தெரிவித்துவிடுகிறேன். இந்தத் தந்தியை அனுப்பியவர், நுங்கம்பாக்கம் இன்ஸ்பெக்டரான ஸ்ரீராமுலு நாயுடுதான்.

இதைக் கேட்டதும் யாவருடைய வாயும் ஆச்சரியத்தால் பிளந்தது. மறுபடியும் சாமராஜன், கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டிருந்த இன்ஸ்பெக்டருடைய ரிபோர்ட்டை வாங்கி, அதையும், அந்தத் தந்தியையும் ஒத்திட்டுப் பார்க்கச் சொன்னார். அவர் அதை ஒத்திட்டுப் பார்த்து, ஸ்திரமாக அந்தத் தந்தியிலுள்ள கையெழுத்து

ஸ்ரீராமுலு நாயுடுவின் கையெழுத்தே யென்று தீர்மானமாய்ச் சொன்னர்.

அப்போது இன்ஸ்பெக்டரிருந்த இடத்தில் நோக்க அவரைக் காணேம். அவர் எழுந்து மெதுவாக வெளியே, காரியமாகப் போவதைப்போலும், இதுகாறும் கோர்ட்டில் நிகழ்ந்துவருவதைக் கவனிக்காதவர் போலவும் நழுவிக்கொண்டிருந்தார். இதைக் கண்ட சாமராஜன் கோர்ட்டாரை நோக்கி, "கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! நான், நமது நண்பர் ஸ்ரீராமுலு நாயுடு கடைசி வரையில் இங்கிருப்பாரென்றும், அதன் பிறகு சாவதானமாய்ப் பார்த்துக் கொள்ளலாமென்றும் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனல், அவர் மெதுவாக வெளியே நழுவிவிடப் பார்ப்பதைப்போல் தோன்றுகிறது. ஆகையால் நான் கட்டாயம் இப்போதே சொல்லித் தீர வேண்டியிருக்கிறது. இவரை வாரன்ட்டில் பிடிக்கும்படி பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் உத்திரவு செய்திருக்கிறர். அந்த உத்திரவை நிறைவேற்ற, நமது துப்பறியும் சாமியாரே, உத்திரவுடன் வந்திருக்கிறர். ஆகையால் உங்களுக்கு எதிரிலேயே அவரை வாரன்ட்டில் பிடிப்பதைப் பற்றி ஆயாஸப்படாமலிருக்கக் கோருகிறேன்" என்று சொல்லி முடித்தாரோ இல்லையோ, இன்ஸ்பெக்டரைச் சாமியார் போய்ப் பிடித்துக்கொண்டார். இன்ஸ்பெக்டர் கைகளில் விலங்கிடப்பட்டு, கைதி கூண்டிற்கருகில் நிற்கவைத்து, ஓடிவிடாமல் பார்த்துக் கொள்வதற்காகப் பாரா வைக்கப்பட்டது. மறுபடியும் விசாரணை ஆரம்பமாயிற்று.

கோர்ட்டார்:— வக்கீல் சாமராஜன் அவர்களே! எந்தக் குற்றத்திற்காக இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு இப்போது கைது செய்யப்பட்டாரென்று தயவுசெய்து தெரிவியுங்கள்.

சாம:— கோபாலகிருஷ்ணய்யரைக் கொன்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறர்.

கோர்ட்:— ஆ! அப்படியா? இவரா கோபாலகிருஷ்ணய்யரைக் கொன்றவர்? அப்படியானல், தக்க ருஜுக்களில்லாமல் வாரன்ட் பிறப்பிக்கப்பட்டிராது மேலும் கேஸை நடத்துங்கள் இன்னும் எவ்வளவு மர்மங்கள் வெளியாகின்றன பார்ப்போம்.

சாம:— இது ஒரு அதிசயமான கேஸ். இன்னும் எவ்வளவோ மர்மங்கள் வெளியாகப்போகின்றன. (குமாஸ்தாவைப் பார்த்து) சாட்சி ராமதாஸைக் கூப்பிடு—என்ருர் ராமதாஸும் கூப்பிடப் பட்டு சாட்சிக் கூண்டில் நின்ருர்.

சாம:— உமக்கு இந்த இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவைப் பற்றி என்னென்னத் தெரியுமோ, அதையெல்லாம் சொல்லும்.

ராமதாஸ்:— இந்த ஸ்ரீராமுலு நாயுடுவை இதற்குமுன் எப்போதும் தெரியாது. சில தினங்களுக்குமுன் துப்பறியும் ஞானனந்த சாமியார் என்னை மோட்டாரில் அழைத்துக்கொண்டு சென்ருர். நானும், சாமியாரும் நுங்கம்பாக்கத்திலுள்ள இவருடைய பங்களாவின் மேன்மாடிக்கு, ஒரு ஜலதாரைக் குழாவைப் பற்றிக் கொண்டு ஏறிச் சென்றேம். அங்கு ஒரு அரையில் இவர் ஏதோ ஒரு கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது சாமியாரின் உத்திரவுப்படி அவர் பார்த்திருந்த காகிதத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் நன்ருய்ப் புலப்படும்படிப் போட்டோ எடுத்தேன். பிறகு இன்ஸ்பெக்டரும், நான்கு ஆட்களும் பெரிய மோட்டாரில் சென்றனர். நாங்களும் பின்பற்றினேம். (ஆரும் அத்தியாயத்தில் நிகழ்ந்தவைகளை விவரித்துவிட்டு) இவ்வளவே. இவர்கள் அந்த வாயிற்காப்போனை என்ன செய்தார்களென்று எனக்கு ஒன்றும் தெரியாது—என்ருன். அப்போது ஞானனந்த சாமியாருக்கு மோட்டார் ஓட்டியவனும் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அவனும் ராமதாஸ் சொன்னதை யனுசரித்தே சொன்னன். இதையெல்லாம் கவனித்தக் கோர்ட்டார், சாமராஜனை நோக்கி, "தாங்கள் தயவு செய்து இதையெல்லாம் கண்டுபிடித்ததாகச் சொல்லும் ஞானனந்த சாமியாரை ஒரு சாட்சியாக விசாரியுங்கள். எல்லாம் நன்ருய் விளங்கிப்போம்" என்ருர்கள்.

சாம:— தங்களுடைய உத்திரவுப்படி நடந்துக்கொள்ள ஒரு தடையுமில்லை. சாமியாரைப் பார்த்து, "தாங்கள் தயவுசெய்து ஒரு சாட்சியாக வந்தால் நலமுண்டாகு மென்றும், கேஸ் சீக்கிரம் முடியுமென்றும் நம்புகிறேன்" என்றதும் சாமியார் சாட்சிக் கூண்டில் நின்று கோர்ட்டாரை நோக்கி, "நானே இங்கு நமது ஸ்ரீராமுலு

நாயுடுவிற்கு விரோதமாக சாட்சி சொல்ல நேர்ந்ததைப்பற்றி மிகவும் வருந்துகிறேன். ஆனாலும் நீதிக்காகப் பாடுபடும் எவனும் செய்ய வேண்டிய காரியத்தையே நானும் செய்கிறேன். இன்ஸ்பெக்டர் அன்று கொலை நடந்த அரையிலிருந்தபோது என்னிடம் பலமாக வாக்குவாதம் செய்து கூறுரை மொழிந்தது, அதிக ஆச்சரியத்தை விளைவித்தது. ஆகையால் இக்கேஸில் எப்படியும் முயன்றுத் துப் புத் துலக்கத் தீர்மானித்துவிட்டேன். ஆகவே அன்றிரவு இன்ஸ் பெக்டர் சென்ற அரைமணி நேரத்திற்குள், கொலையுண்ட அரையில் ஸ்ரீலோலனோடு சென்று சோதித்ததில், அவ்வரையின் சுவரை மறைக்கும் வண்ணம் வைத்திருந்த பீரோக்களில், ஒரு பீரோ வேண்டுமென்றே செய்யப்பட்டிருந்த **இரகசியக் கதவு** என்று கண்டுபிடித்து அதனுள் பிரவேசித்தேன். அது தரை மட்டத்திற்குச் சுமார் ஐம்பதடி ஆழத்தில் செல்லும் சுரங்க வழியாயிருந்தது. அது சுமார் அரை மைல் நீளமுள்ளது. அந்தச் சுரங்க வழி, ஸ்ரீராமுலு நாயுடுவின் பங்களாத் தோட்டத்தின் ஒரு மூலையில் சென்று முடி கிறது. ஆகையால் எனக்கு இன்ஸ்பெக்டர்மேல் சந்தேகம் தோன்றி யது. தோட்டத்தில் முடியும் சுரங்கப் பாதை வெளியிலிருப்போருக் குப் புலப்படாவண்ணம் அந்த இரகசிய வழியின் வாசலின்மேல் ஒரு குடிசை போடப்பட்டிருந்தது. அது எப்போதும் மூடிப் பூட் டிடப்பட்டு, அதன் திறவுகோல் இன்ஸ்பெக்டரிடமே இருக்கிற தென்றும், அதை ஒரு விநாடி நேரங்கூட கைசோரவிடுவதில்லையென் றும் பிறகு விசாரித்ததில் தெரிந்தது. நான் அச்சுரங்கத்தின் மறு வாசலை யடைந்ததும், அந்தக் குடிசையைச் சோதித்தேன். அங்கே ஒரு வெண்மையான வஸ்துவைக் (87-ம் பக்கம் பார்க்கவும்) கண் டெடுத்தேன். **அது ஒரு கடிதம்.** அக்கடிதத்தைக் கொண்டுவந்து சோதித்ததில், அக்கடிதம் இன்ஸ்பெக்டருடைய மைத்துனரான கோவிந்தராஜுலு நாயுடு (கோபாலகிருஷ்ணய்யருடைய காரியஸ்தர்) எழுதியதென்றுத் தெரிந்தது. அந்தக் கடிதம் இதோ இருக்கின் றது. படிக்கிறேன் கேளுங்கள்.

**கடிதம்.**

மைத்துனர் இன்ஸ்பெக்டர் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு, அடியேன் கோவிந்தராஜுலு அதிக வணக்கமாக விண்ணப்பித்துக்கொள்வது. நான்

தங்களை நேரில் காண முடியவில்லை யாகையால், இந்த இரகசிய விஷயத்தை எழுதி நமது அந்தரங்க ஆளான ஷண்முகத்திடம் கொடுத்தனுப்புகிறேன். அதைப்பற்றி மன்னிக்கவும். நான் தங்களிடம் நேரில் அநேகந்தரம் சொல்லிய போக்கிஷத்தைப் பற்றி ஞாபகமிருக்கலாம். அந்தப் பொக்கிஷத்தை யடைய அதன் திறவுகோலையும், விளக்க வுரையையும் வைத்துக்கொண்டிருந்தால்தான் அதைக் கைப்பற்ற முடியும். இது தெரியாமல் நான் அதன் திறவு கோலை கோபாலகிருஷ்ணய்யர் உத்திரவுப்படி எனுத்தூரிலுள்ள ஸ்ரீலோலனுடைய தமக்கைக்கு அனுப்பிவிட்டேன். அதன் விளக்க வுரையே இப்போது இவரிடமிருப்பது. இதைக்கொண்டே பொக்கிஷத்தை யடைய முடியும். அப்படி முடியாவிட்டாலும், அக்கரையில்லை. இன்னொரு பெருத்த வரும்படி யிருக்கிறது. இன்று எஜமானருக்கு மடத்தின் பணமான ஐந்து கோடி ரூபாய் வந்திருக்கிறது. அதை அவர் இரும்புப் பெட்டியிலேயே வைத்திருக்கிறார். அதை இன்றிரவே தாங்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து அபகரித்துக்கொள்ள வேண்டும். முடியாவிட்டால் ஆளையே பைசல் செய்ய வேண்டியதுதான். ஏனெனில் அப்பணம் நாளை பாங்கிக்கு அனுப்பப்படும். இன்னொரு விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது. ஸ்ரீலோலனுடைய தமக்கைப் புருஷனுன இராமசுப்பன் இன்றிரவு 8-மணிக்கு வரப்போகிறுனும். அவன் இரவு நெடுநேரம் கழித்து வரும்படி நமது நண்பனுன குமாரசாமி நாடாரைக்கொண்டு ஏற்பாடு செய்துவிடுங்கள். எல்லாம் தெரிந்தவரான தங்களுக்கு, நான் யோசனை சொல்லித்தரத் தேவையில்லை. சமயோசிதம்போல் நடந்துக்கொள்ள வேண்டும்.

இப்படிக்கு,

கோவிந்தராஜுலு நாயுடு,

காரியஸ்தன்.

என்றெழுதியிருந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபின் கோர்ட்டாரிடம் கொடுத்துவிட்டார். மறுபடியும் பின்வருமாறு பேசினுர்.

இக்கடிதத்தைக் கண்டெடுத்தப்பின் எனக்கு இன்னுர்தான் கொலை செய்திருக்கவேண்டுமென்று புலப்பட்டுவிட்டது. அன்றிரவு இன்ஸ்பெக்டருடைய பங்களாவையே வட்டமிட்டுக்கொண்டிருந்தேன். ஒன்றும் நடைபெறவில்லை. மறுநாள் நானும் ராமதாஸும் அவருடைய பங்களாவின் மேன்மாடிக்குச் சென்று ராமதாஸ் கூறியபடி, இன்ஸ்பெக்டர் பார்த்திருந்த கடிதத்தைப் போடோ பிடித்தேன்; அந்தக் கடிதத்திலிருந்தவை அப்படியே படத்தில் விழுந்

திருக்கிறது. அதை இதோ கொண்டுவந்திருக்கிறேன். அதில் பின் வருமாறு வரைந்திருந்தது.

## அரிய பொருள்.

கண்மணி! ஸ்ரீலோலா!

நீ இந்தக் கடிதத்திலுள்ள அரிய பொருளை அடையும்போது என் சவம் புதைக்கப்பட்ட விடம் புற்புதர்களால் மறைக்கப்பட்டிருக்குமென்பது திண்ணம். என்னை நினைத்து வருந்துதலொழித்து, நான் இங்கு சொல்கிறப் பிரகாரம் நடந்துக்கொண்டு அதனுல் வரும் தொகையைச் சமபாகமாகப் பிரித்து, நீ யொரு பாகமும், உனது தமக்கையொரு பாகமுமாக எடுத்துக்கொள்ளுங்கள். இனி நான் குறிக்கும் நிதியைப்பற்றிக் கூறுகிறேன். உனது தமக்கைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புகைப்படத்தில் காணப்படும் பங்களா திருவொற்றியூரிலிருக்கிறது. அது எனது சொந்தப் பங்களாவே. அதனுடைய தோட்டத்தில் ஓர் பிரம்மாண்டமான அரசமரமிருக்கிறது. அதன் முதற்கிளையின் முனையிலிருந்து ஒரு கல் கட்டப்பட்டக் கயிற்றை விட்டு அது தரையில் படும் இடத்தில் நான்கடி சதுரத்திற்குக் குழி தோண்டினுல், ஒரு தங்கப் பெட்டி கிடைக்கும். அதை பீரங்கிக்கொண்டு உடைக்கப் பார்த்தாலும் சற்றும் சாத்யமாகாது. ஆகையால் அதை எந்த விதத்திலும் திறக்க முயலாமல் உனது தமக்கை மஹலட்சுமியிடமிருக்கும் "திறவுகோல்" என்ற பதம் செதுக்கப்பட்டிருக்கும் வைர மோதிரத்தைக் கொண்டே திறக்கவேண்டும். மற்றபடி அந்தப் பொக்கிஷத்தைத் திறக்க வியலாது.

## பெட்டியைத் திறக்கும் முறை.

மோதிரத்தில் செதுக்கப்பட்டுள்ள "திறவு கோல்" என்ற பதத்தின் "வ்" என்ற மெய்யெழுத்தை அழுத்தினுல், முன்புறமுள்ள பெரிய வைரம் கால் அங்குலம் மேற்கிளம்பி வரும். அந்த வைரத்தை அத்தங்கப் பெட்டியிலுள்ள பூட்டின் துவாரத்தில் விட்டுத் திறந்தால் திறக்கும்.

கண்மணி! ஸ்ரீலோலா! உன்னையும், உனது தமக்கையையும் இருகண்களென வெண்ணி வந்தேன். ஆனுல் உங்களுடைய பருவக் காலத்தைக் கண்டானந்திக்கக் கூடாத பாவியானேன். என்ன செய்யலாம்? என்னுடைய ஆயுள் குறுகிவிட்டது. சென்றது சென்றுவிட்டது. இனியும் நீங்களிருவரும் ஒற்றுமைப்பட்டு நான் உங்களுக் களிக்கும் நமது மூதாதைகளின் இந்த அரும் நிதியை அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றக் கோரும்,

உனது தந்தை,

சாமிநாத சாஸ்திரி.

இதையும் சாமியார் கோர்ட்டாரிடம் அனுப்பிவிட்டு, மேலும் பேசத் துவக்கினர்.

சாமியார்:— இன்ஸ்பெக்டர் இந்தக் காகிதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, படம் பிடித்தானவுடன், ராமதாஸ் சொல்லியபடி பின்பற்றிச் சென்று அவர் பொக்கிஷத்தை அபகரித்தது வரையில் படம் பிடித்திருக்கிறேன்.—என்று கூறிக்கொண்டே அப்பிரதிகளையெல்லாம் கோர்ட்டாரிடம் அனுப்பிவைத்தார். கோர்ட்டார் ரிகார்ட்டுகள் மூலமாய், சந்தேகம் சிறிதும் தோன்றாவிதம் ருஜூப்படுத்தியதைக் கண்டுப் பெரிதும் அவரது சாமர்த்தியத்தைப் பாராட்டினர். ஜட்ஜ் துரையவர்கள் சாமியாரை நோக்கி, "தாங்கள் நமக்குள்ள சில சந்தேகங்களையும் தயவுசெய்து தெரிவித்துவிடுங்கள். இன்ஸ்பெக்டர் இந்தத் தந்தியை என் அனுப்பினர்? இராமசுப்பனைக் காப்பாற்றினவர் யார்? அவர் என் வாவில்லை?" என்றார். அதற்குச் சாமியார், "இன்ஸ்பெக்டர் முன்கூட்டி யோசித்துத் தீர்மானித்தபடித் தந்திகொடுத்தார். தந்தியின்படி இராமசுப்பன் வந்தால், அவனை ஏதாவது தந்திரம் செய்து சிறைப்பிடித்துக் கொண்டு கொலை நடந்தபின் அவனைக் கோபாலகிருஷ்ணய்யரைக் காணும்படி அனுப்பிவிட்டால், அவன்மேல் சந்தேகம் வருமென்று தீர்மானித்திருக்கிறார். இதற்குள் அவர் சற்றும் எதிர்ப்பாரா விதமாய்க் கொலை நடந்த இரவே வருவதாகத் தெரிந்தகால், குமாரசாமி நாடானை வைத்து அவனைச் சிறை பிடிக்கச் செய்தார். ஆனல் துரதிர்ஷ்டவசமாக எனது நண்பரொருவர் அவ்வழியே வர நேர்ந்தது. அன்று வந்த நண்பர் எனது சீடரென்றே சொல்லவேண்டும். அவரை மறுநாளுதயத்தில் டில்லிக்கு நானே அனுப்பிவைத்தேனுகையால், அவர் இங்கு வந்து சாட்சி சொல்ல வியலாமற் போயிற்று." என்று கூறினர். பிறகு ஜட்ஜ் துரையவர்கள், சாமியார் இன்ஸ்பெக்டருக்கு விரோதமாகக் கொண்டுவந்த சாட்சியங்களையெல்லாம் பரிசோதித்து ஜூரார்களிடம் அனுப்பிவைத்தார். ஜூரார்கள் வழக்கம் போல் ஆலோசனை செய்துத் தீர்ப்பளித்தார்கள். இராமசுப்பன் நிரபராதியாயிருந்தும் சந்தர்ப்ப சாட்சியங்களால் சிக்குண்டு இதுகாறும் காவலிலிருந்ததற்காக வருந்துவதாகவும், இனியும் இராமசுப்பன் அரைக்ஷணமும் கைதிக் கூண்டில் நிற்பது அனுவசியமென்றும்,

இந்த நிமிஷமுதல் தமது மனமார்ந்த அனுதாபத்துடன் இராமசுப் பனை விடுதலை செய்திருப்பதாகவும், அவன் எவ்விதத்திலும் குற்ற மற்றவனென்று தாம் சொல்லும்படி நேர்ந்ததற்காகச் சந்தோஷப் படுவதாகவும் சொல்லி, இராமசுப்பனுக்கு விடுதலையளித்தார். பிறகு இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவே கொன்ருரென்று ருஜுவாகி விட்டதால் அவருக்குத் தூக்கு தண்டனையும், அவருக்கு உதவியா யிருந்த அவருடைய மைத்துனரான கோவிந்தராஜுலு நாயுடுவுக்குப் பத்து வருஷம் கடினக் காவல் தண்டனையும், இவர்களிருவருக்கும் தூதாளாகவிருந்த ஷண்முகமென்பவனுக்கு மூன்று வருஷம் கடினக் காவல் தண்டனையும் விதித்தார். இன்னும் இக்கேஸில் சம்மந்தப் பட்டிருப்பவனும், பல வழிப்பறிக் கொள்ளையடித்தவனுமானக் குமாரசாமி நாடானைப் பிடித்துத் தண்டிக்கத் தீர்மானித் திருப்பதாக வும், அதற்காகக் கவர்மென்டார் அவனைப் பிடித்துக்கொடுப்பதற் காகப் பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுக்கத் தீர்மானித்திருக்கிருர் களென்றும், அவனையும் துப்பறியும் ஞானனந்த சாமியார் பிடித்துக் கொடுக்க முயலவேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

இதைக் கேட்டச் சாமியார் எழுந்து, குமாரசாமி நாடானும், அவனுடன் சேர்ந்த பல கள்ளர்களும் தயாராகக் கைது செய்யப் பட்டு வெளியே காத்துக்கொண்டிருக்கிருர்களென்றும், அவர்களுக் கும் (உடனே விசாரிக்கப்பட்டு) தண்டனை விதிக்கலாமென்றும் சொன்னர். சாமியாரினிஷ்டப்படிக் குமாரசாமி நாடானும், அவ னுடையத் தோழர்களும் விசாரிக்கப்பட்டனர். சாமியார் சேகரித் திருந்த பலமான சாட்சியங்களால், குமாரசாமி நாடான் குற்றங் களும், அவனுக்கு உதவியாயிருந்தவர்களின் குற்றங்களும் பூரண மாக ருஜுவாகிவிட்டன. அவர்களுக்குப் பின்வருமாறு ஜட்ஜ் துரையவர்கள் தீர்ப்பளித்தார்.

குமாரசாமி நாடான், இந்தியன் பினல் கோட்டிலுள்ள சகல விதமான குற்றமும் செய்திருப்பதாகத் தெளிவாக ருஜுவாகிவிட்ட தால், அவனுக்கு மாரண தண்டனை விதிக்கிருேம்.

அவனுடைய தோழர்களான மூவருக்கும், மும்மூன்று வருஷம் கடினக் காவல் தண்டனை யளிக்கிருேம்.

தாசி மோகனாவின் தமயன் முனிசாமி, குமாரசாமி நாடானிடம் நெருங்கிய சம்மந்தம் வைத்திருந்ததாகவும், அவன் அக்கிரமமாய் ஆட்களை சிறை செய்யுரா துர் எண்ணத்திற்கு உடன்படும்படி கட்டா யப்படுத்தியதாகவும் வெளியானதால், அவனைப் பத்தாண்டு தீவாந் திரத்திற்கு அனுப்பிவைக்கிறோம்.

தாசி ராஜலட்சுமி, குமாரசாமி நாடானுக்கு மந்திரி போன்று எல்லாக் காரியங்களையும் நடத்தி வந்ததால், அவளுக்கு ஆயுட் பரி யந்தம் தீவாந்தர வாசம் தருகிறோம்.

மற்றும் இதில் கொஞ்ச நஞ்சம் சந்தேக முள்ளவர்களையெல் லாம் இந்தத் தரம் எச்சரித்து மன்னித்துவிடுகிறோம். அவர்களெல் லாம் இனியேனும் நல்வழியில் நடப்பார்களாக.

இக்கேஸில் முக்கியமாகச் சம்மந்தப்பட்டுள்ள அப்பொக்கிஷத் தையும், ஐந்து கோடி ரூபாயையும் அதனுடைய சொந்தக்காரர்க ளிடம் சேர்ப்பித்துவிடும்படி ஞானனந்த சாமியாரை வேண்டிக் கொள்வதுடன், அவருக்கு நாம் வாக்களித்தப் பத்தாயிரம் ரூபாய்ப் பரிசையும், நாமே நமது கையால் கொடுக்கும்படி நேர்ந்ததற்கு அதிக சந்தோஷப் படுகிறோம்.—என்று சொல்லி, ஒரு உண்டியலைச் சாமியாரிடம் கொடுத்தார். அதை அவர் அதிக வணக்கத்துடன் ஏற்றுக்கொண்டார். உடனே கோர்ட்டும் கலைந்தது. கைதிகளெல் லாம் கொண்டுபோகப்பட்டனர். குற்றவாளிகளுக்குத் தண்டனை நிறைவேற்றவேண்டிய தினத்தில் எல்லாம் யாதொரு தடங்கலு மின்றி நடந்தது. சாமியார் இன்ஸ்பெக்டருடைய பங்களா, தோட் டம் முதலியவைகளைச் சோதித்து, தோட்டத்திலிருந்த ஒரு கிணற்றி லிருந்துத் தங்கப் பெட்டியைக் கண்டெடுத்தார். ஐந்து கோடி ரூபாயையும் கண்டுபிடித்துக் கும்பகோணம் மதங்கீஸ்வரர் கோயி லுக்கு அனுப்பிவைத்தார். அவர் அந்தத் தங்கப் பெட்டியை எடுத் துக்கொண்டு ஸ்ரீலோலன் பங்களாவை நெருங்கினார். அப்போது அப்பங்களாவில் ஸ்ரீலோலன், கோவிந்தன், இராமசுப்பன், மஹலட் சுமி, அவளுடைய மாமியாராகிய சுப்புலட்சுமி, சாவித்திரிதேவி முத லிய எல்லோரும் இருந்தனர். சாமியார் அங்கு சென்றவுடன், அவர்களெல்லோரும் அதிக அன்புடன் வரவேற்றனர். அவர், அவர்

களுக் கெதிரிலேயே, திறக்கவேண்டிய முறைப்படி பெட்டியைத் திறந்தார். அதன் உட்புறத்தில் ஒரு பட்டுப் போர்வை உள்ளிருந்த வஸ்துவை மறைத்துக்கொண்டிருந்தது. அப் போர்வையின்மேல் "மூன்று லட்சம் சவரன்கள்" என்று வரைந்திருந்தது. எல்லோரும் வியப்பெய்தினர். சாமியார் அதைச் சரிபாகமாகப் பங்கிட்டு, ஸ்ரீலோலனுக்கு ஒரு பங்கையும், மஹலட்சுமிக்கு இன்னொரு பங்கையும் கொடுத்துவிட்டார். மஹலட்சுமி, அதைத் தன் நாதனிடம் அப்படியே ஒப்படைத்துவிட்டு, அதை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடி வேண்டிக்கொண்டாள். அப்போதே தபால் மூலமாய் க. அ. து. ரங்கைய செட்டியின் கடன் மொத்தமும் அனுப்பப்பட்டது. இதுகளெல்லாம் ஆனவுடன், எல்லோரும் ஓரிடத்திலமர்ந்தனர். எல்லோர் முகத்திலும் சந்தோஷம் தாண்டவமாடியது. ஆனால் ஒரு முகம் மட்டும் சோர்வுற்றிருந்தது. அது யார்? சாவித்திரிதேவியே. இதை யுணர்ந்துக்கொண்ட சாமியார் சாவித்திரி தேவியை நோக்கி, "அம்மா! உன் முகம் சோர்வுற்றிருப்பதின் காரணம் எனக்கு நன்றாய்த் தெரியும். நீ தாய் தந்தையற்று அநாதியாயிருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கிறாய். அது தவறு. உன்னைவிட உயர்ந்த பணம் படைத்த தனிகன் எவனும் இல்லை. உனக்காக **மூன்று கோடி சவரன்கள்** காத்துக்கொண்டிருக்கின்றன. நீ டில்லியில் கோடீஸ்வரராக வாழ்ந்து வந்த **திவான்பகதூர் நாராயணசாமி முதலியாரின்** ஏக புத்திரி. உன்னை ஈன்றவரை அறிய விரும்புவாய். ஆனால் அப்பாவி இதுகாறும் உன்னைக் கவனிக்காமலிருந்தானென்று கோபங்கொள்ளாதே. உன்னைக் கண்டுபிடிக்கவே இந்தச் சாமியார் கோலத்துடன் திரிந்துக்கொண்டிருந்து கடைசியாகக் கண்டுபிடித்தேன்" என்றார். ஞானானந்த சாமியார் என்பவரே தனது தந்தையான நாராயணசாமி முதலியார் என்று தெரிந்துக்கொண்ட சாவித்திரி, தாங்க முடியாத களிவெறி கொண்டு, "ஆ! தந்தையே!" என்று தாவிப்போய் கட்டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டாள். இவர்களுடைய சந்தோஷ நிலைமை தணியச் சிறிது நேரம் சென்றது. இவர்களிருவரும் அமைதியடைந்தவுடன், ஸ்ரீலோலன் சாமியாரை நோக்கி, "தாங்கள் எனக்கியற்றியிருக்கும் நன்மைகள் கொஞ்சமல்ல. அதிலும், தாங்கள் கோடீஸ்வரர். அப்படிக் கில்லாவிட்டாலும், கேவலம் பணத்தைத் தாங்கள் விரும்பமாட்டீர்

கள். ஆகையால் ஏதாவது ஒரு அற்ப உதவியேனும் என்னிடம் பெற்றுக்கொண்டால்தான் எனக்கு மன நிம்மதியுண்டாகும்" என்ருன். இதைக் கேட்ட சாமியார் சிரித்துக்கொண்டே, "ஸ்ரீலோலா! நான் உன்னிடம் ஒரு வரம் கேட்க விருந்தேன். இப்போது நீயே வலியத் தருவதாகச் சொல்கிருய். நீ முன்னம் சாவித்திரிக்கு வாக் களித்தபடி, அவளையே கலியாணம் செய்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்" என்ருர். இதைக் கேட்டதும் சாவித்திரியும், ஸ்ரீலோலனும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். ஆஹா! அப்போது அவர்கள் எவ்வளவு சமாச்சாரங்களைக் கண்களின் மூல மாகவே பேசிக்கொண்டார்கள்.

> கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
> ளென்ன பயனு மில.

என்பதைப்போல், அச்சமயம் நிகழ்ந்த அரிய சம்பவம் அதிக நேரம் நீடித்து நிற்கவில்லை. அடுத்த விநாடி சாவித்திரி நாணத்தால் தலை கவிழ்ந்தாள். ஸ்ரீலோலன் சாமியாரிடம் பேசத் துவக்கினன்.

ஸ்ரீலோலன்:— சுவாமிகளே! தாங்கள் எதற்காக இந்தக் கேள்வி கேட்க நேர்ந்ததென்பதை யறிவேன். நான் ஒரு பிராம் மணனென்றும், தாங்கள் ஒரு முதலியார் என்றும், ஜாதிபேதம் தலை சிறந்து விளங்கும் இக்காலத்தில் இவ்விரு ஜாதியாரும் எப்படி சம்மந் தம் செய்துக்கொள்வதென்றும், இதற்கு நான் சம்மதிக்கமாட்டே னென்று மெண்ணியே என்னை வரம் வேண்டினீர்கள். தாங்கள் அப் படி நினைத்தது தவறு. நான் நமது சாவித்திரி, தாசியின் மகளென வெண்ணியிருந்தபோதே, அவளுடைய வாக்கு வன்மையும், குண விசேஷத்தையும், அழகையும், எல்லாவற்றையும் விட, கற்பின் உறுதி யையும் மதித்து மணக்கத் தீர்மானித்து, வாக்கும் கொடுத்துவிட் டேன். இப்போதோ அவள், ஒரு பெரிய கோடீஸ்வர முதலியா ரின் மகளென வெளியாயிற்று. தாசியின் மகளென்றபோதே மணக்க முழுமனதுடன் சம்மதித்தே னென்ருல், இப்போது இரட் டிப்புச் சந்தோஷத்தோடு சம்மதிக்கிறேன். நான் மட்டும் இப்படி நடந்துக்கொள்ளவில்லை. உலகில் எத்தனையோ இப்படிப்பட்ட திரு மணங்கள் நடைபெறுவது சகஜமாய்விட்டது. முதலியார் ஜாதியைச் சேர்ந்த ஒரு கலெக்டருடைய மகளை, ஒரு அய்யங்கார் கலியாணம் செய்துக்கொள்ளவில்லையா? இதனல் அந்த அய்யங்காரை, மூடப்

பிராம்மணர் ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட்டனராம். என்ன மதி யீனம்! அந்த அய்யங்காரை, இந்த அற்ப அறிவு படைத்த பிராம் மணர் விலக்கினரா? அல்லது பேரறிவு பெற்று, பிரஜாதியில் சம்மந் தம் செய்துக்கொண்ட அய்யங்கார், "இவர்கள் ஒன்றுக்கு முதவா மாமிஸப் பிண்டங்கள். வரதட்சணை வாங்கும் கயவர்கள். கலி யாணத்திற்கு வரதட்சணையென்றும், சாந்திக்கு வரதட்சணையென் றும் பெண் வீட்டாரைப் பிடுங்கும் பேய்கள். இதனல் வரதட்சணை கொடுக்க முடியாத பெண்ணின் தாய் தந்தையர், படாத பாடுபட்டு, மனம் நொந்து, வேறு வழியின்றி, பெண்ணின் பிற்கால நல்வாழ் வைக் கருதிச் செல்லத் தகாத வழிகளில் சென்று பணம் சம்பாதித் துக் கொடுத்தால், அதைப் பெற்றுக்கொள்ளும் மானமில்லா ஈனர் கள். இவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, பெண் கற்பிழந்து, பணத்துடன்வந்தால் ஏற்றுக்கொள்ளும் பணப் பிசாசுகள். அப் படிக் கற்பிழந்து வரும் பெண், தன் கற்பை அநேகமாகத் தாழ்ந்த ஜாதியாரிடமே இழக்கிருள். இப்படி வரும் பெண்ணை ஏற்றுக் கொள்ளும் வரதட்சணைப் பிசாசுகளான பிராம்மண ஜாதியிலிருப் பதை விட, அவர்களிடம் யாதொரு சம்மந்தமுமில்லாமல் விலகிவிடு வதே நலம்" என்று எண்ணிப் பிராம்மணரை அவ்வையங்கார் விலக்கி விடுகிருன். ஆகையால் பிராம்மணர் அவனை விலக்கினர்களா? அல் லது அவன் அவர்களை விலக்கினனு வென்று தாங்களே யூகித்துக் கொள்ளுங்கள். சுவாமிகளே! கடைசியாக ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். அரிஹரிப் பிரம்மாதிகள் தடுத்தாலும், பிராம்மணர் கூட்டம் மொத்தமும் தடுத்தாலும், இதனல் என்ன நேர்ந்தாலும் நான் மணந்தால் சாவித்திரியையே மணப்பேன். இன்றேல் சாவேன். இது **திண்ணம்! சத்தியம்!! சத்தியம்!!!**

என்றதும் சாமியாருக்கும், சாவித்திரிக்கு முண்டான சந்தோ ஷத்திற்களவேயில்லை. கோவிந்தனும் இவ்வபிப்பிராயத்திற் கலந்தவ னகையால், இதற்குச் சம்மதித்துப் பேருவகை யெய்தினன். இதற் குச் சம்மதிக்காது முகத்தைச் சுளித்துக்கொண்டவர்கள், இராமசுப் பனும், மஹலட்சுமியுமே. மஹலட்சுமிக்கு ஸ்ரீலோலனும், இராம சுப்பனுக்குக் கோவிந்தனுமாக வேண்டிய அளவு சொல்லிக் கடைசி யில் சம்மதிக்கும்படிச் செய்தனர். அதன் பிறகு முகூர்த்த நாள் குறிப்பிடப்பட்டது. முகூர்த்தம் நிறைவேறும் வரையில் இராமசுப் பன், அவன் தாய், மஹலட்சுமி ஆகிய எல்லோரும் அங்கேயே இருக்கவேண்டுமென்றும், அதன் பிறகு திருவொற்றியூரிலுள்ள பங்களாவில் வசிப்பதென்றும் தீர்மானமாயிற்று. அதற்கு எல்லோ ரும் சம்மதித்தனர். ஞானனந்த சாமியார் என வழங்கும் நாராயண சாமி முதலியார், அதுமுதல் ஸ்ரீலோலனேடேயே இருந்துவரலானர்.

B-1
10-44

# பத்தாம் அத்தியாயம்.

## வாஸம் வீஸும் வஸந்த காலம்.

காதல ரிருவர்க் கருத் தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்.

ஸ்ரீலோலனுடைய பங்களாவைச் சுற்றிலும் பலவிதத் தருக்கள் நிறைந்த ஓர் நந்தவனம் இருந்தது. அது புஷ்பச் செடிகளோடும், பலவித நூதன அலங்காரங்களோடும் விளங்கியது. பலவித செப்பனிடப்பட்ட பாதைகள் தோட்டத்தினூடே பலவிடங்களுக்குச் செல்கின்றன. அவைகளின் இருமருங்கிலும் ஒரே மட்டமாய் வெட்டிவிடப்பட்டிருக்கும் புல் வரிசைகள், பச்சைப் பசேலென்று கண்ணைக் கவரும் விதமாய் அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய ரமணீயமான நந்தவனத்தின்கண், ரோஜா, சண்பகம், மல்லிகை, முல்லை, இருவாட்சி, பாதிரி, நந்தியாவட்டம், இன்னும் இவைபோன்ற நறுமணந் தரக்கூடிய புஷ்பங்கள் பூத்து, தோட்டமெங்கும் வாசனைப் பாவியிருந்தது. எங்கு பார்த்தாலும் குயில்கள் குலவிக் கூத்தாடின. மயில்கள் அழகிய தோகையை விரித்துத் தாண்டவமாடின. கல்லானொருவன் கற்றானைக் கண்டு, "இவனுடைய கூர்மையான மதி என்னே! நாம் எத்துணை நாள் முயன்றும் அவனைப்போல் ஒரு காரியம் செய்ய முடியவில்லையே. அவனை யெப்படியேனும் சிநேகிதம் செய்து, அவனிடமிருக்கும் சத்தைக் கிரகித்துக் கொண்டு, பிறகு துரத்திவிடுவோம்." என்று நினைக்குமாப்போல், வான்கோழிகள், தானும் உண்மையான மயிலென மருண்டு, செருக்குற்ற பெருமிதக் குணத்தால் நினைத்துக்கொண்டு, துர்க்கந்தம் வீசும் சிறகை விரித்து, நாடகக்காரர்கள், ஆண்டிருந்த அரசனுடைய

வேடம் தரிப்பதைப்போல், தானும் தோகை விரித்து மயிலைப்போல் ஆடி நடித்தன. என்னே உலக விந்தை! ஒரு மனிதனைப்போல் பிற மனிதனைக் கடவுள் படைப்பதில்லை. ஒவ்வொரு மனிதனும், வெவ் வேறு குணங்களோடேயே தோன்றுகிறான். அதற்குரிய நடக்கை களும், அதற்கு வேண்டிய புத்தி கூர்மையுமே அவன்பால் அமைகின் றன. ஒருவனுக்கு எல்லாவிதமான நற்குணமமைந்த மனைவி கிடைக் கிறாள். அப்போதும் அவனுடைய அந்தரங்க நண்பனொருவன், அதற்காகப் பொறாமைப் படுகிறான். அந்நண்பனை, நற்குண மனைவி படைத்தவன், உண்மை நேயனென வெண்ணித் தன் மனைவியிடம் அவன் சாதாரணமாய்ப் பேசச் சம்மதிக்கிறான். ஆனால் அந்நண் பன், நாளாவிர்த்தியில் அவன் மனைவியை யடைய இரகசியமாய் முயற்சி செய்கிறான். பல தந்திரங்கள் கையாளப்படுகின்றன. அந்த உத்தம மனைவி உறுதியான மனமுடையவளாயின், அவன் ஜபம் சாயாமற்போக, அவனுடைய இழிதற்குரிய செய்கை வெளிப் பட்டு, பலர் அவன் முகத்தில் காரியுமிழவும் நேருகிறது. நிற்க.

ஆகாயத்தில் மேகங்கள் சஞ்சரித்துக்கொண் டிருக்கின்றன. மாலை நேரம் மஞ்ச வெய்யில் நன்றாய்ப் பார்ப்போர்க்குப் புலப்பட வில்லை. மேற்றிசையில் செவ்வானம் படர்ந்து, தாம்பரம்போல் மின்னிப் பிரகாசித்தது, இச்சமயத்தில் ஸ்ரீலோலனுடைய பங்களாத் தோட்டத்தின் பின் வாயிற்கதவு திறக்கப்பட்டதும் இருவர் கை கோர்த்துக்கொண்டும், ஒருவரை யொருவர் அன்புடன் பார்த்துப் புன்னகை புரிந்துக்கொண்டும், பின் வாயிற்படிகளின் வழியாக இறங்கித் தோட்டத்திற்குள் நுழைந்தனர். செப்பனிடப்பட்ட பாதை யினூடே உலவிச் சென்ற இருவரும், ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு சென்றக் காட்சி, பரமனுங் கண்டானந்திக்கக் கூடியதே. எத்தகைய மனோ உறுதி வாய்ந்தவனையும் இயக்கக் கூடிய காட்சி யாகவே துணிந்துரைக்கலாம். அவ்வாறு மனோல்லாசமாய்ச் சென்ற தம்பதிகளில் ஆண் மகனான ஸ்ரீலோலன், தனக்கு இன்னும் இரண் டொரு தினங்களில் பாரியாளாகப்போகும் சாவித்திரியை நோக்கி,

**ஸ்ரீலோலன்:**— காதற்கிளியே! நான் தாசி மகளென வெண்ணி உன்னை நாடி வந்தபோது, நீ ஜாதியைப்பற்றிப் பிரமாதமாய்ப் பேசி,

எந்த ஜாதியாரும், இஷ்டப்பட்ட மற்ற ஜாதியாரிடம் சம்மந்தம் வைத்துக்கொள்ளலாமென்றும், உலகில் ஜாதிபேதம் வேண்டுமென்றே சுயநலங் கருதிக் கற்பிக்கப்பட்டதென்றும் சொன்னாயே. இப்போது நீயுமொரு முதலியார் வம்சத்தைச் சேர்ந்தவளாய் விட்டாயே. இப்போது நீ உன்னிலும் தாழ்ந்த குலத்தவனை மணம் புரிய ஒப்புவையோ?

சாவித்திரி:— பிராணபதி! தங்களுக்கு இன்னும் என்னுடைய குணம் சரிவரத் தெரியாத குற்றமே என்னை இப்படிக் கேட்க நேர்ந்தது. நான் உங்கள் வகுப்பைச் சேர்ந்த பிராம்மணர்களுக் கிருக்கும் சுய நலம் கருதுபவளல்ல. பரநல விருப்பமே மோட்ச சாம்பிராதாயம் என மதிப்பவள். நான் வாயால் மட்டும் சொல்பவளல்ல. தற்காலத்துச் சில போலி கனவான்கள், நான் வியாபாரி; நான் பெரிய வக்கீல்; நான் உலகமெங்கும் புகழத்தக்க வித்வான் என்று பெருமை சொல்லிக்கொண்டு, பல்லாயிரக் கணக்கான ஜனங்களின் நடுவே பிரசங்க மேடையில், "நான் பரநலங் கருதுபவனே. எனக்கு ஜாதிபேதமே கிடையாது. என்னுடைய மகனுக்கு நான் உயர்ந்த ஜாதியில் பெண் கொள்ளமாட்டேன். உயர்ந்தவர்கள் என்று பிதற்றிக்கொள்ளும் பிராம்மணர்களை முழுமனதோடு வெறுத்துத் தள்ளுகிறேன். இனி தேச நன்மைக்காக் கதராடை உடுத்துகிறேன்" என்று உளறிவிட்டு வீட்டிற்குச் சென்றதும், மறுநாளைய திவசத்திற்கு ஒரு ஒட்டை மூக்குப் பார்ப்பானை இரகசியமாய் வரவழைத்து தானம் கொடுத்து அனுப்பிவைக்கின்றனர். இது மட்டுமா? ஜஸ்டிஸ் கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் மந்திரித் தேர்தலில் போட்டி நடக்கப்போகிறதென்று இத்தகையப் பொருக்கியெடுத்தக் கனவான்கள் காதில் விழுந்துவிட்டால், இவர்கள் பாடு கொண்டாட்டந்தான். இரு கட்சியாருக்கும் இரகசியத்தில் வேலை செய்வதாக தனித்தனி வாக்குக் கொடுத்துவிட்டு, முண்டச்சிகள் போல் வீட்டின் மூலையில் ஒரு வேலையும் செய்யாமல் பதுங்கியிருப்பார்கள். தேர்தல் யார் பக்கம் ஜெயித்தது என்பதையே எதிர்பார்த்து, நாய் எச்சிலைக்குக் காத்திருக்குமாப் போல், நாக்கில் ஜலம் சொட்ட வாயைப் பிளந்துக்கொண்டு ஆவலோடு இருப்பர். ஜஸ்டிஸ் கட்சியார் ஜயித்துவிட்டனர். ஜயபேரிகையோடு ஊர்வலம் வரப்போகி

ரூர்களென்ருல், அன்றுதான் சிலவை செய்த உயர்ந்த மேஞட்டு மல் லுடுத்தி, ஊர்வலம் வருபவர்களை யெதிர்கொண்டு மரியாதை செய்து, "நான் உங்களுக்குச் செய்த உதவி இத்தகையதல்ல. அந்த ஊர் ஓட்டுகளெல்லாம் என்னுல்தான் தங்களுக்குக் கிடைத்தது. இந்த ஊர் ஓட்டுகளெல்லாம் அரைப் பாகம் தங்களுக்குக் கிடைத்ததற்கு என்னுடைய சிரமமே காரணம். நான் வேளா வேளைகளில் சாப் பிடாமலும் தங்களுக்காகக் கஷ்டப்பட்டேன். இதற்குப் பிரதியாக ஒரு திவான்பகதூர் பட்டமாவது வாங்கிக்கொடுத்தால் நலமாயிருக் கும்." என்பார். ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆனுல்தான் இப்படி. அன்றி தேசத்தின் அதிர்ஷ்ட வசமாகக் காங்கிரஸ் கட்சிக்கு ஆய்விட்டால், முற்கூறிய **சோற்றுப் பிண்டங்கள்** என்ன செய்கிருர்கள் தெரியுமா? அப்போதே கதர்க் கடைக்கு இரகசியமாகச் சென்று, ஒரு ஜதை வேட்டியும், ஒரே ஒரு சொக்காயும், ஒரு மேல் அங்கியும் வாங்கி அணிந்துக்கொண்டு, அத்தலைவரை வரவேற்று, "தேசத்திற்கு நற் காலம் பிறந்துவிட்டது. இல்லையானுல் தங்களைப்போன்ற தேசபக்தர் கள் தலைவர்களாக வரமுடியுமா? ஏதோ, எங்களெல்லோருடைய முயர்ச்சியாலும் தலைவராக வந்து விட்டீர்கள். நிரம்ப சந்தோஷம். நானும் சட்டசபை அங்கத்தினனுக அபேட்சிக்கிறேன். அதற்கு தாங்கள் உதவி செய்வீர்கள் என்று நம்புகிறேன்." என்பார்கள். இப் பேர்ப்பட்ட சுயநலங்கருதும் **தேசத் துரோகிகள்** கூட்டத்தில் என்னை சேர்த்து விடாதீர்கள். நான் அப்படிப்பட்டவளல்ல. நான் தாழ்ந்த ஜாதியினள் என்று நினைத்திருக்கும்போது எந்த விதமானத்தீர் மானத்தோடு இருந்தேனே, அதே தீர்மானத்தோடுதான் இப்போ தும் இருக்கிறேன். தாங்கள் தாழ்ந்த ஜாதியினர் என்று இந்த நிமிஷம் வெளியானுல் என்னைவிட அதிக சந்தோஷமடையக்கூடியவர் எவருமிரார்—என்று ஸ்ரீலோலனை பேசவிடாது சொல்லித் தீர்த்தாள்.

ஸ்ரீலோலன்:— பிரியே! நீயே சிலாக்கியமானவள். நீயே தேசபக்தர்களின் சிரோபூஷணம். உன்மூலமாகவானுலும் நம்மிந்திய மாதுசிரோமணிகள் ஜாதிபேதத்தை விலக்கக் கருதுவார்களாக. உன் னுடைய நோக்கம் மேலானவைகள். தேசத்திற்கு நன்மை பயக்கத் தக்கன. நியாயம் பொருந்தியவை. இருக்கட்டும்; நம் தேசம் தற் காலம் இருக்கும் நிலைமையில் கூடிய சீக்கிரம் சீர்திருத்தமடையலாம்.

தேசத்தைப்பற்றிச் சிந்தித்தது போதும். நமது சொந்தத் தகவலைப் பற்றிப் பேசுவோம்.

சாவித்திரி:— ஆருயிரின் அருமருந்தே! நம் சொந்தத்தகவல்களென்ன விருக்கிறது? கடந்ததைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுதல் நம்போன்ற சுறுசுறுப்பாளர்களுக் கழகல்லவே. இனி நடக்கவேண்டியவை ஏதேனும் இருந்தால் பேசுவோம்.

ஸ்ரீலோலன்:— குயிற் குரலோய்! உனது சாரீரம் மனதை இளக்குகிறது. அதைவிட உன் வாயிற் பிறக்கும் சொற்கள் கற்கண்டுத்துணுக்குகளாகவே தோன்றுகிறது. இனிய முகவிலாஸம் தேனில் விழுந்த ஈயெனத் தவிக்கச் செய்கிறது. கண்ணே! உனது இனிய சாரீரத்தைக்கொண்டு ஒரு அரிய பாட்டு பாடு பார்ப்போம்.

சாவித்திரி:— கண்ணுதற் பெருங் கடவுளும் சாமவேதமென்னும்சங்கீதத்தால் இன்புற்றார். மஹாவிஷ்ணுவும் புல்லாங்குழல் கொண்டு சங்கீதத்தின் இனிய சுவையை ஆயர்பாடியில் பரப்பிக் கோபியர்களை வசப்படுத்தினர். அத்தகைய ஸ்ரீமன் நாராயணருடைய திருநாமமான ஸ்ரீலோலன் என்றதை வகித்திருக்கும் தங்களை என்னுடைய அற்ப சங்கீதத்தைக்கொண்டு வசப்படுத்தப் பார்க்கிறேன். முடியுமா என்று சோதிக்கிறேன்.

இராகம். சாரங்கா.

தடித்தவோர் மகனைத் தந்தை யீண்டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாயடித்தால்
பிடித்தொரு தந்தை யணைப்பன் இங்கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனியம்பலத் தாடும் புனித நீ
ஆதலா லென்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை யப்பாவினி யாற்றேன்.

என்று இராக நயங்களுடன் வெகு அருமையாய்ப் பாடி முடித்தாள். இதைக் கேட்ட ஸ்ரீலோலன், சங்கீதப் பசி யொழியப்பெற்று, ஆசைப் பெருக்குற்று சாவித்திரியை அன்புடன் ஆலிங்கனம் செய்துக்கொண்டான்.

* * * * * * *

கலியாண தினம் வந்துவிட்டது. நுங்கம்பாக்கத்திலுள்ள ஸ்ரீலோலனுடைய பங்களாவைச் சுற்றியுள்ள தோட்ட முழுதும்

பலவித ஜாலர்களோடு கூடியப் பந்தல் வேயப்பட்டது. கண்ணைக் கவரத்தக்கப் பல கலர்களோடுங் கூடிய மின்ஸார தீபங்கள், பந்தல் களெங்கும் நிறுவப்பட்டன. எண்ணற்கரிய ஆட்கள் கலியாணத் திற்காக வேலை செய்தார்கள். எல்லாவிதமான பத்திரிகையிலும், பின்வரும் விஷயங்கள் பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந் தது.

ஜாதிபேதம் தொலைந்தது! உயிரற்றது!! கோடீஸ்வரரான திவான்பகதூர் நாராயணசாமி முதலியாருடைய ஏகபுத்திரியான சாவித்திரி தேவியை, நுங்கம்பாக்கம் இலட்சாதிப் பிரபுவான ஸ்ரீலோல சாஸ்திரிகள். "ஜாதிபேதம் உலகில் இனி உயிர்ப் பெற்று வாழக்கூடாது. அதைத் தொலைக்க வேண்டும்." என்று கருதிக் கலியாணம் செய்துக்கொள்ளப் போகிறார். இது நமது தேச முன் னேற்றத்திற்கு மிகவும் முக்கியமான அரிய சம்பவம். பிராம்மண ரல்லாதாரின் பெரிய வெற்றி யெனவே கொள்ளவேண்டும். மிக்க கல்விமானை ஸ்ரீலோல சாஸ்திரிகள் ஜாதிபேதத்தைத் தொலைக்கக் கங்கணம் கட்டியிருக்கிறார். இதற்காக எல்லா பிராம்மணரல்லாதாரும் தங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர் களே.—என்றிருந்தது. இது சென்னை யெங்கும் காட்டுத் தீப்போல் பற்றிக்கொண்டு பெருங் கிளர்ச்சியை யுண்டாக்கியது. எங்கு பார்த் தாலும் இக்கலியாணப் பேச்சே, பேச்சாக விருந்தது. கண்டோர் களிப்பெய்தினர் பிராம்மணரல்லாதார் எல்லோரும் பெருங் கூட்ட மாய் நுங்கம்பாக்கம் ஸ்ரீலோல சாஸ்திரிகளின் இல்லத்திற் குழு மினர். மருந்துக்கேனும் அங்கு ஒரு பிராம்மணன் தென்படவில்லை. தமிழ்ப் புரோகிதர்களைக்கொண்டே கலியாணம் நிறைவேறியது. அங்கு வந்துக் கூடியிருந்தப் பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும், அவரவர்க ளுக்குத்தக்க மரியாதைகள் வழங்கப்பட்டது. ஏழைகளுக்கு அநேக விதமான தானங்களும், மரியாதைகளும் கொடுத்தனர். எல்லோருக் கும் என்றும் ருசி பார்த்தறியாத பதார்த்தங்களும், பலகாரங்களும் கொண்ட ஒரு பெரும் விருந்து நடந்தேறியது. அன்று சாயங்காலம் சைவத் திருவாளர் திரு. திருஞானசம்மந்த முதலியாரவர்களைக் கொண்டு "தமிழர் முன்னேற்றம்" என்பதைப் பிரசங்கிக்கச் செய் தனர். இந்தமாதிரி சொல்லற்கரிய கொண்டாட்டங்களுடன் ஸ்ரீலோ

லனுடைய திருமன்றல் ஐந்து தினங்கள்வரை நடந்தது. எதற்கு ஒரு முடிவுண்டாகையால், அப்பெரிய போற்றற்கரிய கலியாண மும் முடிந்தது. நமது கதையும் முடிந்தது.

சுபம்! சுபம்!! சுபம்!!!



முற்றுப் பெற்றது.

68840

PRINTED AT THE KUMARAN PRESS, CONJEEVERAM.

உ

முருகன் துணை.



எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் !!

# கோவர்த்தன விஜயம்.

## இனிய துப்பறியும் செந்தமிழ் நாவல்.

நீதிகளும், திடுக்கிடும் சம்பவங்களும், உலகானுபவங்களும், அபாரத் துப்பறியும் சாமர்த்தியமும், செறிந்துகிடக்கும் ஸ்ரீவேலாலன் என்ற அறிய நாவலை யியற்றியவரின் மற்றொரு புதியநாவலே கோவர்த்தன விஜயமாகும்.

அநேக அபூர்வ விஷயங்களைத் தாங்கி கூடிய சீக்கிரம் வெளிவரும்.

**வெளி வரும் தேதியை ஆவலுடன் எதிர்பாருங்கள்.**

**T. S. ராஜம் & சன்.**
காஞ்சீபுரம்.